மானுடம் சிறக்க உழைப்பது மகுடம் தானதுவாகி தழைப்பதும் மகுடம்

# மகுடம்

கனடா சிறப்பிதழ்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

ஆசிரியர் : வி.மைக்கல் கோலின்

இதழ் - 11 விலை ரூ.100 ஏப்ரல் - டிசம்பர் 2016



கனடா மண்ணிலிருந்து

## மீண்டும் உதயமாகிறான்

# ஆதவன்



- சமகால அரசியல் கட்டுரைகள்
- செய்திகள் – செய்திக் கட்டுரைகள்
- இலக்கியம்
- சினிமா
- பெண்கள் பகுதி
- சிறுவர் விருந்து
- டீன் ஏஜ் ஸ்பெஷல்

**இன்னும் பல சுவையான படைப்புக்களுடன்**

## மீண்டும் உங்கள் ஆதவன்

விளம்பரதாரர்களும் விநியோகஸ்தர்களும் தொடர்புகொள்ள

பாபு வசந்தகுமார் (ஆசிரியரும், வெளியீட்டாளரும்)
70-365 Murray Ross Pkway, North York (Ont) M3J 3T7, Canada.



# கவித்திருமா

இனிவரும் பொழுதெல்லொம்
மேப்பிள் மரம்
தனித்தே இருக்கும்
உன்வீட்டு முற்றத்தில்.
வயல்கள் தோணாக்கள்
வளைந்த முடுக்குகள்
முள்முருக்கின் சிறுகிளைகள்
அதிலூரும் சிறுமுசுறுக் கூட்டம்
தேடுகின்றன

உன் விரல் இடுக்கில் நுழைந்திட.
உருகும் பனிவயல்
கிளை உதிரும் வண்ணங்கள்
அந்தச் சிறு குருவி
எல்லாமும்
காத்துக் கிடக்கும்
உன் பிரிவறியாத் தனத்துடனே
கவித்தொகைக்குள் கலந்திட.

உலகளவில் மகுடத்தை
ஊரவிடச் சொல்லி
வெகுதூரம் சென்றுவிட்டாய்
பாடு பொருள் கவர்ந்து
கவி நெய்ய
சிறப்பிதழுக்கு.

**களப்பூரான் தங்கா - கனடா**

மகுடம் கனடா சிறப்பிதழ் வெளியீட்டினை முதலில் முன் மொழிந்த கனடா கவிஞர் அமரர் திருமாவளவன் அவர்களுக்கே இச்சிறப்பிதழ் சமர்ப்பணம்



# கனடாவின் வரலாறு
## -ஓர் அறிமுகக்குறிப்பு



கனடா 1867ம் ஆண்டே அரசியல் சட்டமைப்பு கொண்ட ஒரு நவீன கூட்டாட்சி நாடாக உருவானது. ஆனால் அதற்கு பல நூற் றாண்டுகளுக்கு முன்னர் இருந்தே பழங்குடிமக்கள் கனடா நிலப்பரப்பில் வசித்து வருகின்றனர். இன்று கனடா 320 இலட்சம் பல்லின மக்களைக் கொண்ட வளர்ச்சியடைந்த இரண்டாவது பெரிய நிலப்பரப்பு கொண்ட நாடாகும்.

### பழங்குடிகள்

கனடிய பழங்குடிமக்கள் அரசியல் நோக்கில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பின்வரும் மூன்று வகைகளாக இனங்காணப் படுகின்றனர்: "இன்டியன்ஸ்", இனுவிட் (*Inuit* இவர்கள் மகுடம் அட்டைப்படத்தில் காணப்படுபவர்), மெயிற்ரீஸ் (*Metis*).

மூன்று பெரும்வகைகளாக அரசியல் சட்ட அடையாளங்களை கொண்டிருந்தாலும், இனம், மொழி, பண்பாடு, வாழ்வியல், புவியில் நோக்கில் பலவகைப்படுவார்கள்.

"இண்டியன்ஸ்" என்ற சொல் இழிவானதாக கனடிய பழங்குடிகள் கருதியதால், அவர்கள் தங்களை முதற் குடிகள் (*First Nations*) என்று அழைத்தார்கள். இவர்கள் கனடிய செவ்விந்தியர்கள் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. இம்மக்களின் வாழ்வியல் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளைப்பொறுத்து வேறுபடுகின்றது. வாழ்ந்த நிலப்பகுதிகளைக்கொண்டு முதற் குடிகளை பின்வரும் ஆறு வகையாக பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

- சமவெளி மக்கள் - (*Plains*)
- இறொக்குவா குடிகள் - *Iroquoian Nations*
- வட வேட்டுவர் - *Northern Hunters*
- வட மேற்கு மக்கள் - *Northwest Cost*
- அல்கோன்கிய குடிகள் - *Algonkian Nations*
- பீடபூமி மக்கள் (*Plateau*)

பழங்குடிகளில் கனடாவின் மிக குளிரான மேற்பகுதிகளில் வாழ்ந்தவர்களே இனுவிட் ஆவார்கள். இவர்களை அழைக்க "எஸ்கிமோ" என்ற (தற்போது இழிவாகக் கருத்தப்படும்) சொல்லும் பயன்படுத்தப்பட்டு வந்தது. கனடா என்றவுடன் விலங்குத் தோல் உடுப்புடன் பனிக் கட்டியால் கட்டப்பட்ட, மொழுகப்பட்ட இருப்பிடங் களுக்கு பக்கத்தில் நிற்கும் இனுவிட் மக்களைச் சுட்டுவது ஒரு ஊடக மரபு.

### ஐரோப்பியர் வரவு

பிரெஞ்சு மக்கள் 1605 ஆம் ஆண்டளவில் ரோயல் துறைமுகம் என்ற பகுதியிலும், அதனைத் தொடர்ந்து 1608 ஆம் ஆண்டுகியூபெக்கிலும் முதன்முதலில் குடியமர்ந்தனர். ஆங்கில குடியேற்றங்கள் நியூ பவுண்ட்லாந்தில் 1610ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது ஐரோப்பியரின் வருகை புது நோய்களை வட அமெரிக்காவுக்கு கொண்டுவந்தது. அப்புதிய நோய்களுக்கு உடலில் எதிர்ப்புத்திறனற்ற முதற்குடிமக்கள் பெரும்பான்மையானோர் இரையானார்கள்.

### கனேடிய கூட்டரசு உருவாக்கம்

பிரிட்டனின் குடியிருப்புகளாக இருந்த ஒன்ராறியோ, கியூபெக், நியூ பிரன்ஸ்விக், நோவோ ஸ்கோஷியா *British North American Act* மூலம் கனேடிய கூட்டரசாக உருவானது. கனடாவின் பிற மாகாணங்கள் பின்னர் கூட்டரசில் சேர்ந்தன. *New Foundland* 1949 ஆண்டு கனடாவுடன் கடைசியாக இணைந்த மாகாணம் ஆகும்.

### பல்நாட்டவர் வருகை

பிரெஞ்சு, ஆங்கிலேயக் குடிவரவாளர்களாலும் முதற்குடிமக் களாலும் கனடா உருவாக்கப்பட்டது. கூட்டமைப்பின்போது ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தங்களின்படி கனடாவை இணைக்கும் ஒரு தொடருந்துப் பாதை கட்டவேண்டிய தேவை இருந்தது. இதற்காக1870களில் சீனர்கள் தொடருந்து பாதை கட்டமைபில் வேலை செய்வதற்காக வரவழைக்கப்பட்டனர். 1885ம் ஆண்டு தொடருந்துப் பாதை கட்டிமுடிந்த பின்பு சீனர்கள் வரவு கட்டுப்படுத்தப்பட்டது. குறிப்பாக *"Chinese Exclusion Act"* 1923ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

கறுப்பின மக்கள் வெவ்வேறு காலப்பகுதியில் கனடாவில் குடியேறினார்கள். தொடக்கத்திலேயே அவர்கள் அடிமைகளாக பிரெஞ்சு மக்களுடன் கனடாவுக்கு வந்தனர். எனினும் 1793 ஆண்டில் மேல் கனடாவில் அடிமைகளுக்கு விடுதலை கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருந்து பல கறுப்பின மக்கள் கனடாவுக்கு விடுதலை தேடி வந்தனர். இவர்கள் வந்த பாதை நிலத்தடி இருப்புப்பாதை (*Underground railroad*) என அழைக்கப்பட்டது. 1920 ஆண்டளவில் கனடா இன அடிப்படையிலான குடிவரவுக் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கியது. இதன் காரணமாக ஐரோப்பியர் தவிர்ந்த ஏனைய இன மக்கள் கனடாவுக்குள் வருவது கடினமாக்கப்பட்டது. இக்கொள்கை 1967ம் ஆண்டு நீக்கப்பட்டது. எனினும், இதற்கமையவே இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் பல்வேறு ஐரோப்பிய குடிவரவாளர்களை உள்வாங்கியது. வியட்நாம் போரின்போது அமெரிக்க *draft dogers* பலரையும் உள்வாங்கியது. உலகில் கனடா முதன்முதலாக பல்லினப்பண்பாடு கொள்கையை அதிகாரப்பூர்வ கொள்கையாக 1971ம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து பன்னாட்டு மக்களும் கனடாவுக்கு குடிவருவது அதிகரித்தது. 1980களிலும் 1990களிலும் தமிழர்கள், பிறதெற்காசிய மக்கள், ஆபிரிக்கர்கள் புதிய குடிவரவாளர்களில் கணிசமான தொகையினராக இருந்தார்கள்.

இன்று கனடாவில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட எமது தாயக மக்கள் புலம் பெயந்து வாழ்வது குறிப்பிடத்தக்கது. புலம் பெயர் தேசங்களில் எமது ஈழத்தமிழ் மக்கள் அதிகம் வாழும் நாடுகளில் கனடா முதன்மையானது என்பதும் புலம் பெயர் இலக்கிய முயற்சிகளில் கனடாவின் பங்களிப்பு என்பது தவிர்க்கமுடியாத ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ISSN - 2279-1906

# மகுடம்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்

இதழ் - 11     ஏப்ரல் - டிசம்பர் 2016

**ஆசிரியர் : வி.மைக்கல் கொலின்.**

E-mail: Magudammichael@gmail.com

Layout by : Michael

கணனி வடிவமைப்பு : த. சங்கர் (வணசிங்கா பிரிண்டர்ஸ்)

முன் அட்டை : இரா. குணசீலன் (கனடா)

உள் ஓவியங்கள் : மௌனேஸ், சுதர்மன்
இரா. குணசீலன் (கனடா)

'மகுடம் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்காக
மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்
ஹஜேந்தினி மைக்கல் கொலின்

**சகல விதமான தொடர்புகளுக்கும்**

ஆசிரியர்
'மகுடம்'
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை
Tel : 0774338878

Contact :

EDITOR
MAGUDAM
90, Bar Road,
Batticaloa 30000
Sri Lanka.

படைப்புக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

ஆக்கங்களை திருத்தவும்,
கடிதங்களை சுருக்கவும்,
ஆசிரியருக்கு அதிகாரம் உண்டு.

# புலம் பெயர் தமிழ் இலக்கியத்தில் முன்னனி வகிக்கும் கனடா

பிரதேச ரீதியான சிறப்பிதழ் வெளியீடு என்ற நிலையில் மலையகச் சிறப்பிதழ்களைத் தொடர்ந்து "கனடா" சிறப்பிதழை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

இன்றைய உலகிலே உன்னதமான நாடுகளின் வரிசையில் கனடாவுக்கு முக்கிய இடமுண்டு. மக்கள் வாழ்வுக்கு உகந்த மிகச் சிறந்த நாடுகளுள் கனடா இரண்டாவது இடத்தில் உள்ளது.

1867ம் ஆண்டு அரசியல் சட்டமைப்பு கொண்ட ஒரு நவீன கூட்டாட்சி நாடாக உருவான கனடாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தே பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்திருந்தனர்.

பிரெஞ்சு, ஆங்கில குடிவரவாளர்களாலும் கனடா பழங்குடி மக்களாலும் கனடா என்ற தேசம் உருவாக்கப்பட்டது.

கனடா தேசத்தை கட்டி எழுப்ப அடிமைகளாக கொண்டு வரப்பட்ட கறுப்பின மக்களுக்கு 1973ம் ஆண்டில் விடுதலை கிடைத்தது.

1920ல் கொண்டு வரப்பட்டு 1967ல் நீக்கப்பட்ட இன அடிப்படையிலான குடி வரவு கொள்கையைத் தொடர்ந்தும் 1971ம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட பல்லினப் பண்பாடு கொள்கையின் மூலம் பன்னாட்டு மக்களும் கனடாவுக்கு குடிவருவது அதிகரித்தது.

பல்லின மக்களை கொண்ட தேசமாக கனடா மிளிர்ந்தாலும் கனடாவின் பழங்குடிகள் பல பெயர் மாற்றங்களுக்கு பின்னர் தமக்குரிய அந்தஸ்தினை பெற்றுக்கொண்டுள்ளனர்

இன்று ஈழத்தமிழர்கள் கனடா அரசியலில் ஈடுபடும் அளவுக்கு கனடாவில் பல்லினப் பண்பாட்டு சுதந்திரம் நிலவுகிறது.

புலம்பெயர் தேசங்களை பொறுத்தவரை எமது ஈழத்தமிழ் உறவுகள் மிக அதிகமாக புலம் பெயர்ந்து (மூன்று இலட்சத்துக்கும் அதிகமாக) வாழும் நாடு என்ற வகையிலும், புலம்பெயர் இலக்கிய முயற்சியைப் பொறுத்தவரை இன்று மிக அதிகமான அளவில் வெளிப்பாடுகளை காட்டும் தேசம் என்ற வகையிலும் "மகுடம் கனடா சிறப்பிதழ்" இன்றைய காலத்தில் வெளிவருவது பொருத்தமானதே.

அதிக தமிழ் பத்திரிகைகளும், இலக்கிய சஞ்சிகைகளும் வெளிவரும் நாடுகளில் கனடாவுக்கு முதலிடம் உண்டு.

அந்த வகையில் புலம்பெயர் தமிழ் இலக்கியத்திற்கு முக்கிய பங்களிப்பு செய்யும் படைப்பாளிகளாக கனடா வாழ் தமிழ் எழுத்தாளர்கள் உள்ளனர். அந்தவகையில் மகுடம் கனடா சிறப்பிதழ் புலம் பெயர் ஈழத்தமிழ் எழுத்துக்களில் கனடாவின் பங்களிப்பு என்ற வகையில் அமைந்துள்ளது இது ஒரு முன் முயற்சியே.

இந்த மலர் சிறப்புற வெளிவர உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளும், அன்பும்.

– ஆசிரியர்



அழகான மலர் போன்ற பெண்ணை
எதுவும் பாதிப்பதில்லை
உண்மை "அழகான மலர்"
பெண் இல்லை

அவள்
உத்தரப்பிரதேசத்தில் ஒரு முறையும்
போராட்டத்திற் கதறலாயும்
போரிடலாயும்
அமெரிக்காவில் மூர்க்கம் பிடித்த
கறுப்புப் பெண்ணாய்
ஒரு லெஸ்பியனாய்
பிறப்பதில்லை.

தற்கொலை பற்றி
அறிந்திரா ஒருவன்
பெருஞ்சாலையின் மேலிருந்து
தடுப்புப்பாலத்தைப் பார்க்கிறான்
அது, இசைக்கருவி போலவோ
விழுங்க முனையும் மலைப்பாம்பாகவோ
அவளுக்கு இருக்கிறது

அதிலிருந்து குதித்தவர்
வீரர்களாகவும் சாகஸக்காரிகளாயும்
தன்னை அழித்துக்கொள்ளல்
கலைத்துவமாய் கவித்துவ நீதியாய்
கனவு காண்கிறாள்.

அந்த இடம்,
ஒரு நிமிடம், சாவதற்கானமுனை
மறு நிமிடம், இசைக்கான கருவி
பிறிதொரு பொழுதில்,
வாழ்வதற்கான வெளி
அத்துவான வெளியில்
வாழ்க்கையின் நம்பிக்கையைத்
தொலைப்பது இயலாமல் போகிறது.

சாகஸக்காரியாய்,
ஆறாய், நீர் வீழ்ச்சியாய்
படகாய்க் குழந்தையாய்
கீழே வாகனங்கள்
ஓடிக்கொண்டிருக்கின்றன மேலே
கோபமும் விவேகமும் தாபமும்
நிறைந்தவள்
சேர முடியாதபடி
வாழ்க்கை அவளை வசீகரிக்கிறது.

**பிரதீபா**



இலங்கையில் மல்லாவியில் பிறந்தவர். தற்போது கனடாவில் வசிக்கும் இவருடைய கவிதைத்தொகுதி 'நீத்தார் பாடல்' 'ஒலிக்காத இளவேனில்' இவரும் தான்யாவும் இணைந்து தொகுத்த பெண்கவிஞர்களின் கவிதைகளின் முக்கியமான நூல். 'யுத்தத்தை தின்போம்' என்ற கவிதை நூலிலும் இவருடைய கவிதைகள் உண்டு.

**தான்யா**



இலங்கை மல்லாவியில் பிறந்து கனடாவில் வாழ்கிறார். "சாகஸக்காரி" இவருடைய கவிதைத் தொகுதி. "யுத்தத்தைத்தின்போம்", "ஒலிக்காத இளவேனில்" ஆகிய வற்றிலும் இவருடைய கவிதைகள் உண்டு


## நன்றிகள்

மகுடம் கனடா சிறப்பிதழ் வெளிவருவதற்கு உதவியாக படைப்புக்களை பெற்றுதர உதவிய நண்பர்கள் **கவிஞர் களப்பூரான் தங்கா** (கனடா) **கவிஞர் கருணாகரன்** (இலங்கை) **திரு.ச.நவநீதன்** (கனடா) மற்றும் பல வழிகளிலும் உதவிய முகநூல் நண்பர்களான **கவிஞர் ஜெயரூபன் மைக்கல்** (கனடா) **திரு. பாபு வசந்தகுமார்**(கனடா), **திரு. எஸ். லிங்கேஸ்வரன்** ஆகியோருக்கு எமது நன்றிகள்

– ஆசிரியர்

மகுடம்
கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்
இதழ் - 11
ஏப்ரல்-டிசம்பர் 2016
கனடா சிறப்பிதழ்


## கட்டுரைகள்

**7** தமிழ் நதியின் புனைகதையுலகம்...
பேரா. செ.யோகராசா

**42** பனிவயல் உழவனின் துயரங்கள்
கவிஞர் கருணாகரன்

## ஆய்வு

**25** புகலிடத்தமிழ் நாவல் முயற்சிகள்
வ.ந.கிரிதரன்

**59** வரலாற்றின் தடங்களில் நடத்தல்
இளங்கோ

## நினைவுப்பகிர்வு

**13** சமுசாவும் பால்ரீயும்
கலாநிதி. மனோபவன் மனோகரதாஸ்

**40** கனேடியத்தமிழ் திரைப்பட அனுபவம்
சுமதி

**53** புத்தகங்கள் தேடலும் வாசிப்பும்
மீராபாரதி

## சிறுகதைகள்

**19** ஜோயானியின் சிலுலைப்பாடு
ஆனந்தப்பிரசாத்

**48** செயற்கணக்கு
மெலிஞ்சிமுத்தன்

**66** சேடாமூடி
கற்சுறா

**71** மருதமடுமாதாவே மனுக்குலத்தின்..
மாமூலன்

**81** இலவு காத்த கிளி
கீதா கணேஷ்


## கவிதைகள்


பிரதீபா
தான்யா
இரா குணசீலன்
கணப்பூரான் தங்கா
சி. சண்முகராஜா
வல்வை கமல்
எஸ். லிங்கேஸ்வரன்
த. அகிலன்
முரளிதரன்
அமரர். நா. ஜெயபாலன்








## வயிறறுத்து வரும்
# வம்சங்களுக்காக....

கண்ணிமைக்கும் நேரத்துள்
கலந்து நடந்து முடிந்துவிடும்
அந்த ஆனந்த உறவு

இயற்கை எல்லாருடனும்
எல்லாவற்றுடனும்
எல்லாருடனும்
ஒத்துப் போவதில்லை
எவ்வளவு உண்மை.........

ஒரு நாள் தாய்மைக்காக
பெற்றுக்கொள்கிறாள்
தனக்கான அந்த உன்னத்ததை
வலியும் சுமையும் மறந்து
உதிரம் பகிர்ந்து வளர்த்ததை
உயிரான விதையாய்
தரவிருந்தாள்

வைத்தியன் நாள் குறித்தான்
அன்றுதான்
இயற்கையோடு அவளது போராட்டம்
தோற்று போனது..
பன்னீர்க்குடம் உடைந்தும்
பாலன் வெளிவரவில்லை
அறுத்தெடுப்பதைத்தவிர
வழியேதுமில்லை...

எவ்வழியானாலும்
சம்மதம் என்கிறது
அவளது விழிகள்
மறுநிமிடம்
வயிறறுத்து வெளிவருகிறான்
என் வம்சத்தின் தொடக்கம்
வலிமறந்து நெகிழ்ந்து போனாள்
மார்பினில் சாய்ந்து
அழும்போது..

இவன் கற்பனையில்லையிது
தாய்மீது கொண்ட காதலால்
பெண்மேல் மலர்ந்த
மரியாதையே....

அப்பனாக மட்டுமல்ல
என் மகன்
என்னை கவிஞனுமாக்கினான்

**இரா.குணசீலன்** - கனடா

# கருகும் குரல்

இத் தீ
உன்னையும் ஓர்நாள் சுடும்.

நெஞ்சாங்கட்டை இறங்குகின்றது மார்பில்
கங்குகள் ஒவ்வொன்றாய் உதிர்கின்றன
தோற்கும் போர் முடிவாகின்றது.

உன் அழுகைக்குரல் பட்டு
வேம்பு சிலிர்க்கிறது,
நீ அழாததுபோலும் நடிக்கின்றாய்.

கருகும் ஊன்நெய் வாடையுடன்
நான் பாடிய கவிதைகள்
காற்றில் மிதந்து வரும்
கேட்கிறனவா?

கொள்ளிக் குடத்துண்டில்
கொதிக்கும் நீரோசை
சிரட்டையாய்ச் சீறும்
சிதையின் நவதுளைக் கீதம்
உன்னிடம் கெஞ்சுகின்றன
என் சின்னத் தனங்களை
மறக்கச் சொல்லி.

மழைநாள் கடற்குளிப்பு
ஆலையடி மல்லுக்கட்டுகள்
புங்கடிகள், புளியடிகள்
வலம் வரும் உன் நினைவுகளில்.

டயர்கள் எரிப்பு
குண்டுகள் துளைப்பு
சிறைகள், சித்திரவதை முகாம்கள்
ஏழு கடல்கள் தாண்டி இடம்பெயரினும்
விலக்கல்ல சிதையில்
தீ விழுங்கையில்.

என்னைக் கருக்கும்
செந்நாக்கின் கெஞ்சலில்
முடித்துக்கொள்
உன் விரதத்தை
என்னை மன்னித்து.

**களப்பூரான் தங்கா** - கனடா

பேரா.செ. யோகராசா



# தமிழ்நதியின் புனைகதையுலகம்: சில அவதானிப்புகள்

புலம்பெயர்ந்த இளைய தலைமுறை எழுத்தாளர்களிலொருவரான தமிழ் நதி சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை எனப் பலதுறைகளிலும் ஈடுபட்டு வருபவர். திருகோணமலை பிரதேசம் சார்ந்தவரான இவர் கனடா, (இடையிடையே) தமிழ்நாடு, (எப்போதாவது) ஈழம் என "நாடோடி" நிலையில் வாழ்ந்தவராக, வாழ்பவராக அறியப்படுபவர். அவ்வழி கிட்டும் வித்தியாசமான அனுபவங்களை இன்னமும் முழுமையாக வெளிப்படுத்தாவிடினும் சமகால ஈழத்து எழுத்தாளருள் தமது வீச்சான-தனித்துவமான மொழியாற்றல் காரணமாக தீவிர வாசகர்களது கவனத்தைப் பெற்றிருப்பவரான இவரது சிறுகதைத் தொகுப்பும் இருநாவல்களுமே இவ்வேளை கவனத்திற்குட்படுத்தப் படுகின்றன.

"நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது" (2007) என்ற இவரது சிறுகதைத் தொகுதியில் 18 சிறுகதைகள் உள்ளடங்கி யுள்ளன. இத்தொகுதிக்கு தமிழ்நதி எழுதியுள்ள தன்னுரையின் தலைப்பினை ("போரில் விளைந்த தனிமையும் தனிமை யுடனான போரும்") அடியொற்றிக் கூறுவதானால் 08 சிறுகதைகள் தனிமையுடனான போர் பற்றி - தொற்றி - எழுந்தவை! பாத்திரங்களும் நெருக்கடிகளும், சனங்களும், காலங்களும் வேறுவேறாயிருப்பினும் காதல் உணர்ச்சியை - வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத - வார்த்தைகளுக்குள் அடங்காத - அடக்க முயலும் போதெல்லாம் திமிறிப் பாய்கின்ற காதல் உணர்ச்சியை வெளிப்படுத்த முயல்பவை. இவற்றுள் "நதி நடந்த சுவடு"ம் "நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது"ம் முண்ணிலை நிலையில் அமைய "மனக்கூத்து" படர்க்கை நிலையில் வெளிப்படுவது. (இப்பிரிவில் அடங்கும் கதைகள் அனைத்தையும் கூட ஒருவித மனக்கூத்து என்று கூறலாம்); முன்னிரு கதைகளையும் விட கதையம்சம் மிகுந்தது. "கதையின் கதை" என்ற சிறுகதை காதல்

வயப்பட்ட ஒரு பெண்ணின் மனப் போராட்டங்களை "கதை"யையே ஒரு உத்தியாகக் கொண்டு (ஒரு பாத்திரமாக) வெளிப்படுத்துவது. முற்றிலும் புதியதான உத்தி கொண்டது இச் சிறுகதை. வயது கூடிய பெண்ணொருத்தியின் மன உணர்வுகளை வெளிப்படுத்துகிறது, "பெண் எனும் ஞாபகம்" "மதுவந்தி" புகலிட நாட்டில் கணவனைப் பிரிந்து வாழ்கின்ற ஒரு பெண்ணின் மன உணர்வுகளை வெளிப்படுத்து கின்றது என்பது தவிர, முன்னைய கதையுடன் ஒத்துப்போகக்கூடியது "கவரிமான்கள்". மத்திய கிழக்கு நாடொன்றிற்கு சென்று விட்ட சூழலில் எழுந்தது "தொலைவில் தெரியும் நீர் நிலைகள்" ஆணொருவனது அக, புற போராட்டங்களை நுட்பமாக வெளிப்படுத்துகிறது. (இதன் தலைப்பும் கவனத்திற்குரியது.)

மேற்கூறியவற்றுள் இறுதிக் கதை தவிர்ந்த அனைத்தும் பெண்களது அகம் சார்ந்த (சில, அகத்துடன் புறமும் சார்ந்தன) காதலுணர்ச்சிகளை முதன்மைப் படுத்திய நிலையில் "வீடு" முற்றிலும் புறப் பிரச்சினை சார்ந்தது. "வீடு" ராஜம் கிருஷ்ணனது பார்வையில் பெண் நிலைவாத நோக்கில் புதுமை செய்தது. "பாலு மகேந்திராவின் நோக்கில் வீடு மத்தியஸ்தர வர்க்கத்தினரின் வாழ்க்கைப் பிரச்சினை சார்ந்து வெளிப் பட்டது. இப்படைப்பு இன்றைய பெண் வீடு காட்டும் போது எதிர்கொள்கின்ற பிரச்சினை கள் சார்ந்தமைகின்றது. "வீட்டைக் கட்டிப் பார்; கலியாணத்தை முடித்துப் பார்" என்ற பழமொழியை மனங்கொள்வோமாயின் வீடு கட்டிமுடித்தல் என்பது தமிழ்ச் சூழலில் அதுவும் பெண்ணைப் பொறுத்தளவிலே மிகுந்த சவாலுக்குரியதொன்றாகும். இவ்விதத்தில் முக்கியமானது, இப்படைப்பு! இக் கதைகளுக்கு அவை நிகழ் இடங்கள் தமிழகமா ஈழமா என்பது முக்கியமானவையன்று.

ஏனைய கதைகள் அத்தகையனவன்று. "போரில் விளைந்த தனிமை" என்ற விதத்தில் அத்தனிமை போர்க்காலத்தை நினைவுப் படுத்துமெனக் கொண்டால் இத்தொகுப்பிலுள்ள 04 கதைகள் ஈழத்துப் போர்க் காலத்துடன் தொடர்புபட்டனவாகவுள்ளவை.

போர் இன்றைய தமிழ்ச் சமூகத்தை அகதி நிலைக்குத் தள்ளியது. "உள்ளூர் அகதி," "சர்வதேச அகதி" என்ற விதங்களில் "அகதி" என்ற புதிய அந்தஸ்து தமிழ்ச் சமூகத்திற்குக் கிட்டியது. அத்தலைப்புடன் ஒரு தொகை படைப்புகள் வெளிப்பட்டன. ஊர் கூட அவ்வாறுதான் ஈழத்துப் போர்ச்சூழலில் ஊர் அழிப்பு, ஊர் இழப்பு, இடப்பெயர்வு என்பன அதிகளவு ஏற்பட்ட நிலையில் சூழலில் "ஊர்" பற்றிய பல படைப்புகள் உருவானாலுங்கூட, போர்ச்சூழலில் அதன் முக்கியத்து வவத்தை உணர்ந்து "ஊர்" என்ற தலைப்புடன் உருவான ஒரே ஒரு கதை இத்தொகுப்பிலுள்ளது மட்டுமே. (இடம்பெயர்வின் போது "மண்" என்ற தலைப்பிலே சு:இராஜநாயகம் எழுதிய கதையொன்றும் இவ்வேளை நினைவிற்கு வருகின்றது) புலம் பெயர்ந்த சூழலிலே ஊர்ப்பற்று இரு மடங்காகிய நிலைமையும் தமிழ்நதியின் எழுத்தாற்றலும் "விவரணச் சித்திரம்" என்ற நிலையிலிருந்து இக்கதையைக் காப்பாற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"நலம் மற்றுமோர் நிலா" என்ற சிறுகதை போராளியொருவரது குடும்ப வாழ்க்கை பற்றியது. (பிரசவத்திற்காக லீவில் நிற்பவர் அவர்). இக்கதையின் அர்த்த புஷ்டிமிக்க தலைப்பு பாராட்டையும் கதையின் முடிவு ("எனக்கு என்னைப் போல ஆக்களை நினைக்க வெக்கமா இருக்கு நிலா") மன நெகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றன.

"காத்திருப்பு" பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு ஈழத்தில் நடைப்பிணமாக வாழ்கின்ற ஒரு குடும்பம் பற்றியது; தகப்பனை முதன்மைப்படுத்து வது. பலராலும் சுவைபட எழுதப்பட்ட




சில சிறுகதைகள் தனிமையுடனான போர் பற்றி - தொற்றி - எழுந்தவை! பாத்திரங்களும் நெருக்கடிகளும், சனங்களும், காலங்களும் வேறுவேறாயிருப்பினும் காதல் உணர்ச்சியை - வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத - வார்த்தைகளுக்குள் அடங்காத அடக்க முயலும் போதெல்லாம் திமிறிப்பாய்கின்ற காதல் உணர்ச்சியை வெளிப்படுத்த முயல்பவை.

விடயமாயினும் (உ+ம்: நீலாவணன், இ.முருகையன் கவிதைகள்.), வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளிடம் தொலைபேசியில் கதைப் பதற்காகச் சென்று நன்கு பழக்கமாகிவிட்ட ஒரு தகப்பனது மரண வீட்டிற்குச் சென்ற கடைக்காரனது பார்வையில் (அவன் தந்தை - பிள்ளைகள் உறவை நன்கு புரிந்து கொண்டவன்) கதை சொல்லப்படுவதனால் எமது கவனத்தை ஈர்க்கிறது. தொலைபேசி உரையாடல்களூடாக அவரது பிள்ளைகளின் மனநிலையை நன்கு புரிந்திருந்த கடைக்காரனுக்கு பிள்ளைகளின் தற்போதைய செயற்பாடுகள் மகா எரிச்சலையூட்டுகின்ற நிலையில் கதை இவ்வாறு முடிகின்றது: "பறையை வாங்கி அது கிழியும் வரை குத்த வேண்டும் போலிருக்கிறது கணேசனுக்கு" எமக்கும் கடைக்காரனது உணர்வு ஏற்படுவதே இக்கதையின் வெற்றியாகின்றது.

"என்பெயர் அகதி" தமிழ்நாட்டில் இடம்பெறுகிறது. ஈழத்தில் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களுக்கு அஞ்சி தமிழ்நாடு சென்ற, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் (இரு யுவதிகளும் ஒரு இளைஞனும்) படுகின்ற அவஸ்தைகளையும் ஈழத்திலுள்ள பெற்றோருக்கு அவர்கள் அவற்றை மூடி மறைப்பதையும் உயிர்த் துடிப்புடன் விபரிக்கின்றது.

"அவனது கேள்வியும் அவனது ஆண்டுக் குறிப்புகளும்" என்ற சிறுகதை 1983 தொடக்கம் 1995 வரை ஈழத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பேரவலங்களுள் சிலவற்றை டயறிக் குறிப்புகள் வடிவில் வெளிப்படுத்துவது: 2007 டிசம்பர் என்ற உபதலைப்புடன் பின்வருமாறு முடிவுறுவது: "சுகி, நீங்கள் ஏன் இப்படி வலிகளையே எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்? வாழ்க்கை கொண்டாட்டங்களையும் உள்ளடக்கியதல்லவா? - சுதர்சன். "மரணத்தை, வலியை, வன்புணர்வின் போதெழுந்த மூச்சுத் திணறலை, கூட்டுவல்லுறவுகளுக்கிடையில் தண்ணீர் மறுக்கப்பட்ட குரலை, கருகிய உடல்களை, சிதறிச் சுவர்களெங்கும் ஒட்டிக் கிடந்த சதைத்துணுக்குகளை, எதையோ எழுத முயன்று தோற்கும் குருதியை, உலகத்தால் கைவிடப்பட்டு மறக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதர்களை மறக்க முடிந்தவர்கள் கொண்டாடட்டும். சுதர்சன்-வாசுகி" (இறுதிப்பகுதி சேரனின் எல்லாவற்றையும் மறந்துவிடலாம் கவிதை வரிகளை நினைவுபடுத்துகிறது) இக்கதை எழுதப்பட்ட களம் தமிழ்நாடா புலம்பெயர் நாடா என்று புரியவில்லை. எனினும் கதைக்கு அது அவசியமில்லை. ஏனெனில் இவற்றை அறியாத ஈழத்தின் பிற்காலத் தலைமுறையினருக்கும் அது வேண்டியது. எவ்வாறாயினும் இவ்விடயம் நாவலாக எழுதப்பட்டிருக்கலாம் என்றொருவர் குறைப்படின் அது ஏற்புடையது தான். (இத்தகைய எதிர்பார்ப்பை ஓரளவு பூர்த்தி செய்கின்றது. தமிழ்நதி அண்மையிலெழுதியுள்ள நாவலான பார்த்தீனியம்.)

ஈழத்து எழுத்தாளர் பலர் இடம்பெயர்ந்து தமிழ் நாட்டிலி லிருந்துள்ளனர். தமிழ் நாட்டினைக் களமாகக் கொண்டு எழுதி யுமுள்ளனர். இவர்கள் எவரும் பெறமுடியாத பாராட்டினை "அந்த எசமாடன் கேக்கட்டும்" என்ற சிறுகதையை எழுதியதனூடாக தமிழ்நதி பெறுகின்றவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தலித் ஒருவனது மன




உணர்வுகளை அவனூடாக அவனது மொழியிலே மிகத் துல்லியமான முறையிலே ஈழத்து எழுத்தாளரொருவர் உயர்த்துடிப்புடன் வெளிப்படுத்துவதும் அதில் வெற்றி பெறுவதும் கவனத்திற்குரியன!

புகலிடநாட்டுச் சூழலில் எழுந்த நான்கு சிறுகதைகள் இத்தொகுப்பிலிடம் பெற்றுள்ளன. இவற்றுளொன்றான "இருப்பு", கடுங் குளிருக்கு நிகராக அல்லது அதைவிடவுமே அதிகமான பொருளாதார கஷ்டத்துடன் வாழ்கின்ற சராசரியான தமிழ்க் குடும்ப மொன்றின் நாளாந்த வாழ்க்கையை கணவன், மனைவி ஆகிய இருவரதும் மன உணர்வுகளூ டாக வெகு தத்ரூபமான முறையில் வெளிப்படுத்தி அதில் போதியளவு வெற்றியும் கண்டுள்ள சிறுகதையாக மலர்ந்துள்ளது. புகலிட நாட்டிற்குச் சென்ற இளைஞனொ ருவனது மன உணர்வுகளை அவன் கடிதமாக எழுதுகின்ற முறையில் வெளிப்படுத்துவது, "விழுதின் கண்ணீர்," இன்னும் சிறப்பான முறையில் இச்சிறுகதையை எழுதியிருக்க முடியுமாயினும் குறுகிய காலத்தில் இளைஞ னொருவன் பெற்றுள்ள அனுபவங்ளென்பதனுள் அக்குறைபாடு மறைந்து விடுகின்றது.

"கப்பற் பறவைகள்" புலம்பெயர்ந்து சென்றுள்ளோர் பலரது மனநிலையை - திரும்பி விடவேண்டுமென்ற மனநிலையை - வெளிப்படுத்த முயல்கிறது. அதன் இயலாமையையும் காட்ட முற்படுகின்றது. அவ்விதத்தில் 'கப்பற் பறவைகள்' என்ற தலைப்பு கச்சிமானதொரு குறியீடாக அமைந்திருக்கிறது.

மற்றொரு சிறுகதையான 'மதுவந்தி' பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

ஆக, ஈழத்துச் சிறுகதை வரலாற்றில "தமிழ்நதியின் சிறு கதைகளுக்குரிய இடம் எத்தகையது" என்று நோக்கும் போது பின்வருவன கவனத்திற்குரியனவாகின்றன.

1. காதல் கதைகள் யதார்த்த நோக்கில் இலக்கியத்தரம் வாய்ந்தனவாக எழுதப்பட்டுள்ளன. எடுத்துரைப்பு முறையும் மொழிநடையும் அவற்றை வளம்படுத்துகின்றன.
2. ஏனைய சிறுகதைகளுள் ஈழத்துச் சிறுகதைகளில் என்ற விதத்திலே "காத்திருப்பு" குறிப்பிடத்தக்கது.
3. புகலிடச் சிறுகதைகளுள் "இருப்பு" கவனத்திற்குரியது.
4. பெண்நிலைவாத நோக்கில் "வீடு" மிகுந்த முக்கியத்துவமுடையது.
5. தமிழகம் சார்ந்த சிறுகதைகளுள் 'அந்த எசமாடன் கேட்கட்டும்' மிகுந்த பாராட்டிற்குரியது.

மொத்தமான 18 சிறுகதைகளில் ஏறத்தாழ ஏழு சிறுகதைகள் தரமிகுந்திருப்பதே தமிழ்நதியின் எழுத்தாற்றலுக்கு கிடைத்த வெற்றியாகும் (இவ்வேளை இத்தொகுப்பிற்கு பின்னர் தீராநதி, காலம் முதலியவற்றில் எழுதப்பட்ட தரமான சில சிறுகதைகள் மனங்கொள்ளப்படவில்லை)




'**கா**னல்வரி' தமிழ் நதியின் முதல் நாவலாகும். பழந்தமிழ் இலக்கிய ஆர்வலருக்கு இத்தலைப்பு நன்கு பரிச்சயமானது. சிலப் பதிகார காவியத்தின் திருப்பு முனையாக அமைவது "கானல்வரி"யே என்பர். மாதவி பாடிய கானல்வரிப்பாடலின் பொருளை கோவலன் தவறாக விளங்கிப் பாடிய நிலையில் முடிவில் அது கோவலன் மாதவியின் நிரந்தரப் பிரிவிற்கு வழிவகுக்கின்றது. (மாதவி தன்நிலை குறித்து எழுதிய கடிதத்திற்கும் கோவலன் பதில் எழுத முற்பட வில்லை). "கானல்வரி" என்று பெயர்கொண்ட இந்நாவலும் மாதவி - மௌலி என்ற காதலர்கள் பற்றியது. தன்னை விட்டுப் பிரிந்து செல்வான் என்று கனவுகூட காணாத நிலையில் தன்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்ட காதலனுக்கு (மௌலிக்கு, மாதவி) எழுதுகின்ற கடிதமாக இந்நாவல் உருவெடுத்துள்ளது.!

இந்நாவலில் வருகின்ற மாதவி சிலப்பதிகார மாதவி போன்று பலரோடு வாழாவிடினும், இன்னொருவனது மனைவி மௌலி, கோவலன் போன்றவன். இன்னொருத்தியின் கணவன். மௌலியை முதலில் கோவலன் என்று விளிக்கவே மாதவி விரும்பினாள். மாதவியின் கணவன் ராகவன் பொருள் சேர்க்க அலைபவன். அதில் கரைகண்ட பின்பே மாதவியோடு சேர்ந்து வாழ விரும்புவன். இந்நிலையில் மாதவியின் உடலியல் உளவியற் தேவைகளும் (வாசிப்பும் எழுத்தும் அதனைப் பகிர்வதும் பரஸ்பர அன்பினை விழைவதும்) தனது கணவன் பற்றிய "புரிந்துணர்வு"ம் மௌலியை நாட வைக்கின்றன. மௌலி தனது தொழில் நிமித்தம் மனைவியைப் பிரிந்திருப்பதனால் ஏற்படும். உடலியல், உளவியற் தேவைகள் மாதவியுடன் உடல், உள நெருக்கத்தை ஏற்படுத்துகின்றன.

எனினும் மாதவி எல்லோருடனும் எப்போதும் கதைப்பது கால ஓட்டத்தில் மௌலிக்கு அவள் மீது ஓரளவு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. மனைவியின் எதிர்பாராத வரவும் குழந்தைகளின் செயற்பாடுகளும் இருவரது உறவையும் நிரந்தரப் பிரிவாக்கு கின்றன. தனக்கும் மௌலிக்குமான உறவு எதில் போய் முடியுமென்று அச்சத்தை கணவனான் ராகவனுக்கு மாதவி கூற நேர்ந்த போது "நானும் இராமனல்லன்" என்று ராகவன் கூறியமை மாதவிக்கு அதிர்ச்சி தருகின்றது. கணவனுக்கு திடீர் சுகவீனமேற்பட்ட போது சில நாட்கள் அவனோடு வாழ முற்பட்ட நிலையில் உடல் அவனை ஏற்க மறுத்தமை இன்னொரு பேரதிர்ச்சியாகவும் பிரிவொன்றிற் கான ஆரம்பமாகவும் அமைகின்றது. இருபக்கமும் ஏமாற்றங்கண்ட நிலையிலேயே மாதவியின் முற்குறிப்பிட்ட கடிதம் எழுதப்படுகின்றது. எழுதிய பின் மனத்தெளிவு பிறக்கிறது. ஈழத்தமிழ் நாவல் வரலாற்றில் மேற்கூறிய உள்ளடக்கம் கொண்ட கானல் வரி நாவலின் முக்கியத்துவம்

யாது என்றொரு கேள்வி எழுவது இயல்பே. இதற்கான விடை பின்வருமாறு அமையலாம்:

1. பாரம்பரியமாக தமிழ்ச்சமூகம் போற்றி வந்த ஒழுக்கக் கோட்பாடு முதன் முதலாக இந்நாவலூடாக மரண அடி பெற்றுக் கொள்கின்றது. சிதைவடையத் தொடங்கு கின்றது. நாவலின் முக்கியமான பாத்திரங்களுக்கு வைக்கப்பட்ட மாதவி, மௌலி (உண்மையில் கோவலன் என்ற பெயரே வைக்கவே மாதவி எண்ணியிருந்தாள்) என்ற பெயர்களே இதனை வெளிப்படையாக உணர்த்துகின்றன. அவர்களது செயற்பாடுகள் அதற்கு மேலும் வலுவேற்படுத்துகின்றன.
2. இந்நாவலில் காதல் தொடர்பாக கள்ளக்காதல் தொடர்பாக உடல் தேவைகள் தொடர்பாக முதன் முதலாக பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. தத்துவங்கள் முன்வைக்கப்படுகின்றன.
3. மேலிரு பகுதிகளிலும் கூறப்பட்டுள்ள விடயங்கள் வலுவும் வளமும் கொண்ட மொழியூடாகப் பேசப்படுகின்றன. விரசமாக அமைய வேண்டிய இடங்கள் பலவும் கலாபூர்வமான முறையில் வெளிப்படுகின்றன.
4. இவையாவுமே பெண் எழுத்தாளளொருவரால் முன் வைக்கப் படுகின்றன என்ற விதத்திலே துணிச்சலை மிகுந்த இளந் தலைமுறை நாவலாசிரியை ஒருவர் இனங்காட்டப்படுகின்றார். (மூத்த தலைமுறையினருள் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியனும் கோகிலா மகேந்திரனும்)
5. பாசாங்கற்ற முறையிலான எழுத்துக்களை முதன் முதலாகத் தரிசிக்க முடிகின்றது.

அண்மையில் வெளிவந்த, தமிழ் நதியின் இரண்டாவது நாவலாகவுள்ளது 'பார்த்தீனியம்' (2016). 1983 - 1990 காலப் பகுதியைப் பின்புலமாகக் கொண்டு ஈழத்தின் அரசியல் வரலாற்றின் பன்முகப் பரிமாணங்களை இயன்ற வரை பேசுகின்ற முக்கியமான நாவலாக இது பரிணமித்துள்ளது.

கதாபாத்திரமொன்றின் நினைவூடாக 1983 இனக்கலவரம் பற்றி கதையோட்டத்தின் இடைநடுவில் சுருக்கமாகப் பேசப்பட்டிருப்பது தவிர இயக்கங்களுக்கு இளைஞர் செல்வதனூடாக நாவல் ஆரம்பமாகின்றது. இந்தியாவில் இயக்கங்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள், புலிகள் சார்பில் பயிற்சிப் பெற்ற பரணி அரசியல் பொறுப்பாளராக செயற்பட்டு எதிர்கொண்ட சாவல்கள், இயக்கங்களுக் கிடையிலான முரண்பாடுகள், மோதல்கள், போராட்டச் செயற்பாடுகள் இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள், அவற்றிற்கு எதிரான அவலங்கள், இடப்பெயர்வுகள், திலீபனின் உண்ணாவிரதம், கோட்டைத் தாக்குதல், இந்திய அமைதி காக்கும் படையின் அடாவடித்தனங்கள் இந்திய அமைதிகாக்கும் படையின் வெளியேற்றம் என்றவாறு நாவல் விரிந்து செல்கின்றது.

மேற்கூறிய சம்பவங்கள் பலவும் இந்நாவலுக்கு முன்னர் வெவ்வேறு நாவல்களில் தனித்தோ சிற்சில சம்பவங்களை முதன்மைப்படுத்தியோ வெளிப்பட்டிருந்தாலும் இவையாவற்றையும் ஒன்று திரட்டித் தரும் முதல் நாவலாக இதுவே அமைந்துள்ளது. இந்திய அமைதி காக்கும் படையினரது செயற்பாடுகளுக்கு முதன்மை கொடுத்து அவர்களது கைங்கரியங்களை விஸ்தாரமாகப் பேசும் முதல் தமிழ் நாவலாகவும் இது அமைகின்றது. எனவேதான்,



இந்நாவலுக்கு பார்த்தீனியம் என்ற பெயரும் இடப்பட்டுள்ளது.

(ஆங்கிலத்தில் சாந்தன் எழுதியிருந்த *The whirl wind* - 2010 நாவலும் இந்திய அமைதி காக்கும் படை தொடர்பானதே)

இந்திய அமைதி காக்கும் படையினர் இங்கு செய்த கொடுமைகளை மறுதலித்து அல்லது நியாயப்படுத்தி முன்னர் ஜெயகாந்தன், சோ, ஜெயமோகன், கர்னல் டயஸ் முதலானோர் திருவாய் மலர்ந்தமையும் மீண்டும் அண்மையில் ஒரு பேட்டியில் ஜெயமோகன் அவ்வாறு தெரி வித்தமையும் ஆன சூழலில் அவற்றை மறுப்பதற்கு பலருமறியாத முக்கியமான மற்றொரு ஆதாரம் பற்றியும் இவ்வேளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது "உண்மை என்னவென்றால் வல்வெட்டித்துறை சம்பவம் இந்திய அரசால் திட்டமிட்டு மறைக்கப்பட்டது இந்தியப் பத்திரிகையாளர்களின் பெரும் பகுதியினர் இதில் கூட்டுச் சேர்ந்து கொண்டு புளகாங்கிதம் அடைந்தனர்.... வடகிழக்கு மாகாணத்தில் இராணுவ உடையில் நம்மவர்கள் நடத்தும் கற்பழிப்புக்களையும், கொள்ளைகளையும் பற்றி யாரேனும் வாய் திறப்பதுண்டோ?" : முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பெர்னாண்டஸ் (அணிந்துரை, வல்வைப்படுகொலைகள், வல்வை ந.அனந்தராஜ், நந்தி பதிப்பகம், வல்வெட்டித் துறை1989.02.06)

நோயில் இருத்தல் (மு.பொ) ஆறாவடு (சயந்தன்) முதலான நாவல்களிலே இந்திய அமைதி காக்கும் படையினரின் செயற்பாடுகள்

பற்றி சற்று விரிவாகவும் வேறு சில சிறுகதைகள், கவிதைகளில் சுருக்கமாகவும் (விரிவான விளக்கத்திற்கு, பார்க்க: இந்திய அமைதி காக்கும் படையினர் பற்றிய இலக்கியப் பதிவுகள் - செ.யோகராசா ஞானம் 150வது இதழ் நவம்பர் 2012 பக் - 122 - 144) பேசப்பட்டிருக்கின்றன. அவற்றைவிட மிக விரிவாகவும் புதிதாகவும் தமிழ் நதியின் இந்நாவல் பல முக்கியமான விடயங்களை முன்வைக்கிறது. எனினும் முற்குறிப்பிட்ட வல்வைப் படுகொலை பற்றிப் பேசவில்லை.

மேற்கூறிய விதங்களில், ஈழத்து வாசகர்களுக்கு மட்டுமன்றி தமிழக வாசகர்களுக்கும் இந்நாவலின் வரவு பெறுமதியானது.

இந்நாவல் இன்னொரு விதத்திலும் முக்கிய மானதாகின்றது. தனி மனிதர்களுக்கிடையான உறவில் - காதல் உறவில் - அரசியல் எவ்வளவு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை மனதில் உறைக்கும் விதத்தில் முதன் முதல் பேசும் நாவலாக இருப்பதே அதுவாகும். அரசியல் விவகாரங்கள், கோலங்களாக இடம்பெற்றுள்ளன என்று கூறினால் காதல் விவகாரம் கோடுகளா -அழுத்தமான கோடுகளாக - இடம்பெற்றுள்ளன என்பது மிகையன்று இவ்வாறு நோக்கும்போது இந்நாவலுக்கு "போரும் காதலும்" என்ற பெயர்கூட பொருத்தமானதுதான்.

போராளி ஒருவனது காதலும் பெண் ஒருத்தியின் காதலும் தோல்வி கண்டிருப்பது தவிர்க்க இயலாததே அதாவது, பரணி - வானதி ஆகியோரது காதல் தோல்வி எய்தியமைக்கான முக்கியமான காரணம் அவர்கள் இருவரதும் வலுவான குண இயல்புகளே. இவ்வாறான குண இயல்புகள் அழுத்தமான முறையில் இயந்திரப் பாங்காகவன்றி, இரத்தமும் சதையுமான உணர்வுகளோடு - வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான அழுத்தமான பாத்திர உருவாக்கம் காரணமாக தெணியானின் "மரங்கொக்கு", எஸ்.பொ.வின் "சடங்கு" ஆகியவற்றின் வரிசையில் இந்நாவலையும் சேர்த்துக் கொள்ளமுடிகின்றது.

இந்நாவல் அளவில் பெரிதாகவிருப்பதும் தமிழக ஆய்வாளர் சிலருக்கு - "ஈழத்தில் பிரமாண்டமான நாவல்கள் வருவதில்லை" என்று விசனிப்போருக்கு - ஆறுதல் தரக்கூடும்!

ஈழத்து நாவலுலகம் "தமிழ்நதி"யிடமிருந்து அதிகளவு எதிர்பார்க்கின்றது.

●●●

## எழில் சிந்தும் நயகரா

தித்திக்கும் தேனமுதுண்ணவே–அன்று
தேவர்கடைந்தபாலாழியே!–உன்னை
இத்திக்கில் யார்கொண்டுவைத்தனர்–காட்சி
இன்பத்தை இங்குவிதைத்தனர்!–நீரில்
எத்தனைவிந்தைகள் செய்கிறாய் – நிதம்
இத்தனைவெண்துகில் நெய்கிறாய்! –உன்
வித்தையைஎம்மிடம்காட்டவோ–பெரும்
வெண்திரைபோட்டுமறைக்கிறாய்!

மெல்லநடந்தவுன் பாதையிற் – காணும்
மேட்டையமைத்தவர்யாரடி? –நீயும்
செல்லும் வழிபள்ளமாக்கியே–சிறை
தள்ளநினைத்தவர்யாரடி? – அந்தப்
புல்லியரைப்பொடியாக்கவோ– சினம்
பொங்கப் புலியெனப்பாய்கிறாய்! –வெறும்
கல்லும்மலையும்தடுக்குமோ–உந்தன்
கட்டற்றவேகத்தைத் தாங்குமோ!

வெஞ்சினத் தோடுநீபாயினும் – குளிர்
வெண்நிறத் தில்வனப் பூட்டுவாய் – பலர்
நெஞ்சையும் கொள்ளையிட்டள்ளுமோர்–நீண்ட
நீர்த்திரைபோட்டழ கூட்டுவாய்!–என்றும்
அஞ்சிமனம்துஞ்சலாகுமோ–செயல்
ஆற்றவிழைந்திட்ட வேளையில் – எனும்
செஞ்சோலைநெஞ்சிலேஏற்றினாய்– எழில்
சிந்தும்நயகராவீழ்ச்சியே!

மாவிலிமைந்தன் சி. சண்முகராஜா- கனடா

## காணமல் போனவர்



கைகளில் திருவுருவப் படங்களாய்
காணாமல் போனவர்......
காலம் காலமாய்
இது நடந்து கொண்டு தான்
இருக்கிறது.
இன்னும்.....
காணாமல் போனவர்
திரும்பி வரவில்லை

ஐ.நா.......
மனித உரிமை ஆணைக்குழு.....
சர்வதேசம்......

எல்லோரிடமும்......
எல்லோர் முன்னிலையிலும்
அழுதாயிற்று
உரிய அடையாளம்
காட்டியாயிற்று
ஆனால்

இன்னும்
காணாமல் போனவர்
திரும்பி வரவில்லை
வெள்ளை வான்
கறுத்தத்துணி முகமூடி
துப்பாக்கி.....

எல்லாம்
மறைந்ததாகப் பேச்சு
ஆனால்
இவற்றால் அழைத்துச்
செல்லப்பட்டவர்.......?

பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.
இன்னும்.....
காணாமல் போனவர்
திரும்பி வரவில்லை
வரவேயில்லை

- வல்வைக் கமல்

கலாநிதி. மனோபவன் மனோகரதாஸ் -கனடா.

# சமுசாவும் பால் ரீயும்

**மட்டக்களப்பு மாநகர சபை வாசிகசாலையும், ஹாஜியார் கடையில் இரண்டு சமுசாக்களும் ஒரு கிளாஸ் தேத்தண்ணியும், (அடிக்கடி) மேட்டினி சினிமாவும்... அத்துடன் எனது க.பொ.த உயர்தர விஞ்ஞானக் கல்வியும் தொடர்பானது!**

தொண்ணூற்றியோராம் ஆண்டில் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்குள் காலெடுத்து வைத்துப் பிரவேசித்தேன்.

“பிரவேசம்“ என்றால், அது ‘பாட்சா’ படத்தில் ரஜினி மிகவும் ஸ்டைலாக (பின்னணியில் “பாட்சா... பாட்சா” என்ற இசை அழகாக ஒலிக்க) நடைபோட்டு வரும் பிரவேசமல்ல.

காலத்தின் கோலம் – கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் சித்தியடைந்து விட்டேன்... அதனால் உயர்தர வகுப்புக்குள் கட்டாயமாக தள்ளப்பட்டேன். வேறு வழியில்லை. *“Cache twenty-two situation”* என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே (தமிழில்: “மெல்லவும் முடியாத - விழுங்கவும் முடியாத நிலை?”) அதற்கு இதுதான் சரியான உதாரணம்.

பத்து வருடங்களாக (கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை முடியும் வரை) - “அரசினர் அளிக்கும் நற்கொடை இந்நூல்”, என்று கிடைக்கப்பெற்ற இலவசப் பாடப்புத்தகங்களின் தயவால் டியூசன் வகுப்புக்களின் தொந்தரவிலிருந்து தப்பித்திருந்த எனக்கு – தொண்ணூற்றோராம் ஆண்டு ஒரு மிகப்பெரிய சவாலாகவே இருந்தது.

ஆறு மணித்தியாலம் பாடசாலையில் காலம் கழித்த பின்னர் - மதிய வெய்யிலில் சைக்கிள் உழக்கி மறுபடியும் டவுணுக்கு வந்து, தகரக் கொட்டகையில் ஈச்சா டீச்சரிடம் தவளையின் உயிரியலும் அது முடிந்த கையோடு கல்லடிப் பாலம் கடந்து, நடராசா டீச்சர் வீட்டில் ஒளியலைகளின் பௌதிகமும் கற்றுக் “கொல்ல”ப்படுவது பெரிய ஈடுபாடாக இருக்கவில்லை.

எதுவும் தேவையென்றால் தெரிந்து கொள்ள - ஒருவருமே செல்லாத, மனித சஞ்சாரமற்ற மாநகர சபை வாசிகசாலை இருந்தது எனக்கு. அங்கு, அலட்டிக் கொள்ளாமல் எதனையுமே இலகுவாக வாசித்துத் தெரிந்து கொள்ளலாம்.

தவளையின் உயிரியலைப் பார்க்கவும் பாடத்திட்டத்தின் கடைசிப்பகுதியான உயிரிகள் (மற்றும் மனித இனத்தின்) கூர்ப்பு மிகவும் ஈடுபாடாக இருந்தது. உயர்தரக் கடைசி யாண்டு அண்ணன்மாரிடமிருந்து குறிப்புக் களை வாங்கிப் படித்துப் பார்த்தேன் - பாடத்திட்டம் உயிரினக் கூர்ப்பின் புதுக் கொள்கைகளை பற்றி சற்றும்



கருதாது எழுதப்பட்டிருந்தது வெளிப்படையாக விளங்கியது. என்னைப் பொறுத்தவரையில், பிரளயக்கோட்பாடு சார்ந்த பொறிமுறைகளின் அடிப்படையிலும் உயிரினங்களின் பரிணாமம் விளங்கப்படுத்தப்பட வேண்டும். அது பரம்பரையியலகுகளின் எதேச்சையான மாறல்களின் அடிப்படையை படமிட்டு அறிய வழிவகுக்கும். பரம்பரையியலலகுகளின் ஏதேச்சையான மாறல்களினால் வருகின்ற மாற்றங்களின் வகையிற் கூட கூர்ப்பு நிகழலாம். இதனையே கூர்ப்புப்பாய்வு (*sudden evolutionary leap*) என்று விளிப்பர். இதனை உள்வாங்கிக் கொள்தல் உயிரியல் ஆய்வுகளுக்கு மிகவும் முக்கியம்... இதையெல்லாம் யாரிடம் (அடியேன் பொடியன்) சென்று சொல்வது?

ஐம்பது வருடமாக மாறாத, எப்போதுமே தொடர்ச்சி யாக அரைக்கப்பட்ட பாடத்திட்டம் – அலுப்படித்தது. "பாடசாலையும் அதன் பின் டியூசன் வகுப்பும்"-நினைத்தாலே கொட்டாவி வந்தது...

ஆனால், எனது நண்பர்களோ கவனத்துடன் குறிப்பெடுத்தனர், அரைத்த மாவை நன்றாகவே திரும்பத் திரும்ப விருப்பத்துடன் அரைத்தனர் - பொறியியல், மருத்துவம், வங்கியியல் என்று பல்கலைக் கழகக் கனவுகள் காணத் தொடங்கிருந்தனர். அவர்களிடம் சாதிக்க வேண்டு மென்ற எண்ணக் குவியமிருந்தது.

ஆனால், சாதனைகள் பற்றி விளங்காத (விளங்கிக் கொள்ள முடியாத) என்போன்ற அரை-விசரர் சங்கத்தவர் களுக்கோ? வெறுமை மட்டும் தான் மிஞ்சியிருந்தது.

சாயங்காலப் பொழுதில் டியூசன் கொட்டகைக்குள் புகுந்து - அங்கு காசு அறவிடும் அக்காவிடமோ அண்ணாவிடமோ பத்து ரூபாய் நோட்டை கையளித்து - டியுசன் சிட்டையில் கையெழுத்து வாங்கி, அதன்பின் மாட்டுத்தொழுவம் போன்ற தகரக்கொட்ட கையில் - மேடையில் நிற்கும் டியூசன் ஆசிரியரின் அறுபது நிமிட நேர, நீண்ட சொல்வதெழுதல் கேட்டு குறிப்பெடுக்கும் வித்தை எனக்கு கைவர மறுத்தது.

"ஆ ஆ வ்...." அனாயசமான கொட்டாவி அதைப்பற்றி நினைத்தாலே... இன்றும் வந்து விடுகின்றது.



**மனோகரதாஸ் மனோபவன்**

தற்போது கனடாவின் பிறம்டன் நகரில் வசித்து வரும் மனோகரதாஸ் மனோபவன் அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த புகழ்பூத்த பொறியியலாளர் மனோகரதாஸ் அவர்களின் ஏகபுதல்வன் ஆவார். மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவன். கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பைத்தொடர்ந்து கொண்டிருக்கையில் லண்டன் கிங்ஸ்டன் பல்கலைக்கழக புலமைப்பரிசில் கிடைத்து அங்கு தனது முனைவர் (கலாநிதி) பட்டப்படிப்பை மேற்கொண்டு சூழல் தொகுதியியல் விஞ்ஞானத்தில் பெருநிலப்பரப்பு சூழற் தொகுதிகளின் ஒருசீர்த்திட நிலை பற்றிய ஆய்வுக்காக முனைவுப் (கலாநிதி) பட்டம் பெற்றவர்.

2003 - 2010 வட-கிழக்கிலங்கையில் பல்கலைக்கழக ஆய்வாளன் /விரிவுரையாளன்
2010 துவக்கம் இற்றைவரை - நிர்வாகி - சூழல் முகாமைத்துவமும் சட்டவாக்கமும் (தனியார் துறை, கனடா)

எழுத்து அனுபவம்: சூழலிய, சமூகசூழல் இடைத்தாக்கங்கள், சூழல் தொகுதியியல், சூழல் பொறியியல், இலக்கிய உவமானவியல் போன்ற தலைப்புக்களில் சுமார் 50ற்கும் மேலான ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

அதனால் கொஞ்சம் மாற்றி யோசிக்க வேண்டி இருந்தது. பாடசாலை விட்டதும் வீடு செல்ல வேண்டும். டியூசன் வகுப்புக்கு செல்வது அதன்பின் கட்டாயம்.

"இல்லை, போகமுடியாது" (அல்லது மட்டக்களப்பு தமிழில் - "ஒண்ணாது"-அதாவது 'இயலாது'), என்றால் கேள்வி வரும்...

அம்மாவிற்கு பிடிக்காது, அம்மாவிற்குப் பிடிக்காவிட்டால் அப்பாவுக்கும் பிடிக்காது. அதன்பின் குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் அனைவரும் சேர்ந்து கதகளி ஆடிவிடுவர்! அதனால் வெளியேற வேண்டும்.

ஆனால், அலுப்படிக்கும் தவளையின் உயிரியல் தொடர்பான டியூசன் சொல்வ தெழுதல் வகுப்புக்கு செல்ல முடியாது. அது மூளையைக் காய வைத்து விடும்... அலுப்படிக்கும்... மீனிலிருந்து ஈருடகவாழி, அதிலிருந்து ஊர்வன, அதிலிருந்து மமேலியாக்கள், இறுதியில் மனிதன்... இந்த அடிப்படை நன்கு தெரிந்திருக்க, ஏன் நான் தவளையின் சுவாசத்தொகுதியைப் பற்றி அறிய வேண்டும்? அடிப்படை தெரிந்தால் எதனையும் உசாவியறியலாம் என்பது எனது தாழ்மையான கொள்கை. ஆனால், என் கருத்துக் களை கேட்பதற்கு ஒருவரும் தயாரில்லை! டியுசனுக்கு செல்வதாக காட்டிக்கொள்ள வேண்டும். எப்படியோ அன்றையக் கைக்காசாக இருபதோ முப்பதோ கிடைக்கும் - டியூசன் கட்டணமாக.

முப்பது ரூபாய் தினசரி வருமானம், அதற்கு தோதான செலவு, கையிருப்பில் கிட்டிய சாயங்கால நேரம்... எனக்குக் கிட்டிய மாறிகள் (*variables*) அல்லது வளங்கள் - தொழிலதிபர் போல சிந்திக்காவிட்டாலும் என்னளவுக்கு சிந்தித்தேன்.

"மாற்றி யோசி மனே"??? ("மனே" – மட்டக் களப்புத் தமிழில் 'மகனே' என்பதன் வடிவம்).

இரண்டு துவக்கம் இரண்டரைக்குள் பள்ளியிலிருந்து வீடு சென்று - மதிய சாப்பாட்டை விழுங்கி, (மறுபடியும்) டவுனுக்குள் பிரவேசம் நடக்கும் (பட்டினப் பிரவேசம்?).

மற்றவர்கள் நேரே மைக்கல்ஸ் (*St. Michael's College*) தாண்டி டியூசன் வகுப்புகளுக்குள் பிரவேசிக்க - நான் குறுக்கு வழியால் மாநகரசபை வாசிகசாலைக்கு வந்து விடுவேன்.

செய்தித்தாள் பகுதியில் குமுதம், ஆனந்தவிகடன், வீரகேசரி, ஒப்சேவர் என்று கொஞ்சநேரம் மேய்வேன்.

நாளிதழ் வழியாக சுஜாதாவும், பிரபஞ்சனும், ஜெயகாந்தனும், 'எஸ். பொ'வும், டானியலும் மிகவும் பரிச்சய மானார்கள். இந்தியா டுடே பத்திரி(க்) கையியலின் புதுப் பரிணாமங்களை தமிழ் வழியாகத் தந்தது. 'பாமரன்' என்கின்ற அழகுசுந்தரம் குமுதத்தில் எழுதத் தொடங்கியிருந்த காலம் – அவரின் எழுத்துக்கள் முற்றுமாக விளங்கவில்லை... ஆனாலும் துணிவாக எவரையும் விமர்சிக்கும் அவரின் எழுத்தின் கம்பீரம் மலைக்க வைத்தது. வெள்ளைக் காகிதத்தில் அச்சிட்ட எழுத்துக்கள் என்னைப் பிரமிக்க வைத்தது (இன்று வரைக்கும் அந்தப் பிரமிப்பு நீங்கவில்லை). மதனின் கேலிச்சித்திரம் எனது பென்சிலையும் படம் வரையத் துண்டியது.

வாசிகசாலையின் அகன்ற யன்னல்களினூடாக வந்து தாலாட்டும் வாவிக்காற்றின் தயவால் - என்னை சுற்றிலும் ஒய்வூதியக்காரர்கள் செய்தித் தாள்களின் பின்னால் அரை நித்திரை யிலிருப்பார்கள். வழுக்கைத்தலைகளும், வெள்ளிக் கம்பிகள் போன்ற எஞ்சியி ருக்கும் சிகை கொண்டு ஐம்பதாமாண்டு எல்விஸ் பிரேஸ்லி (*Elvis Presley*) அலங்காரங்களுமாக - அந்தத் தாத்தாக்கள் அழகாக இருந்தார்கள்.

"பென்சில் கோட்டு மீசைகள்", "இருபது நாள் சவரம் செய்யாத முகங்கள்" - என்று பார்ப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.

வாழ்ந்து முடித்திருந்த அவர் களையும், "வாழ்க்கை என்றால் என்ன வென்றே தெரியாத" - எலி மீசை முளைத்தும் முளைக்காத பொடியனான என்னையும்-வாசிகசாலை இணைத் திருந்தது.

கவிஞர் நு.மானின் பாணியில் சொல்வதானால் - தாத்தாமார்களுக்கும் பேரனுக்கும் தஞ்சம் தந்தது



இரட்டை நாடி
சரீரம் கொண்ட அவரின்
முகத்துக்கு மீசை சற்று
அகலமாக வைத்திருக்கலாம்,
ஆனால் அவருக்கோ
முக்கோண வடிவ
மயிர்க்கொட்டி போன்ற
மீசையே பிடித்திருந்தது.
வயது எத்தனை கடந்தாலும்
ஹாஜியாரின் மீசையின்
கருமை என்றுமே
குறைவதில்லை!
அதுவும் ஒரு அதிசயமே!

வாசிகசாலையே. அந்தத் தாத்தன்மார் - யானைகளுக்கு சொந்தக்காரர்களாக இருந்தார்களா இல்லையா என்பது இற்றைவரை எனக்கு தெரியாது. விளங்காதவர்கள் 'தாத்தாமார்களும் பேரர்களும்' என்கின்ற கவிதையை வாசித்து அறிந்து கொள்ளக்கடவீர்களாக.

செய்தித்தாள் பகுதியிலிருந்து புத்தகங்கள் பகுதிக்கு அதன்பின் பிரவேசம்-இது ஒரு அரை அல்லது ஒரு மணித்தியாலத்தின் பின்னர் நடக்கும். புத்தகங்கள் பகுதியில்: கல்கியின் "பொன்னியின் செல்வனும்", சேக்ஸ்பியர் எழுதிய அத்தனையும், உயிரியல் விஞ்ஞான ஆய்வுப் புத்தகங் களும், நஷனல் ஜியோகிராபிக் (*National Geographic*) இதழ்களும், என்சைக்கிளோப் பீடியா பிரிட்டானிக் காவும் காத்திருக்கும். எழுந்தமானமாக, எது கைப்படுகின்றதோ அதை எல்லாமே படிப்பேன். நஷனல் ஜியோகிராபிக் இதழ்கள் வழியாக அமேசனும், ஆப்பிரிக் காவும், கொலராடோவும், அண்டார்ட்டிக் காவும் கையெட்டு தூரத்துக்குள் வந்து சிந்தனையை சுண்டியிழுத்தன.

அங்கும், வாவிக்கரைக்காற்று யன்னல் வழி வந்து தாலாட்டும். ஆனால் நித்திரை வந்ததில்லை...

சரியாக நான்கு மணிக்கு அண்மையாக, டவுண் பள்ளிவாசலிலி ருந்து தொழுகைக்கு அழைப்பு கேட்கும். வாசிகசாலை கடந்து நகரின் வியாபார பகுதியிற்கு கால்கள் நடக்கும். வாசிகசாலைக்கு அருகில் நீதிமன்ற வழியில் "ஃபிறீமன் தண்ணீர் பந்தல்" (*Freeman Tanneer Pandal*) என்று ஆங்கிலத்தில் பொறித்த வினோதமான சிறு பழங்கட்டிடம் எப்போதுமே பூட்டியபடி காணப்படும். அதன்மேல் வாகை மரப்பூக்கள் சிதறிக்கிடக்கும்.

தொடர்ந்தும் நடக்க, ஒடுக்கமான வீதியின் ஓரமாக ஒய்யாரமாக இருக்கும் கொலோனியல் பாணி வியாபாரக் கட்டிடம் சாப்பாட்டு வகைகளின் படங்க ளுடன் ஜொலிக்கும், "வாவென்று" வரவேற்கும்!

"ஹாஜியார் சாப்பாட்டுக்கடை -இன்றைய ஸ்பெசல் பிரியாணி"... என்று எப்பொழுதுமே மாறாத ஒரு அறிவிப்பு ஓரமாக காணப்படும். இன்றுமட்டுமல்ல என்றுமே பிரியாணிதான் அங்கு ஸ்பெசல்...

உயரமான படிகளில் ஏறி, டீ மாஸ்டரின் பகுதியைக் கடந்து உள் நுழைய சமையலறையிலிருந்து சமுசாக்கள் பொரியும் வாசனை - தூக்கலாக வந்து சேரும்.

கல்லாப் பெட்டியருகில் ஹாஜியாரோ அவர் வெளியே சென்றுவிட்டால் (சிலசமயங்களில்) அவரது மக்களுள் ஒருவனோ குண்டாக உட்கார்ந்திருப்பார்கள். "கொடுத்து வைத்தவர்கள் அவர்கள்", என்று நினைத்துக் கொள்வேன் (தினசரி சமுசாவுடன் வாழக் கிடைத்தவர்கள் பாக்கியவான்கள் தானே?).

ஹாஜியாரின் முகம் எப்போதுமே கவலையுடன் காணப்படும். வெங்காய விலையும், மிளகாய் விலையையும் ஏற்ற இறக்கமின்றி என்றுமே மாறாமல் (அவர் கடைத் தேவைக்கு சாதகமாக) அமைவதற்கு என்ன செய்யலாம் (?) என்று வணிக சந்தை நிலவரம் பற்றி அடிக்கடி யோசித்துப் பெருமூச்சு விடுவதனால் போலும் - அவர் (அதுதான், ஹாஜியார்) சிரிக்க மறந்து ஆண்டுகள் பலவாகியிருந்தன.

இரட்டை நாடி சரீரம் கொண்ட அவரின் முகத்துக்கு மீசை சற்று அகலமாக வைத்திருக்கலாம், ஆனால் அவருக்கோ முக்கோண வடிவ மயிர்க்கொட்டி போன்ற மீசையே பிடித்திருந்தது. வயது எத்தனை கடந்தாலும் ஹாஜியாரின் மீசையின் கருமை என்றுமே குறைவதில்லை! அதுவும் ஒரு அதிசயமே!

நிற்க, ஹாஜியார் தனது மக்களை பெரிய பெரிய நம்பிக்கைகளுடன் டவுன் பள்ளியான சென்றல் கொலிச்சில் *(Methodist Central College)* சேர்த்துப் படிக்க வைக்க முயன்றிருந்த போதிலும் - அவர்கள் சமுசாதான் கதி என்று மாறாதிருந்தது - ஒரு சோகமான உபகதை... அது பற்றி அலச இங்கு இடமில்லை. பிரதான கதையோட்டத்தில் தொடர்வோமா?

கடையினுள் கிறுகும் (சுழலும்) மின்விசிறிக் காற்றையும் விஞ்சிய வெக்கை (வெம்மை) முகத்தில் அடிக்கும். கடையுள் மேசைகள் மீது பாதியாக வெட்டப்பட்ட பிளாஸ்ரிக் விம் போத்தல்களில் அழகாகக் கிழிக்கப்பட்ட செய்தித்தாள் துண்டுகள் அடுக்கி செருகி வைக்கப்படிருக்கும். இருபுறமும் கண்ணாடிக் கிளாசுகள்.

போய் ஏதாவது ஒரு மேசைக்கருகில் அமர்ந்தால் – பெனியனும் மடித்துக்கட்டிய சாரமும் அணிந்த ஒல்லி நானா காத்தான்குடித் தமிழில் "என்னம்பி சாப்புடுற?" எனக் கேட்ட படி தண்ணிக் கிளாசை நிரப்புவார்.

அதனை (அந்த தண்ணிக் கிளாசை ஒருவரும் தொடுவது கிடையாது – பொதுவாகவே... கைகழுவ மட்டுமே பாவிக்கப்படும். அது ஹாஜியாருக்கும் தெரியும்...)

எனது கைகள் காசை எண்ணிப் பார்க்க, யோசிக்காமலேயே வாயிலிருந்து வார்த்தைகள் கொட்டும்: "சோட் ஈட்ஸ் கொண்டாங்க நானா" (அண்ணன்"...)

"சோட் ஈட்ஸ்" (*short-eats*) என்பது சமுசா, முட்டைக் கட்லெட், இறைச்சி ரோல்ஸ் முதலாய இன்னபிற உணவுப்பண்டங்களின் ஒரு கூட்டமைப்பு எனப் பொருள் கொள்க. இதனை தமிழாக்கி தீவிர உணவு ஆர்வலர் பலரும் 'சோடிட்ஸ்'... 'சோடிஸ்ஸ்'... என வெவ்வேறு விதமாகவும் சொல்வர்.

எப்பெயர் சொன்னாலும், குறித்திருப்பது ஒரு மூலத்தையே என்பதனால் கடை எடுபிடி நானாவோ, ஹாஜியாரோ, நானோ சரியான வார்த்தைப் பிரயோகம் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டியிருக்கவில்லை.

ஒரு பிளாஸ்ரிக் தட்டில் விரிக்கப்பட்ட செய்தித்தாள் காகிதத்தின் மேல் அழகாக அடுக்கப்பட்ட "சோட் ஈட்ஸ்" வந்து சேரும். சமுசா, முட்டைக் கட்லெட், இறைச்சி ரோல்ஸ் என்று ஒவ்வொரு வகையிலும் மும்மூன்று இருக்கும். முறுகப் பொரிந்த மசாலா கலந்த கறி உள்ளீடும், மொறு மொறுவென்ற முக்கோணவடிவ மாக்கோதுமாக சமுசாக்கள் நாவின் சுவையரும்புகளை தூண்டிவிடும்.

'சோட் ஈட்ஸ்' தட்டு மேசைக்கு வந்ததும் – உடனடியாக 'விழுங்குவதற்குப்' பறக்கக் கூடாது. சற்று அமைதியாக தட்டில் உள்ள பொக்கிஷங்களைப் பார்வை யிட்டு இரசிக்க வேண்டும். சுவையான உணவுப்பண்டங்களின் மணம் தொடர்ச்சியாக சுவையரும்புகளை அருட்டிக் கொண்டிருக்க நாவில் ஊறும் எச்சிலையும் கட்டுப்படுத்திக் கொண்டு பொறுக்க வேண்டும்.

அதன்பின் மெதுவாக ஒரு சமுசாவை கையில் எடுத்து... லாவகமாக உண்ண ஆரம்பிக்க வேண்டும்.

பொரிந்த வெங்காயமும், மசாலாவும், "கொச்சிக் காயும்" (மட்டக்களப்புத் தமிழில் "மிளகாய்") கலந்த இறைச்சிக்கறி மொறு மொறுவென்று பொரிந்த மாக்கோதின் வழியாக நாவின் சுவையரும்புகளை வந்து சேர - வருகின்ற 'ஏகாந்த நிலை'க்காக ஹாஜியாருக்கு ஒரு பெரிய 'ஓ' போட்டுத்தான் ஆக வேண்டும்.

இரண்டு சமுசாக்களை கபளீகரம் செய்தபிறகு –நாவில் சிறிதாகக் காரம் உறைக்கத்தொடங்கும். "நானா, ஒரு பால் டீ தாங்க", தன்னிச்சையாகவே வாயிலிருந்து வார்த்தைகள் கொட்டும்.

டீ மாஸ்டரின் கைவண்ணத்தில் உருவான நுரைபொங்கும் பால் தேனீர் கையைவந்து சேரும். திகட்டும் அந்த சுடுபானத்தை முதல் வாய் அருந்தும் போது – காரத்துடன் சேர்ந்த வெம்மை – நாவை மேலும் அருட்டும். ஆனால், அடுத்த மிடறில் காரத்தின் வேகரம் மறைந்து விட தேனீர் உருசிக்கத் தொடங்கும்.

இவ்வளவும் ஒரு பத்துப் பதினைந்து நிமிடங்களில் நடந்தேறும். நானா – துண்டுக்காகிதத்தில் 'பில்' (பற்றுச்சீட்டு) கிறுக்கித்தருவார். அவருக்காக மேசையில் ஒரு இரண்டு ரூபாய் குத்தியை வைத்துவிட்டு (*a tip- as pocket money for the* நானா?) - ஹாஜியாரிடம் சென்று பணத்தை செலுத்திவிட்டு வெளியேறுவேன்.


வாசல்கரையில் டீ மாஸ்டர் நீர்வீழ்சியாக தேனீர் ஆற்றிக்கொண்டிருப்பார். "நயாகரா நீர்வீழ்சியை வட அமெரிக்காவுக்கு வருபவர்கள் தவறாது தரிசிக்க வேண்டும் என்று ஒரு கட்டாயம் உள்ளது". "அது போல, மட்டக்களப்புக்கு வருபவர்கள் ஹாஜியார் சாப்பாட்டுக் கடை "தேனீர் நீர்வீழ்ச்சியை" பார்த்துத் தரிசித்தால் பல பாவங்கள் நீங்கப் பெறுவார்கள்", என்று நான் சொன்னால், அது சற்று மிகைதான் – ஆனால் அப்படி இருந்தால் நல்லதே!

மறுபடியும் வாசிகசாலையடிக்கு நடைப்பயணம். "ஃபிறீமன் தண்ணீர் பந்தல்" கட்டிடம் மாலைநேர மஞ்சள் வெய்யிலில் தங்கமாக ஜொலிக்கும். வாகை மர நிழல் குளிர்மையாக இருக்கும். எண்பதுகளின் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் குரலில் "இது ஒரு பொன்மாலைப் பொழுது" காதுக்குள் ரீங்காரமாய் ஒலிக்கும்.

சைக்கிளை எடுத்துக்கொண்டு – சனம் சந்தடியற்ற ஒரத்தெருக்களால் – மறுபடியும் பயணம்... வீடு நோக்கி.

பிரதான தெருக்கள் வழியால் சென்றால் – நண்பர்கள் யாரவது என்னைக் கண்டு, "டேய், ஏண்டா டியூசனுக்கு வரல்ல?" என்று கேட்கக் கூடும் அல்லவா. அதன்பின் கதை காட்டுத்தீயாகப் பரவி வீடு வரை போய் சேர - அது எனது வாழ்வுக்கு இடைஞ்சலாகிவிடும்.

இப்படியாக, இனிமையாகப் போய்க்கொண்டிருந்த எனது வாழ்க்கை – அடுத்த பத்துப் பன்னிரெண்டு மாதங்களில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்ததும் முடிவுக்கு வந்தது




பொரிந்த வெங்காயமும்,
மசாலாவும்,
"கொச்சிக்காயும்"
(மட்டக்களப்புத் தமிழில்
"மிளகாய்")
கலந்த இறைச்சிக்கறி
மொறு மொறுவென்று
பொரிந்த மாக்கோதின்
வழியாக நாவின்
சுவையரும்புகளை
வந்து சேர - வருகின்ற '
ஏகாந்த நிலை'க்காக
ஹாஜியாருக்கு ஒரு பெரிய
'ஓ' போட்டுத்தான் ஆக
வேண்டும்.
இரண்டு சமுசாக்களை
கபளீகரம் செய்தபிறகு
நாவில் சிறிதாகக் காரம்
உறைக்கத்தொடங்கும்.
"நானா, ஒரு பால் டீ தாங்க",
தன்னிச்சையாகவே
வாயிலிருந்து
வார்த்தைகள் கொட்டும்



என்று முற்று முழுதாகச் சொல்ல முடியாது...

பரீட்சையில் வெறுமனே மூன்று 'சி'க்களும் ஒரு 'பி'யும் பெற்றிருந்த எனக்கு முதல் தரத்தில் பல்கலைக்கழக அனுமதி கிட்டாது போனது.

எனது பெற்றோருக்கும் சக குடும்பத்தினருக்கும் நான் புரியாத புதிராய் மாறிக்கொண்டிருந்தேன்.

இப்படியான இரண்டும்கெட்டான் நிலையில் இருந்த எனக்கு அந்தக்கால மட்டக்களப்பில் ஆக்கபூர்வமாகச் செய்வதற்கு வேறொன்றுமிருக்க வில்லை...

மறுபடியும், அடுத்த" தடவை பரிட்சை எழுதுவதற்காக 'எனது வழியில்' படிக்கத் தொடங்கினேன்...

வாசிகசாலை நிரந்தர வேடந்தாங்கலானது – ஹாஜியார் சாப்பாட்டுக்கடை தினசரி வாடிக்கையானது.

இடையிடையே, சாந்தி தியேட்டரும், சுபராஜ் தியேட்டரும், ராஜேஸ்வரா தியேட்டரும், மற்றும் பல சினிமாக் கொட்டகைகளும் கூட பரிச்சயமாயின.

ஆனாலும், வாசிகசாலையின் யன்னல்வழிக் காற்றும் வாவியின் மணமும், புத்தகங்களும் (என்னை விமர்சிக்காத, என்னை 'நானாக' ஏற்றுக்கொண்டிருந்த) நிரந்தரமான பிரத்தியேக நண்பர்களாயிருந்தன.

எனது 'மனித நண்பர்களில்' சிலர் பல்கலைக்கழகம் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். சிலர் தொழில்களில் சேர்ந்திருந்தனர். வாழ்க்கையில் இன்னொரு கட்டத்துக்கு சென்றுவிட உன்னிப்பாய் முயன்றனர். மோட்டார் சைக்கிள்கள் வாங்கினர், தங்கள் அண்ணன்மாரின் கார்களை ஓட்டிப் பழகிக்கொண்டனர். இடையில், அவர்கள் வாழ்வுகளில் - பல காதல் கதைகளும் வந்து போயின...

அவர்கள் அனைவருக்கும் நான் ஒரு விநோதப் பிறவியாகத் தென்பட்டேன். எனக்கோ, தொண்ணூற்று நான்காம் ஆண்டு முடியும் வரை அரதப்பழசான எனது 'பீனிக்ஸ்'

சைக்கிளும் சமுசாக்களும் மட்டுமே உற்ற உறவுகளாய் தொடர்ந்தன.

காலத்தின் கோலம் தொண்ணூற்று நான்காம் ஆண்டு எப்படியோ உயர்தரப் பரீட்சையில் எனக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைக்க – எனது 'இனிமையான வாழ்க்கை முறை' மிகப் பெரிய அதிர்வுடன் முடிவுக்கு வந்தது...

இன்று, எறத்தாழ இருபது வருடங்கள் கழித்து எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கும்போது – ஹாஜியாரும், அவர் மீசையும், சமுசாக்களும், வாசிகச ாலையில் தஞ்சம் பெற்றிருந்த தாத்தன்மார்களும் – பாரதிராஜா படத்தின் வெண் நிற ஆடைத் தேவதைகளாக மனதின் ஓரத்தில் நின்று "லா லா லா" பாடுகின்றார்கள்.

உள்ளத்தின் உள்ளகத்தில் மென்மையான சாந்தம் இதமான ஈரமாய் படருகின்றது...

"பல்கலைக்கழகம்" என்கின்ற வார்த்தையை பல விதங்களிலும் - ஒரு மாணவனாக, ஆய்வாளனாக, ஆசிரியனாக ('பயண வழிகாட்டி' என்பதே நான் செய்த தொழிலுக்கு சாலப் பொருத்தம்), மற்றவர்களுக்கு "அரியண்டம்" தருபவனாக (அது அவர்கள் தமது கொழுத்த! கொள்கையற்ற! சுயநலமான அசமந்தப் போக்குகளை விடமுடியாததால் வந்திருக்கலாமா?), அடிவாங்குபவனாக, அடிகொடுத்தவனாக, தொடர்ந்தும் அடிகொடுக்க விரும்புவனாக இந்த இருபது ஆண்டுகளில் உணர்ந்திருக்கின்றேன்.

ஆனால், ஹாஜியாரின் சமுசாக்களும், வாசிகசாலையும், மற்றும் - அந்த பழைமையான மட்டக் களப்பின் சினிமா தியேட்டர்களும் எனக்குத் தந்தவைகள் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொள்ள முடியாதவை... அந்தக்காலம் மீண்டும் வராது தான் – ஆனால், அந்த நினைவுகள் (நாசிக்குள் மறவாமல் இருக்கின்ற ஹாஜியார் கடை சமுசாவின் மசாலாவாசனை போல) என்றுமே பசுமையாக இருக்கும்!

ஆமென்! எல்லாப் புகழும் அருளாளனுக்கே!

• • •



"மகுடம் 10ம் இதழில் வெளியான "எஸ். பொ. நினைவுகள்" என்ற கட்டுரையை எழுதிய பின் ஞாபகம் வந்த இரண்டு விஷயங்களைக் குறிப்பிடலாமென நினைக்கிறேன்.

2010 ஏப்ரலில் சென்னையில் என் நூல் வெளியீட்டுரையை எஸ்.பொ. நிகழ்த்தியமை பற்றி அக்கட்டுரையில் கூறியிருந்தேன். அவ்வேளையில் அவர் தனியேயன்றித் தம் துணைவியாருடன் வந்து சிறப்பித்தமை குறிப்பிடப்பட வேண்டியது.

"மல்லிகை" நவம்பர் 1977ல் "ஒரு நிலைப்பாடும் சில இலக்கியகாரரும்" என்ற எனது பதிவு வெளியாகியிருந்தது. அதற்கடுத்த இதழில் எவருமே எதிர்பார்த்திராத வகையில் எஸ்.பொ வின் பாராட்டுக் கடிதமொன்று பிரசுரமாயிற்று. "இலக்கிய சனாதனிகள் புனைகதைக்குக் கற்பித்துள்ள சட்டகங்களை எகிறி நிற்கிறது" என்றும், "ஒரே நாளில் அதனை மூன்று தடவைகள் வாசித்தேன்" என்றும் அப் பதிவுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். "மல்லிகை"யில் வெளியான அவரின் மிகமிகச் சில எழுத்துகளில் ஒன்று இக்கடிதம்.

**- சாந்தன்**


## மகுடம் சந்தாவிபரம்

| | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| தனிப்பிரதி | ரூ.100.00 | | 06 *(US $)* | |
| ஆண்டுச்சந்தா (தபால்செலவு உட்பட) | ரூ.500.00 | தபால்செலவு உட்பட | 25 *(US $)* | தபால்செலவு உட்பட |
| இரண்டாண்டு சந்தா (தபால் செலவு உட்பட) | ரூ.900.00 | | 50 *(US $)* | |
| ஆயுட்சந்தா | ரூ.20,000.00 | | 500 *(US $)* | |

சந்தாவை காசோலை மூலமாகவோ, மணி ஓடர் மூலமாகவோ அனுப்பலாம். மணி ஓடர் மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் மாற்றக்கூடியதாக வி.மைக்கல்கொலின் என்ற பெயரிற்கு அனுப்புதல் வேண்டும்.

- எதுவித செலவுமின்றி சந்தா அனுப்பும் வழி, தங்கள் பகுதியில் உள்ள மக்கள் வங்கிக்கிளையில் *W.Michaelcollin Peoples Bank. Town Branch, Batticaloa.* சேமிப்பு கணக்கு இலக்கம் 113-2-001-0-7728743 என்ற கணக்கில் வைப்பு செய்து, வைப்பு செய்த வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.
- ஆயுட் சந்தா செலுத்துபவர்களுக்கு "மகுடம்" பப்ளிகேஷன் பிரைவட் லிமிட்டட்டின் சகல வெளியீடுகளும் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- மகுடம் விளம்பர விபரங்களைத் தெரிந்து கொள்ள ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

– ஆசிரியர் –

சிறுகதை

ஆனந்தப்பிரசாத் - கனடா.

# ஜொனிசின் சிலுவைப்பாடு

அந்த வருடத்துக் கோடைகாலம் வழமையை மீறி சூடு பிடித்திருந்தது. செயற்கைக் குளிரூட்டிகளோடு ஒத்துவராத நான் படுக்கையறை ஜன்னல் கதவை விரியத்திறந்து வைத்துத் தூங்கப் போனேன். நள்ளிரவு ஒருமணி இருக்கும்.

"பஸ்கால்...... பஸ்கால்......."

"இப்போது என்ன வேண்டும் உனக்கு?"

"எனக்கொரு மூலிகை கிடைத்திருக்கிறது..... வாயேன்... வாயேன்...."

"கொஞ்சம் பொறு... அம்மா தூங்கி விட்டாளா என்று நிச்சயப்படுத்திக் கொண்டு குதிக்கிறேன்.. ப்ராவோரே பியேர்"

கிசுகிசுத்த ரகசியக்குரலில் இவர்களது உரையாடல் எனது செவிப்பறையை உரசிக் கடந்துபோன சிறிது நேர அமைதிக்குப் பிறகு எனது தலைமாட்டுப் பக்கத்தின் குடியிருப்பு அடுக்கிலிருந்து "பால்கனி" வழியாக பஸ்கால் முதலாம் மாடியிலிருந்து தரையிறங்கிய ஒலி அந்தப் பசும் புற்தரையிலும் துல்லியமாகக் கேட்டது.

நிமிடங்கள் சில கடந்தன. அதுவரை ஜன்னல் வழியாகக் குளுகுளு வென்று வந்துகொண்டிருந்த தென்றலுக்கு இப்போதோ கிளுகிளுப்பு ஏறியிருந்தது. எனது இளவயதில் நுகர்ந்தறிந்த இந்த வாசனை என்னவென்று இலகுவில் இனங்காண முடிந்தது.

"இதுதான்றா சிவமூலி எங்கிறது......" என்று சிலாகித்துத் திருக்கோணமலைக் கவிராயர் உருட்டிச் சுருட்டித் தீ மூட்டி எனது நண்பர்கள் வட்டத்துக்குள் முதலாவது சுற்றுக்கு அனுப்பிவைப்பார். தொடர்ந்து பல சுற்றுக்கள். கொஞ்சம் தலை சுற்றும். பின்னர் தகுந்த காரணமில்லாத சிரிப்புவரும்!

"தொதலுடன்" "ப்ளென் டீ" கேட்கும். பன்றியைவிடவும் மோசமாகப் பசிக்கும். இத்யாதி இன்ப அவஸ்த்தைகளை எல்லாம் இளவயதில் அனுபவித்தவன் நான். கனடா நாட்டின் மான்ரியால் நகரில் தன்னந் தனியே புதுக்குடித்தனம் வந்து முப்பது வருடங்களாகிறது. திருக்கோணமலைக்குத் திரும்பிப் போகவேயில்லை. இந்த வாசனையால் இனாமாகக் கிடைத்த விமானச்சீட்டில் ஊருக்கு மானசீகமாக ஒரு பயணம் போய் வந்தேன். வந்த களையோ என்னமோ தூக்கம் இதமாக இமைகளை அழுத்தியது.

திடீரென்று பியேர் என்கிற மூலிகைப் பையனின் குரல்



குட்டிநாய்க் குரைப்பையொத்து அமைதியை யும், தூக்கத்தையும் அலாக்காகத் தூக்கிக் கொண்டு போனது. பிரெஞ்சில் கத்திக்கொண்டி ருந்தான். பஸ்கால் அவனுடன் அந்த நள்ளிரவில் வெளியே போகவேண்டுமாம்.

இன்னும் மூலிகை வேண்டுமாம். பெட்டைக் குரலில் சிணுங்கிச் சிணுங்கிப் பஸ்கால் மறுத்துக் கொண்டிருந்தான்.

“அம்மா எழுந்துவிடுவாள்... போய்விடு.... போய்விடு....” என்று கெஞ்சிக் கொண்டிருந்தான். நித்திரையை நிலைகுலைத்த இந்த லொள்ளுத் தாங்க முடியாத நான் ரௌத்ரம் பழகினேன். படுக்கையை விட்டெழுந்து ஜன்னல் வழியாகத் தலையை வெளியேற்றி “டேய் பெட்டை நாய் பெற்ற மகன்களா...... பிருஷ்ட பாகத்து ஓட்டைகளா...... வாயை மூடிக்கொண்டு இடத்தைக் காலி பண்ணப் போகிறீர்களா அல்லது நான் 9.1.1 க்கு அழைப்பு விடுக்கவா... தபர்நாக்......“ என்று பிரெஞ்சில் கூட்டியள்ளி சுமார் இரண்டரைக் கட்டை ஸ்ருதியில் கத்தினேன். பியேர் இருளில் மென்காற்றில் கலந்து மறைந்தான். பஸ்காலின் அன்னை ஜோயானி எழுந்து பால்கணிக்கு வந்து பஸ்காலை உள்ளே விரட்டிவிட்டு அழாக்குறையாக எனக்கு நன்றி சொல்லி மன்னிப்பும் கோரி விட்டு அப்பார்ட்மெண்ட்டுக்குள்ளே போனாள்.

ஜோயானி நன்றி சொன்னதற்கு அழுத்தமான காரணமிருக்கிறது.

அவள் தனது நன்றியறிதலை மிகவும் உயர்தரமான பிரெஞ்ச் சொற்களை உபயோ கித்துக் கண்கள் பனிக்கச் சொல்வாள்.!

ஜோயானியின் விவாகம் ரத்தாகிப் பஸ்காலின் வளர்ப்புரிமை இவளுக்கேயென நீதிமன்றம் தீர்ப்பளித்ததும் எனது குடியிருப் பின் படுக்கையறையோடு ஒட்டியிருந்த அடுத்த “கொண்டொமீனியத்தை” சொந்தமாக வாங்கி மகனோடு குடிவந்து மூன்று ஆண்டுகள்தான்.

நடுத்தர வயதை அண்மிக்கும் வயதெனினும் குடும்ப வாழ்வின் ஒழுங் கீனங்களினாலும், பதின்ம வயதிலிருந்தே இவளைப் பீடித்திருந்த தொடர்ச்சியாகப் புகைபிடிக்கும் பழக்கத்தினாலும் இளைப் பாறும் வயதைத் தாண்டியவளைப்போன்ற தோற்றம். கலகலப்பாக எல்லோருடனும் பேசுவாள். எப்போதும் சிரித்த முகத்தோடு காணப் படுவாள். பார்ப்பவர்களுக்கு இவளுக் குள்ளிருக்கும் அதள பாதாளங்களை வதனத்தின் வழியாக எட்டிப்பார்த்துத் தெரிந்து கொள்வதென்பது அத்தனை எளிதல்ல சுருக் கங்களுடன் கூடிய முகத்தில் வாய்திறந்து சிரிக்கும் போதோ காவிபடிந்த பல்வரிசை எனதூரின் அங்கிலிக்கன் இடுகாட்டின் மதிற் சுவரை கண்முன் கொணரும். கொஞ்சம் பயமாக இருக்கும். காலத்தை மீறி நரைத்துப் போன கேசம். இலேசாக ஆங்காங்கே தெரிந்த பொன்னிறத்து முடிகள் ஒருகாலத்தில் இவளும் வஞ்சனையில்லாத அழகுடன் திகழ்ந்திருக்கலாம் என்று ஊர்ஜிதப்படுத்தியது. எனது இலக்கணம் மீறிய பிரெஞ்ச் உரையாடலைக் கேட்டுச் சிரித்தாலும் பொறுமையாகத் திருத்துவாள்.

திருமணமான புதிதில் தெரிந்திருக்க வில்லையெனினும் ஆறே மாதங்களில் கணவனின் “மரியுவானா” பழக்கத்தை அறிந்துகொண்டாளாம். பஸ்கால் இவளுடைய சிகரெட் பாக்கெட்டிலிருந்து திருடிப் புகைப் பதைக் கண்டும் காணாதுவிட்ட தந்தையின் அலட்சியத்தால் பதின்மூன்று வயதிற்குமேல் மகன் அப்பனிடமே சிவமூலியைப் பெற்றுக் கொண்டு நண்பர்களுடன் இரு கரங்களையும் குவித்துவைத்துக்கொண்டு இழுத்த இழுப்பில் அனுபூதி அடைந்தார்களாம். பஸ்காலோ அதையும் தாண்டிப் புனிதனாகி விட்டான். “ஹெரோய்ன்”... “க்ரிஸ்டல் மெத்”..... “எக்ஸ்டெஸி”...... இவ்வாறாக வருடா வருடம் வகுப்பேற்றப்பட்டான். பதினெட்டாவது பருவத் தில் பாடசாலையில் போதைப்பொருள் பாவித்துப் பிடிபட்டு ஒரு ஆறுமாதம் சீர்திருத் தம் பெற அனுப்பிவைக்கப் பட்டானாம்.

சீரும் சிறப்புமாக வருவான் என்று எதிர்பார்த்திருந்த ஜோயானிக்கு அவன் திரும்பி வந்த பிறகுதான் தெரிந்தது மகன் சில மேற்படிப்புகளை முடித்துக்கொண்டு முதுகலைமாணியாகிய விபரம்.

பஸ்கால் இரண்டு வாரங்களுக்கொருதடவை தகப்பன் ஊதியம் பெறுகிற நாட்களில் அங்கே போய் விடுவான். ஜோயானியின் ஜீவனாம்சப் பணம் வங்கிக் கணக்கில்



**ஆனந்தப்பிரசாத்**

“திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டதில் பெருமை கொள்ளும் இவர் சிறு வயது முதற்கொண்டே கலை இலக்கியங் களில்ஆர்வலராகிப் பதின்ம வயதில் கவிஞராக, இசையாசிரியனாக அறியப்பட்டவர். அரசியல், பொருளாதார நெருக்குவாரங்களால் கடல் தாண்டி மலை தாண்டித் தரை தாண்டி எப்படியோ கனடா நாட்டில் வேரூன்றியவர். “புலம் பெயர்ந்தவன்” என்கிற பதத்தை அறவே வெறுப்பவர். கவிதைகளும், “ஆடலுடன் பாடலைக் கேட்டு....” என்கிற தலைப்பில் கலையிலக்கியக் கட்டுரைகளும், நவீன திரைப்பட விமர்சனங்களும், சில சிறுகதைகளும், கவிதைகளும் எழுதி வருபவர். இன்றும் இசையாசிரினாகவும், திரைப்பட நடிகனாகவும், மேடைக் கலைஞனாகவும்.... அதிகம் அறியப்படாமல் ஒதுங்கி இருந்து கடந்த முப்பது ஆண்டுகளாக இன்றும் எழுதிக்கொண்டிருப்பவர். தற்போது கனடாவிலிருந்து வெளிவரும் “தாய்வீடு” மாத சஞ்சிகையில் “சொல்லப்படாத கதை” என்கிற தலைப்பில் ஒரு நீண்ட நாவலைக் கடந்த ஒரு வருடமாக எழுதிவருகிறார்.

இருப்பிடப்படும் தினங்களில் இங்கு வந்து விடுவான். இவர்கள் குடிவந்த புதிதில் ஒருநாள் மாலை மிதமான போதையில் தாயிடம் பணம் கேட்டிருக்கிறான்..... கிறக்கத்தில் முழுமையடைய. அவளோ மறுத்திருக்கிறாள். கோபத்தில் சமையல் பாத்திரங்களையெல்லாம் தூக்கியெறிந்து அட்டகாசம் பண்ணிக்கொண்டிருந்தான். அது ஒரு இலையுதிர்கால ஆரம்பம் . பனிக்காலம் வரப்போகிறதே..... குளிர் வந்து கூத்தாடப் போகிறதே...... சர்வமும் உறைந்து போய்விடப் போகிறதே....... என்கிற முன்னோட்டத்தைப் பார்த்த எரிச்சலில் ஏற்கெனவே சலித்துப் போய்க்கிடந்த எனக்கு இவன் கூச்சல் வேறு வெறுப்பேற்றிவிட எழுந்து வெளியே போய் அவர்களது குடியிருப்பின் கதவைப் பலமாகத் தட்டினேன்.

பஸ்கால் தான் கதவைத்திறந்தான். "வீ.... மிஸ்யு...." ஒருவித எக்காளத்தொனியில் வினவினான். " சத்தத்தைக் குறை.... எனது அமைதிக்கு அது இடையூறாக இருக்கிறது" என்றேன். அதற்கு அவன் என்னுடைய வியாபாரத்தை மட்டுமே கருத்திற் கொள்ளும்படி அறிவுறுத்துவதாகச் சொன்னதோடு உதிரியாக நான் அவ்வாறு நடந்து கொள்ளாது போனால் எனது பின்புறங்களை அவன் புணர்ந்துவிடுவான் என்றும் அச்சுறுத்தினான். அடக் கிரகசாரமே!

முன்புறத்தால் புணரவே வக்கில்லாது தனியே கிடக்கும் எனக்கு எனது பின்புறங்கள் கிள்ளுக் கீரையாகிப் போவதா என்ற சினம் பிடரியில் உந்த எனது வலது கையால் அவன் மேற் சட்டையை முறுக்கிப் பிடித்து இடது கரத்தால் தலைமுடியைக் கோலியெடுத்து முகவாய்க் கட்டை நிமிர்த்தி இழுத்து எனது முகத்திற்கு இரண்டங்குல இடைவெளியில் நிறுத்தி கண்களுக்குள் கண்களால் ஊடுருவித் துளைத்து நீ இப்படிப் பேசியதற்கு இப்போதே மன்னிப்புக் கேளாவிட்டால் உனது உடலிலுள்ள அத்தனை ஓட்டைகளிலும் நான் புணர்ந்துவிடுவேன் என்று அறிவுறுத்தினேன். எதிர்பார்க்கவில்லை. அதிர்ந்துபோய்விட்டான். ஜோயானியிடம் எந்தவொரு சலனமும் இல்லை. அவளது நெற்றியில் இரத்தம் இலேசாகக் கசிந்து கொண்டிருந்தது. வரவேற்பறையில் பாத்திரங்கள் சிதறிக்கிடந்தன. ஒரு மேஜை விளக்கு எரிந்தபடியே தலைகீழாகத் துவண்டுபோய்க் கிடந்தது. அறை முழுவதும் புகையிலை நாறியது. ""பார்தோன் மொவா..... மிஸ்யூ..... ஸில்வுப்ளே..... எக்ஸ்க்யுஸே மொவா.....""பணிந்தான். பிடியைத் தளர்த்தி மிகக் குறைந்த விசையில் அவனை உள்ளே தள்ளிவிட்டு வெளியேறினேன்.

மறுநாள் மாலையில் அமைதியாக வீட்டிலமர்ந்து புத்தகம் வாசித்துக்கொண்டிருக்கிறேன்....... கதவு தட்டப்படுகிறது. எழுந்து போய்க் கதவில் பொருத்தியிருந்த கண்ணாடித் துவாரத்தின் வழியே பார்க்கிறேன். ஜோயானிதான். திறந்துவிட்டு வாழ்த்துச் சொல்லி என்ன வேண்டும் என்று கேட்டேன். நேற்று நிகழ்ந்தவைகளுக்காக மன்னிப்புக்கேட்டுக்கொண்டதோடு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்ததற்கு நன்றியும் தெரிவித்தாள். நான் எதுவும் பேசவில்லை.நெற்றியில் ஒரு பெரிய ப்ளாஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. "பொன்ஸ்வாரே...." என்று மாலை வணக்கத்தை சொல்லி வாழ்த்திவிட்டுப் போனாள்.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்து பின் தொடர்ந்த நாட்களில் அமைதி அமுலிலிருந்தது. அவ்வப்போதில் பஸ்கால் எதிர்ப்படும் போதில் எனது நாள் சிறக்க வாழ்த்திவிட்டு பவ்யமாக ஒதுங்கிப் போவான்.

அவன் கட்புலனுக்கு நான் ஒரு அதிதீவிரவாதியாகவே தெரிந்திருக்க வேண்டும் என்று நினைத்துக்கொள்வேன்! எனது தோற்றமும் ஏறத்தாழ அப்படித்தான். நல்ல உயரமும் அதற்கேற்ப உடல்வாகும் நியமமாக முகச்சவரம் செய்துகொள்ளாதிருப்பதால் வளர்ந்தும் வளராததுமாகத் தாடியும், மீசையும்....... எல்லாமும் ஒருமித்து என்னையொரு அல்கையிடா, ஹிஸ்புல்லா ஜிஹாதிகளோடு இணைத்துவிட்டிருக்கலாம்!! எல்லாவற்றினும் மேலாக வெயில் நாட்களில் காதி கிராமில் வாங்கிய கதர் ஜிப்பாவை வேறு அணிந்துகொண்டு வெளியே செல்வேன் குளிர்ச்சிக்காக!!!

இதன் பின்னர் கடந்து போன இரண்டு குளிர்காலங்கள் வரையிலும் எந்தவொரு அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை. தொடர்ந்து வந்த ஒரு இளவேனிற் காலத்தின் பின்னிரவில் நான் வீடு திரும்பவேண்டி இருந்தது.

தரிப்பிடத்தில் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு நிமிர்ந்தால் நேரெதிரே முதலாம் மாடியில் ஜோயானிவீட்டு பல்கணியின் கண்ணாடி கதவை வெளிர்நீல நிறத்தில் மெல்லிய திரைச்சீலை மறைத்திருந்தாலும் வெளிச்சம் கசிந்தது. குடியிருப்புமாடிக் கட்டித்தின் பின்புறத்து நுழை வாயில் வழியே உள்ளே வந்து படியேறி எனது அறைக்கதவை நோக்கி நடந்து வரும்போது ஜோயானியின் அறைவாசலைக் கடக்கையில் கதவு இலேசாகத் திறந்துகிடந்ததை அவதானித்தேன். நள்ளிரவு தாண்டிய நேரங்களில் விளக்கெரிந்து கொண்டிருப்பதையோ அல்லது வாயிற்கதவு திறந்து கிடந்ததையோ என்னால் ஒரு போதும் காண நேர்ந்ததேயில்லையே?

அதிலும் இப்படியொரு புத்திர பாக்கியத்தைப் பெற்றவள் இந்த நேரத்தில் விளக்கெரிய விடுவதா...... கதவைப் பூட்டாதிருப்பதா? ஏதோ சரியில்லை என்று அனுமானித்துக்கொண்டு மெதுவாகக் கதவைத் தள்ளித் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தால் ஒன்றும் தெரியவில்லை. "மதாம்.....ஜோயானி..... மதாம்... வுஸாவே லெஸ்ஸே வோத்ர போர்த்தாந்ரே உவ்வேர் மதாம்....." (அம்மணி..... தங்கள் குடியிருப்பின் பிரதான வாயிற் கதவு திறந்து

கிடக்கிறது....) ரகசியக்குரலில் சொல்லிக்கொண்டே வரவேற்பறைக்குப் போய்ப்பார்த்தால் ஆளில்லை. அழைத்துக்கொண்டே திறந்தே கிடந்த படுக்கையறைக்குள்ளே பார்த்த போது உறைந்து போனேன்! வெண்ணிறப் படுக்கை விரிப்பில் இரத்தம் ஊறிப் பரவியிருக்க குப்புறக் கிடந்தாள் ஜோயானி.

9-1-1 அவசரகால சேவைக்கு எனது கைப்பேசியில் அழைத்து விபரம் தெரிவித்து முகவரியைக் கொடுத்து ஆம்பியுலன்ஸ் அனுப்பிவைக்கும் படி சொல்லிவிட்டு எனது அறைக்குள் வந்து விழுந்தேன். வேலைக் களைப்போடு இந்தக் காட்சிப் பிழையும் சேர்ந்து கொள்ள தலை லேசாக வலித்தது. குளிர்பதனியிலிருந்து ஒரு பியர்ப் போத்தலை எடுத்து நெற்றியில் உருட்டிக் குளிரவைத்து பின்னர் உடைத்துப் பருகிக்கொண்டிருக்கையில்

இந்தப் பரதேசிப்......மோன்தான் காசு கிடைக்காத கோபத்தில் அடித்துப்போட்டிருப்பான். வேறு யாரும் ஜோயானியின் குடியிருப்பிற்குள் வந்து நான் பார்த்ததேயில்லை. இந்த நாய் மகனிடமும் ஒரு ஜோடித் திறப்பு இருந்திருக்கலாம். ஏழே நிமிடத்தில் சிவப்பும் நீலமும் கலந்த சுழல் விளக்கின் பிரதிமைகள் எனது கண்ணாடி ஜன்னலில் படபடத்தது. வாகனத் தரிப்பிடம் வழியாக ஒரு போலீஸ் வாகனமும் அம்பியுலன்ஸும் வந்து நின்றது. நான் எழுந்து ஓடிப்போய்ப் பின்புறத்து வாயிற் கதவைத்திறந்து அவர்கள் உள்ளே வர வகை செய்துவிட்டுக் கூடவே நடந்து வந்தேன்.

கண்ட காட்சிகளின் குரூரம் விஸ்வரூபமெடுத்து உறைய வைத்தது. என்ன நடந்திருக்கும்?

இந்தப் பரதேசிப்......மோன்தான் காசு கிடைக்காத கோபத்தில் அடித்துப்போட்டிருப்பான். வேறு யாரும் ஜோயானியின் குடியிருப்பிற்குள் வந்து நான் பார்த்ததேயில்லை. இந்த நாய் மகனிடமும் ஒரு ஜோடித் திறப்பு இருந்திருக்கலாம். ஏழே நிமிடத்தில் சிவப்பும் நீலமும் கலந்த சுழல் விளக்கின் பிரதிமைகள் எனது கண்ணாடி ஜன்னலில் படபடத்தது. வாகனத் தரிப்பிடம் வழியாக ஒரு போலீஸ் வாகனமும் அம்பியுலன்ஸும் வந்து நின்றது. நான் எழுந்து ஓடிப்போய்ப் பின்புறத்து வாயிற் கதவைத்திறந்து அவர்கள் உள்ளே வர வகை செய்துவிட்டுக் கூடவே நடந்து வந்தேன்.

ஆம்பியுலன்ஸ் பணியாளர்கள் ஜோயானிப் பரிசோதித்துவிட்டு ஸ்ரெட்சரில் கிடத்தி மருத்துவமனைக்கு எடுத்துப்போகும் ஒழுங்குகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதில் போலீஸ் என்னைக் குடைந்து கொண்டிருந்தது விசாரணையென்ற பேரில். கண்டதைச் சொன்னேன். அவளைப்பற்றி நான் அறிந்துகொண்டதையெல்லாம் அறிவித்தேன். ஜோயானி கொண்டுபோகப் பட்டாள். போலீஸ் எனது தகவல்களை எழுதிக்கொண்டு அவளது வீட்டைச் சோதனை போட்டு விட்டுக் கதவை மூடி "சீல்" வைத்துக் கிளம்பிப்போனது.

இரண்டு நாட்கள் கழிந்துபோயின. ஜோயானி சார்லெமோய்ன் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாக எமது குடியிருப்புக் கட்டிடப் பராமரிப்பாளர் மொறீஸ் மூலமாக அறிந்துகொண்டு சென்று பார்த்தேன். தலையில் பலமாக அடிபட்டதனால் தற்காலிகக் கோமாவில் இருந்தாள். கண்களையும், நாசியையும் தவிர முகம் முழுவதும் துணியால் கட்டுப்போடப்பட்டி ருந்தது. இரண்டொருநாள் ஆகும் கண்விழிக்க என்று சொன்னார்கள். பார்வையாளர் பதிவேட்டில் கையெழுத்திடும் போதில் நான் இரண்டாவது பேர்வழியென்று தெரிந்தது. முதலாவது ஜானிற்டர் மொறீஸ்.

ஒன்பது நாட்கள் கடந்துபோயின. அன்று மாலையில் வழமையே போல் வேலை முடிந்து திரும்பி வந்து தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்து நடந்து வந்துகொண்டிருக்கிறேன். ஜோயானியின் அறைவாசலைத் தாண்டும் சமயம் அவள் கதவு திறந்தது. பால்கணி வழியாக என்னைப் பார்த்திருப்பாள். தலையைச் சுற்றிக் கட்டுப்போடப்பட்டிருந்தது. இடது கன்னத்தில்ஒரு பெரிய ப்ளாஸ்டர். நன்றி சொன்னாள். போலீஸ் மூலமாக நினைவிழந்த பின்னர் நடந்த விபரங்களை அறிந்து கொண்டாளாம். கண்கள் நீர்க்கோலமிட்டிருந்தன. பஸ்கால் போதைத்பொருள் நுகர்வோர் புனர் வாழ்வு இல்லத்தில் அனுமதிக்கப் பட்டிருக்கிறானாம். சீர் திருந்திய பின்னர்தான் திரும்புவானாம். தகப்பன் க்யூபெக் மாகாணத்தின் தூர கிழக்கே காஸ்பிஸீ மாவட்டத்தில் எங்கேயோ எவளோடோ இன்னமும் சீவிக்கிறான் என்று கேள்விப்பட்டாளாம். நான் அன்று அவளைப் பார்க்காது போயிருந்தால் அதிகளவு இரத்தப் போக்கால் ஜீவனை விட்டிருப்பாள் என்று டாக்டர் தெரிவித்தாராம். என்னைப் புனித அந்தோனியார் என்றென்றும் ஆசீர்வதிப்பாரென்றும் சொன்னாள். ""பொன் சுவாரே..."" என்று மாலை வணக்கம் தெரிவித்துவிட்டு நகர்ந்தேன்.

அட......!!! கண்களை மூடித்திறப்பதற்குள் மரங்கள் அனைத்தும் நான்கு தடவைகள் இலைகளை உதிர்த்துவிட்டிருந்தன. ஐந்து பனிக்காலங்களில் நானும் உறைந்து இளவேனிலில் உருகியிருக்கிறேன். வாழ்வின் அவசரங்களில் ஒரு மணிக்கூறு நிமிடமானது. இக்காலப் பகுதியின் நடுவே க்யூபெக் மாகாணம் கனடா நாட்டோடு ஐக்கியப்பட்டிருப்பதா தனிநாடாகிப் பிரிந்தேகுவதா என்ற சர்வஜன வாக்கெடுப்பும் பிரெஞ்சுப் பிரிவினைவாத அரசியல்வாதிகளால் முன்னெடுக்கப்பட்டுத் தோல்வியில் முடிந்திருந்தாலும் அதிதீவிர பிரிவினைவாதிகள் விடுவதாயில்லை.

இந்த இழவால் பலத்த பொருளாதாரப் பின்னடைவும், அதன் விளைவாக வேலைவாய்ப்பின்மையும் ஒன்றுகூடிப் புணர்ந்து வறுமையைப் பெற்றெடுத்தன. நாய்க்கு நடுக்கடலுக்குப் போனாலும் நக்குத் தண்ணிதான்! இந்த உபத்திரவங்களினால்தான் தவழ்ந்த பூமியை விட்டு நாடு நாடாகத் தவழ்ந்து இங்கு வந்து சேர்ந்து ஏதோ ஒரு சிறு மனையையும் சொந்தமாக்கிக் கொண்டு நிம்மதியாக இளைப்பாறலாம் என்று பார்த்தால் கழுத்தறுக்கிறான்கள்! எனக்கும் வேலை போய்விட்டது.

மெதுவாக எனது குடியிருப்பை வாடகைக்கு விட்டுவிட்டு வேறெங்காவது போய்விடுவதென்று முடிவெடுத்தேன். ஒண்டாரியோ மாகாணத்தில் டொரொண்டோ நகரிலிருந்த எனது நண்பர்களிடம் மேற்படி முடிவைச் சொன்னேன். "வா......பார்க்கலாம்...... இங்கேயும் இப்போ பெரிதாக சுபீட்சங்கள் இல்லை...... இருப்பினும் முயல்வோம்" என்றார்கள். சிறு நம்பிக்கை முகிழ்த்தது. பஸ்காலின் தொல்லைகள் இல்லாததனால் ஆரம்பத்தில் இரண்டு வருடங்கள் ஜோயானி நிம்மதியாகவும் கலகலப்பாகவும் இருந்தாள். என்னவோ சமீபத்தில் அவள்போக்கில் சில மாறுதல்கள் தெரிந்ததை என்னால் உணரமுடிந்தது.

அதிகமாக வெளியே காண முடிந்ததில்லை. அனேகமான நாட்களில் காலையிலே பியர் டெலிவரி செய்பவன் வந்து கதவைத் தட்டுவதை கேட்டு நான் எழுந்திருந்திருக்கிறேன். இதென்ன புதுப்பழக்கம்? காலையிலேயே ஆரம்பித்து விடுகிறாளா? என்று சினந்து கொண்டேன். ஆயினும் ஒன்றும் பட்டுக்கொள்ளவில்லை. எனக்கிருக்கும் தலைபோகிற பிரச்சனைகளுக்குள் இதற்குள்ளே எதற்குத் தலையைப் போடுவானென்று ஒதுங்கிவிட்டேன். டொரண்டோ நண்பர்கள் ஒரு வேலையும் வாடகைக்கு ஒரு சிறு அறையையும் பிடித்துக் கொடுத்து உடுக்கை இழந்துகொண்டிருந்த எனது ---------- கைக் காப்பாற்றினார்கள்!!! எனது குடியிருப்பைத் தளபாடங் களோடு வாடகைக்கு விட்டுவிட்டு மொரீஸ் இடம் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு ஜோயானியிடம் சொல்லிக்கொள்ளாமலே 401 மேற்கு நெடுஞ்சாலையில் பயணித்தே விட்டேன்.

ஒரு வருடம் கழித்து விடுமுறையில் வாடகைக்கு வீடெடுத்தவன் என்னபாடு படுத்தி வைத்திருக்கிறான் பார்ப்போமே என்று மாண்ட்ரியாலுக்குத் திரும்பி வந்தேன். தரிப்பில் வாகனத்தை நிறுத்திவிட்டு நிமிர்ந்தால் ஜோயானியின் வீட்டுக்குக் கீழேயிருக்கும் குடியிருப்பின் தரைமட்டத்திலிருந்து சிறிது கீழிறங்கிய கோடைகால இருப்பிடத்தில் ஒரு பூனை படுத்திருக்க மூன்று சின்னச்சிறிய குட்டிகள் தாயின்மீது ஏறிப்புரண்டு கொண்டும் அவ்வப் போதில் அதன் அசைந்துகொண்டிருந்த வாலைப் பிடித்து நிறுத்தும் முயற்சியிலும் மும்முமுரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தன. அவ்வப்போதில் தாயின் வயிற்றுப்பாகத்தில் இருந்த இளஞ்சிவப்பு நிறத்து முலைக்காம்புகளைப் பற்றிப் பாலையும் குடித்துக்கொண்டிருந்தன. சிறிது நேரம் காருக்குள் உட்கார்ந்தபடியே பார்த்துக்கொண்டிருந்தேன். எடுத்துக்கொண்டு போய் விடலாமா என்று ஆழ்மனத் தேயிருந்தெழுந்த சுனாமியை அடக்கிக்கொண்டு காரை விட்டிறங்கிக் குடியிருப்புக் கட்டிடத்தினுள்ளே நுழைந்தேன்.

எனது அறைவாசலுக்கு வருகையில் ஜோயானி வீட்டுக் கதவு சாத்தி இருந்தது. வாடகைக்கு விட்டிருந்த எனது அறைக் கதவைத் தட்டினேன். யாரும் திறக்கவில்லை. என்னிடமிருந்த மாற்றுச் சாவியால் கதவைத்திறந்து உள் நுழைந்து பார்த்தால் வீட்டைச் சுத்தமாகத்தான் வைத்திருக் கிறான். புகையிலை நாற்றங்களில்லை. க்யூபெக்குவாவாக இருந்தும் சிகரெட் பழக்கமில்லாதவன் போலும்!

பட்ட மரத்தில் பால் வடிகிறதே......!!! என்று நினைத்துக்கொண்டு மன நிறைவோடு கதவைப் பூட்டிவிட்டு வெளியே வருகையில் மொரீஸ் எதிர்ப்பட்டார். ""மொன்னமீ..... கொமோ ஸவா... எஸ்கெ வூ ரெஸ்பிரே பியேன்....... விவே ஆன்பே அனொண்தாரியோ? "" (நண்பரே.... நலமா?.... நீ டொரண்டோவில் சுகமாக மூச்சு விட்டுக்கொண்டும்..... அமைதியாக வாழ்ந்துகொண்டும் இருக்கிறாயா? )என்று நளினம் கூடிய நக்கலுடன் வினவியவாறு அதே கணீர்க்குரலுடனும் கலகலப்பான சிரிப்புடனும் வரவேற்றார். சுக நலங்களை அளவளாவினோம். எழுபது வயதாகிறது. இன்னமும் மூன்று குடியிருப்புத் தொகுதிகளைப் பராமரித்துவரும் கடின உழைப்பாளி மொரீஸ். என்னை இங்கு குடிவந்த முதல் நாளே அவருக்குப் பிடித்திருந்தது. எனக்கும் தான். மனதிலிருந்து பேசுபவர்களையும் மனம் விட்டுச் சிரிப்பவர்களையும் யாருக்குத்தான் பிடித்துப்போகாது?

ஜோயானியைப் பற்றி விசாரித்தேன். மலர்ந்திருந்த முகம் மாறியது.



அவள் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறாளாம். ஒரு மாதமாகிவிட்டதாம். மார்பகப் புற்றுநோய் முற்றிய நிலையில் அறுவை சிகிச்சையால் அகற்றப்பட்டு விட்டதாம். தற்போது குணமடைந்து வருகிறாளாம். இன்னமும் ஓரிரு வாரங்களில் வீடு வந்துவிடுவாளாம். விபரமாகச் சொன்னார். அவளுக்கு ஆறு வயதான போது தாயார் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக்கொண்டு போய்விட்டாளாம். தகப்பன் தான் வளர்த்தாராம். அவரிடமிருந்து அவள் புகைப்பழக்கத்தை வளர்த்துக்கொண்டாளாம். அதன் விளைவை இப்போது அனுபவிக்கிறாளாம். சலித்துக் கொண்டே சொன்னார் மொறீஸ்.

பஸ்கால் திருந்தித் திரும்பி வந்து மூன்று மாதங்களாகிவிட்டதாம். வேறு வதிவிடங்கள் இல்லாத தனாலோ என்னவோ ஜோயானியோடு தான் தங்கியிருக் கிறான் என்றும் ஆனால் நாளதுவரையில் ஏதொரு அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்றும் தாய் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து அவன்தான் கூடவே இருந்து பார்த்துக்கொள்கிறான் என்றும் தகவல்கள் தந்தார். ஏதோ நல்லது நடந்தால் சரி..... அந்த அம்மணி வாழ்நாளில் பட்டுழன்ற துன்பங்களிலிருந்து இனியாவது விடுபடட்டும் என்று சொன்னேன்.

அவன் ஒழுங்காக இருப்பதுபோல் தான் தெரிகிறது... ஒரு மனிதன் எப்போதுமே கெட்டுழல்வதில்லை..... திருந்த முடியாதவனாகவும் இருப்பதில்லை என்று மொறீஸ் கூறினார். இது அவருடைய வாழ்நாள் அனுபவங்கள் பிரசவித்த வார்த்தைகள் என்பதை என்னால் உய்த்துணர முடிந்தது.

என்னைப் பற்றி விசாரித்தார். ஏதோ காலம் ஓடுகிறதென்றேன். சிரித்துவிட்டு எப்போது டொரண்டோ திரும்புகிறேன் என்று கேட்டார்.

இரண்டு வாரங்கள் விடுமுறை என்றும் எனது வீட்டில் குடியிருப்பவரின் வாடகை ஒப்பந்தப் பத்திரத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்றும் அதற்காக மீண்டும் ஒரு முறை டொரண்டோ போக முதல் வருவேனென்றும் சொல்லிவிட்டு வாழ்த்துச் சொல்லி விடை பெற்றுக் கிளம்பினேன் தங்கிருக்கும் எனது நண்பரின் வீட்டை நோக்கி லவாலுக்கு.

சரியாகப் பன்னிரண்டு நாட்கள் கழித்துத் திரும்பவும் வந்தேன் வாடகை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவேண்டி. பார்க்கிங் லாட்டில் காரை நிறுத்திவிட்டு நிமிர்ந்தால் ஜோயானி வீட்டு பால்கணியில் பஸ்கால் ஒரு பூனைக்குட்டியோடு பிரஞ்சில் பேசிக்கொண்டும் மடியில் வைத்து விளையாடிக்கொண்டும் இருந்தான். குட்டிப் பூனையும் பதிலுக்கு ஏதேதோ பேசித்தள்ளிக்கொண்டிருந்தது. அவனது இடது தோளில் ஏறிப் பிடரி வழியாக நடந்து வலது தோள் வழியாக இறங்குவதும் பின் ஏறுவதுமாகத் துருதுருவென்றிருந்தது. பஸ்கால் மல்லாக்காகப் படுத்தபோது அவனது வெற்றுடம்பில் புரண்டு விளையாடியது. நான் வந்ததே அவனுக்குத் தெரிந்திருக்க வில்லை. காருக்குள் உட்கார்ந்த படி பார்த்துக்கொண்டே இருந்தேன். பார்வையைக் கீழே இறக்கியதும் அன்று பார்த்த மூன்று பூனைக்குட்டிகளில் ஒன்றைக் காணவில்லை. மீதமிரண்டும் தாயிடம் பால் குடித்து மயங்கிக் கிறங்கின.

""பஸ்கால்...... இரவு உணவு தயாராக இருக்கிறது சுடச்சுட....... ஆறிப்போகமுன் வா..... சாப்பிட்டுக்கொள்......""


என்ற அழைப்புக் குரல் பலமாகக் கேட்டது. ஜோயானியேதான் அந்தத் தெளிந்த அன்பில் நெகிழ்ந்த ஓசைக்குச் சொந்தக்காரி.


நான் வந்த வேலையை முடித்துக்கொண்டு 401 மேற்கு நெடுஞ்சாலையை நோக்கி எனது வாகனத்தின் ஆர்முடுகலை அதிகரித்தேன். நெஞ்சுக்குள் மேகங்கள் பஞ்சுப் பொதிகளாய் நகர்வது போலவும், இனங்காணப்படாத ஒரு நிறைவு நிறைந்து கிடப்பது போலவும் தென்பட்டது. எதனால் என்ற அர்த்தங்களைப் புரிந்து கொள்ள என்னால் இயலவில்லை. ஆயினுமென்ன.....? உள்ளே இருக்கும் அந்தச் சிறிய மனிதன் அர்த்தப்படுத்திக் கொள்வான் என்றே நம்புகிறேன்.

•••

- வ.ந.கிரிதரன் - கனடா.

# புகலிடத் தமிழ் நாவல் முயற்சிகள்: ஆய்வு







இன்று உலகெங்கும் தமிழர்கள் புலம் பெயர்ந்து பரந்து வாழ்கின்றார்கள். சங்க காலத்திலிருந்து காலத்துக்குக் காலம் தமிழர்கள் புலம் பெயர்வது தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. "திரை கடலோடித் திரவியம் தேடினார்கள் அற்றைத் தமிழர்கள். பொருளியல் காரணங்களுக்காக அன்று தமிழ் மன்னர்கள் அயல் நாடுகளின் மீது படையெடுத்து தமது ஆட்சியினை விஸ்தரித்தார்கள். அதன் காரணமாகத் தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். அந்நியர் படையெடுப்புகளால் பாதிக்கப் பட்ட தமிழர்கள் அகதிகளாக அண்டை நாடுகளுக்கு, நகரங்களுக்குப் புலம் பெயர்ந்தார்கள். பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது தமிழகத்திலிருந்து தமிழர்கள் பலர் இலங்கை, மலேசியா என்று பல்வேறு நாடுகளுக்குத் தோட்டத் தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவ்விதமாகத் தொடர்ந்த தமிழ் மக்களின் புலம்பெயர்தலில் முக்கியமானதொரு நிகழ்வு கடந்த நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஆரம்பித்த ஈழத்தமிழரின் பல்வேறு திக்குகளையும் நோக்கிய புலம் பெயர்தல்.

இலங்கை சுதந்திரமடைந்த காலகட்டத்திலிருந்து படிப்படியாக இலங்கையில் தமிழ் மக்களின் மீதான ஆளும் சிங்கள இனவாத அரசுகளின் புகலிட அடக்குமுறைகள் அதிகரிக்கத் தொடங்கின. தமிழ்ப் பகுதிகளில் அரசினால் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், சிங்களம் மட்டும் அரச மொழி, தமிழ் மாணவர்கள் கல்வி மீதான தரப்படுத்தல் எனத் தொடர்ந்த அரசத் திட்டங்கள், கொள்கைகளால் இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் படிப்படியாக வளர்ந்து


அகிம்சை நிலையிலிருந்து ஆயுதப் போராட்டமாக விரிவடைந்து, உபகண்ட அரசியலில் முக்கியத்துவமான தொன்றாகி வெடித்ததைத் தொடர்ந்து, இலங்கையின் அரசுகளால் தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகள், நிகழ்ந்த இனக்கலவரங்கள் காரணமாக ஈழத்தமிழர்கள் உலகின் பல்வேறு திக்குகளையும் நோக்கிப் படையெடுத்தார்கள். இவ்விதமாகப் புலம் பெயர்ந்த தமிழர்கள் இலங்கையில் வாழ முடியாத நிலையினால் அகதிகளாகப் புகலிடம் நாடிப் புலம் பெயர்ந்தவர்கள். இவ்விதமாகப் புகலிடம் நாடிப் புலம்பெயர்ந்தவர்களைப் புகலிடத் தமிழர்கள் என்று அழைக்கலாமா? உலகின் பல்வேறு நாடுகளிலும் வசிக்கும் தமிழர்கள் (தமிழகம் உட்பட) கல்வி, வேலை வாய்ப்பு போன்ற பல்வேறு காரணங்களுக்காகப் புலம் பெயர்ந்தார்கள். ஆனால் அவர்களைப் புகலிடம் நாடிப் புலம் பெயர்ந்த தமிழர்கள் என்று அழைக்க முடியாது. அவர்கள் படைக்கும் இலக்கியத்தைப் புகலிட இலக்கியமென்று அழைக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் தாம் வாழும் நாடுகளில் வாழ முடியாத நிலையினால் , இருப்பே கேள்விக் குறியாக மாறிய நிலையினால் புலம் பெயரவில்லை. அவர்கள் படைக்கும் இலக்கியத்தைப் புலம் பெயர் தமிழ் இலக்கியம் என்று அழைக்கலாம். அவர்கள் படைக்கும் இலக்கியத்தைப் புகலிடத் தமிழ் இலக்கியம் என்ற பிரிவுக்குள் அடக்க முடியாது. ஆனால் அவ்விதமாகப் புலம் பெயர்ந்த தமிழர்கள் புகலிடம் நாடிப் புலம் பெயர்ந்த தமிழர்கள் பற்றிப் படைக்கும் இலக்கியத்தையும் புகலிடத் தமிழ் இலக்கியத்துள் அடக்கலாம். காரணம் அவர்களது படைப்புகள் புகலிடத் தமிழர்களின் வாழ்வை விபரிப்பதால். இதற்குதாரணமாக மலையகத் தமிழ் இலக்கியம் பற்றிக் குறிப்பிடும்போது மலையகத்தைச் சேராதவர்கள் படைக்கும் மலையகம் பற்றிய இலக்கியத்தையும் மலையகத் தமிழ் இலக்கியத்தினுள் உள்ளடக்கிக் கூறுவதைக் கூறலாம்.

உதாரணமாக நந்தி, அறிஞர் அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தன், புலோலியூர் சதாசிவம் போன்றவர்களின் மலையகம் பற்றிய படைப்புகளைக் குறிப்பிடலாம். எனவே இக்கட்டுரையில் நான் ஆராய விழைவது புகலிடத் தமிழ் நாவல்கள் பற்றியே. புகலிடத் தமிழ் எழுத்தாளர்களால் படைக்கப்பட்ட புகலிடத் தமிழர்களின் வாழ்வினைப் பிரதிபலிக்கும் நாவல்களாக அவை இருக்கலாம், அல்லது புகலிடம் நாடி திக்குகளெங்கும் சிதறிய எழுத்தாளர்கள் படைத்த நாவல்களாக அவை இருக்கலாம், அல்லது புகலிடம் நாடிப் புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிப் படைக்கப்பட்ட நாவல்களாக அவை இருக்கலாம். மேலும் நான் குறுநாவல்களையும் புகலிட நாவல்கள் பிரிவுக்குள் அடக்கித்தான் சிந்திக்கின்றேன். நாவல்கள் நீண்டவையாக இருக்கலாம் அல்லது குறுகியவையாக இருக்கலாம். அவை அளவில் வேறுபட்டாலும் நாவல்களே. மேலும் பலரை இத்துறையில் விரிவாக ஆராய்வதற்குத் தூண்டுவதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

இது தவிர இன்னுமொரு காரணமுமுண்டு. இலங்கையில் நிலவிய அரசியல் சூழல்கள் காரணமாக பூமிப்பந்தின் அனைத்துத் திசைகளையும் நோக்கித் தூக்கி எறியப்பட்டவர்கள் ஈழத்தமிழர்கள். புகலிடம் நாடிச் சிதறுண்ட அவர்கள் படைத்த இலக்கியம் போன்றவை ஆவணப்படுத்தப்பட்டு, சேகரிக்கப்பட்டு, அவை பற்றிய விரிவான ஆய்வுகள் செய்யப்பட வேண்டியதவசியம். முதலிரண்டு தலைமுறைகளைத் தாண்டியதும் அடுத்த தலைமுறையினர் புலம் பெயர்ந்த தமிழர் என்றோ அல்லது புகலிடத் தமிழரென்றோ அழைக்கப்படப் போவதில்லை. அவர்கள் கனடாத் தமிழர், பிரான்ஸ் தமிழர், ஆஸ்திரேலியத் தமிழர் என்றே அழைக்கப்படப் போகின்றார்கள். அவர்கள் படைக்கும் இலக்கியமும் அவ்வாறே கனடாத் தமிழர் இலக்கியம், பிரெஞ்சுத் தமிழர் இலக்கியம், ஆஸ்திரேலியத் தமிழர் இலக்கியம் என்றே அழைக்கப்படப் போகின்றது. எனவேதான் புகலிடம் நாடிப் புலம்பெயர்ந்த தமிழர்களின் கலை, இலக்கியம் பற்றிய ஆய்வுகளின் முக்கியத்துவம் அதிகரிக்கின்றது. இதனை ஆய்வாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**புலம் பெயர்ந்த தமிழர்களும், புலமும் பற்றிச் சில வார்த்தைகள்:**

மேலே செல்வதற்கு முன்னர் நாம் புலம் பெயர் தமிழர் இலக்கியம் பற்றி நிலவுமொரு குழப்பத்தினையும் கவனத்தில் கொள்ள



**வ.ந.கிரிதரன்**

எழுத்தாளர் வ.ந.கிரிதரன், (நவரத்தினம் கிரிதரன்) பல சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள் மற்றும் நாவல்கள் ஆகியவற்றை ஆக்கியுள்ளார். பதிவுகள் இணைய இதழின் (*http://www.pathivukal.com*) ஆசிரியராகவிருந்து, 2000ஆம் ஆண்டிலிருந்து அதனை வெளியிட்டு வருகின்றார். இவர் யாழ்ப்பாண நகரிலுள்ள வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகக் கொண்டவர் “ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் நகர அதிகார சபை ஆகியவற்றில் பணிபுரிந்து, இலங்கை அரசியல் நிலை காரணமாகக் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தார். அங்கு இலத்திரனியற் பொறியியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறைகளிலும் தகமைகள் பெற்றார். “அமெரிக்கா” மற்றும் “நல்லூர் ராஜதானி நகர அமைப்பு“ ஆகிய நூல்களை தமிழகத்தில் வெளியிட்டுள்ளார் இவரது நான்கு நாவல்களின் தொகுப்பான “மண்ணின் குரல்” கனடாவில் வெளியான முதல் தமிழ் நாவலாகும். இவரது கவிதைகள் சில “எழுக அதிமானுடா“ என்னும் தலைப்பில் கனடாவில் வெளிவந்துள்ளது. இவரது “குடிவரவாளன்” என்னும் நாவல் அதிகம் பேசப்பட்ட நாவலாகும்.

வேண்டும். புலம் பெயர் தமிழர் என்னும்போது அதில் வரும் புலம் என்பது எதனைக் குறிக்கிறது?

**யாயும் ஞாயும்**

யாயும் ஞாயும் யாரா கியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்,
யானும் நீயும் எவ்வழி யறிதும்,
செம்புலப் பெயனீர் போல,
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.
- செம்புலப் பெயனீரார் (குறுந்தொகை - 40)

இந்தக் குறுந்தொகையில் வரும் "செம்புலப் பெயனீர் போல" என்பதன் அர்த்தம் செம்மண் நிலத்தில் பெய்த மழைபோல் என்று வரும். இந்த அர்த்தத்தில் புலம் என்பது நிலம் என்பதைக் குறிக்கும். "கலம் தரும் தெருவில் புலம் பெயர் மாக்கள்" என்று கூறும் சிலப்பதிகாரம் புகாருக்கு வந்திருந்த அயல் நாட்டு வணிகர்களைக் குறிக்க இளங்கோ அடிகள் "புலம் பெயர் மாக்கள்" என்ற சொற்களைப் பாவித்திருப்பார். இங்கு புலம் என்பது அவர்களது சொந்த நிலத்தைக் குறிப்பிடுகிறது. தாம் வாழ்ந்த நிலத்தை விட்டு வந்த மக்கள் என்று இதன் பொருள். அகதிகளாகப் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களை, தாம் வாழ்ந்த நிலத்தை விட்டுப் பெயர்ந்த தமிழர்களைப் புலம் பெயர்ந்த தமிழர்கள் என்று அழைக்கலாம்.

ஆனால் அதே சமயம் புலம் என்பதற்குப் பல அர்த்தங்களுள்ளன. வடபுலம், தென் புலம் என்னும் போது அது திசையினை அல்லது திக்கினைக் குறிக்கின்றது. இந்த அர்த்தத்தில் பார்க்கும்போது ஈழத்தின் அரசியல் நிலை காரணமாக, உலகின் பல்வேறு திசைகளையும் (திக்குகளையும்) நாடிப் பெயர்ந்த தமிழர்களைப் புலம் பெயர்ந்த தமிழர்கள் என்று அழைக்கலாம். தாம் வாழ்ந்த நிலம் விட்டுத் திக்குகள் நாடிப் பெயர்ந்த தமிழர்கள் என்னும் அர்த்தத்தில் இவ்விதம் அழைக்கலாம்.

இருப்பு கேள்விக்குறியானதொரு நிலையில் வாழுவதற்கு ஒரு நிலம் நாடிப் பெயர்ந்தவர்கள் என்னும் அர்த்தத்திலும் புலம் நாடிப் பெயர்ந்த தமிழர்கள் என்னும் அர்த்தத்திலும் புலம்பெயர் தமிழர்கள் என்னும் பதத்தினைப் பாவிக்கலாம். இங்கு புலம் என்பது இருந்த நிலத்தைக் குறிக்கவில்லை. புகலிடம் நாடிப் புகுந்த நிலத்தைக் குறிக்கிறது. எனவே புலம் பெயர் தமிழர்கள் என்பதன் அர்த்தமாக வாழ்ந்த புலம் விட்டுப் பெயர்ந்தவர்கள் என்பதையும் கொள்ளலாம். வாழுவதற்கு நிலம் (புலம்) நாடிப் பெயர்ந்தவர்கள் என்பதனையும் கொள்ளலாம்.

**புகலிடத் தமிழ் இலக்கிய முயற்சிகள்:**

புகலிடத் தமிழ் இலக்கியமென்பது புலம் பெயர்ந்த தமிழர்தம் இலக்கியத்தினொரு பகுதி. ஆனால் புலம்பெயர்தமிழர்தம் இலக்கியமெல்லாம் புகலிடத் தமிழ் இலக்கியம் ஆகாது. இதனை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். எனவே நான் இங்கு புகலிடத் தமிழர்தம் இலக்கிய முயற்சி பற்றியே சிறிது விபரிக்கப் போகின்றேன். இதுவொரு விரிவானதோர் ஆய்வு அல்ல. எதிர் காலத்தில் விரிவாக ஆராய விழையும் எவருக்கும் வழியினைக் காட்டக் கூடியதொரு சிறு கட்டுரையாக இதனைக் கொள்ளலாம்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் பரந்து , புகலிடம் நாடி வாழும் ஈழத்தமிழர்கள் படைக்கும் இலக்கியம் பரந்து பட்டது. குழந்தை இலக்கியம், வெகுசன இலக்கியம், தீவிர இலக்கியம், முற்போக்கு இலக்கியம், பெண்ணிய இலக்கியம், தலித் இலக்கியம், அரசியல் இலக்கியம் எனப் பல பிரிவுகளாக அவற்றைப் பிரித்து ஆராயலாம். இவ்விதமாகப் படைக்கப்பட்ட அல்லது படைக்கப்படும் இலக்கியமும் கூறும் மொழியில் வேறு பட்டன. உதாரணமாக அரசியல் நாவலொன்று சாதாரண , தெளிந்த நடையில் படைக்கப்பட்டிருக்கலாம். அல்லது சுவை மிக்க, மொழி நடையில் படைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் கூறப்படும் மொழி மட்டும் ஒரு படைப்பின் சிறப்பினை அல்லது முக்கியத்துவத்தினைத் தீர்மானிப்பதில்லை. ஒரு படைப்பானது பல்வேறு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறலாம். பாத்திரப் படைப்புக்காக, கூறப்படும் மொழிக்காக, கூறும் பொருளுக்காக, பாவிக்கப்படும் உரையாடலுக்காக, படைப்பில் நிகழ்வுகளின் திட்டமிட்ட தொகுப்புக்காக, அல்லது மையமற்ற போக்குக்காக என்று பல்வேறு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறலாம். எனவே புகலிடத் தமிழர்களின் இலக்கிய முயற்சிகள் பற்றிக் குறிப்பிடும்போது இவற்றையும் நாம் சிந்திக்க வேண்டும்.

இதுவரை காலம் வெளியான புகலிடத் தமிழர்களின் இலக்கிய முயற்சிகள் பற்றிப் பார்க்கும்போது பல்வேறு இலக்கியப் பிரிவுகளிலிருந்தும் நூல்கள், கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியன வந்திருக்கின்றன. பிரபல இலக்கிய ஆளுமைகளிடமிருந்து (ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் , இலக்கியத் திறனாய்வாளர்கள்) புலம் பெயர் தமிழ் இலக்கியம் பற்றி அவ்வப்போது கட்டுரைகள், நூல்கள் வெளியாகியுள்ளன. அதே சமயம் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் புலம் பெயர் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வுகளை ஆற்றியுள்ளார்கள். அவர்களது ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்புக்கான ஆய்வுக் கட்டுரைகளாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நூல்களாகவும் வெளியாகியுள்ளன. இவ்விதமான வெளியான ஆய்வுக்கட்டுரைகளை அல்லது நூல்களைப் பார்க்கும்போது ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் பலர் புகலிடத் தமிழ் இலக்கியப் படைப்புகள் பற்றி ஆராய்ந்துள்ள அளவு

இலக்கிய ஆளுமைகள் என்று கூறப்படுபவர்கள் ஆராயவில்லை என்பதே அது. இலக்கிய ஆளுமைகள் தங்களுக்குக் கிடைத்த, தெரிந்தவர்களின் படைப்புகளை மட்டும் முதன்மைப் படுத்தி பொதுவான தலைப்புகளில் (புலம் பெயர் தமிழ் இலக்கியம் போன்ற) அவ்வப்போது கட்டுரைகள் எழுதியிருக்கும் அதே சமயம் எந்தவித விளம்பரங்களுமின்றி பல்கலைக்கழகங்களில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் பலர் புலம் பெயர் தமிழர்களின் புகலிடத் தமிழ் முயற்சிகள் பற்றி (தமிழகத்தில், இலங்கையில்) ஆராய்ந்திருக்கின்றார்கள். இணையத்தில் கூகுள் தேடுதலில் இவை பற்றிய விபரங்கள் பலவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரு துறையினைப் பற்றி ஆராய விழையும் ஆய்வாளர்கள், ஆய்வுக் கட்டுரைகளை எழுதும் முன்னர் அத்துறை பற்றிய தேடலை ஆற்றியிருக்க வேண்டும். உதாரணமாக, புகலிட அல்லது புலம் பெயர் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வு அல்லது திறனாய்வுக் கட்டுரைகள் எழுத விரும்புவர்கள் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் புகலிடம் நாடிப் புலம் பெயர்ந்தவர்களின் படைப்புகள் பற்றிய தேடுதலின் மூலம் அவற்றை அறிந்து, வாசிக்க முனைய வேண்டும். வாசிப்பு சாத்தியமாயில்லாத பட்சத்தில் அவை பற்றிய தகவல்களைத் தொகுத்து ஆவணப்பட்டியல் களை உருவாக்க வேண்டும். பின்னர் நூல்கள் போதிய அளவில் கிடைத்ததும் அவற்றை வாசித்துத் திறனாய்வுக் கட்டுரைகளை வழங்க வேண்டும். இவ்விதம் செய்வதன் மூலம் புகலிட அல்லது புலம்பெயர் படைப்புகள் பற்றிய சரியான, உண்மையான பரிமாணம் புலப்படும்; வெளிப்படும். ஆனால் நடைமுறையில் நிகழ்வதென்ன? ஒரு படைப்பு தமிழகத்தில் நன்கு அறிமுகமாகியதும் (அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.), அவை பற்றி வெகுசன ஊடகங்களில் கட்டுரைகள் வெளிவந்ததும், அவற்றையே தொங்கிக்கொண்டு , ஆண்டுக்கணக்காய் கட்டுரைகள் எழுதுகின்றார்கள். இதனால் உண்மையான நிலை மறைக்கப்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டுமானால், சு.குணேஸ்வரன் போன்று சுய தேடுதல் நடாத்தி, ஆய்வுக் கட்டுரைகளைப் படைக்க வேண்டும். உதாரணமாக ஆதவனின் "மண் மனம்" நாவலை அவர் சுவடுகள் இதழில் தேடி, வாசித்துக் கட்டுரை படைத்துள்ளார். இது போன்ற தேடலைத்தான் நான் குறிப்பிடுகின்றேன்.

**புகலிடத்தமிழ் இலக்கியமும், ஆவணப்படுத்தலின் அவசியமும்.**

அதே சமயம் இவ்விதமாக உலகின் பல்வேறு திக்குகளிலும் புகலிடம் நாடிப் பரந்து வாழும் தமிழர்களின் இலக்கிய முயற்சிகள் பற்றிய விரிவான ஆவணங்கள் இல்லயென்றே கூற முடிகிறது. அவர்களது இலக்கிய முயற்சிகள் பற்றிய திறனாய்வுகளுக்கு முதலில் அவர்களது படைப்புகள் ஆவணப்படுத்தப்பட்டிருப்பது அவசியம். "நூலகம்", "படிப்பகம்" போன்ற இணையத்தளங்கள் அந்தப் பணியின் அவசியத்தை உணர்ந்து உலகின் பல்வேறு பகுதிகளிலி ருந்தும் வெளியான சஞ்சிகைகள், நூல்கள் போன்றவற்றைச் சேகரித்து வருகின்றன. இலண்டனில் வாழும் நூலகர் செல்வராஜா அவர்கள் தன் சொந்த முயற்சியில் வெளியான தமிழ் நூல்கள் பற்றிய விபரங்களை "நூல் தேட்டம்" என்னும் தொகுதிகளில் ஆவணப்படுத்தி வருகின்றார். மிகவும் மதிக்கத்தக்க இலக்கியச் சேவையாகவே இவர்களின் சேவையினை நான் காண்கின்றேன். ஆவணப் படுத்தலின் முக்கியத்து வத்தை உணர்ந்து இவர்கள் ஆற்றிவரும் பயன் கருதாச் சேவை போற்றுதற்குரியது.

அதே சமயம் இவ்விதமான ஆவணப்படுத்தலை மையமாக வைத்துப் "பதிவுகள்" இணைய இதழில் புலம்பெயர்/புகலிடத் தமிழ் இலக்கியம் பற்றிய கட்டுரை களை அனுப்பி வைக்கும்படி அவ்வப்போது அறிவிப் பதுண்டு. ஆனால் ஒரு சிலரைத்தவிர போதிய அளவில் கட்டுரைகள் கிடைக்கவில்லை. இன்று பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழும் தமிழ் மக்களின் இலக்கிய முயற்சிகள், படைப்புகள் பற்றிய தகவல்கள் ஆவணப் படுத்தப்படுவதுடன், வெளியான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியனவும் சேகரிக்கப்பட்டுப் பேணப்பட வேண்டும். அவ்விதம் சேகரித்தால் மட்டுமே எதிர்காலத்தில் அவை பற்றிய விரிவான, முறையான ஆய்வுகள் ஆற்ற முடியும். இதனால் ஆவணப்படுத்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்து கலை, இலக்கியத்துறையிலுள்ளவர்கள் செயலாற்ற வேண்டியது அவசியம்.

**புலம்பெயர் / புகலிடத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வுகள் பற்றி........**

புலம்பெயர் / புகலிடத் தமிழ் இலக்கியம் பற்றி அவ்வப்போது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் கட்டுரைகள் வெளிவருவதுண்டு. இலக்கியக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படுவதுண்டு. சு.குணேஸ்வரன், எழுத்தாளர் அகில், எழுத்தாளர் கே..எஸ்.சுதாகர், முனைவர் நா.சுப்ரமணியன், எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன், எழுத்தாளர் ஜெயமோகன், எழுத்தாளர் வ.ந.கிரிதரன், எழுத்தாளர் தேவகாந்தன், கலாநிதி கா.சிவத்தம்பி, கலை இலக்கியத் திறனாய்வாளார் வெங்கட் சாமிநாதன் எனப் பலர் ஊடகங்களில் கட்டுரைகள் எழுதியிருக்கின் றார்கள். ஆங்கிலத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றிருக்கும் முனைவர்களான சு.தாரிணி, ஞானசீலன் ஜெயசீலன் ஆகியோர் தமிழகத்தில் நடைபெற்ற ஆய்வரங்குகளில் ஆங்கிலத்தில் புகலிடத் தமிழ் இலக்கியம் பற்றிய கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்கள். தமிழகத்தி லிருந்து முனைவர் வெற்றிச்செல்வன் "புகலிடத் தமிழ் இலக்கியம்"

பற்றிய விரிவாகத் திரட்டிய தகவல்களுடன் ஆய்வு நூலொன்றினை எழுதி சோழன் பதிப்பகம் மூலம் வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**தேவகாந்தனின் "கனவுச்சிறை"....**

புகலிடத் தமிழ் இலக்கியத்தில் எழுத்தாளர் தேவகாந்தனுக்குச் சிறப்பான தோரிடமுண்டு. இவரது கனவுச்சிறை (திருப்படையாட்சி, வினாக்காலம், அக்னி திரவம், உதிர்வின் ஓசை, ஒரு புதிய காலம் ஆகிய ஐந்து பாகங்களை உள்ளடக்கிய, 1247 பக்கங்களைக் கொண்ட, 1981 முதல் 2001 வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கிய நாவல்.) புகலிட இலக்கியத்தில் மிகவும் முக்கியத்துவத்துக்குரியது. எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன் கனவுச்சிறையின் ஒரு பாகமாகிய "வினாக்காலம்" என்னும் நாவல் பற்றிய அவரது விமரிசனத்தில் "கனவுச்சிறை முதலாம் பாகத்துக்கும் இறுதிப் பாகத்துக்குமான பதிப்புக் காலஇடைவெளி நான்கு ஆண்டுகள். இவருடைய நாவலை முழுமையாக வாசிக்கலாம் என்று நான் தேடியபோது ஐந்து பாகங்களையும் ஒன்றாகத் திரட்டுவது என்பது எனக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது. தேவகாந்தனின் கனவுச் சிறை பரவலாக வாசிக்கப்பட்டு விவாதிக்கப் படாததற்கு இதுவும் காரணமாக இருக்கும் எனவே நினைக்கிறேன்." என்று கூறுவது கவனிக்கத்தக்கது. ஆனால் அண்மைக் காலமாக இந்நிலைமை மாறியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் வாசிக்க வேண்டிய நூறு நாவல்கள் பட்டியலில் தேவகாந்தனின் "கனவுச்சிறை" நாவலையும் சேர்த்திருக்கின்றார். முனவர் ந.முருகேசபாண்டியன், முனைவர் நா.சுப்பிரமணியன், எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன் ஆகியோர் தேவகாந்தனின் "கனவுச்சிறை" பற்றி விரிவான விமர்சனக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றார்கள். இன்னும் பலர் எழுதியிருக்கின்றார்கள் எழுதியிருப்பார்கள். அனைவரையும் இக்கட்டுரையில் குறிப்பிடுவது சாத்தியமற்றது. ஆனால் இவையெல்லாம் காய்தல் உவத்தலின்றி ஆவணப்படுத்தப்படல் அவசியம். அதுபோல் புகலிட நாவல்கள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே அவை பற்றிய விரிவான ஆய்வுகள், திறனாய்வுகள் சாத்தியம்.



**தேவகாந்தனின் 'கனவுச்சிறை'**
**தமிழீழ விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடும் இயக்கங்களின் உணர்வுநிலை மற்றும் செயன் முறை என்பவற்றுக்குப் பின்னால் உள்ள நியாயங்கள் மற்றும் புலம் பெயர்ந்துறைபவர்களின் சிந்தனைகள், செயற்பாடுகள் என்பவற்றின் பின்னால் உள்ள நியாயங்கள் என்பன இந்நாவலில் முக்கிய விவாதமையங்கள் ஆகின்றன இவற்றோடு பேரினவாத உணர்வுத்தளமும் இந்நாவலில் விவாதப் பொருளாகின்றது**

முனைவர் நா. சுப்பிரமணியன் அவர்கள் தேவகாந்தனின் கனவுச்சிறை நாவலைப் பற்றி நல்லதொரு விமர்சனக் கட்டுரையினை எழுதியிருக்கின்றார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகமிருக்குமென்பதால் குறிப்பிடுகின்றேன்:

"திருப்படையாட்சி, வினாக்காலம், அக்னி திரவம், உதிர்வின் ஓசை, ஒரு புதிய காலம் ஆகிய தலைப்புகள் கொண்ட ஐந்து பாகங்களாக 237 அத்தியாயங்களில் 1247 பக்கங்களில் விரியும் இவ்வாக்கம் 1981 முதல் 2001 வரையான இருபத்தொரு ஆண்டுக்கால வரலாற்றியக்கத்தைப் பேசுவது. இந்த வரலாற்றுக் கட்டம் ஈழத்துத் தமிழர் சமூகத்தின் இருப்பையும் பண்பாட்டுணர்வுகளையும் கேள்விக்குட்படுத்தி நின்ற கால கட்டம் ஆகும். பௌத்த சிங்கள பேரினவாதப் பாதிப்புக் குட்பட்ட நிலையில் ஈழத்துத் தமிழ் மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்ட உணர்வு தீவிரமடைந்த காலப்பகுதி இது. அதே வேளை மேற்படி பேரினவாதக் கொடுமைகளிலிருந்து தற்காத்துக் கொள்ளும் நோக்கில் ஈழத்தமிழர் பலர் புலம் பெயர்ந்தோடி அனைத்துலக நாடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்வை நிலைப்படுத்திக் கொண்ட காலப்பகுதியாகவும் இவ்வரலாற்றுக் காலகட்டம் அமைகின்றது. இவ்வாறு போராட்டச் சூழல் சார் அநுபவங்களுமாக விரிந்து சென்று வரலாற்றியக்கத்தை முழு நிலையில் தொகுத்து நோக்கி, அதன் மையச் சரடுகளாக அமைந்த உணர்வோட்டங்களை நுனித்து நோக்கி இலக்கியமாக்கும் ஆர்வத்தின் செயல்வடிவமாக இவ்வாக்கம் அமைந்துள்ளது. மேற்படி உணர்வோட்டங்களை விவாதங்களுக்கு உட்படுத்திக் கதையம்சங்களை வளர்த்துச் சென்ற முறைமையினால் ஒரு சமுதாய விமர்சன ஆக்கமாகவும் இந்நாவல் காட்சி தருகின்றது. குறிப்பாக, தமிழீழ விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடும் இயக்கங்களின் உணர்வுநிலை மற்றும் செயன் முறை என்பவற்றுக்குப் பின்னால் உள்ள நியாயங்கள் மற்றும் புலம் பெயர்ந்துறைபவர்களின் சிந்தனைகள், செயற்பாடுகள் என்பவற்றின் பின்னால் உள்ள நியாயங்கள் என்பன இந்நாவலில்

முக்கிய விவாதமையங்கள் ஆகின்றன. இவற்றோடு பேரினவாத உணர்வுத்தளமும் இந்நாவலில் விவாதப் பொருளாகின்றது. அதன் மத்தியில் நிலவும் மனிதநேய இதயங்களும் கதையோட்டத்திற் பங்கு பெறுவது நாவலுக்குத் தனிச் சிறப்புத் தரும் அம்சமாகும். போராட்டத் தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் இருப்பு சார்ந்த உணர்வோட்டங்கள் மற்றும் அவல அநுபவங்கள் ஆகியனவும் விவாதப் பொருள்களாகின்றன."

மேற்படி கனவுச்சிறை நயினாதீவைச் சேர்ந்த ராஜி என அழைக்கப்படும் ராஜலக்ஷ்மியின் வாழ்க்கையினை விபரிப்பது. அவள்தான் நாவலின் பிரதான பாத்திரம். அவளது வாழ்க்கையினூடு தேவகாந்தன் சமூகத்தில் நிலவும் பெண்ணடிமைச் சிந்தனைகள் அவள் வாழ்வை எவ்விதம் பாதிக்கின்றது, ஆயுத மயப்படுத்தப்பட்ட விடுதலைப் போராட்டம் எவ்வாறு அவள் வாழ்வினைப் பல்வேறு கோணங்களில் பாதிக்கின்றது, விடுதலைக்காக ஆயுதமேந்தியவர்களின் உளவியல் எவ்விதம் சீர்குலை கின்றது என்பது பற்றியெல்லாம் விபரித்திருப்பார். நாவல் ஆடி, அசைந்து செல்வதன் மூலம் வாசகர்களையும் நாவலில் மனமொன்ற வைக்கிறது. எனக்கு நாவலின் முழுப் பாகங்களும் கிடைக்கவில்லை. என்னிடமிருப்பது நாவலின் முதற்பாகமான திருப்படையாட்சி மட்டுமே. கனவுச்சிறை என்ற பெயரில் வெளிவந்த படைப்பு. வாசித்த அளவில், இந்நாவல் பற்றி வெளியான விமர்சனங்களின் அடிப்படையில் கனவுச்சிறையின் முக்கியத்துவம் புலப் படுகின்றது.

தேவகாந்தனின் "விதி" இன்னுமொரு முக்கியமான நாவல். இதுவரை வேறு யாரும் கை வைக்காத விடயத்தைப்பற்றி விபரிப்பது. ஈழத்தமிழர்களின் மீதான இனக்கலவரங்களில் மலையகத்தமிழர்களும் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அவ்விதம் பாதிக்கப்பட்ட வர்கள் பலர் வடகிழக்கில் இயங்கிய காந்தியப் பண்ணை களில் வந்து குடியேறினார்கள். தொடர்ந்து ஈழத்தமிழர்கள் மேல் இனவாத அரசுகளின் அடக்குமுறைகளும், நிகழ்ந்த இனப்படுகொலைகளும் ஏற்படுத்திய தாக்கங்கள் எவ்விதம் அவர்கள் வாழ்வை மேலும் சீரழித்தன் எவ்விதம் அவர்களை மீண்டும் புகலிடம் வாழ்வுக்காக தமிழகம் நோக்கி அகதிகளாகத் துரத்துகின்றன என்பதையெல்லாம் விபரிக்கும் நாவல் "விதி". இதன் காரணமாகவே இந்நாவலின் முக்கியத்துவமும் அதிகரிக்கின்றது.

எழுத்தாளர் தேவகாந்தனின் நாவல்கள் பலவகைப் பட்டவை. அவரது லங்காபுரம் இராமாயணத்தில் வரும் இராவண கதையின் மறுவாசிப்பென்றால், கதாகாலம் மகாபாரதத்ததின் மறு வாசிப்பு. கனவுச்சிறை ஈழத்தமிழர்களின் ஆயுத மயப்பட்ட விடுதலைப் போராட்டத்தின், அதற்குக் காரணமான இலங்கை அரசுகளின் தமிழ் மக்கள் மீதான அடக்கு ஒடுக்குமுறைகள் பற்றி, அதன் விளைவாக பல்வேறு திக்குகளையும் நோக்கி அகதிகளாகப் புகலிடம் நாடிப் புறப்பட்ட ஈழத்தமிழர்களைப் பற்றி, விடுதலைப் போராட்டத்தில் முன்னின்ற இயக்கங்களின் ஆயுத நடவடிக்கைகள் பற்றி, போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் சிலரின் மீதான சமூக, பொருளியற் சூழல்கள் செலுத்திய ஆதிக்கம் பற்றி, அதன் விளைவாக தடம் புரண்ட அவர்களது வாழ்க்கை பற்றி, இவ்விதமெல்லாம் எவ்விதம் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் அவர்களது இருப்பினைச் சிதைத்து விடுகின்றது என்பவை பற்றியெல் லாம் விபரிக்குமோர் ஆவணப் பெட்டகம் தேவகாந்தனின் "கனவுச்சிறை". திருப்படையாட்சி, வினாக்காலம், அக்னி திரவம், உதிர்வின் ஓசை, ஒரு புதிய காலம் ஆகிய தலைப்புகள் கொண்ட ஐந்து பாகங்களாக 237 அத்தியாயங் களில் 1247 பக்கங்களில் விரியும் இவ்வாக்கம் 1981 முதல் 2001 வரையான இருபத்தொரு ஆண்டுக்கால வரலாற்றி யக்கத்தைப் பேசுவது. "கனவுச்சிறை" நாவல் ஐந்து பாகங்களையும் உள்ளடக்கிய ஒரு தொகுப்பாக வெளி வருவது அவசியம். இல்லாவிடில் இதன் பல்வேறு பாகங்களையும் தேடிப்பிடித்து வாசிப்பது மிகவும் சிரமமான காரியமாகவிருக்குமென்று எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன் இந்நாவல் பற்றிய தனது விமரிசனக் கட்டுரையில் கூறியிருப்பதுதான் நிகழும்.


தேவகாந்தன் தற்போது கனடாவில் வசிப்பதால் "கனவுச்சிறை" நாவலைக் கனடிய நாவல்களிலொன்றாகக் கருத முடியாது. அது தமிழகத்தில் அவர் புகலிடம் நாடிப் புலம் பெயர்ந்திருந்த காலகட்டத்தில் எழுதிய நாவல். அந்த வகையில் புகலிட நாவல் இலக்கியத்தில் அதனை உள்ளடக்கலாம். ஆனால் அதன்பிறகு கனடாவுக்குப் புலம் பெயர்ந்த பின்னர் அவர் எழுதிய, வெளியிட்ட நாவல்களைக் கனடாத்தமிழ் நாவல்கள் என்னும் பிரிவுக்குள் உள்ளடக்கலாம்.

## பிரெஞ்சுத் தமிழ் நாவல்கள்

**சோபாசக்தியின் "கொரில்லா" பற்றி.....**

புகலிடத் தமிழ் இலக்கியத்தில் அதிகமாக விமர்சிக்கப்பட்டதும், அதிகமானவர்களின் கவனத்தைப் பெற்றதுமாக சோபாசக்தியின் "கொரில்லா" நாவலைக் குறிப்பிடலாம். இந்த நாவல் கூறப்பட்ட மொழியினாலும், கூறப்பட்ட விடயங்களினாலும், கூறப்பட்ட முறையினாலும் பலரைக் கவர்ந்திருக்கலாமென நினைக்கின்றேன். கதை சொல்லி பேச்சுத் தமிழைப் பாவித்துக் கொரில்லாவின் கதையினைக் கூறியிருக்கின்றார். இவ்விதமானா நடையினை, மொழியினைப் பாவிப்பதிலுள்ள அனுகூலம் இலக்கணம் பற்றியெல்லாம் அதிகம் கவனிக்கத் தேவையில்லை. அவ்விதம் கூறும்போது பாத்திரங்களை அவர் விபரிக்கும் விதம் வாசிப்பவருக்கு ஒருவித இன்பத்தினை எழுப்பும். அதன் காரணமாகவே பலருக்கு இந்த நாவல் பிடித்திருப்பதாக உணர்கின்றேன். பேச்சு

வழக்கில் ஒருவருக்கொருவர் உரையாடும்பொழுது "மசிரை விட்டான் சிங்கன்", "ஆள் பிலிம் காட்டுறான்" போன்ற வசனங்களைத் தாராளமாகவே பாவிப்பது வழக்கம். அவ்விதமானதொரு நடையில் கொரில்லாவின் கதை விபரிக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கதையில் ஈழத்து விடுதலைப் போராட்ட நிகழ்வுகள், புகலிட நிகழ்வுகள் ஆகியவை விபரிக்கப்பட்டுள்ளன. அந்தோனி தாசனின் அகதிக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டதற்கு எதிரான மேன்முறையீட்டுக் கடிதத்துடன் நாவல் ஆரம்பமாகின்றது. கொரில்லா காட்டாற்று ஏசுதாசன், அவனது மகனான கொரில்லா ரொக்கிராஜ் ஆகியோரின் வாழ்க்கை கூறப்படுகின்றது. ஒரு காலத்தில் சண்டியர்களின் ஆதிக்கம் நிலவிய யாழ்ப்பாணக் கிராமங்களில் பின்னர் இயக்கங்களின் வருகை சண்டியர்களின் ஆதிக்கத்தினை ஒழித்து, அதற்குப் பதிலாக இயக்கத்தவர்களின் ஆதிக்கத்தினைக் கொண்டுவருகின்றது. இந்தக் கொரில்லா நாவல் பதிவு



செய்யும் விடயங்களில் இதுவுமொன்று. அடுத்தது பொதுவாக இயக்க நடவடிக்கைகளை விபரிக்கும் புனைவுகளில் நா.பாரத்தசாரதியின் புனைகதைகளில் நடமாடும் இலட்சிய மாந்தர்களைப் போல் பாத்திரங்களைச் சித்திரிப்பதுதான் வழக்கம். ஆனால் கொரில்லாவில் வரும் இயக்கத்தவர்களும், இயக்க நடவடிக்கைகளும் மிகவும் யதார்த்தமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இயக்கத்தவர்கள் குறை, நிறைகளுடன் நடமாடுகின்றார்கள். அவர்களின் நடவடிக்கைகள் விமர்சிக்கப்படுகின்றன. சமூக விரோதிகளென்று தாழ்த்தப்பட்டவர்கள் ஆரம்பத்தில் கொல்லப்படுவது, தமிழ் அரசியல்வாதிகள், இயக்கங்கள் எல்லாரும் சாதிய அடிப்படையில் இயங்குவது, சக இயக்கங்களுடனான ஆயுதரீதியிலான முரண்பாடுகள், புகலிடத்தில் தொடரும் அரசியல் படுகொலைகள், புகலிட வாழ்வின் பாதிப்புகளால் சிதைவுறும் லொக்காவின் குடும்பம் (இதனை ஒரு குறியீடாகவே கருதலாம்).

முதல் பகுதியில் அந்தோனிதாசனின் மேன்முறையீடும், அடுத்த பகுதியில் ரொக்கிராஜின் வரலாறும் கூறும் நாவலின் அடுத்த பகுதியில் ரொக்கிராஜும், அந்தோனிதாசனும் ஒருவரே என்று வருகின்றது. ஆனால் கதை சொல்லி யார்? அவருக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? கதை சொல்லி செயற்கைக் காலுடன் நாவலில் வருகின்றார். அவர் எவ்விதம் தனது காலொன்றினை இழந்தார்? அதற்கான விடையெதனையும் நாவல் வெளிப்படுத்தவில்லை.

நாவலின் இறுதியில் லொக்கா என்னும் பாத்திரம் படுகொலை செய்யப்பட்டதாக வருகிறது. உடனேயே லொக்கா காவற்துறையினரின் பாதுகாப்பிலிருப்பதும் வருகிறது. அவர் தனது மனைவியை தனது துனிஷிய நண்பனான ரிடாவுடன் பாலியல் உறவு கொள்வதைக் கண்ட ஆத்திரத்தில் படுகொலை செய்துவிடுவதும் விபரிக்கப்படுகின்றது.

இவ்விதமாகச் செல்லும் நாவல் இறுதியில் பாரிசில் சபாலிங்கத்தின் படுகொலையுடன் முடிவடைகின்றது. நாவலின்படி கதை சொல்லியும், இன்னுமொருவரும்

> **புகலிடத் தமிழ் இலக்கியத்தில் அதிகமாக விமர்சிக்கப்பட்டதும், அதிகமானவர்களின் கவனத்தைப் பெற்றதுமாக சோபாசக்தியின் "கொரில்லா" நாவலைக் குறிப்பிடலாம். இந்த நாவல் கூறப்பட்ட மொழியினாலும், கூறப்பட்ட விடயங்களினாலும், கூறப்பட்ட முறையினாலும் பலரைக் கவர்ந்திருக்கலாமென நினைக்கின்றேன்.**

தான் சபாலிங்கத்தைச் சந்திப்பதாக வருகின்றது. மற்றவர் வாசலை மறைத்து நிற்க, சபாலிங்கம் படுகொலை செய்யப்படுவதாக வருகின்றது. அவ்வாறென்றால் கதை சொல்லி யார்? அவரா சபாலிங்கத்தைக் கொன்றார்?

சபாலிங்கத்தின் கொலை நாவலில் வலிந்து திணிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. நாவல் அந்தோனிதாசனெனும், "கொரில்லா" என்றழைக்கப்படும் ரொக்கிராஜின் கதை. நாவல் முழுவதும் அவனது கதையே விபரிக்கப்படுகிறது. முடிவு மட்டும் சபாலிங்கத்தின் படுகொலையுடன் அமைந்திருக்கின்றது.

ஒருவர் கதை சொல்லும்போது சம்பவங்களை மாறி மாறிக் கூறுவது வழக்கம். உதாரணமாக இலங்கையில் நடைபெற்ற 83 இனக்கலவரத்தைப் பற்றிக் கூறும் ஒருவர் 58 கலவரத்து நிகழ்வுகளை இடையில் கூறலாம் 77 கலவர நிகழ்வுகளை விபரிக்கலாம் 81 யாழ்நகர் எரிப்பினை நினைவுபடுத்தலாம். மீண்டும் 83ற்கே திரும்பலாம். இது சாதாரணமானதுதான். இதற்காக இவ்விதமான கதை சொல்லலை பின்நவீனத்துவக் கூறென்று கூறலாமா?

இந்நாவலின் தலைப்பு "கொரில்லா" நாவல்

சண்டியன் கொரில்லாவையும் அவனது மகனான "கெரில்லா"வையும் பற்றிக் கூறுகின்றது. ஊரவர்களால் கெரில்லாவும் கொரில்லாவென்றே அழைக்கப்படுகின்றான். பொதுவாகவே தமிழர்கள் கெரில்லாவையும் கொரில்லா என்றே தவறுதலாக அழைப்பதை வாசித்திருக்கின்றேன் கேட்டிருக்கின்றேன். நாவலுக்கு எதற்காக ஆசிரியர் கொரில்லா என்று பெயரிட்டார்? கொரில்லா ஒரு குறியீடாகப் பாவிக்கப்பட்டிருந்தால் நாவலில் அது ஆழமாகச் சித்திரிக்கப்படவில்லை என்றே தென்படுகிறது. நாவலில் வரும் பாத்திரங்களிரண்டுக்கு கொரில்லா என்று பெயர் வருவதாலோ, அல்லது அப்பாத்திரங்களிலொன்று கெரில்லாவாக இருப்பதாலோ கொரில்லா என்று நாவலுக்குப் பெயரிட்டிருந்தால் அது ஆழமானதாக எனக்குப் படவில்லை.

கொரில்லா தமிழில் பெற்ற வரவேற்பை ஆங்கில மொழியில் அல்லது ஏனைய மொழிகளில் பெறுமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் தமிழில் பாவிக்கப்பட்ட சுவையான பேச்சு மொழி ஏனைய மொழிகளில் சாதாரண மொழிவழக்காகப் போய்விடுவதால்தான்.

என்னைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத் தீவுப்பகுதிக் கிராமமொன்றின் மீது ஈழத்துத் தமிழர்களின் போராட்ட அரசியல் ஏற்படுத்திய பாதிப்புகளை விபரிக்கும் சம்பவங்களின் கோவையாகவே கொரில்லா இருக்கிறது.

நாவலின் ஆரம்பத்தில் தொடரும் என்று வருகிறது. பின்னரும் பகுதிகளுக்கிடையில் தொடரும் என்று வருகிறது. இவ்விதம் நாவல் பிரிக்கப்பட்டிருப்பது நாவலின் புதிர்த்தன்மையினை அதிகரிப்பதற்காகவா அல்லது ஏதாவது காத்திரமான காரணமொன்றிற்காகவா என்பது புரியவில்லை.

நாவலில் ஆரம்பத்தில்வரும் அந்தோனிதாசனின் மேன்முறையீட்டுக் கடிதம் மேற்கு நாடுகளில் நிலவும் அகதிகள் பற்றிய சட்டங்களைக் கேள்விக்குள்ளாக்குகின்றது.. "நான் எனக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட ஆபத்துகளைச் சுட்டிக்காட்டிய பின்புங்கூட அவற்றிற்கு ஆதாரங்கள் எதையும் நான் தங்களுக்குக் காட்டாதபடியால் அந்த ஆபத்துகள் ஆபத்துகளே இல்லையென்ற முடிவுக்கு நீங்கள் வந்திருப்பது வருத்தத்திற்குரியது. ஐயா எங்கள் நாட்டில் எல்லாம் இராணுவம் ஒரு தமிழரை வெட்டிவிட்டு "நாங்கள்தான் வெட்டினோம்" என்று ஒரு சான்றிதழை வெட்டப்பட்டவருக்கு வழங்குவதில்லை." என்ற அக்கடிதத்தில்வரும் வரிகள் மேற்கு நாடுகளில் நிலவும் அகதிகள் பற்றிய நடைமுறைகளை விமர்சிக்கின்றன. இதனால்தான் அகதிகள் அகதிக்கதை கட்ட நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றார்கள்.

அண்மையில் கேதரின் பெல்ஸியின் "பின் அமைப்பியல் மிகச் சுருக்கமான அறிமுகம்" (அழகரசனால் மொழிபெயர்க்கப்பட்ட) நூலில் வரும் "ஓர் எழுத்து நடை என்கிற அளவில் சந்தைகளில் இன்று பிரபல்யமாகி, வாசகர்களுக்குச் சுகத்தைக் கொடுத்துப் பெருமளவு லாபம் ஈட்டும் ஒருவகை பின் நவீனத்துவமும் நம்மிடையே இருக்கிறதென லியோதார்த் கூறுகின்றார்." என்ற வரிகளை வாசித்தபொழுது எனக்கு கொரில்லா நாவலின் நடை ஞாபகத்துக்கு வந்தது எந்தவிதக் காரணமுமற்ற தற்செயலாக விருக்கலாம்.

நாகரத்தினம் கிருஷ்ணாவின் "நீலக்கடல்" 18ஆம் நூற்றாண்டில் மொரீயஸ் தீவுக்குப் பிரெஞ்சுக்காரர்களால் அடிமைகளாகக்கொண்டு செல்லப்பட்ட இந்தியத் தமிழர்களின் புகலிட வாழ்வை விபரிப்பதால் புகலிடத் தமிழ் நாவல் இலக்கியத்தில் குறிப்பிட வேண்டிய படைப்பு.

ஜேர்மனிய நாவல்கள்.

**பார்த்திபனின் நாவல்கள் பற்றி.....**

பார்த்திபன் ஜேர்மனிக்குப் புகலிடம் நாடிப் புலம் பெயர்ந்தவர். வித்தியாசப்படும் வித்தியாசங்கள் (1987, தென்னாசிய நிறுவனம், மேற்கு ஜேர்மனி - 3வது வெளியீடு), பாதி உறவு (1987, தென்னாசிய நிறுவனம், மேற்கு ஜேர்மனி - 4வது வெளியீடு), ஆண்கள் விற்பனைக்கு (1988, தென்னாசிய நிறுவனம், மேற்கு ஜேர்மனி - 5வது வெளியீடு), கனவை மிதித்தவன் (1988-1993 வரை வெளிவந்த தூண்டில் சஞ்சிகையில் 58 தொடர்களுடன் முற்றுப்பெறாத நாவல்), சித்திரா - பெண் (நமது குரல் சஞ்சிகையில் தொடர்கதையாக வந்துள்ளது. ஆதாரம் :- மங்களேஸ்வரி தூண்டில் - இதழ் 30, ஜூன் 1990) ஆகிய பார்த்திபனின் நாவல்கள் வெளிவந்துள்ளதை ஆய்வாளர் சு.குணேஸ்வரனின் பார்த்திபனின் படைப்புகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அறிய முடிகின்றது. பார்த்திபனின் நாவல்கள் சீதனப் பிரச்சினை, சாதிப் பிரச்சினை மற்றும் புகலிடத்தில் குழந்தை வளர்ப்பு பற்றிய பிரச்சினைகளை வெளிப்படுத்துவனவாக சு.குணேஸ்வரன் தனது கட்டுரையில் மேலும் கூறுவார்.


புகலிடம் நாடிப் புலம் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் புனைவுகள் புகலிடத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் (நிறப் பிரச்சினை, வேலை, சொந்த மண்ணின் பண்பாட்டுக்கூறுகளை மீளக் கட்டியமைக்க முனையும் ஈழத்தமிழர்களின் வாழ்முறைகள், குடும்பச் சுமைக்காக மாடாக உழைக்கும் மக்களின் நெருக்கடி மிகுந்த வாழ்க்கை போன்ற), இழந்த மண்ணை நினைத்து இரை மீட்டும் கழிவிரக்க மனோநிலை, இழந்த மண்ணில் தொடர்ந்திருந்த ஆயுத மயப்பட்ட விடுதலைப் போராட்டம் ஆகியவற்றையே பெரும்பாலும் கூறும் பொருளாகக் கொண்டிருக்கும். சிலர்தான் சொந்த மண்ணின் சாதிப் பிரச்சினை, சீதனப் பிரச்சினை ஆகியவற்றைப் பற்றிப் புனைவுகள் படைத்திருப்பதாகக் கருதுகின்றேன். பார்த்திபன் அவர்களிலொருவர் என்பதை அவரது படைப்புகளைப்

பற்றிக் கூறப்படும் விமர்சனங்களிலிருந்து அறிய முடிகின்றது.

**பொ.கருணாகரமூர்த்தியின் "ஒரு அகதி உருவாகும் நேரம்" பற்றி..**

புகலிடப் படைப்பாளிகளில் முக்கியமானவர்களிலொருவர் ஜேர்மனியிலிருந்து எழுதும் பொ. கருணாகரமூர்த்தி. புகலிட அனுபவங்களை மையமாக வைத்து இவரது நாவல்கள் அமைந்துள்ளன. இவை குறுநாவல்களென்றாலும் ஏற்கனவே இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியுள்ளதுபோல் குறுநாவல்களும் நாவல்களின் ஒரு பிரிவே. அந்த வகையில்தான் அவற்றையும் நாவல்கள் என்ற பிரிவுக்குள் சேர்த்துக் கொள்கின்றேன். பொ.கருணாகரமூர்த்தின் "ஒரு அகதி உருவாகும் நேரம்" புகலிடம் நாடி உலகின் நானா திக்குகளையும் நோக்கிப் படையெடுக்கும் ஈழத்தமிழர்களைப் பற்றி விபரிக்கும். அவ்விதம் அகதிகளாகத் தமிழர்களை அனுப்பி வைக்கும் முகவர்களைப் பற்றி விபரிக்கும். முகவர்களைப் பணம் பறிக்கும் பிசாசுகளாகச் சித்திரித்து வெளியான புனைகதைகளை வாசித்திருக்கின்றோம். இளம் பெண்களைத் தம் மனைவியர் என்ற கோதாவில் அழைத்து வந்த முகவர்களில் சிலர், இடையில் தங்கி நிற்கும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில், அப்பெண்களை ஒரே அறையில் தம்முடன் தங்கவைத்து (மனைவியராக அவர்களை அழைத்து வருவதால் அவ்விதம் தங்காவிட்டால் அங்குள்ளவர்களுக்குச் சந்தேகம் வந்துவிடுமாம்) பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய தாகச் சமூகத்தின் மத்தியில் நிலவிய கதைகளைக்கேட்டிருக்கின்றோம் ஆனால் தனது நாவலில் பொ.கருணாகரமூர்த்தி நல்ல பக்கத்தைக் காட்டியிருக்கின்றார். அவர்கள்தான் அகதிகளாக வெளியேறிய தமிழர்களை உலகின் நானா பக்கங்களுக்கும் செல்வதற்கு உதவியிருக்கின்றார்கள். மேற்படி சிறு நாவல் முகவர்கள் பல தடவைகள் முயன்றும், நட்டப்பட்டும், அனுப்பும் தமிழர் ஒருவர் ஒவ்வொரு தடவையும் இடையில் அகப்பட்டுத் திருப்பி அனுப்பப்படு வதையும் விபரிக்கும். அவ்விதம் அவர் ஒவ்வொருதடவையும் திருப்பி அனுப்பப்படுவதைக் கௌரவப்பிரச்சினையாகக் கருதும் முகவர்களின் மனோநிலையினையும் நாவல் புலப்படுத்தும்.

முகவர்கள் பல தடவைகள் முயன்றும், நட்டப்பட்டும், அனுப்பும் தமிழர் ஒருவர் ஒவ்வொரு தடவையும் இடையில் அகப்பட்டுத் திருப்பி அனுப்பப்படுவதையும் விபரிக்கும். அவ்விதம் அவர் ஒவ்வொரு தடவையும் திருப்பி அனுப்பப்படுவதைக் கௌரவப்பிரச்சினையாகக் கருதும் முகவர்களின் மனோநிலையினையும் நாவல் புலப்படுத்தும்.




## நோர்வேத் தமிழ் நாவல்கள்

**ஆதவனின் "மண்மனம்"**

"சுவடுகள்" (நோர்வே) இதழில் வெளியான ஆதவனின் "மண்மனம்" தொடர் நாவல் இன்னும் நூலுருப்பெறவில்லை. ஆயினும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இலக்கியத் திறனாய்வாளர் சு.குணேஸ்வரன் இந்நாவலைத் தேடி எடுத்து, வாசித்து அறிமுக ஆய்வுக் கட்டுரையொன்றினை எழுதியிருக்கின்றார். அக்கட்டுரை "பதிவுகள்" இணையத் தளத்திலும் வெளியாகியுள்ளது. சு.குணேஸ்வரனின் முன்மாதிரியை இவ்விதமான ஆய்வுகள் செய்யும் ஆய்வாளர்கள் பின்பற்ற வேண்டும். பெரும்பாலானவர்கள் தமக்குக் கிடைக்கும் படைப்புகளின் அடிப்படையில் ஒட்டுமொத்த ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்துவிடுவார்கள். அவ்விதம் ஆய்வுக்கட்டுரைகளை எழுதும் முனைவர்கள், பேராசிரியர்கள், தமிழகத்தின் "ஸ்டார்" எழுத்தாளர்கள் போன்றோர் எழுதும் திறனாய்வுக் கட்டுரைகள் ஒரு சிலரின் படைப்புகளுடன் நின்று போய்விடுவதற்கு முக்கிய காரணமே சு.குணேஸ்வரன் போன்றோருக்கு இருக்கின்ற ஆர்வமும், தேடுதலும் அவர்களுக்கு இல்லாமலிருப்பதுதான். அவர்களில் பலர் தமக்கு அடிவருடும் எழுத்தாளர்களின் படைப்புகளை மட்டும் வாசித்து விட்டு, தங்களை இலக்கிய உலகில் நிலை நிறுத்துவதற்காக திறனாய்வுக் கட்டுரைகளை பக்கம் பக்கமாக எழுதுவார்கள். ஆனால் அக்கட்டுரைகளில் ஒரு சிலரின் படைப்புகளை மட்டும் குறிப்பிட்டு விட்டு, மிகுதி பக்கங்களை தங்களது மேதமையினை வெளிப்படுத்துவதற்காக பல மேற்கோள்களுடன், உதாரணங்களுடன் நிரப்பியிருப்பார்கள். இவர்களிலிருந்து வேறுபட்டு, தேடி, வாசித்து, ஆய்வுகளைப் புரியும் சு.குணேஸ்வரன் பாராட்டுதற்குரியவர்.

ஆதவனின் "மண் மனமும்" பிரிந்து வந்த தாயக மண்ணில் நிலவும் விடுதலைப் போராட்டத்தினை விமர்சிப்பதாக, விபரிப்பதாகவுள்ளது. நண்பர்களிருவரை எவ்வளவு இலகுவாக ஆயுதமயப்படுத்தப்பட்ட விடுதலைப் போராட்டம் பிரித்து விடுகிறது. ரகுராமன் என்னும் பிரதான பாத்திரத்தைச் சுற்றிப் பின்னப்பட்ட கதையில் வரும் ஏனைய முக்கிய பாத்திரங்கள் அவனது நண்பன் சுரேஷ், காதலிக்கும் சுசீலா, தங்கை சந்திரா ஆகியோர். சுரேஷ்,

ஆதவனின் "மண் மனமும்" பிரிந்து வந்த தாயக மண்ணில் நிலவும் விடுதலைப் போராட்டத்தினை விமர்சிப்பதாக, விபரிப்பதாகவுள்ளது. நண்பர்களிருவரை எவ்வளவு இலகுவாக ஆயுதமயப்படுத்தப்பட்ட விடுதலைப் போராட்டம் பிரித்து விடுகிறது.



விடுதலை அமைப்பொன்றில் சேர்ந்ததும் நண்பன் ரகுநாமனுடனான நட்பினைத் துண்டித்துக்கொள்கின்றான். ரகுராமனின் தங்கை சந்திராவோ சுரேஷின் மீது காதல் கொண்டு அவனுடன் இயக்கத்திலிணைந்து சமரொன்றில் இறந்துவிடுகின்றாள். இதன காரணமாக ரகுராமனின் குடும்பத்தவரின் இயக்கத் தொடர்புகள் காரணமாக, இராணுவம் ரகுராமனைக் கைது செய்து சித்திரவதை செய்து பற்றையொன்றினுள் தூக்கி எறிந்து விட்டுச் சென்று விடுகிறது. ஆஸ்பத்திரியில் நினைவற்றுப் படுத்துக் கிடக்கும் ரகுராமனைப் பார்த்து முன்னர் நிராகரித்த அவனது காதலி சுசீலா அழுவதுடன் நாவல் முடிகிறது.

இதில் வரும் நண்பர்களுக்கிடையிலான பிரிவு வேறு யாரும் எந்த நாவல்களிலும் பதிவு செய்யாத விடயமென்று உணர்கின்றேன். என் சொந்த வாழ்வில் என்னுடம் படித்த நன்கு பழகிய நண்பர்கள் பலர் பல்வேறு இயக்கங்களில் சேர்ந்து முக்கிய நிலையிலிருந்தார்கள். அவர்களில் பலரைப் புகலிட மண்ணில் கண்டபோது முன்பிருந்த பசுமையான , கள்ளங்கபடமற்ற நட்பு காணமல் போயிருந்ததை உணர முடிந்தது. ஆதவனின் மண மனம் நாவலில் வரும் ரகுராமனுக்கும், அவனது நண்பன் சுரேஷிற்குமிடையில் நிலவிய நட்பும் இவ்விதமே அறுந்தபோது நான் என் சொந்த வாழ்க்கையைச் சிறிது அசை போட்டேன்.

**வ.ஐ.ச. ஜெயபாலனின் "செக்கு மாடு"**

வ.ஐ.ச.ஜெயபாலனின் மூன்று குறுநாவல்களான "சேவல் கூவிய நாட்கள்", "செக்கு மாடு", "அவளது கூரையின் மீது நிலா ஒளிருகிறது" ஆகிய குறுநாவல்களை உள்ளடக்கிய தொகுப்பு ""அவளது கூரையின் மீது நிலா ஒளிருகிறது"" என்னும் பெயரில், தமிழகத்தில் உயிர்மைப் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டது. இத்தொகுப்பிலுள்ள செக்குமாடு ஒரு குறுநாவல். புகலிடம் நாடிப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் இளைஞனொருவனின் வாழ்வை விபரிப்பது. இலங்கையில் பட்டதாரி ஆசிரியனாக விளங்கியவன், புகலிடத்தில் கோப்பை கழுவி உழைத்து, ஊரிலுள்ள தன் குடும்பத்தவர்களுக்காக உழைக்கின்றான். தனது சொந்த வாழ்வுபற்றிய கனவுகள் கனவுகளாகவே நிலைத்திருக்க அவனது வாழ்வுப் போராட்டம் தொடர்கிறது. இக்குறுநாவலில் வரும் இளைஞர்களைப்போல இலட்சக்கணக்கானவர்கள் புகலிடம் நாடிப் புகுந்த நாடுகளில் வாழ்கின்றார்கள். புகலிட வாழ்க்கைப் போராட்டத்தை விபரிக்கும் கதை என்னும் வகையில் முக்கியத்துவம் பெறுகிறது ஜெயபாலனின் செக்குமாடு.

**இ.தியாகலிங்கத்தின் நாவல்கள்**

இ.தியாகலிங்கம் "நாளை", "பரதேசி, திரிபு, "எங்கே" "ஒரு துளி நிழல்", "பராரிக் கூத்துக்கள்" , "அழிவின் அழைப்பிதழ்" ஆகிய நாவல்களை எழுதியுள்ளார். இவற்றை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. கிடைத்ததும் பின்னர் இவை பற்றிய கருத்துகளையும் சேர்த்துக்கொள்வேன்.

## சுவிஸ் நாவல்கள்

**சயந்தனின் "ஆறா வடு"வும்**
**ஷோபா சக்தியின் "கொரில்லா"வும் பற்றி...**

அண்மைக்காலத்தில் பரவலாக வரவேற்பினையும், விமர்சனங்களையும் பெற்ற சயந்தனின் "ஆறா வடு" புகலிட நாவல்களில் தவிர்க்க முடியாத இன்னுமொரு படைப்பு. இந்த நாவலை முதலில் வாசித்ததும் ஏனோ தெரியவில்லை உடனடியாகவே எனக்கு "ஷோபா சக்தி"யின் "கொரில்லா" ஞாபகத்துக்கு வந்தது. அதற்குக் காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. இரு நாவல்களுமே முன்னாள் விடுதலைப் புலி ஒருவரின் கடந்த கால, புகலிட அனுபவங்களை மையமாகக் கொண்டவை இரண்டிலுமே அவ்வப்போது பட்டும் படாமலும் இயக்கத்தின் நடவடிக்கைகள் விமர்சிக்கப்படுகின்றன.

2. அதே சமயம் இரண்டிலும் இயக்கத்தின் ஆரோக்கியமான பக்கங்களும் சுட்டிக் காட்டப்படுகின்றன. கொரில்லாவில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளியால் இந்திய அமைதிப்படையின் மேஜர் கல்யாணசுந்தரம் கொல்லப்படுகின்றார். பிரின்ஸியை விசாரணைக்குட்படுத்தும் சமயம், மேஜர் அவளது மார்புகளைக் காமத்துடன் பார்த்து "இங்கே என்ன

பாம் வைச்சிருக்கியா?" என்று கேட்கும் சமயம், மார்பினில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகளுடன் அவனைப் பாய்ந்து கட்டிக்கொள்கின்றாள் பிரின்ஸி. குண்டுகள் வெடிக்கின்றன. "ஆறா வடு"வில் வரும் நிலாமதி என்னும் பதின்ம வயதுப் பெண் வயதுக்கு மீறிய மார்பகங்களின் வளர்ச்சியைப் பெற்றவள். அதன் காரணமாகவே "குண்டுப் பாப்பா" என்னும் பட்டப்பெயரால் அழைக்கப்படுபவள். அவளது குடும்பம் விடுதலைப் புலிகளுக்கு அவ்வப்போது உதவி செய்யும் தமிழ்க் குடும்பம். வெற்றி என்று அழைக்கப்படும் விடுதலைப் புலி உறுப்பினன் ஆரம்பத்தில் திலீபன் நினைவுதினத்துக்காக அச்சடித்த துண்டுப்பிரசுரங்களை நிலாமதியிடம் பாதுகாப்பாக வைத்துத் தரும்படி வேண்டுகின்றான். இவ்விதமாக ஆரம்பிக்கும் தொடர்பு ஆயுதங்களை அவர்களது இடத்தில் மறைத்து வைக்கும் அளவுக்கு வளர்கிறது. ஒரு முறை இந்திய அமைதிப்படை இராணுவத்தின் தேடுதலில் அவளது வீடு அகப்பட்டுக்கொள்கிறது. அதற்குச் சற்று முன்னர்தான் அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டிருந்தார்கள். ஆனால் கிரேனைட் குண்டொன்று தவறுதலாக விடுபட்டுப் போகிறது. அதே சமயம் இந்தியப் படைச் சிப்பாய்கள் வீட்டினுள் நுழைகின்றார்கள். நிலாமதி கிரேனைட்டினைத் தனது மார்பகங்களுக்குள் மறைத்து நிற்கின்றாள். வந்திருந்த சிப்பாய்களில் ஒருவன் அறையைச் சோதிக்கும் பாவனையில் அறையினுள் அவளைத் தள்ளி அவளைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினான். அச்சமயம் அவளது பிராவினைப் பற்றி இழுக்கும்போது உள்ளிருந்த கிரேனைட் குண்டு கீழே விழுகிறது. அதிர்ச்சியுற்ற அந்தப் படையினன் கிரேனைட் குண்டினை எடுத்து, கிளிப்பை நீக்கி, நிலாமதி மீது வீச எத்தனிக்கையில், நிலாமதி அவனைப் பாய்ந்து கட்டிக்கொள்கின்றாள். வெடிப்பில் இருவருமே கொல்லப்படுகின்றனர்.

3. ஆறா வடு நாவலில் லூசு தேவி என்றொரு பாத்திரம் வருகிறது. சிறு வயதில் தாயை இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் இழந்தவள். அவளை "செக் போஸ்" டுகளில் நிற்கும் இராணுவத்தினர் பாலியல் தேவைக் காகப் பாவித்துக்கொள்கின்றனர். அதன் விளைவாக, பத்து மாதக் கர்ப்பத்துடனிருந்த அவள் வயிற்றில் சுடப்பட்டுக்கொல்லப்படுகின்றாள். அவள் யாரால் கொல்லப்படுகின்றாள் என்பது நேரடியாகக் கூறப்பட வில்லை. ஆனால் மறைமுறைமாகக் கூறப்படுகின்றது.

"அப்பொழுது ஊரில் பலதரப்பட்ட கதைகள் அவளைப் பற்றி இருந்தன. தேவியொரு உளவாளியாம்... ஆமிக்காரங்களுக்கு மெசேஜ் எடுத்துக் குடுக்கிறவளாம். ஆமியோடை தொடர்பு எண்டு இயக்கம்தான் போட்டதாம்... இவள் ஆமிக்காரங்களோடை போய்ச் சண்டை பிடிச்சவளாம்... அவங்கள்தான் சுட்டுட்டாங்களாம்." இவ்விதமாக நிலவும் கதைகள் அவளது மரணம் பற்றி வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. இதே போல் கொரில்லா நாவலிலும் ஒரு பாத்திரம் வருகிறது. அவள்: யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரிக்கு முன்னாளிலுள்ள லக்கி ஹொட்டலில் 66வது இலக்க அறையில் தொழில் செய்து வரும் சலங்கை. "சலங்கையை இயக்கம் சி.ஐ.டி எண்டு சுட்டுப் போட்டு பஸ் ஸ்ராண்டில போட்ட அண்டு இஞ்ச வந்தனான" என்று சிறைக்கைதி ஒருவன் கூறும் கூற்றில் வருகின்றது.

4. 1994 வரையிலான கால கட்டச் சம்பவங்களின் அடிப்படையில் கொரில்லா கூறப்பட்டிருக்கின்றது. ஆறா வடு 1987 - 2001 வரையிலான காலகட்டத்தை மையமாக வைத்துக் கூறப்பட்டுள்ளது. இரண்டிலும் இயக்கத்தின் அக்காலகட்டங்களுக்குரிய சமர்கள், அரசியல் நிகழ்வுகள், இயக்கத்தின் நடைமுறைகள் ஆகியவை விபரிக்கப்பட்டுள்ளன.

5. கொரில்லா நாவலின் இறுதி அத்தியாயம் அதுவரை கூறப்பட்ட கதைக்கு எந்தவிதத் தொடர்புமில்லாத பாரிஸ் சபாலிங்கம் கொலையுடன் முடிவடைகின்றது. ஆறா வடு அது வரையில் கூறப்பட்ட கதைக்கு எந்தவிதச் சம்பந்தமுமில்லாத இத்ரீஸ் என்றழைக்கப் படும் முன்னாள் எரித்திரியா விடுதலைப் போராளி ஒருவனின் கதையுடன் முடிவடைகின்றது. கொரில்லா வில் அதுவரை கூறப்பட்ட கதைக்கும், இறுதி அத்தியாயத்துக்குமிடையிலுள்ள ஒரேயொரு தொடர்பு: பாரிசில் நடைபெற்ற இன்னுமொரு ஈழத்தமிழனின் படுகொலைதான். "ஆறா வடு" நாவலில் வரும் இறுதி அத்தியாயத்துக்கும் அது வரை கூறப்பட்ட கதைக்கு மிடையிலுள்ள ஒரேயொரு தொடர்பு: புகலிடம் நாடி, இத்தாலி நோக்கிப் படகில் ஏனையவர்களுடன் பயணிக்கும் அமுதன், படகு மூழ்கியதில் கடலினுள் மரித்துப் போகின்றான். ஆனால், அவனது பைபர் க்ளாசிலான செயற்கைக் கால் மட்டும் கழன்று நீரில் மிதந்து வருகின்றது. ஏற்கனவே தனது காலொன்றினை இழந்திருந்த இத்ரீஸ் கிழவனுக்கு அச்செயற்கைக்கால் அச்சொட்டாகப் பொருந்துகின்றது.

இரு நாவல்களும் கூறப்பட்ட முறையில் வேறுபடவும் செய்கின்றன. "கொரில்லா"வில் கதை பைபிளில் கூறப்பட்டுள்ளதைப் போன்றதொரு நடையில் நகர்கின்றது.

அதே சமயம் காடாற்ற ஏசுதாசனான சண்டியன் "கொரில்லா"வின் கதையும், அவனது மகனான ரொக்கிராஜ் என்கின்ற அந்தோனிதாசனின் (இவனும் தந்தையைப் போன்றே கொரில்லா என்றழைக்கப்படுகின்றான். ஆனால் இவன் கெரில்லா. அவனது சந்தையோ ஊர்ச்சண்டியன்) கதையும் கூறப்படுகின்றது. அந்தோனிதாசனின் புகலிட வாழ்வும் கூறப்படுகின்றது. ஆனால் "ஆறா வடு"வில் புகலிடம் நாடிச் செல்லும் முன்னாள் போராளி அமுதனின் வாழ்வு செல்லும் படகு கடலுள் மூழ்குவதுடன் முடிந்து விடுகின்றது. அவனது புகலிடம் நாடிய தேடல் முற்றுப்பெறவில்லை. எனவே அவனது புகலிட வாழ்வு பற்றிய அனுபவங்களைக் கூறுவதற்குரிய வாய்ப்பு கொரில்லாநாவலுக்குள்ளதைப்போல் ஆறா வடு நாவலுக்கில்லை. இன்னுமொரு முக்கியமான வித்தியாசம்: ஆறா வடு நாவலில் முன்னாட் போராளியான அமுதனின் கடந்த கால வாழ்வு உணர்ச்சி பூர்வமாகக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக அவனது காதல், காதலி அகிலாவின், அவனது உணர்வுகள் மனதைத் தொடும் வகையில் நாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளன. இன்னுமொரு விடயம் கூறும் நடையிலும் இரு நாவல்களும் வேறுபட்டுள்ளன. கொரில்லாவில் கதை பேச்சு வழக்கில் கூறப்பட்டுள்ளது. ஆறா வடு நாவலில் உரையாடல்களில் மட்டும் பெரும்பாலும் பேச்சு நடை பாவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இருவரது நடையிலும் அங்கதம் அவ்வப்போது தலை காட்டவும் செய்கின்றது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

## கனடியத் தமிழ் நாவல்கள்

கனடாவில் வெளியான நாவல்களில் குறமகளின் "மிதுனம்", மெலிஞ்சி முத்தனின் "வேருலகு", கே.எஸ். பாலச்சந்திரனின் "கரையைத் தேடும் கட்டு மரங்கள்", வல்வை கமலா பெரியதம்பியின் "தாயார் தந்த தனம்", அகிலின் "கண்ணின் மணி நீயெனக்கு..", "திசை மாறிய தென்றல்", குரு அரவிந்தனின் "உன்னருகே நான் இருந்தால்", "உறங்குமோ காதல் நெஞ்சம்", வ.ந.கிரிதரனின் "வன்னி மண்", "அருச்சனனின் தேடலும் , அகலிகையின் காதலும்", "கணங்களும் குணங்களும்", மண்ணின் குரல் ஆகியவற்றை உள்ளடக்கிய "மண்ணின் குரல்" தொகுப்பு, "அமெரிக்கா" நாவலை உள்ளடக்கிய "அமெரிக்கா" தொகுப்பு, மற்றும் பதிவுகள், திண்ணை ஆகிய இணைய இதழ்களில் வெளியான "குடிவரவாளன்" (முதலில் அமெரிக்கா2 என்னும் பெயரில் வெளியாகி, "அமெரிக்கா: சுவர்களுக்கப்பால்" என்றாகி "குடிவரவாளன்" என்னும் பெயரைப் பெற்ற நாவல்) "வேலிகள்", "வெகுண்ட உள்ளங்கள்" ஆகியவற்றை உள்ளடக்கிய "கடல்புத்திரனின் (இயற்பெயர்: ந. பாலமுரளி) "வேலிகள்" தொகுப்பு, மைக்கலின் (மான்ரியால்) "ஏழாவது சொர்க்கம்" (பதிவுகள் இணைய இதழில் தொடராக வெளிவந்த நாவல். இன்னும் நூலுருப்பெறவில்லை), செழியனின் "போராளியின் நாட்குறிப்புகள்", "வானத்தைப் போல", மனுவல் ஜேசுதாசனின் "90 நாட்கள்", சிவநயனி முகுந்தனின் "வேல்விழியாள் மறவன்" (ஒரு வரலாற்று நாவல்), இரா. தணியின் நாவல்கள், அ.கந்தசாமியின் செந்தாமரையில் வெளிவந்த "அக்கினித் தாமரை", தமிழ்நதியின் "கானல்வரி" போன்றவற்றைக் குறிப்பிடலாம். கதிர் பால்சுந்தரத்தின் "மறைவில் ஐந்து முகங்கள்", கனடாவில் சாவித்திரி, சிவப்பு நரி ஆகிய நாவல்களை எழுதியுள்ள இவர் ஆங்கிலத்திலும் நாவல்கள் எழுதியுள்ளார். க.ரவீந்திரநாதன், வீணை மைந்தன் போன்றோரும் பத்திரிகைகளில் தொடர் நாவல்கள் எழுதியுள்ளதாகத் தெரிய வருகின்றது. ஓர் ஆவணப் பதிவுக்காக இவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். இந்தப் பட்டியல் இத்துடன் முற்றுப்பெறவில்லை. கனடாவில் வெளிவந்த அனைத்து நாவல்கள் பற்றிய விபரங்களும் (அவை நூலுருப்பெற்றவையோ அல்லது சஞ்சிகை, பத்திரிகைகளில் தொடர்களாக வெளி வந்தவையோ) முழுமையாக ஆவணப்படுத்தப்படவேண்டும்.

செழியனின் "ஒரு போராளியின் நாட்குறிப்புகள்" (தாயகம் - கனடா வில் வெளியான தொடர் பின்னர் நூலுருப் பெற்றது.) ஈழப்போராட்டத்தில் நிகழ்ந்த சகோதரப் படுகொலைகளின் போது, (இவர் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியைச் சேர்ந்தவர்.) விடுதலைப் புலிகளிடமிருந்து தப்பிய தனது அனுபவத்தை விபரிக்கும் முக்கியமானதோர் ஆவணப் பதிவு. இதுவே பின்னர் விரிவாக "வானத்தைப் போல" என்று நூலாக வெளியாகியுள்ளதாக நினைக் கின்றேன். நான் இது நாள் வரையிலும் இதனை ஒரு உண்மைச் சம்பவங்களை விபரிக்கும் அபுனைவாகத்தான் கருதியிருந்தேன். ஆனால் யமுனா ராஜேந்திரன் போன்ற வர்கள் அரசியல் புனைவுகள் வரிசையில் இதனை வைத்து எழுதியிருந்ததை வாசித்திருக்கின்றேன். அ. ரவியின் "வீடு நெடும் தூரம்" போன்று உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் புனையப்பட்ட புனைவா இது என்பது பற்றிச் செழியனிடம் கேட்டறிய வேண்டும்.

கடல்புத்திரனின் வேலிகள் யாழ் கிராமமொன்றில் எவ்விதம் சாதிக்கட்டுப்பாடுகள் வேலிகளாக இருந்தன என்பது பற்றியும், பின்னர் இவற்றைத் தீர்க்க முனைந்த இயக்கங்கள் எவ்விதம் மீண்டும் வேறொரு வகையில் பிரிவுகளை ஏற்படுத்தி , புதிய வேலிகளாக மாறின என்பதைக் கூறும். இவரது "வெகுண்ட உள்ளங்கள்" முக்கியமானதோர் ஆவணச்சிறப்பு மிக்கது. யாழ்ப்பாணத் தின் தீவுப்பகுதிகளுக்கான பயணம் இராணுவப் பிரசன்னத்தால் (பண்ணைத்துறை வழியாக, காரைநகர் வழியாக) தடைபெறவே அராலித்துறை முக்கியத்துவம் பெறுகிறது. ஆரம்பத்தில் உள்ளூர் வள்ளங்களின் உரிமையாளர்கள், வெளியூர் வள்ள உரிமையாளர்களுக்

கிடையில் பிரிக்கப்பட்டு நடைபெற்ற வள்ளப்போக்குவரத்து எவ்விதம் இயக்கங்களின் கைகளுக்கு மாறுகின்றன என்பதைப் பற்றிய ஆவணப்பதிவாக இந்நாவல் விளங்குகின்றது. அத்துடன் இயக்கப்பிளவுகளையும் விமர்சிக்கிறது.

அகிலின் "கண்ணின் மணி நீயெனக்கு" வெளிநாட்டு மோகம் எவ்விதம் காதல் போன்ற உணர்வுகளைக் கூடச் சிதைத்து விடுகின்றது என்பதை விபரிக்கும் நாவல். இந்நாவலில் வரும் நாயகன் சேகரின் காதல் தோற்று விடுகிறது. காரணம் வெளிநாட்டு மாப்பிள்ளைக்காக அவனுடனான தன் காதலைத் துறந்து விடுகின்றாள் அவன் காதலி. அதன் பின்னர் கனடா சென்று திரும்பும் சேகருக்கு மனைவியாகின்றாள். வெளிநாட்டு மாப்பிள்ளையைத் தன் மகளுக்குக் கட்டி, தானும் தன் சிநேகிதி போல் வெளிநாடு செல்ல வேண்டுமென்ற மோகத்தால் ராஜேஸ்வரி தன் மகளுக்கு உள்ளூர் மாப்பிள்ளையுடன் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த திருமணத்தைத் தந்திரமாக நிறுத்தி மகளுக்குச் சேகரைத் திருமணம் செய்வித்துத் தன் ஆசையை நிறைவேற்றுகின்றாள். இறுதியில் உண்மை தெரிய வர, முதியோர் இல்லத்தைத் தஞ்சமடைகின்றாள். மகளுக்கும் விபத்தொன்றினால் கர்ப்பம் தரிக்கும் ஆற்றல் இல்லாது போக, சுனாமியால் அனாதையாக்கப்பட்ட குழந்தையொன்றினைத் தம்பதிகள் இருவரும் தத்தெடுத்துக்கொள்கின்றார்கள். "கண்ணின் மணி"யாக் அக்குழந்தை விளங்குகின்றது. வீரகேசரி, உதயன் பத்திரிகைகளில் தொடராக வெளிவந்த நாவல். வெகுசனப் படைப்புகளின் வாசகர்களை நோக்காக எழுதப்பட்டது என்பதை நாவலின் தலைப்பு விளக்குகின்றது. நாவலில் இடையிடையே புகலிடத் தமிழர்களின் வாழ்வும் விமர்சனத்துக்குள்ளாகுகின்றது. காலநிலையின் பாதிப்பு, "சீரியல்"களின் ஆதிக்கம் ஆகியவை பற்றிய விமர்சனக் குறிப்புகள் வருகின்றன.

குரு அரவிந்தனின் எழுத்து நடை வெகுசன ஊடகங்களுக்கேற்ற வகையில், சாதாரண பேச்சு வழக்கினைத் தவிர்த்திருக்கும். இந்நாவலிலும் அவ்விதமான நடையே காணப்படுகின்றது. வெளிநாட்டில் வேறு பெண்களுடன் தொடர்புள்ள ஒருவனுக்கு ஊரில் திடீர் திருமணம் நடைபெறுகிறது. மீண்டும் கனடா திரும்பும் அவனுக்கு அவனது மனைவி கர்ப்பமாயிருப்பது சந்தேகத்தினை எழுப்புகிறது. ஓரிரு நாட்களே மனைவியுடன் கழித்தவன். பாதுகாப்புடன் உறவு கொண்டவன். கனடா வரும் மனைவியுடன் அவனால் மகிழ்ச்சியாக வாழ முடியவில்லை. இச்சந்தேக வித்து எவ்விதம் தீர்கின்றது என்பதை விபரிக்கும் நாவல் இன்னுமொரு பிரச்சினையையும் ஆராய்கிறது. நான்காம் தலைமுறையைச் சேர்ந்த, ஒன்று விட்ட சகோதர உறவு கொண்ட இருவருக்குமிடையில் நடைபெறும் திருமணம் பற்றியது. எமது கலாச்சாரத்தில் மச்சான் , மச்சாளைத் திருமணம் செய்வது வழக்கம். தமிழகத்தில் மாமா, மச்சான், மச்சாளுக்கிடையில் திருமணம் செய்வது வழக்கம். ஆனால் ஒன்று விட்ட சகோதர உறவு கொண்டவர்களுக்கிடையில் திருமணம் செய்வது வழக்கமில்லை. ஆனால் லெபனான் போன்ற நாடுகளில் இது போன்ற திருமணங்கள் நடைபெறுவது வழக்கம். அப்பிரச்சினையயும் நாவல் கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

வ.ந.கிரிதரனின் "அருச்சுனனின் தேடலும், அகலிகையின் காதலும்" புகலிடத்தில் சூழலினால் பிரிந்த தம்பதியினரின் உளவியற் போராட்டம் பற்றியும், ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தில் சகோதரப் படுகொலைகள், உட்படுகொலைகள், சமூக விரோதிகளென்ற பெயரில் நிகழ்த்தப்பட்ட கொலைகளைக் கேள்விக் குள்ளாக்குகின்றது. "வன்னி மண்" ஆசிரியனின் பால்ய காலத்து அனுபவங்களினூடு, எவ்விதம் அமைதி தவழ்ந்த அம் மண் படிப்படியாக மோதல்கள் நிறைந்த மண்ணாக மாறியதென்பதை விபரிக்கும். போராட்டச் சூழல் எவ்விதம் ஒரு காலத்தில் அருகருகே நட்புடன் வாழ்ந்த சிங்கள், தமிழ்க் குடும்பங்களுக்கிடையிலான உறவு சீர்குலைகின்றதென்பதை விபரிக்கும் நாவல் "வன்னி மண்". "மண்ணின் குரல்" 1983களில் கனல் விட்டெரிந்த தமிழ் மக்களின் ஆயுதமயப்பட்ட விடுதலைப் போராட்டத்தினை நியாயப் படுத்தும் சிறு நாவல். "கணங்களும், குணங்களும்" நன்மை, தீமைகளுக்கிடையிலான மானுடப் போராட்டத்தை ஆராயும். "அமெரிக்கா" தடுப்பு முகாம் வாழ்க்கையையும், "குடிவரவாளன்" நாவல் சட்ட விரோதக் குடிமகனாக நியூயார்க் மாநகரில் அலையும் ஈழத்துத் தமிழ் அகதி ஒருவனின் தப்பிப் பிழைத்தலுக்கான வாழ்வினை வெளிப்படுத்தும்.

மைக்கலின் "ஏழாவது சொர்க்கம்" நாவலும் புகலிட அனுபவங்களை விபரிக்கும் முக்கியமான நாவல்களிலொன்று.

டானியல் ஜீவா "தோணி" என்றொரு நாவலைத் தொடராக "முழக்கம்" பத்திரிகையில் எழுதியுள்ளதாக அறிகின்றேன். அந்நாவல் என்னிடமில்லாததால் அதுபற்றி மேலதிகமாக எதுவும் கூற முடியவில்லை.

## ஆஸ்திரேலியத் தமிழ் நாவல்கள்

எழுத்தாளர் கே.எஸ்.சுதாகர் ஆஸ்திரேலியத் தமிழ் நாவல்களைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுவார்:

"அவுஸ்திரேலியாவில் எஸ்.பொ, மாத்தளை சோமு, முருகபூபதி, என்.எஸ்.நடேசன், தெ.நித்தியகீர்த்தி, மனோ.ஜெகேந்திரன், கபிலன் வைரமுத்து என்போர் நாவல் எழுதியிருக்கின்றார்கள். எஸ்.பொ எவரும் எழுதத் துணியாத படைப்புகளைத் தந்தவர். இலங்கை அரசியலில் பிரதான பாத்திரம் வகித்த தமிழ் சிங்கள அரசியல் தலைவர்களைப் பின்னிப்படரும் நாவல் மாயினி(2007).

இதில் சில அரசியல்தலைவர்களின் அந்தரங்க வாழ்க்கை அலசப்படுகின்றது. மாத்தளை சோமுவின் பேசப்படும் படைப்புகளாக 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்', 'எல்லை தாண்டா அகதிகள்', 'மூலஸ்தானம்', 'நான்காவது உலகம்' என்பவற்றைச் சொல்லலாம். இவர் நாவலுக்காக இலங்கை சாகித்திய விருது, இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பு விருது என்பவற்றைப் பெற்றுக் கொண்டவர். முருகபூபதியின் நாவல் பறவைகள்(2001). 'என்னதான் பறவைகள் ஆகாயத்தில் வட்டமிட்டுப் பறந்தாலும் ஆகாரத்திற்காக தரைக்கு வந்துதான் ஆகவேண்டும்' என்ற உள்ளார்ந்த அர்த்தத்தைக் கொண்டிருக்கும் நாவல் இது.

என்.எஸ்.நடேசனின் வண்ணாத்திக்குளம்(2003) 80-83 ஆண்டு அரசியல் பின்னணியில், ஒரு தமிழ் இளைஞனுக்கும் ஒரு சிங்களப் பெண்ணுக்குமிடையே நடக்கும் காதலைச் சொல்லும் குறுநாவல். ஆசிரியரின் பல அனுபவங்களைத் தொட்டுச் செல்லும் மேம்போக்கான படைப்பு. உனையே மயல் கொண்டு(2007) / ஈழத்து அரசியலின் இருண்டவாழ்வினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண், மகப்பேறின் பின்னர் பைபோலர்(*bipolar*) நோயினால் பாதிப்படைதல், அவளிற்கும் கணவனுக்கு மிடையே ஏற்படும் உடலின்பம் சார்ந்த பிரச்சினை, புகலிடத்தில் ஏற்படும் நிம்மதியற்ற வாழ்க்கை இவற்றைக் கருப்பொருளாகக் கொண்டது. இதுவரை புலம்பெயர் இலக்கியத்தில் சொல்லப்படாத பல புதிய அனுபவங்களைச் சொன்னாலும் ஆழமற்ற அகலப்பாங்கான படைப்பாகவே உள்ளது.

கபிலன் வைரமுத்துவின் படைப்பு 'உயிர்ச்சொல்' (2011) மருத்துவம் சம்பந்தமான தமிழுக்கு அறிமுகமில்லாத இன்னொரு கதைக்கரு. இயற்கையாகக் குழந்தை பிறக்க சாத்தியமில்லாத தம்பதிகள் *fertility treatment* மூலம் கருத்தரிக்கின்றார்கள். குழந்தை பிறக்கும்போது தாய் *post natal depression* ஆல் பாதிப்படைகின்றார். குடும்பத்தில் நிகழும் குழப்பத்திற்கு இணையாக தமிழகத்து அரசியல் குழப்பத்தையும் இணைத்து நாவல் செல்கின்றது.

மறைந்த எழுத்தாளர் தெ.நித்தியகீர்த்தியின் தொப்புள்கொடி உறவு - பிறந்த நாட்டினைவிட்டு தொலை தூரம் கடந்து வந்த பின்னும், தாய் நாட்டுடனான தொப்புள் கொடி உறவு விடவே இயலாத உறவாக தொடர்ந்து வரும் என்பதைச் சொல்கிறது. எது புனைவு? எது நிஜம்? என்று தெரியாத வகையில் நிஜமனிதர்களின் உண்மைச் சம்பவங்கள் கொண்ட நாவல் இது.

மற்றும் மனோ ஜெகேந்திரன் எழுதிய நல்லதோர் வீணை செய்தே(2000), பாமினி செல்லத்துரை எழுதிய 'சிதறிய சித்தார்த்தன்' *North, South & Death (2000)* என்ற நாவல்களும் அவுஸ்திரேலியாவில் வந்துள்ளன. ஆங்கில வாசகர்களிடையே பரவலாகப் பேசப்படும் நிரோமினி டி சொய்சாவின் *Tamil Tigress (2001)* ஆங்கில நாவல்—நாவல் மணம் பட்டும்படாமலும் வீசுகின்ற ஞாபகப் பதிவுகள்—பதினேழு வயதில் யாழ் சுண்டிக்குழி மகளிர் கல்லூரியிலிருந்து தலைமறைவாகி விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்து, இரு ஆண்டுகளைக்கூடப் பூர்த்தி செய்யாமல் வீடு திரும்பும் மேட்டுக்குடி கத்தோலிக்க போராளியின் ஆக்கமாகும்—யதார்த்த நாவல் என்று சொல்வாருமுண்டு. ஒய்வுக்குத் தூக்கிப் போடாமல் வாசிப்பதற்குப் பொருத்தமான முதல் ஐம்பது நூல்களில் ஒன்றாக அவுஸ்திரேலியாவில் தெரிவுபெற்ற ஆக்கம். 'நல்லதையும் கெட்டதையும் பேசுகின்றது' என்று வி.சூரியநாராயணன் சொல்கின்றார். இங்கிலாந்து அமெரிக்க நாடுகளில் 2012இல் மீள் பதிப்பாக வெளிவந்துள்ள ஆக்கத்தின் பிரகாசமான வரலாற்றுத் தவறுகள் அதன் உன்னத உயிரோட்டத்தைப் பாதிக்கின்றன."

அண்மையில் வெளியான நடேசனின் "அசோகனின் வைத்தியசாலை"யும் முக்கியமான நாவல்களிலொன்று. மிருக வைத்தியராகப் பணியாற்றும் தனது அனுபவத்தின டிப்படையில் புகலிடப் பிரச்சினைகளையும் அணுகும் நாவல். பரவலாக வரவேற்பைப் பெற்ற நாவல்.

எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன் "அசோகனின் வைத்தியசாலை" பற்றிப் பினவருமாறு கூறுவார்:

"நடேசன் முன்பே" வண்ணாத்தி குளம் " நாவல், " வாழும் சுவடுகள் " போன்ற நூல்களின் மூலம் அறிமுகமானவர். " வண்ணாத்தி குளம்" நாவலில் இலங்கையச் சார்ந்த ஒரு கிராமத்தை முன் வைத்து அவர்கள் எவ்வித இனதுவேசமும் இல்லாமல் வாழ்ந்து வருவதையும், அதிலிருந்து ஒரு பெண் விடுதலை இயக்கத்திற்கானவளாக வெளிக்கிளம்புவதையும் காட்டியது. காதல் பிரச்சினைகள், அரசியல் காரணங்களை முன் வைத்து கிராமநிகழ்வுகளூடே இலங்கை மக்களின் வாழ்வியலை சித்தரித்தது. 1980-1983 என்ற காலகட்டத்தைக் கொண்டிருந்தது." வாழும் சுவடுகள் " என்ற அவரின் தொகுப்பில் மனிதர்கள், மிருகங்கள் பற்றிய அனுபவ உலகில் விபரங்களும் உறவுகளும் சித்தரிக்கப்பட்டிருந்தது. "வைத்யசாலை " என்ற இந்த நாவலை அதன் தொடர்ச்சியாக ஒரு வகையில் காணலாம். தமிழ்சூழலில் மிருகங்கள் பற்றியப் பதிவுகள் குறைவே. விலங்குகள் மருத்துவம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டிருந்த ஜெயந்தன் தன் படைப்பில் சிறிய அளவில் தன் மருத்துவமனை அனுபவங்களை பதிவு செய்திருக்கிறார். பெரும்பாலும் வீட்டுக் கால்நடைகளை மருத்துவத்திற்கு கொண்டு வருகிறவர்களின் மன இயல்புகள், சமுகம் சார்ந்த் பிரச்சினைகளின் அலசலாய் அவை அமைந்திருக்கின்றன. அசோகன் இந்த நாவலில் ஆஸ்திரேலியாவில் பிழைக்கப்போன சூழலில் அங்கு மிருக வைத்திய சாலையில் பணிபுரிந்த அனுபவங்களை சுவாரஸ்யமான நாவலாக்கியிருக்கிறார்"

## இங்கிலாந்துத் தமிழ் நாவல்கள்

விமல் குழந்தைவேலின் "வெள்ளாவி" மற்றும் "கசகறணம்" ஆகியவை முக்கியமான நாவல்கள்.

வெள்ளாவி சலவைத் தொழிலாளர்கள் பற்றியும், கசகறணம் தமிழ் முஸ்லீம் மக்களின் வாழ்வை எவ்விதம் ஆயுதமயப் பட்ட ஈழத்து அரசியற் சூழல் சிதைத்தது என்பதை விபரிக்கும். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், வவனியூர் இரா.உதயணன், ஆகியோரின் நாவல்களும் ஆராயப்பட வேண்டியவை.

## டென்மார்க் நாவல்கள்

வி.ஜீவகுமாரனின் குறுநாவலான "கோமதி"யில் முன்னாள் இயக்கப் போராளியான "கோமதி" திருமணமாகி டென்மார்க் வருகின்றாள். அவளது வாழ்வு பாலியல் வேட்கை மிகுந்த அவளது கணவனால் எவ்விதம் சிதைக்கப்படுகிறது என்பதை நாவல் விபரிக்கிறது. அவளது விருப்பத்தையும் மீறி அவள் மீது அவளது கணவனால் இழைக்கப்படும் பாலியல் வன்முறையினை, புகலிடத்தில் கடனில் வாழும் மக்களின் வாழ்க்கையை,. அவளை ஏமாற்றி, பிறக்க இருக்கும் இரட்டைக் குழந்தை களையும் கருச்சிதைவுக்குள்ளாக்க அவளது கையெழுத்தைப் பெறும் கணவனது செய்கையை, அதனால் உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகும் கோமதியின் வாழ்கையை நாவல் விரிவாகவே கூறும்.

### புகலிடத் தமிழ் நாவல்கள் பற்றி மேலும்...

புகலிடம் நாடிப் புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் பலர், எஸ்.பொ., அகஸ்தியர், செ.கணேசலிங்கன் போன்ற பலர், ஏற்கனவே வெளியான நாவல்கள் பலவற்றை மீள்பிரசுரம் செய்திருக்கின்றார்கள். இவையும் புகலிடம் நாடிய எழுத்தாளர்களின் படைப்புகள் என்ற வகையில் குறிப்பிட வேண்டியவை. அத்துடன் புகலிடம் நாடிய எழுத்தாளர்கள் பலரால் பல நாவல்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன (என்.கே.மகாலிங்கம் சிதைவுகள் என்ற பெயரில் புகழ்பெற்ற நைஜீரிய நாவலான சினுவா அசுபேயின் *Things Fall Apart* என்னும் நாவலினை மொழி பெயர்த்துள்ளார்.) இவையும் புகலிடப் படைப்பாளிகளின்ன் மொழிபெயர்ப்பு நாவல்கள் என்னும் வகையில் குறிப்பிட வேண்டியவை.

### புகலிட நாவல்கள் கூறும் பொருள்

புகலிட நாவல்கள் கூறும் பொருளாகப் பல்வேறு விடயங்கள் உள்ளன. புகலிடத்தில் நிலவும் சவால்களை எதிர்கொள்ளும் வாழ்க்கையை, இழந்த மண் மீதான கழிவிரக்கத்தை, அங்கு நிலவும் விடுதலைப் போராட்டத்தை, பிறந்த மண்ணின் சமூக, அரசியற் பிரச்சினைகளை (சாதி, சீதனம் மற்றும் தேசிய இனப்பிரச்சினை போன்ற), ஆயுத மயப்பட்ட விடுதலைப் போராட்டத்தால் சமூகரீதியில், அரசியல்ரீதியில் ஏற்பட்ட மாற்றங்களை, புகலிடம் நாடிப் பல்வேறு வழிகளில் செல்லும் அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை, என்று பல்வேறு விடயங்களைப் பற்றிப் புகலிட நாவல்கள் பேசுகின்றன. இவை பற்றி இன்னும் விரிவாக, அதிக அளவில் புகலிடம் படைப்புகள் சேகரிக்கப் பட்டு, ஆராயப்பட வேண்டும். இக்கட்டுரை இந்த விடயத்தில் ஓர் ஆரம்பக் கட்டுரையே.


**உசாத்துணைக் கட்டுரைகள்:**


1. ஆதவனின் "மண் மணம்" பற்றி.... - சு.குணேஸ்வரன்
2. புலம்பெயர் இலக்கியம் - ஓர் அறிமுகம் - சு. குணேஸ்வரன்
3. புலம் பெயர்ந் தோர் நாவல்கள் : தமிழர் வாழ்நிலையை முன் வைத்து - ந.முருகேச பாண்டியன்
4. எண்பதுகளில் புகலிடப் புனைகதைகள் -பார்த்திபனின் படைப்புக்களை மையமாகக் கொண்ட பார்வை- சு. குணேஸ்வரன்
7. தேவகாந்தனின் வினாக்காலம் - யமுனா ராஜேந்திரன்
8. புலம்பெயர்ந்த தமிழ்ப்படைப்பாளிகளின் நாவல்கள்- கே.எஸ்.சுதாகர்
9. தேவகாந்தனின் கனவுச் சிறை -நாவல்: ஓர் விமர்சன அறிமுகம்.... -முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் நா.சுப்பிரமணியன்

**உசாத்துணை நாவல்கள்**

1. கொரில்லா - ஷோபாசக்தி
2. கனவுச்சிறை - தேவகாந்தன்
3. கதாகாலம் - தேவகாந்தன்
4. யுத்தத்தின் முதலாம் அதிகாரம் - தேவகாந்தன்
5. கரையைத் தேடும் கட்டுமரங்கள் - கே.எஸ்.பாலச்சந்திரன்
6. மிதுனம் - குறமகள்
7. அவளது கூரையின் மீது நிலா ஒளிருகிறது - வ.ஐ.ச.ஜெயபாலன்
8. வேலிகள் - கடல்புத்திரன்
9. மண்ணின் குரல் - வ.ந.கிரிதரன்
10. அமெரிக்கா - வ.ந.கிரிதரன்
11. கண்ணின் மணி நீயெனக்கு - அகில்
12. உறங்குமோ காதல் நெஞ்சம் - குரு அரவிந்தன்
13. ஆறா வடு - சயந்தன்
14. ஈழத்தமிழர் புகலிட வாழ்வும் படைப்பும் - தெ.வெற்றிச்செல்வன்
15. சங்கானைச் சண்டியன் - வி.ஜீவகுமாரன்
16. ஒரு அகதி உருவாகும் நேரம் - பொ.கருணாகரமூர்த்தி
17. அசோகனின் வைத்தியசாலை நடேசன்
18. விதி தேவகாந்தன்
19. ஏழாவது சொர்க்கம் - மான்ரியால் மைக்கல் (தொடர் நாவல் பதிவுகள் இணைய இதழில் வெளியானது.)
20. குடிவரவாளன் - வ.ந.கிரிதரன் (தொடர் நாவல் பதிவுகள், திண்ணை ஆகிய இணைய இதழ்களில் வெளியானது.)


•••

சுமதி - கனடா.




குறுந்திரைப்படங்கள் மூலம் சினிமாத் துறைக்குள் 2004இல் நுழைந்த எனக்கு முழு நீளத் திரைப்படம் என்பது ஒரு கனவு போல் நெஞ்சுக் குழிக்குள் உறைந்து கிடந்தது. எனக்கு மட்டுமல்ல குறுந்திரைப்படங்களைத் தொடர்ந்து இயக்கிவரும் பலருக்கும் இக்கனவு இருக்கவே செய்யும்.

# கனேடியத்தமிழ் திரைப்பட அனுபவம்

நான் இயக்கிய திரைப்படம் ஒன்று மண்டபம் நிறைந்த பார்வை யாளர்களோடு காட்சிக்கு வரும்போது ஒரு இயக்குனராக மனம் நிறைந்து போகின்றது. காட்சிப்படுத்தலின் பின்னர் பார்வையாளர்களை அத்திரைப் படம் திருப்திப்படுத்தியிருக்கின்றது எனும் போது எனது உழைப்பு வீண் போகவில்லை என்ற மனநிம்மதி. அந்தக் கணத்தில் திரைப்படத்திற்கு முன்னாலும் பின்னாலும் உழைத்த அனைத்துக் கலைஞர்களையும் மீண்டும் ஒருமுறை நன்றியோடு நினைவு கூர வைக்கின்றது.


"நியோகா" திரைப்படம் கனடாவில் வாழும் நான் சந்தித்த ஒரு பெண்ணை மையமாக வைத்து எழுதிய "உறையும் பனிப்பெண்" என்ற எனது சிறுகதையை மையமாக வைத்து எடுக்கப்பட்டது. "நியோகா" இதுவரை யாழ்ப்பாண சர்வதேச திரைப்படவிழா, லாஸ்ஏன் ஜெல்ஸ் சர்வதேச திரைப்பட விழா, ப்ளோரிடா சர்வதேச திரைப்பட விழா, இந்தோனேசிய திரைப்படவிழா, நோர்வே தமிழ்திரைப்பட விழா ஆகிய திரைப் படவிழாக்களில் தெரிவு செய்யப்பட்டு சில திரைப்படவிழாக் களில் விருதையும் வென்றிருக்கின்றது என்பதனைப் பெருமையோடு கூறிக் கொள்ள முடிகின்றது.

தமிழ்த் திரைப்பட உலகை தென்னிந்திய சினிமா தன்னகத்தே வைத்திருக்கும்போது, ஈழ, புலம்பெயர் தமிழர்கள் இத்துறைக்குள் நுழைந்து தமக்கான ஒரு நிரந்தர இடத்தைப் பிடிப்பது என்பதிலுள்ள சிரமத்தை நான் புரிந்து வைத்திருக்கின்றேன். வியாபார நோக்கமற்று, எமது மொழியில் எமது கதையைத் திரைக்குக் கொண்டு வருவதன் மூலமே ஈழ. புலம்பெயர் தமிழர்கள் தமக்கான ஒரு இடத்தை தமிழ் மக்களிடையே சிறுகச் சிறுகப் பெறமுடியும் என்பதனை "நியோகா" திரைப் படத்திற்கு எமது மக்களிடமி ருந்து கிடைத்த வரவேற்பின் போது

காணக்கூடியதாகவிருந்தது. இரண்டு தடவைகள் திரையரங்கு நிறைந்த காட்சிகள் "மீண்டும் எப்போது திரையிடப் போகின்றீர் கள், நான் தவறவிட்டுவிட்டேன்" என்ற அன்பான வேண்டுகோள்கள் புலம்பெயர் தமிழர்கள் எமது கதைக்காகக் காத்திருக் கின்றார்கள் என்பதனைக் கேட்க நம்பிக்கை யைத் தருகின்றது.


கனடாவில் திரைப்படத்துறை தோன்றி முப்பது வருடங்களாகிவிட்டது. இருப்பினும் இன்னும் முழுநேரக் கலைஞர் களைக் கொண்ட காத்திரமான திரைப்படத் துறை உருவாகவில்லை. இதற்கு முக்கிய காரணம் தென்னிந்திய சினிமாவின் மோகம், ஆதிக்கம் கடல்கடந்தும் எம்மை ஆட்கொள் கின்றது என்பது ஒருபுறமிருந் தாலும், எமது கலைஞர்களின் அலட்சிய மனப்போக்கு அறியாமை என்பதும் இன்னும் சில முக்கிய காரணங்களாகும். அனுபவம் அதிகமற்ற, சிறந்த தொழில்நுட்பவசதிகளைப் பெறமுடி யாத நிதிப்பற்றாக்குறைக்குள் இருக்கும் புலம்பெயர் தமிழர்கள், தென்னிந்திய சினிமாவைப் பிரதியெடுத்தது போன்று தமது படைப்புக்களைத் தருவது பார்வையாளர் களை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க வைத்து தெரிவு செய்யும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றது. "எங்கட படம் எண்டால் இப்பிடித்தான் இருக்கும்" என்ற முத்திரையை அது குத்திவிடுகின்றது. முழுநேரக் கலைஞர்களைக் கொண்ட ஒரு காத்திரமான திரைப்படத் துறையை நாம் புலம்பெயர் மண்ணில் உருவாக்க எது முக்கியம் என்பதனை புலம்பெயர் கலைஞர்கள் சிந்தித்துச் செயல் படின் நிச்சயமாக நாம் ஒரு காத்திரமான சினிமாத் துறையை உருவாக்க முடியும்.

"நியோகா" திரைப்படத்தில் பங்கு பற்றிய அத்தனை கலைஞர்களும், நான் உட்பட திரைப்படத்துறையில் இருக்கும் ஆர்வம் காரணமாக பகுதி நேரமாகவே பங்கெடுத்துக் கொண்டவர்கள். எமது முக்கிய நோக்கம் எமது கதைகள் வெளியே வரவேண்டும் என்ற ஒரு புள்ளியாகவே இருந்தது.



புலம்பெயர் மண்ணில் எமக்கான கதைகள் ஏராளம் பரவிக்கிடக்கின்றன. அக்கதைகள் தமிழ்சினிமா உலகிற்கு மட்டு மல்ல உலக சினிமா உலகிற்கே புதியது. அக்கதைகளைச் சொல்ல வேண்டிய கடமை புலம்பெயர் கலைஞர்களாகிய எமக்கு உள்ளது. போர் எனும் கொடும் புயலில் அகப்பட்டுத் தூக்கி எறியப்பட்டவர்கள் நாங்கள். செம்பாட்டு மண்ணிலிருந்து பிடுங்கியெடுத்து பனிக்குள் எம்மைப் புதைத்திருக்கின்றது யுத்தம். எம்மிடம் தாராளமான கதைகள் புதைந்துபோய்க் கிடக்கும் போது எதற்காக நாம் தென்னிந்திய சினிமாவின் பிரதியையே மீண்டும் மீண்டும் திரைக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றோம்? நாம் எமது கதைகளை உலக சினிமா ரசிகர்களுக்காக வழங்கும் போது மட்டுமே எம்மால் புலம்பெயர் மண்ணில் காத்திரமான திரைப்படத்துறை ஒன்றை உருவாக்க முடியும் என்று நம்புகின்றேன். தற்போது பல இளைஞர்கள் திரைப்படத்துறை சார்ந்து கல்வி கற்கத் தொடங்கவிட்டார்கள். அவர்கள் திரைமொழியை நன்கு அறிந்தவர் களாகவும் இருக்கின்றார்கள். இனிவரும் காலங்களில் புலம்பெயர் தமிழருக்கான ஒரு காத்திரமான தளம் ஒன்று கனடாவில் உருவாகும் என்ற நம்பிக்கையுள்ளது.

"நியோகா" திரைப்படத்தின் பிரதியாளர், இயக்குனர் என்ற வகையில் திரைப்படத்தின் குறைநிறைகளை முற்றிலும் அறிந்தவள் நான். எனது அடுத்த படைப்பு "நியோகா"விலிருந்து ஒருபடி மேலே போகவேண்டும் என்ற அவா என்னை ஆட்கொண்டுவிட்டது. புலம்பெயர் மண்ணில் நல்ல திரைப்படங்கள் வெளிவரவேண்டும் என்ற எமது பலரின் கனவை நிறைவேற்ற நானும் ஒரு இயக்குனராக எனது பங்களிப் பைச் செய்வேன். இளம் கலைஞர்களுடன் இணைந்து கூட்டாகத் திரைப்பட முயற்சி களில் ஈடுபடுவதும் எனது அடுத்த செயல்பாடாக இருக்கும் •••



**சுமதி ரூபன் (கறுப்பி)**

கனடாவில் வாழும் எழுத்தாளர். சினிமா இயக்குநர். நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்து வருகின்றவர். யாழ்ப்பாணம் கோண்டாவிலில் 1961 இல் பிறந்த சுமதி, 1983 இல் ஹொலண்டுக்குப் புலம்பெயர்ந்தார். பிறகு, 1989 இல் அங்கிருந்து கனடாவுக்குக் குடிபெயர்ந்தார். கனடாவில்தான் சுமதியின் கலை, மற்றும் எழுத்து முயற்சிகள் தொடர்ந்தன. இதுவரையில் யாதுமாகி நின்றாள் (சிறுகதைத்தொகுப்பு, 2003, மித்ர வெளியீடு) உறையும் பனிப்பெண்கள் (சிறுகதைத்தொகுப்பு, 2010, கருப்புப்பிரதிகள் வெளியீடு) என்பன வெளியாகியிருக்கின்றன.

கடந்த பத்து ஆண்டுகளில்
2006 - அதன் வருகைக்காய்
2006 - மீறல்களின் கடைசி யாத்திரை
2006 - விளையாட்டு
2007 - தோற்ற மயக்கம்
2007 - அணங்கு
2007 - அடையாளம்
2014 - அச்சி
ஆகிய நாடகங்களை இயக்கியிருக்கிறார்

இனி, உஷ், மனுஷி, பிள்ளை, You2, To be continued என இதுவரையில் ஆறு குறும்படங்களை இயக்கியிருக்கும் சுமதியின் முழு நீளப்படம் நியோகா *Niyoga*. நியோகா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழா உள்ளிட்ட பல சர்வதேச சினிமாக் காட்சிகளில் திரையிடப்பட்டு, விருதினையும் பெற்றது.

# பனிவயல் உழவனின் துயரங்கள்

திருமாவளவனை ஒரு தடவை தான் நேரில் பார்த்துப் பேசியிருக்கிறேன். ஒரு காலைவேளையில், பா. அகிலனுடைய வீட்டில் அந்தச்சந்திப்பு நடந்தது. அகிலனே என்னை அழைத்து மிருந்தார். "திருமாவளவன் வந்திருக்கிறார். உங்களைச் சந்திக்க விரும்புகிறார். எங்கள் வீட்டுக்கு வரமுடியுமா" என்று. புறப்பட்டேன். அங்கே, சிரித்துக் களித்துப் பேசிக்கொண்டிருந்தார் திருமாவளவன். என்னைக் கண்டதும் எழுந்து வந்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, "கருணாகரன்களின் சந்திப்பு" என்றார். ஆத்மார்த்தமான தழுவல். அதே சிரிப்பு. மீண்டும் அவரே சொன்னார், "கருணாகரன்களின் சந்திப்பு மட்டுமல்ல, இது கவிஞர்களின் சந்திப்பும் கூட" என்று. திருமாவளவனுக்கும் எனக்கும் ஒரே பெயர். கருணாகரன். ஆனால், அவர் கருணாகரனாக அறியப் பட்டதை விட திருமாவளன் எனவும் சிவம் என்றுமே அறியப்பட்டிருந்தார். எழுத்துலகில் திருமாவளன் என்றும் ஊர் மற்றும் உறவு வட்டத்திலும் நெருங்கிய நண்பர்களிடத்திலும் சிவம் எனவும்.

நான் சிரித்தபடியே "உண்மை தான், அகிலன், கருணாகரன்கள் சந்திக்கின்ற சந்திப்பு அப்படியே அமையட்டும், கவிஞர்களின் சந்திப்பாக" என்றேன். அதற்கும் ஒரு சிரிப்பு. மலர்ந்த முகம்.

"ஐயா நான், யாழ்ப்பாணம் வந்தும் ஊருக்குப் போக முடியவில்லை. அது தீராத கவலையாக இருக்கு" என்றார் திருமாவளவன். சட்டென அவருடைய முகம் வாடி இறுகியது. அந்தக்கணத்தில் அவருடைய கண்களில் பெருகியிருந்த துயரத்தைக் கண்டேன். திருமாவளவனுடைய ஊர் வருத்தலைவிளான். அது படையினரின் கட்டுப்பாட்டிலிருந்தது. இன்னும் (2016 இலும்) அப்படித்தான். அதனால் அவர் தன்னுடைய ஊருக்கும், வீட்டுக்கும் செல்ல முடியாத துயரத்தில், ஆற்றாமையில், கோபத்திலிருந்தார். அந்த வருத்தமும் கோபமும் குரலிலும் முகத்திலும் பிரதிபலித்தன. இதைப் பற்றி அவர் பின்னாளில் என்னோடு பல தடவைகள் பேசியிருக்கிறார். "அரசியலால் பலியிடப்பட்ட வாழ்க்கை நம்முடையது. அரசியலுக் காக இப்படி வாழ்க்கையைப் பலியிட்டுக் கொண்டேயிருக்கும் சமூகமாக மாறி விட்டோம். புலம்பெயர்ந்து சென்றாலும் எங்களுடைய இந்தக் குணம் தமிழர்களிடம் மாறவில்லை" என்று சொல்லித் துக்கப்படுவார்.

திருமாவளனை ஒரு தடவை தான் நேரில் பார்த்துப் பேசியிருந்தாலும் நாங்கள் மிக நெருங்கிய, நீண்டகால நண்பர்கள். நெருக்கம் என்றால், கவிதைகளின் வழியாக, ஒத்த உணர்வினடிப்படையில், வாழ்க்கை பற்றிய சம நோக்கில், அரசியல் மற்றும் சமூகவியல் சார்ந்த விடயங்களைப் பார்க்கும் விதத்தில், பெயரில், படிப்பைத் தொடர முடியாமல் போனதில், இளமைக்கால வாழ்க்கை அனுபவத்தில், ஆரம்பத்தில் வேலை செய்த இடத்தில், ஊரோடிகளாகத் திரிந்ததில் எனப் பல வகையில் அமைந்தது. அதிலும் இருவருக்குமிடையில் அதிகளவு சமனிலைகளும் ஒற்றுமைகளும் கூடியிருந்தன. குறிப்பாக ஆரம்பத்தில் திருமாவளவன் சிவா. கருணாகரன் என்ற பெயரில் எழுதியிருக்கிறார். நானும் இதே பெயரில் எழுதியிருக்கிறேன். ஆனால், இருவரும் இதைப்பற்றித் தெரிந்து கொள்ளாமலே இப்படி இயங்கியிருக்கிறோம்.

அவர் பிறந்து வளர்ந்த வருத்தலைவிளானைப்போலவே என்னுடைய கிராமமான இயக்கச்சியும். அவருடைய குடும்பச் சூழலை ஒத்ததே என்னுடைய குடும்பச் சூழலும். வறுமையும் குடும்பச்சுமையும் என்றான இளமைக்காலம். இருவரும் குடும்பத்தில் மூத்தபிள்ளைகள். இதனால் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு, இளமையிலேயே வேலைக்குக் கிளம்பி விட்டோம். ஆச்சரியமென்னவென்றால், வெவ்வேறு ஊர்களில் பிறந்திருந்தாலும் இருவரும் காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையில் ஒரு காலப்பகுதியில் வேலை செய்திருக்கிறோம். ஆனால், அப்பொழுது ஆளையாள் அறிந்ததில்லை. திருமாவளவனுக்கு புளொட் இயக்கத்துடன் நெருக்கம். எனக்கு ஈரோசுடன். திருமாவளவன் காதல் திருமணம்

செய்து கொண்டார். நானும் காதல் திருமணத்திலேயே இணைந்தேன். திருமாவளவன் கவிதைகள் எழுதினார். நானும் கவிதைகளை எழுதினேன். என்ன ஒரு வித்தியாசம் என்றால், 1990 களில் திருமாவளவன் ஊரை விட்டு, இலங்கை என்ற இந்த நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். நான் இங்கேயே, இலங்கையிலேயே இருந்து விட்டேன்.

தன்னைச் சூழ்ந்திருக்கிய மரணப்பொறியிலிருந்து தப்புவதற்காகவே, விருப்பமில்லாத நிலையில் தான் நாட்டை விட்டுச் சென்றேன் என அடிக்கடி சொல்வார் திருமா. அதுவொரு தீராத்துக்கம் அவருக்கு. என்றபோதும் திருமாவளவனின் நினைவும் கனவும் ஊரிலேயே இருந்தன. அவருடைய கவிதைகள் இந்த நிலையை நன்றாகப் பிரபலிப்பன. பனித்திணையையும் பனைவெளியையும் நினைவு கொள்ளாத கவிதைகள் குறைவு. பனிப்புலம் (புலம்பெயரிடம்) அவருக்குப் பொருந்தவுமில்லை. பிடிக்கவுமில்லை. இருந்தாலும் வேறு கதியோ விதியோ இல்லாமல் சகித்துக்கொண்டிருந்தார்.

1990 இல் இந்தியாவுக்குப் பயணமாகிய திருமாவளவன் அங்கே சில மாதங்கள் இருந்து விட்டு, மிகக் கஸ்ரப்பட்டே கனடாவுக்குச் சென்றார். அது ஒரு பெரிய போராட்டம். இந்தியாவிலிருந்து கனடாவுக்குப் பயணமாகுவதென்பது கிறிஸ் கம்பத்தில் ஏறும் விளையாட்டு என்று பகடியாச் சொன்னது இன்னும் நினைவிலுண்டு. திருமாவளவனுக்கு முன்னரே அவருடைய சகோதரர்கள் புலம்பெயர்ந்திருந்தனர். அவர்களுடைய உதவியில் திருமாவளவன் எப்படியோ கனடாவில் 1992 இல் காலடி வைத்தார். அதற்குப் பிறகுதான் அவர் முறையாக எழுதத் தொடங்கினார். ஊரிலிருந்தபோது நாடகம், கவிதையாக்கம் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தாலும் அவற்றில் அவரால் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் பேண முடியவில்லை.

**(02)**

புலம்பெயர்ந்த தமிழர்களில் பெரும்பாலானவர்கள் உடலுழைப்பாளிகளே. திருமாவளவனும் அப்படித்தான். ஆனாலும் அவர் அதற்கப்பால் பொதுவெளியை நோக்கித் தன்னை நகர்த்த முற்பட்டார். அதன் விளைவே அவருடைய எழுத்துகளும் நாடக ஈடுபாடுகளும். கவிஞர் சேரனின் தொடர்பும் நட்பும் திருமாவளவனுக்கு மேலும் தூண்டலாகவும் வளமாகவும் இருந்திருக்கிறது. இதற்குப் பிறகு சக்கரவர்த்தி, கருணா போன்றவர்களுடன் நெருக்கமாக, திருமாவளவனின் படைப்புலகம் விரியத் தொடங்கியது. இதைப்பற்றித் திருமாவளவனே குறிப்பிட்டுமிருக்கிறார். கவிதைகளையும் பத்திகளையும் சிறுகதைகளையும் விமர்சனக் கட்டுரைகளையும் எழுதியிருந்தாலும் திருமாவளவனுக்கு அதிக ஈடுபாடிருந்தது கவிதைகளிலேயே. அவர் அறியப்பட்டிருப்பதும் அடையாள மாகியிருப்பதும் கவிதைகளின் வழியாகத்தான். அதிலும் அவருடைய



"முந்நூறு ஆண்டுகள் உழுதோம்
எங்கள் நிலத்தில் அவர்க்கு

இனியும் உழுவோம்
அவர்கள் நிலத்தை அவர்க்கே"
(பனிவயல் உழவு)

என்ற கவிதை வரிகள் அவரை எப்போதும் நினைவூட்டிக்கொண்டிருப்பவை. இந்தக் கவிதை, கவிதைகளுக்கு இன்றிருக்க வேண்டிய பன்முகத்தை எந்தளவுக்குத் தன்னுள் கொண்டிருக்கிறது என்ற விவாதங்கள் எழலாம். ஆனால், நூற்றாண்டுகளாகத் தொடரும் ஒரு நீடித்த அவல நிலையின் துயர்க் குறியீடு இது. மேற்குலக ஆதிக்கத்துள் கீழைத்தேய மனிதர்கள் சிறையிடப்பட்டிருப்பதன் அரசியலையும் அவல வாழ்க்கையும் அதிலிருந்து எழும் துயரத்தையும் துல்லியமாகக் காட்டுகின்றவை. ஆண்டுகள் நூறெனக்கடந்தாலும் எல்லைகளைக் கடந்து, கண்டங்களைக் கடந்து சென்றாலும் பிறருக்காக, அந்நியருக்காக, மேற்கினருக்காக உழுகின்ற கீழையர்களின் அவல நிலை மாறவில்லை என்ற துயரத்தின் அடியாக எழுப்பப்படுகின்ற விழிப்பு இங்கு முக்கியமானது. இதில் இன்னும் பல படிகள் மேலே சென்று அவர் "பனிவயல் உழவை"ப்பற்றிப் பாடியிருக்கிறார். இன்று ஈழத்தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இப்படித்தான் "பனிவயல் உழவர்"களாகியிருக்கின்றனர். இதை இரண்டு வரிகளில் வெளிப்படுத்திக்காட்டியதன் மூலமாக இந்த அவலத்தை வரலாற்றுத்துயராகப் பதிவாக்கிய சாதனையையும் பங்களிப்பையும் செய்திருக்கிறார். கூடவே விழிப்பூட்டியிருப்பதனாலும்.

திருமாளவன் என்றாலே "பனிவயல் உழவன்" என்ற அடையாளம் சட்டென நமக்கு வருகிறது என்றால், அந்தளவுக்குப் பனித்திணையைத் தன்னுடைய கவிதைகளில் மிக நுண்மையாகவும் ஆழமாகவும் கொண்டு வந்திருக்கிறார் என்பதுதான் அதற்குக் காரணம். தமிழ்ப்பண்பாட்டின் அடையாளங்களில் பனித்திணையில்லை. முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை என ஐந்திணைகள் மட்டுமே பதிவாகியிருக்கின்றன. தமிழரின் வாழ்க்கையும் இந்த ஐந்திணைகளோடுதான் பெரும்பாலும் இருந்திருக்கிறது. நீண்ட வரலாற்றுப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை உடைய தமிழர்களுக்கு ஆறாம்திணையான பனித்திணை அறிமுகமாகியது மிகப்பிந்தியே. அந்தப் பனித்திணையை, ஆறாம் திணையை நெஞ்சில் தகித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கை அனுபவங்களின் வழியும் விட்டுப் பிரிந்து வந்த பிறந்த நாட்டின் நினைவுகளின் மூலமும் கனலும் நீறாக்கியிருக்கிறார் திருமாவளன். திருமாவளனின் துயர்ச்சூடு அவருடைய கால்கள் தரித்து நிற்கும் பனிப்புலத்தை உருக்குகின்றது. இப்படி உருகியோடும் துயர்ப்பெருக்கே திருமாவளவனின் கவிதைகள். ஆனால், அந்தப் பெருக்கின் நீர்ப்பரப்பு ஒன்றாகவும் அதன் அடி இன்னொன்றாகவும் உள்ளது. ஒன்று துயரென்றால், மற்றது அதிலிருந்து விடுபடு என்றுணர்த்தும் விழிப்புச் சரளை.

இப்படித்தான் திருமாவளவனின் ஒவ்வொரு கவிதைகளும் மேற்பரப்பில் துயரமாகவும் அடியில் விழிப்பாகவும் உள்ளன. இதுவே அவருடைய கவிதைப்பண்பு. தோன்றுவது நீர்ப்பரப்பாக இருந்தாலும் அதன் அடியில் கற்களும் நிலமும் இருப்பதைப்போன்ற ஒரு இரட்டை நிலையைக் கொண்டிருப்பவை. இதன்மூலமே அவர் தன்னையும் சமனிலைப்படுத்தி, வாசிப்பவர்களிடமும் ஒரு சமனிலையையும் அதனூடே விழிப்பையும் ஏற்படுத்த முனைகிறார்.

இதனை நான் அவருடைய "முதுவேனில் பதிகம்" என்ற கவித்தொகைக்கு எழுதிய பின்னுரையிலும் குறித்திருந்தேன். "திருமாவளவன் கவிதைகளில் ஈடுபடத் தொடங்கிய காலத்திலிருந்து, இந்தத் தொகுதியில் இறுதியாக எழுதிய கவிதை வரை இந்தத் துயர்ப்பொழிவு திருமாவளவனுக்குள் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. பிரிவின் ஆற்றாமையும் வாழ்க்கையின் நெருக்கடிகளும் அலைச்சலும் நிலைகொள்ளாமற் தவிக்கும் கடந்த கால – நிகழ்கால நினைவுகளும் அவருக்குள் கொடிய வாள்களை கணந்தோறும் ஆழப்பாய்ச்சிய வண்ணமே உள்ளன. போருக்கஞ்சிப் புலம்பெயர்ந்த (கனடா) நாட்டுப் பெருநகர இயந்திர இயக்கத்தினுள் தானுமொரு இயந்திரமாக்கப்படும் துயரம் அவரைப் பிழிகிறது. இவைபற்றிய சித்திரங்களை, அனுபவச் செறிவை திருமாவளவன் கவிதைகளாக்கியுள்ளார். இதை இன்னொரு வகையில் சொல்வதென்றால், இந்தக் கவிதைகளே திருமாவளவனின் அகமும் புறமும்." என.


திருமாவளவினுடைய கவிதைகள் பொதுவாகவே இரண்டு நிலையில் இயங்குபவை. ஒன்று மனித அறத்தை வலியுறுத்தும் குரலுக்குரியவை. மற்றது இயற்கையின்மீதான ஆர்வமும் நேசிப்பும் பிடிப்பும். இயற்கையைக் குறித்த கவிதைகளில் அவருக்கும் தேவதேவனுக்குமிடையில் ஒற்றுமைகளிருப்பதைப்பற்றி அவரிடமே சொல்லியிருக்கிறேன். இதை ஒத்த கருத்தை கனடாவுக்குச் சென்றிருந்த வேளை திருமாவளவனைச் சந்தித்திருந்த ஜெயமோகனும் அவரிடம் கூறியிருக்கிறார். ஜெயமோகன் இதை இருநிலைப்பட்ட பொருளில் கூறியிருப்பார் என நம்புகிறேன். ஒன்று, திருமாவளவனைச் சந்தித்த வேளை அவர் ஏறக்குறைய தேவதேவனைப்போல தோற்ற ஒற்றுமையைக் காணக்கூடியதாகத் தாடி வைத்திருந்தார். அது ஒரு காரணமாக இருக்கலாம். தேவதேவனுக்கும் திருமாவளவனுக்குமிடையிலான முகத்தோற்ற ஒற்றுமையைக் குறித்து ஜெயமோகனுக்கு தேவதேவனின் நினைவு எழுந்திருக்கக்கூடும். இரண்டாவது, திருமாவளவனின்

பின்னையை கவிதைகளும் தேவதேவனின் பெரும்பாலான கவிதைகளும் இயற்கையில் மையங்கொண்டிருந்தமையாக இருக்கலாம். மரங்கள், வானம், பறவைகள், புல்வெளி ஏகாந்தம், ஒளி என விரிந்த ஒருலகின் இரட்டைப்பிறவிகள். அதிலும் திருமாவளவனின் இறுதிக்காலம் என்பது இயற்கையோடிருத்தல் அல்லது இயற்கையில் கரைதலா கவே இருந்தது.


இரண்டு பறவைகள்
கூடு முடையும் அழகில் வியந்திருந்தேன்.
ஒன்றின் சிறகை மற்றொன்று கோதி
அளைந்து
பகிரும் காதலில் சாரல்.
கலவும் காலை
அவற்றின் சிருங்காரக் கூச்சலில்
மனசவிழ்ந்து
ஈர நினைவுகள்மேல் ஊர்ந்தது
சிறு மண்புழு.
அடைபடுத்த இணைக்கு துணையாய்
எதிர்க்கிளையில்
விழிவைத்து காத்திருக்கும் வித்தையை
இவைக்கு
யார் சொல்லிக் கொடுத்திருப்பார்
இன்று
இலையுதிர்காலப் பொழுதில்
இரண்டு பறவைகளின் அலகுக்குள்
சிக்குண்டு
இரையாகித் தவிக்கிறது மனசு
பெருகி வழிகிறது
கழிந்துபோன வாழ்வின்மீது
மீளமுடியாப் பெருங்காமம்.

இதொரு வகைமாதிரி.

ஏனோ இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் தன்னுடைய தாடியைப்பற்றிய சுவாரசியமான ஒரு கவிதையையும் எழுதியிருந்தார். திருமாவளவனின் தாடி பலருக்கும் சேரனை, ஜெயபாலனை, விக்கிரமாதித்யனை, தேவதேவனை என அவர்களுடைய சாயலின் நிழலையே விரித்து நினைவூட்டுகிறது எனச் சோர்ந்த குரலில் துக்கித்திருப்பார். தாடியினூடாக எவரும் திருமாவளவனைப் பார்க்கவில்லை. பதிலாக இன்னொருவரின் சாயலைக் கொண்டே தன்னை நோக்குவதை அவர் அங்கதத்துடன் குறிப்பிட்டிருப்பார். இதனுடைய அடியொலி, இந்த ஒப்பீட்டை நிராரிக்கக்கோருவதே. இப்படி எதிலும் தனித்துவத்தையும் தனியான அடையாளத்தையுமே தேடிக்கொண்டிருக்கும் ஒருவராக இருந்த திருமாவளவன், எல்லாவற்றைப்பற்றியும் உரையாடுவதில் மிக ஆர்வமுடை யவராக இருந்தார். கவிஞர்கள் சு.வி, சத்தியபாலன்



மகுடம் ஆசிரியரின் முகப்புத்தகத்தில் திருமாவுக்கு செலுத்திய அஞ்சலிக்கு பதில் இடுகைகள் சில...


76% 7:49 pm
You, Kugathasan Kugan and 56 others

களப்பூரான் தங்கா
மகுடமே! திருமாவுக்கு அஞ்சலிகள் செலுத்த, உன்னுடன் நானும் இணைகின்றேன்.
மரணம் யாருக்காகவும், எதற்காகவும் காத்திருப்பதில்லை.
திருமா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். புலன்கள் பலவற்றை இழந்து ஓரளவே நண்பர்களை மட்டிட்டார்.
அச்சந்தர்ப்பத்திலும், மகுடங்கள் கிடைத்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்தார். அவரால் கதைக்க இயலவில்லை. இருப்பினும், என்கைகளை அணைத்து ஓர் உரசலின் மூலம் நன்றி தெரிவித்தார்.
திருமாவளவன் அவர்கள், மகுடத்தினை கனடா சிறப்பிதழாக ஒன்று செய்து உலக அரங்கில் மகுடத்தை சிறப்பாக்குங்கள் என்று பெருமனதுடன் முன்மொழிந்தவர் இதனை ஆமோதித்து, ஊரிலிருந்து வெளிவரும் தரமான சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு நாம் ஆதரவு கொடுக்கவேண்டும் என்று மகுடம் வாசக நண்பர் அருள்மொழிவர்மன் அவர்கள் வழிமொழிந்தார்.
இடம்பெயர் வாழ்விலும், இலக்கியம் வளர்க்கும் நல்ல உள்ளங்களோடு வாழ்கின்றேன்.
5 Oct 2015 • Unlike • 5 • Reply

Sarvendra Tharmalingam
ஆழ்ந்த இரங்கல்கள்
6 Oct 2015 • Unlike • 1 • Reply

Balan Chandran
ஆழ்ந்த இரங்கல்கள்
6 Oct 2015 • Unlike • 1 • Reply

Hajanthiny Michael Collin
RIP
6 Oct 2015 • Unlike • 1 • Reply

Puthiya Alai Kalai Vaddam
ஆழ்ந்த இரங்கல்கள்
6 Oct 2015 • Unlike • 1 • Reply

Write a comment...

போன்றோரைப்போல, லயிப்போடு உரையாடும் இன்னொரு கவி என்னுடைய அனுபவத்தில் திருமாவளவனே. நானும் அவரும் தொலைபேசி வழியாகவும் இணையத்தளத்தின் மூலமாகவும் நடத்திய உரையாடல்கள் நெகிழ்ச்சிக்குரியவை. கவிதைகளைக்குறித்து, புலம்பெயர் வாழ்க்கையைப்பற்றி, தமிழர்களுடைய போராட்டத்தையும் அதனுடைய வெற்றி தோல்விகளைக் குறித்து, நம் சொந்த வாழ்வின் சுக துக்கங்கள் பற்றி, மாறிவரும் உலக ஒழுங்கைப்பற்றி, தமிழ்ப்பண்பாட்டைக்குறித்து, பிற சமூகத்தினரின் மன அமைப்புகளைப் பற்றி, பெண் ஆளுமைகளின் எழுச்சியைக்குறித்து எனப் பலதைப்பற்றியும் பேசிக் கொள்வோம். இடையிடையே இருவரும் எழுதிக்கொள்ளும் கவிதைகளைக்குறித்தும் உரையாடல்களும் விமர்சனங்களும் சண்டைகளும் நடப்பதுண்டு. அவருடைய கவிதைகளைப் படித்துச் செம்மை சொல்லியிருக்கிறேன். சில கவிதைகளைச் செம்மையாக்கம் செய்துமுள்ளேன். அதைப்போல என்னுடைய கவிதைகளை அவரிடம் காண்பித்து செம்மை யாக்கியிருக்கிறேன். “படுவான்கரைக் குறிப்புகள்” என்ற என்னுடைய நெடுங்கவிதையை எழுதியபோது அவரிடமே முதலில் காண்பித்தேன். அவருடைய அபிப்பிராயங்களை முழுதாக என்னால் அந்தக் கவிதையில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. என்றாலும் அதைப் படிக்கும்தோறும் அதில் திருமாவளவனின் நினைவுகளே மேலெழுந்து வருகின்றன. தயவு தாட்சண்ணியமில்லாமல் பல வரிகளை அகற்றுங்கள். கவிதையை இன்னும் இறுக்கமாக, செறிவாக உருவாக்குங்கள் என்று சொன்னார். அவர் சொன்னதைப் போல என்னால், அவற்றை முழுமையாகச் செய்ய முடிய வில்லை. இப்படி கவிதைகளை மட்டுமல்ல, எழுதுகின்ற எதையும் நான் அவருக்கும் அவர் எனக்குமாக பரஸ்பரம் அனுப்பிக் கொள்வோம். கூடவே அபிப்பிராயங்களைப் பகிர்வதும் விமர்சனங்களோடு செம்மையாக்கம் செய்து கொண்டிருப்பதுமுண்டு. மொழியைக் கட்டிறுக்கமாகப் பயன்படுத்த வேணும் என்ற நோக்குடையவர் திருமாவளவன். அவர் எழுதிய பத்திகள் இதற்கொரு சான்று.

திருமாவளவனுடைய கவிதைகளை அறிந்த அளவுக்கு பலரும் அவர் எழுதிய பிற பதிவுகளை, எழுத்துகளை அறிந்ததில்லை. நினைவுப்பதிவுகளாக அவர் எழுதிய பத்திகள் மிகுந்த கவனத்திற்குரியவை. அலைக்கழிக்கப்பட்ட தலைமுறையைச் சேர்ந்தவர்களின் துயரமும் வாழ்க்கைத் தவிப்பும் அவற்றில் பேசப்பட்டிருக் கின்றன. பறை, சாம்பல் மேட்டிலிருந்து மொட்டவிழ்க்கிறது பூக்கள், போகுமிடமெல்லாம், பொலின்டன், படுகொலை செய்யப்பட்ட சிறு கிராமம், என் படுக்கையறைக்குள் நுழைந்திருக்கிறது மரம், பெயரில் என்ன இருக்கிறது?, கல்லறைத்தோட்டம் எனப் பலவற்றை எழுதியிருக்கிறார். இவற்றை எப்படியாவது ஒரு நூலாக வெளியிட வேண்டும் என்று முயன்று கொண்டிருந்தார். ஆனால், அது சாத்தியமாகவில்லை. இனிமேல்தான் அதை நாம் சாத்திய மாக்க வேணும். இதைப்போல திருமாவளவனின் சகோத ரரான கலைச்செல்வனுடைய எழுத்துகளையும் தொகுத்து வெளியிடும் முயற்சியிலிருந்தார். கலைலச்செல்வனின் நண்பர்களிடமும் இதைக்குறித்து பேசவுள்ளதாகச் சொன்னார். கலைச்செல்வனின் எழுத்துகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படவில்லை என்ற துயரம் திருமாவளனிடம் இருந்தது. கலைச்செல்வனின் இழப்பு திருமாவைப் பெரிதும் பாதித்திருந்தது. கலைச்செல்வனும் தானும் சகோதரர்களாக இருந்தாலும் தாங்கள் நண்பர்களாகவே பெரும்பாலான சந்தர்ப்பங்களிலும் நடந்து கொண்டதாகவும் உரையாடல் களோ முரண்பாடுகளோ அப்படித்தான் இருவருக்குமிடை யில் எப்போதுமிருக்கும் என்றும் சொல்வார் திருமாவளவன். கலைச்செல்வனுடன் எனக்கு நெருக்கம் குறைவு என்பதால் இதனுடைய மறுபக்கத்தை நான் அறிந்திருக்கவில்லை.

திருமாவளவனுடைய துக்கங்களில் தொடர்ந் திருந்தது, தன்னுடைய சொந்த ஊருக்குத் திரும்ப முடியாமல் தன்னுடல் அந்நிய நிலத்தில் வேகப்போகிறது என்பதும் தான் மிகக் கடினமாக உழைத்துக் கட்டியிருந்த வீட்டில் குடியிருக்க முடியாமல் போனதே என்பதும். இதைப்பற்றி அடிக்கடி சொல்லித் துக்கிப்பார். இதைக் குறித்துச் சில கவிதைகளைக் கூட எழுதியிருக்கிறார்.

தவிப்பு
உதிருங்கால் நெருங்கியதும் பதட்டம்மடைகிறேன்
வர்ணங்களை பூசி
மஞ்சல் வெயிலைப் புணர்ந்து
புன்னகைத்து
மகிழ்வாய் இருப்பது போல பாசாங்கு செய்கிறேன்
சிறு காற்றுக்கும் அஞ்சுகிறேன்
உள்ளே குலைநடுக்கம்
மறைக்கிறேன்
அழகிய மலரென மயங்கி
வந்தமர்கிறாய்
சிறு வண்ணத்துபூச்சி ஒன்றாய்
விரட்ட முடியா மனசு
மொழிகளற்ற வார்த்தை
இல்லை.
இப்போ நான் செய்வதென்ன
மகிழ்வதா? உதிர்வதா?

பொதுவாகவே அனுபவங்களையும் தான் காண்பவற்றையும் உள்ளோடித் தேடும் தவிப்பும் இயல்புமே திருமாவளவின் படைப்புலகம். இதனால்தான் அவருடைய எழுத்துகள் அவருடைய அகமும் முகமுமாகவும் அவர் காலத்தின் பதிவாகவும் பிம்பமாகவும் உள்ளோட்டமாகவும் உள்ளன. இவற்றைப் பற்றியெல்லாம் நாம் மேலும் பொது வெளியில்

உரையாட வேணும் என்ற நோக்கிலேயே அவருடன் நேர்காணல் ஒன்றைச் செய்திருந்தேன். மிக நீண்ட அந்த நேர்காணல் வல்லினம் – மலேசிய இணைய இதழில் வெளியாகியிருந்தது. அதிலே பனிவயல் உழவனின் தடங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். தயக்கங்க ளில்லாமல், வெளிப்படையாகவே பலதைப் பற்றியும் பேசியிருந்தார். இடம் வலம் பார்த்து, லாப நட்டக்கணக்குப் பார்த்து படைப்புகளையும் கருத்துகளையும் முன்வைத்துவரும் பெரும் பான்மைத் தமிழ்ச் சூழலில், துணிச்சலோடு, வெளிப்படையாக தன்னுடைய நிலைப்பாட்டைச் சொல்லியவர். ஆக, திருமாவளவனும் விலகிய ஒரு மந்தையே. மேய்ப்பர்களை விரும்பாத மனதின் வழி நடப்பவர்கள் இப்படித்தான் நெளிவு சுழிவுகளுக்கப்பாலான பாதைகளில் நடந்து கொண்டிருப்பர்.


திருமாவளவனுடைய கவிதைகள் இது வரையில் "பனி வயல் உழவு", "இருள் யாழி", அஃதே பகல் அஃதே இரவு", "முதுவேனில் பதிகம்" எனவும் இவற்றின் முழுத்தொகையாக "சிறு புள் மனம்" என மொத்தமாக ஐந்து நுல்களாக வெளிவந்திருக்கின்றன. இதில் "முதுவேனில் பதிகம்" மகிழ் வெளியீடாக வந்திருந்தது. இதற்கொரு அறிமுகத்தை அல்லது வெளியீட்டை யாழ்ப்பாணத்தில் திருமாவளவன் எதிர்பார்த்திருந்தார். குறிப்பாக சில நண்பர்கள் அந்த நிகழ்வில் பங்கேற்பதை அவர் விரும்பினார். இதனால் அந்த நிகழ்வு தள்ளித்தள்ளிப்போய் இறுதியில் நடக்காமலே போனது. இதைப்போல இன்னொரு துயரும் திருமாவளவனுக்கிருந்தது. அவருடைய கவிதை களின் முழுத்தொகையை வெளியிடுவதற்கு சேரனுடைய வேண்டுதலின்படி தொகுத்து காலச்சுவடு பதிப்பகத்திற்கு அனுப்பி விட்டுக் காத்திருந்தார். அந்தக் காலகட்டத்தில்தான் திருமாவளவன் புற்றுநோயின் தாக்கத்திற்குட் பட்டார். நோய் வரவர முற்றிக் கொண்டு வந்தது. திருமாவளவன் அதை எதிர்த்துப் போராடு வதற்காக எவ்வளவோ முயன்றார். அந்த நாட்களில் அவருடைய வார்த்தைகள் மிகக் கனதியானவை. துயரத்தை வென்று விடவேண்டும் என்ற பிடிவாதமான துடிப்புடை யவை. இருந்தாலும் எல்லாவற்றையும் விட மிக வேகமாக ஒரு பிசாசைப்போல நோய் முற்றிப் படர்ந்து கொண்டிருந்தது. அந்த நிலையிலும் அவர் சிறு புள் மனதுக்காகக் காத்திருந்தார். அந்தச்சந்தர்ப்பத்தில் அந்த முழுத்தொகைக்கான தலைப்பைத் தெரிவதில் அவரும் நானுமாக சில நாட்கள் பேசியது இந்தக் கணத்தில் நினைவிலெழுந்து வருகின்றன. அவர் சில தலைப்புகளை எழுதி, அவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து தருமாறு கேட்டிருந்தார்.

இரவின் நீளம், இனி எனது முறை, சிறு புள் மனம், பசித்திரு, காடு தழுவல் இதிலிருந்து ஒருகவிதைத் தொகுப்புக்கு பொருத்தமான பெயர் சொல்லுங்க *(18/06/2015 08:56 Thirumavalavan Kanagasingam)* என. இறுதியில் இருவருமாக இணைந்து "சிறு புள் மனம்" எனத் தேர்ந்தோம். சேரனும் காலச்சுவடும் இணைந்து அவருடைய இறுதி நேரத்துள் அந்தப் புத்தகத்தை அவருடைய கைகளில் சேர்த்திருந்தது மகிழ்ச்சியே. இருந்தும் இன்னும் அந்தத் தொகை நூலைக் குறித்து தமிழ்ப்பரப்பில் அலைகள் எழவில்லை என்பது துயரமே. இப்படித் துக்கம் தரும் விசயங்களை நினைவு கூர்வதென்பது மேலும் துயரத்தையே உண்டாக்கும். துயரமென்ன வென்றால், துக்கம் தரும் விதமாகவே பலவும் நடந்து கொண்டிருக்கின்றன.

நம் காலச் சிலுவையிலறையப்பட்ட கவிஞன் எஸ்போஸின் மரணத்துக்கு அடுத்துத் தாக்கமளித்த மரணம் சு.வி யினுடையது. அதற்கடுத்து திருமாவள வனினுடையது. கவிஞர்களின் மரணம் அல்லது இழப்பென்பது எழுதப்படவிருந்த கவிதைகளின் மரணமே. அல்லது எழுதப் படவிருந்த கவிதைகளின் இழப்பே. சொற்களைக் கலையாக்கும் வித்தை யாளர்களின் மறைவது. இதை உணரும் போதே நமக்குப் பெருந்துக்கத்தின் நுரைகள் மூச்சில் ஏறுவதை உணரமுடிகிறது.



...



**கருணாகரன்**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இயக்கச்சி என்னும் கிராமத்தில் பிறந்தவர். இடதுசாரி இயக்கத்தில் செயற்பட்டுப் பின்னர், 1983 இலிருந்து ஈரோஸ் அமைப்பில் இணைந்து ஈழவிடுதலைப் போராட்டத்தில் செயற்பட்டவர். ஈரோஸ் அமைப்பின் பொதுமை பத்திரிகையின் ஆசிரிய பீடத்திலும் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் பணிப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார். அத்துடன் சுயாதீன ஊடகவியலாளராகவும் செயற்பட்டு வருகிறார். இதுவரையில் ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல் (மகிழ்-1999) ஒரு பயணியின் நிகழ்காலக்குறிப்புகள் (மகிழ்-2003) பலியாடு (வடலி-2009) எதுவுமல்ல எதுவும் (மகிழ்-2010) ஒரு பயணியின் போர்க்காலக்குறிப்புகள் (கருப்புப்பிரதிகள்-2012) நெருப்பின் உதிரம் ( மகிழ்-2014) இரத்தமாகிய இரவும் பகலுமுடைய நாள் (காலச்சுவடு 2015) ஆகிய ஏழு கவிதை நூல்களும் வேட்டைத்தோப்பு (கயல்கவின் 2014) சிறுகதைத் தொகுதியும் இப்படி ஒரு காலம் (கரைச்சி கலாச்சாரப்பேரவை - 2014) கட்டுரைத் தொகுப்பும் வெளியாகியுள்ளன. இவரது கவிதைகள் ஆங்கிலம், சிங்களம், கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் பெயர்ப்புக்குள்ளாகியுள்ளன. *Wanni Mathaka* என்று சிங்களத்தில் ஒரு நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மெலிஞ்சிமுத்தன் - கனடா.

# செயற்கைக்கு



அவளிடமிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. 'நான் சந்திக்க வேணும்' என்று சிணுங்கும் குரலில் அவள்கேட்டாள். 'ம்...... ஏன் என்னச் சந்திக்க வேணுமெண்டு நினைக்கிறாய்?' என்று அவன் கேட்டான். 'இல்ல உன்னக் காண வேணும்போல இருக்கு' என்று கொஞ்சும் குரலில் அவள் சொன்னாள். அவளுடைய சிணுங்கல்,கொஞ்சல் இன்னும் பல விடயங்கள் கலந்த குரல்களை அவன் அவளுடன் பழகி பிரித்தறியும் தன்மை கொண்டிருந் ததால். அவளுடைய அவ்வகை அணுகுமுறை அவனுக்கு அவள்மீதான எந்தவித ஈர்ப்பையும் அத்தருணத்தில் உருவாக்கவில்லை. ஆனாலும் அவன் போனான்.

அவளின் தந்தை இறந்தபின் உறவின் பெயராலும், நட்பின் பெயராலும், வேலை இடங்களி லும் பல ஆண்களை அவள் சந்தித்திருக்கிறாள். ஆண்களின் பெலவீனங்கள் பெண்களின் முன்னிலை யிலேயே அதி துல்லியமாக வெளிப்படுகின்றன எனும் நினைப்பொன்றும் அவளுக்குள் தற்காலிகமாய் இருந்துவருகிறது. இந்த ஆண்களுக்குள் இருந்துதான் 'தந்தைமை' எனும் அழகான உறவுநிலை தோன்றுகிற தென்பது ஒருவகை அதிசயம்தான் என்றும் தனக்குள் அடிக்கடி நினைத்துக்கொள்வாள். ஆண்களின் திமிர்த்தனங்களை சகித்துக்கொள்ளும் மன நிலையில் இப்போது அவள் இல்லை. ஆனாலும் சமூகத்தின் பெரும்பான்மைப் பெண்களின் வாழ்க்கைமுறைக்குள் சாத்தியப்படும் தனக்கு வசதியான விடயங்களை தன் வாழ்க்கைக்குள் பயன்படுத்திவருகிறாள். அவளைப் பொறுத்தவரைக்கும் அவன் 'ஹொட்டலுக்கு' வரவேண்டும். அவ்வளவுதான்.

அன்று அவர்கள் இருவரும் 'ஹொட்டல்' ஒன்றில் திருடர்களைப்போல நுழைந்தார்கள். அவன்

'கறுப்புநிறக் கண்ணாடி' போட்டிருந்தான். 'ஜக்கேற்றின்' தொப்பியால் தலையை மூடியிருந்தான். அவளோ தலையை ஒதுக்குவதற்காக நெற்றிக்குக் கொண்டுபோன கையை அப்படியே வைத்திருப்பதுபோல பாவனை செய்தாள். அவளுடைய இடப்பக்கத்து முகத்தை கை மறைக்க வலப்பக்கம் முடிவந்து முன்னால் விழ அவள் நடந்தாள். யாரும் தமிழ் ஆட்களின் கண்களில் பட்டுவிடக் கூடாது எனும் எண்ணம் அவர்களுக்குள் இருந்தது.

'ஹொட்டலின்' அறைக்குள் போனதும் அவள் கட்டிலில் சாய்ந்து கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தாள். அது சோம்பல் முறிப் பல்ல கவர்ச்சிகாட்டல் என்று அவன் தனக்குள் கணித்துக்கொண்டான். கவர்ச்சி காட்டலில் ஒன்றும்புதியபாணி உருவாகவில்லை யென்றாலும் அவள் கவர்ச்சியாகத்தான் இருக்கிறாள் என்று அவனுக்குள் இன்னொரு பகுதி உசாரானது.

திடீரென அவள் அவனைப்பார்த்து சொன்னாள். 'உன்ர வெறுப்பு எனக்கு துன்பத்த தருகுது. ஏனெண்டால் நான் உன்ன அன்பு செய்கிறன்'.

அவன் அமைதியாக இருந்தான்.

'என்னக் காணவேணுமெண்டு உனக்கு தோணவே இல்லையா? சரி, பிழ எல்லாத்துக்கும் அங்கால அன்பு என்று ஒண்டு இல்லையா?' என்று இழுத்தபடி மௌன மானாள். சிறிதுநேர அமைதி...அவள் அவனு டைய மடியில் போய் அமர்ந்தாள். கோபத்தால் கொதிப்படைந்திருந்த அவனுடைய உடல் காமமாய் மாற்று வடிவம் பெற்றது. அவனு டைய உடற்சூட்டின் தன்மை மாறியது. சூட்டில்தான் எத்தனை வகைகள்! அவள் அவனுடைய காதுக்குள் சொறியடா, சொறியடா, என்ன மன்னிச்சுக்கொள்ளு என்று இரகசிய மாய் சொல்லிக்கொண்டிருந்தாள். அவளுடைய இரகசியத்தில் கொஞ்சம் கீறுப்பட்ட குரலையும் கலந்து பேசினாள். அவனுடைய கண்கள் கலங்கியபோது அவள் முத்தமிட்டாள். கண்ணீரின் ஈரமும், உதட்டின் ஈரமும் அவன் முகத்தில் நிறைந்திருந்தது.

அவன் எழுந்துபோய் சளியைச் சீறிக் கொட்டிவிட்டு வந்து கட்டிலில் குப்புறப் படுத்தான். இப்போது அவனுக்குள் அட நாமதான் தவறாக நடந்துவிட்டோமோ என்று ஒருவகை கேள்வி தன்மீதே எழுந்தது. அவன் கடந்துபோன காலத்தை மீட்டுப் பார்த்தான். எந்தெந்தத் தருணத்தில் தான் எப்படியெல்லாம் நடந்தானோ அவற்றை யெல்லாம் வேகமாய் கணக்குப்போட்டான். 'காமம்' எல்லாவகை எண்ணங் களையும் அவனுக்குள் காய்களைப்போல அரக்கி விளையாடிக் கொண்டிருந்தது. அவன் அருகில்சென்று படுத்து அவனை அணைத்தபடி அவள் போர்வையை மூடினாள். போர்வை என்பதே கலவிக் காகக் கண்டுபிடித்ததுபோல அவர்கள் இருவரும் இயங்கினார்கள்.

எண்ணங்களை ஒருமைப்படுத்தாத அந்தக் கலவி நிகழ்ந்து முடிந்தபின். அவன் தன்னில் தவறில்லை என்றும், இந்த இடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்றும் எண்ணினான். ஆனால் அவளோ புதிர் நிறைந்ததோர் உணர்வு உலகினுள் போய்க்கிடந்தாள். எதையும் அவ்வளவு இலகுவாக கடந்துபோய்விட முடியாது எனும் எண்ணத்தை நிறைத்து வைத்திருந்தது மனம்.

காற்சட்டைப் பையிலிருந்து நூறு டொலரை அவன் எடுத்து அவளுடைய கையில் திணித்து 'சிலவுக்கு காசிருக்காது வச்சுக்கொள்'. என்று கூறிவிட்டு நண்பனின் வீட்டிற்குப் புறப்பட்டான். அவள் சிறிதுநேரம் அந்தக் காசை கையில் வைத்தபடி அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். கண்கள் கலங்கியிருந்தன.

****



**மெலிஞ்சிமுத்தன்**

விஜயநாதன் இயூஜின் மசனெட் என்கிற மெலிஞ்சிமுத்தன் 20.10.1975 இல் யாழ்மாவட்டம் மெலிஞ்சிமுனையில் பிறந்தார். "சிதையும் என்னுள்"(2000) "என் தேசக் கரையோரம்" (2003) "முட்களின் இடுக்கில்" (2005) எனும் கவிதைத் தொகுப்புகளின் மூலம் அறியப்பட்ட இவர் தற்போது புலம்பெயர்ந்து டொறன்டோ கனடாவில் வசித்துவருகிறார். வேறுலகு, பிரண்டையாறு, அத்தாங்கு எனும் நூல்களையும் எழுதியுள்ளார்

அவன் நண்பனின் வீட்டில்தான் தற்காலிகமாக வசித்து வருகிறான். நண்பனும், அவனுடைய காதல் துணைவியும் வசிக்கும் வீட்டில் இவனுக்கும் ஒரு அறை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் இவனை மிக அன்பாக கவனித்துக்கொள்கிறார்கள். அவர்கள் இருவருமாய் இரவிரவாக இருந்து 'காட்ஸ் கூட்டத்தில் சோடிசேர்த்து' விளையாடுவார்கள். இவனையும் தங்களோடு வந்து விளையாடக் கூப்பிடுவார்கள். இவன் பெரும்பாலும் அதைத் தவிர்க்க முயல்வான் ஆனாலும் நண்பன் இவனை தனியே இருக்க விடுவதில்லை. இரவிரவாக இருந்து அவர்களோடு விளையாடிவிட்டு பகலில் பத்துமணிக்குத்தான் எழும்புவான். நண்பன் வேலைக்குச் சென்றபின் நண்பனின் துணைவி பெரும்பாலும் வீட்டில்தான் இருப்பாள். அவள் வீட்டில் இருக்கும் தருணங்களில் தான் வீட்டில் இருக்கக்கூடாதென்று நினைப்பான். நண்பனின் துணைவியின் தொலைபேசியிலிருந்து தாயை ஒரு தேநீர்க்கடைக்கு வரும்படி அழைத்து வீட்டு நிலைமைகளை விசாரிப்பான். தாய் அவனை

தேற்றும் வார்த்தைகளைச் சொல்லுவார். இருவருமே ஒருவரை ஒருவர் திடப்படுத்து வார்கள் பின்னர் பிரிந்து செல்வார்கள்.

இவ்வாறாக நணபனின் வீட்டில் சில வாரங்கள் கடந்து போய் அவனுடைய வழக்கு நாளும் வந்தது.

*****

அவள் தன்னுடைய தமக்கையின் கணவரோடு வந்திருந்தாள். அவன் தன்னுடைய நண்பன் ஒருவனோடு வந்திருந்தான். அந்த நண்பனின் வீட்டுக்கு அவளையும் பல தடவைகள் கூட்டிச் சென்றிருக்கிறான். அவள் அந்த நண்பனை 'அண்ணா' என்றே அழைத்திருக்கிறாள். இன்று ஒருவரை ஒருவர் நிமிர்ந்து பார்க்க முடியாத நிலை. அந்த நண்பன் அவளுக்கு நேரே இருந்தாலும் தலையைத்திருப்பி நீதிமன்றக் கட்டடத்துள் நடந்துசெல்லும் மனிதர்களை அவதானித்துக்கொண்டிருந்தான். அவளுடைய தமக்கையின் கணவரோ இவர்கள் எல்லோரையும் அவதானித்துக்கொண்டிருந்தார். அவளுக்கு 'பெண்கள் யாரையேனும் கூட்டி வந்திருக்கலாம்' என்று தோன்றியது. உருவகிக்கப்பட்ட அறத்தை மனதில் வைத்தபடி அவர்கள் இறுதிக்கட்ட நிறுவுதலிற்காக விசாரித்துக் கொண்டிருந் தார்கள். உணர்வுகள் மீது அல்லாமல் அவ்வுணர்வுகள் பிறப்பித்த செயல்களை வரிசைப்படுத்தினார்கள். செயல்க ளின் இரண்டு வகையான தொகுப்புகளை எல்லோருமே குறித்துக்கொண்டனர். முதலில் அவன்தான் விசாரிக்கப்பட்டான்.

எப்போதிலிருந்து இந்தப்பெண்ணை உங்களுக்குத் தெரியும்? முதலில் இவவின் புகைப்படத்தை என்னுடைய அம்மா எனக்குக் காட்டியிருந்தார். பின்னர் தொலைபேசியில் பேசினோம். எங்கள் திருமணத்திற்காக இலங்கை சென்றிருந்தபோதே இவவை முதன் முதலில் நேரில் கண்டேன். ஒருவாரத்தில் எத்தனை நாட்கள், எவ்வளவு நேரம் பேசுவீர்கள்?

ஒவ்வொரு நாளும், பல மணித்தியாலங்கள் பேசுவோம். திருமணத்தின்போது ஏதேனும் பிரச்சினை நடந்ததா? இல்லை. எப்போது பிரச்சினை தொடங்கியது? திருமணம் முடிந்து நான் கனடா வந்தபின் இவவிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. இவ வேலைசெய்யும் நிறுவனத்தின் முதலாளியிடம் கடனாக பணம் வாங்கியதாகவும், அதனை திருப்பிக்கொடுக்க முடியாமல் இருப்பதாகவும், அந்த முதலாளி தன்னுடன் தகாத முறையில் நடந்துகொள்வதாகவும், அவரின் கடனை தீர்த்துவிட்டால் அந்த நிறுவனத்திலிருந்து விலகிவிடலாம் என்றும் சொல்லி அழுதார். சரி அழ வேண்டாம் நான் அந்தப்பணத்தை அனுப்புகிறேன் என்று சொல்லி. அக்காவின் நகைகளை அடகு வைத்து அனுப்பினேன். பின்னர் இங்கே ஸ்பொன்சர் அலுவல்களெல்லாம் முடிந்தபின்னும் இலங்கையிலிருந்து இவ கனடாவுக்கு வருவதற்கு இவவுக்கு பணம் கடனாகக் கொடுத்தவர்கள் விடமாட்டோமென்று பிரச்சினை பண்ணினார்கள். இது அறிந்து நான் கனடாவில் இருக்கும் இவவின் சகோதரிகளுடன் பேசியபோது அவர்களுக்கோ, இலங்கையிலிருக்கும் இவவின் அம்மாவுக்கோ இவ பல இலட்சம் கடனாளியாய் இருப்பது தெரிந்திருக்கவில்லை எனும் விடயமும் புரிந்தது. நான் மிகவும் மனச்சோர்வடைந்தபோது இவவின் சகோதரிகள் அக்கடன் தொகையை தாங்கள் பொறுப்பேற்பதாகவும், இவ கனடா வரும்போது எதுவித சிக்கலுமின்றி வருவா என்றும் வாக்களித்தனர்.

இவ இங்க வந்ததன் பின்னர் ஒரு புதிய வாழ்க்கையை வாழலாம் என்று நினைத்தேன். ஆனால் இவவின் அக்காமார் தாங்கள் வாக்களித்தவாறு நடந்துகொள்ளவில்லை என்பதை ஒருநாள் அறிந்தேன். நாங்கள் உடுப்புகளை அடுக்கும் அலமாரி லாச்சிக்குள் இவவின் நகைகளைப் பார்த்தபோது அவற்றுக்குள்ளிருந்த தாலியை எடுத்துப்பார்த்தேன் அது பாரம் குறைந்திருந்தது. அதில் கோர்க்கப்பட்டிருந்த காசுகள்கூட கவறிங் போல இருந்தன. எனக்கு ஆத்திரம் வந்தது. இவவிடம் கேட்டேன் ஏன் இப்படி செய்தாய்? என்று. இவ ஏதேதோ காரணங்கள் சொல்லி அழுதா. இன்னமும் அந்தக் கடன்கள் தீர்க்கப்படவில்லையென்றும் சொன்னா. நான் இவவின் அக்காவாக்களுக்கு தொலைபேசியெடுத்து சொன்னேன் என்னை நீங்கள் எல்லோருமாய் சேர்ந்து ஏமாற்றி விட்டீர்கள் என்று. நான் இவவின் அக்காக்களுடன் பேசுவது இவவுக்கு பிடிக்கவில்லை அவர்களுக்குத் தெரியாத இரகசியங்கள் ஏதேனும் மிச்சம் வைத்திருந் தாவோ தெரியவில்லை. என்னிடம் தொலைபேசியை பறிக்க முயன்றபடி நின்றா. நான் அவர்களுடன் பேசிவிட்டு சோபாவில் குந்தியிருக்க ஓர் அறைக்குள் ஓடிச்சென்று தன்னுடைய கைத்தொலைபேசியில் அக்காக்களுடன் எங்கள் வீட்டில் தன்னை வைத்து கொடுமைப்படுத்து வதாகவும், தன்னை வந்து கூட்டிச்செல்லுமாறும் அழுதா. சிறிது நேரத்தில் தன் உடுப்புப்பெட்டிகளையும் தூக்கிக் கொண்டு ரோட்டில் இறங்கி நடந்தா. என்னுடைய அம்மா எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. இவ நடந்துபோக இவவுக்குப்பின்னால் நானும், அம்மாவுமாய் காரில் போனோம். ஒரு கடையின் முன்னால் இவவின் அத்தானின் கார் நின்றது இவவை ஏற்றிக்கொண்டு அத்தான் அவர்களின் வீட்டிற்குப் போனார். நானும் அம்மாவும் இவர்களின் வீட்டின் முன்னால் சென்று கதைக்க வேண்டும் என்று கேட்க இவவின் அத்தான் முடியாது என்று சொல்லி கதவை சாத்திவிட்டுச் சென்றார். நாங்கள் திரும்பி எங்கள் வீட்டிற்கு வந்து சில நிமிடங்களில் பொலிசார் என்னையும்,அம்மாவையும், அக்காவையும் அழைத்துச் சென்று சிறைப்படுத்தினார்கள்.

'சரி நீங்கள் போய் அமரலாம்' என்று வளக்கறிஞர் அவனிடம் சொன்னார். ஆனால் அதற்கிடையில் ஒவ்வொன்றையும் திரும்பத்திரும்பக் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டார். மிகச் சாதாரண மான நிமிடங்களில் எவ்வித திட்டமிடலும் இல்லாமல் நடந்த சம்பவங்களை இப்போது அவன் நினைவுபடுத்தி சொல்ல வேண்டியிருந்தது. உதாரணத்திற்கு அவள் வீதியில் நடந்துபோகும்போது அவளை எவ்வளவு தூர இடைவெளியில், எவ்வளவு வேகத்தில் பின்தொடர்ந்தாய்? என்ற கேள்விக்கு யோசித்து வேகமாய் கணக்குப் போட்டு சொல்ல வேண்டியிருந்தது. வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடங்களையும் பெறுமதியாய் வாழவேண்டும் எனும் எண்ணமும் அவனுக்குள் வந்து மறைந்தது.

அடுத்ததாக அவள் அழைக்கப்பட்டாள். நீதிமன்றத்தின் கூண்டுக்கு வரும்போது மிகுந்த மனச் சோர்வாக இருந்தது. நிறையவே கேள்விகள். புண்ணைத் தோண்டுவதுபோல கேட்டுக்கொண்டே இருக்கப் போகிறார்கள். இது ஒரு அருவெறுப்புத்தான் ஆனாலும் இந்தக் கட்டங்களை கடந்தே செல்லவேண்டியிருக்கிறது என்று ஒரு பெருமூச்சை விட்டுக்கொண்டாள். அதுமட்டுமல்லாமல் அவளுடைய மனச் சோர்வுக்கு இன்னொரு காரணமிருந்தது. அவள் அந்த இரவு வீட்டை விட்டு வெளி யேறும்போது எந்த அத்தான் வாகனத்தில் ஏற்றிப்போனாரோ, அந்த அத்தான்தான் வேலைக்கு விடுப்பு எடுத்து இன்று நீதி மன்றத்திற்கும் கூட்டி வந்திருக் கிறார். இவள் துயரப்படும்போது தேற்றுபவராய் வரும் அத்தான் கைச்சேட்டை விடுபவராகவும் மாறியிருக்கும் தன்மை அவளுடைய மனதை வெகுவாகப் பாதித்திருந்தது. ஆண்கள் எல்லா இடத்திலும் ஆண்கள். அவளை விசாரித்த வழக்கறிஞரும் ஒரு ஆண் அவள் தன் எல்லாவகை உணர்வுகளின் கலப்போடும் வந்து கூண்டில் ஏறி நின்றாள்.



அவளோ தலையை ஒதுக்குவதற்காக நெற்றிக்குக் கொண்டுபோன கையை அப்படியே வைத்திருப்பதுபோல பாவனை செய்தாள். அவளுடைய இடப்பக்கத்து முகத்தை கை மறைக்க வலப்பக்கம் முடிவந்து முன்னால் விழ அவள் நடந்தாள். யாரும் தமிழ் ஆட்களின் கண்களில் பட்டுவிடக் கூடாது எனும் எண்ணம் அவர்களுக்குள் இருந்தது.

இந்த வழக்கை எப்படி அணுகவேண்டும் என்றும், விசாரணையை எப்படி கொண்டு செல்வது என்றும் நீதிபதியிடம் தெளிவானதொரு தன்மை இருந்தது. இப்போது அவளிடம் கேட்கப்பட்ட கேள்விகள் அவள் தன் துணைவனின் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்ற அந்த இரவு பற்றியிருந்தது.

அன்றைக்கிரவு சண்டை எப்படி நடந்தது?

நான் 'வோஸ்ரூமுக்குள்' குளித்துவிட்டு வந்தபோது. இவர் கட்டிலில் இருந்தார். முகம் அதைத்து கோபமாய் இருப்பது தெரிந்தது. நான் வோஸ்ரூமுக்குள் நின்ற நேரம் என் பொருட்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்திருந்தார். கையில் இருந்த தாலியைத் தூக்கி 'இதுதானா நான் கட்டிய தாலி' என்று கேட்டார். 'ஓ.... அதுதான் ஆனால் அது சரியான பாரமாய் இருந்ததால குறைத்துச் செய்தனான்' என்றேன். அதற்குள் பல்லை நறும்பியபடி ஓடிவந்து என் தலைமயிரில் பிடித்தபடி வாயில் அடித்தார், பிறகு சுவரோடு தள்ளிவிட்டார். நான் கீழே விழ காலால் என்னை உளக்கினார். நான் பெரிய சத்தமாய் கத்தியபோதும் இவரின் அம்மா வந்து இவரை பிடிக்கவில்லை நான் வீட்டை விட்டு வெளியே ஓடவும் அவ வந்து கதவை சாத்திப்பிடித்துக்கொண்டு நின்றா. எனக்கு அடித்து களைத்துப்போன இவர் என் அக்காக்களுக்கு தொலைபேசி எடுத்து தூசண வார்த்தைகளால் வசவு வைத்து ஏசினார். நான் எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. அக்காமாரின் குடும்பங்களுக்குள்ளேயும் இவரால் பிரச்சினை. இனியும் இவரோடு இருந்தால் வாழ்க்கை மிகவும் கொடுமையாய் அமைந்துவிடும் என நினைத்ததால் நான் அக்காவுக்கு போன் பண்ணி அத்தானை வரும்படி கூறிவிட்டு என் உடுப்புப்பெட்டிகளையும் தூக்கிக் கொண்டு நடந்தேன். அத்தான் ஒரு கடையின் முன்னால் நின்று என்னை ஏற்றிக்கொண்டு அவர்களின் வீட்டுக்குச் செல்ல இவரும்

தாயுமாய் கதைக்க வேண்டுமென்று வந்தார்கள் அத்தான் இவர்களுடன் கதைக்க விரும்பவில்லை திரும்பிச் சென்றுவிட்டார்கள். பின்னர் அவன் விசாரிக்கப்பட்டான். அன்றிரவு நீங்கள் இவவுக்கு அடித்தீர்களா?

இல்லை. எனக்கு ஆத்திரம் கடுமையாய் வந்தது. ஆனால் அதை விடவும் வேதனை அதிகரித்து கட்டிலிலேயே குந்திவிட்டேன். நான் இவளை இப்போதும் அன்பு செய்கிறேன் என்னால் கை நீட்டி அடிக்க முடியாது.

'டாலி'.......... 'டாலிதான்' உங்கள் பிரச்சினையா? அது எப்படி இருக்கும்? ஒரு வகை சங்கிலிதானே அது? அது ஒரு வகை சங்கிலிதான் ஆனால் அதை செய்வதற்கு பொன்னுருக்குவதிலிருந்து பல பண்பாட்டுச் சடங்குகள் இருக்கின்றன. அதன் நிறுவைகூட ஒற்றையெண்ணில் இருக்கவேண்டும் என்றும் பல நடைமுறைகள் இருக்கின்றன. தாலி என்பது எங்கள் இரண்டு குடும்பங்களினதும் கவுரவம். அது சமூகத்தின் முன்னிலையில் இயற்கையை சாட்சி வைத்து கட்டப்படுகின்றது. எங்கள் பண்பாட்டில் தாலியென்பது முக்கியமான ஒன்று.

சரி. உருவத்தாலும், அர்த்தத்தாலும் பாரமாய் இருக்கும் இந்த டாலியை பெண்ணின் கழுத்தில் மட்டும்தான் போடுவீர்களா?

ஆம். அது கணவனின் அன்பின் சாட்சியும்கூட. இது விசித்திரமாக இருக்கிறது. உங்கள் இருவருக்குள்ளேயும் புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும், பரிமாறல்களும்தான் அன்பை வளர்க்க முடியும். சங்கிலியின் அளவு அல்ல என்றே நான் கருதுகிறேன். சரி நீங்கள் போகலாம்.

000

இந்த வழக்கு இன்னமும் முடியவில்லை இன்னொரு தவணை கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவருமே குறிப்பிடத்தக்க மைல்களுக்கு அப்பால்தான் இருக்க வேண்டும் எனும் சட்டமும், பொலிஸ் கண்காணிப்பும் இப்போது இருக்கின்றது.


அவள் அக்கா வீட்டிலும், அவன் தாயாருடனும் இருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கு கொடுப்பதற்கான பணத்தை மிகவும் கஸ்டப்பட்டு திரட்டுகிறார்கள். வழக் கறிஞர்கள் இந்த வழக்கை எப்படிகொண்டு செல்வதென்று யோசிக்கிறார்கள், இந்த வழக்கின் தீர்ப்பு சொல்லப்பட்ட பின்னரும் தொடர்ந்து வழக்கறிஞர்களோடு இயங்க வேண்டியிருக்கின்றது. வழக்கறிஞர்கள் பிரச்சினைகளை பலூன்களைப்போல ஊதி பெரிதாக்கி வெடிக்க வைப்பது போல பேசுகிறார்கள். சட்டங்களும், அந்தச் சட்டங்களுக்குள் கலக்கும் ஊகங்களும் வாழ்க்கையை அச்சுறுத்துகின்றன. இவர்களைச் சுத்தியிருப்பவர்கள் இவர்களின் வாழ்க்கை என்னவாகப்போகின்றதோ என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் இருவரும் அதே ஹொட்டலில் அதே உணர்வுகளோடு, அதே பாவனைகளோடு இன்று சந்தித்துக் கொண்டனர் என்று நான் சொன்னால் நம்புவீர்களா?

அது மட்டுமல்ல இவர்கள் இருவரினதும் விவாகரத்து தொடர்பான வழக்கில் இவர்களால் வெளிப் படுத்தப்படாத வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றுக்கான எதிரெதிர் சாட்சியங்களும் கைவசம் இருக்கின்றன. இவர்கள் இருவருமே அப்பக்கங்களை கட்டவிழ்க்கவில்லை. இதில் ஏமாந்தவர்கள் இவர்கள் இருவருமா? அல்லது இவர்களை சுத்தியிருந்தவர்களா? என்பது எனக்குத்தெரியாது.

ஆனால் எனக்கு உங்களை ஏமாற்றும் எண்ணம் இல்லை என் அன்பான வாசகர்களே. ●●●

# எறும்புகள்

அடடா என்னவொரு
விந்தை
வானத்தையும்
பார்க்கவில்லை
வானிலை
அறிக்கையும்
பார்க்கவில்லை
மழைவரப்போவது
எப்படித்தெரியும்
எறும்புகளுக்கு -
அவை வீடுகளுக்குள்
ஓடி ஒளிந்து
கொண்டனவே



**எஸ். லிங்கேஸ்வரன் - கனடா**

மீராபாரதி - கனடா.

# புத்தகங்கள் தேடலும் வாசிப்பும்

பாலர் வகுப்பில் படித்த பாலபோதினி இப்பொழுதும் நினைவில் உள்ளது. முன் அட்டையில் மொட்டைக் குழந்தை ஒன்று தோடும் சங்கிலியும் அணிந்தபடி இருப்பார். இதில்தான் முதன் முதலாக தமிழ் சொற்கள் பலவற்றை அறிந்தேன். சின்ன வயதில் முதன் முதலாக ஒரு புத்தக கணகாட்சிக்கு சென்றேன். இதனை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அட்டன் நகரசபை மண்டபத்தில் ஒழுங்கு செய்தார்கள். பெரும்பாலானவை சீனாவில் அச்சடிக்கப்பட்ட அவர்களது நாடு சார்ந்த புத்தகங்கள். சிறுவர் புத்தகங்கள் தொடக்கம் பெரியவர்களுக்கான நூல்கள்வரை இருந்தன. ஆனால் அன்று நூல்கள் எதுவும் வாங்கிய ஞாபகம் இல்லை. அப்பாவும் வாங்கித் தரவில்லை. பள்ளிக் கூடத்திற்குப் பாடப் புத்தகங்கள் கொண்டு போனதாக நினைவில்லை. ஏனெனில் அப்பொழுது இலசவமாக நூல்கள் வழங்கும் திட்டம் வந்திருக்கவில்லை.

1975ம் ஆண்டு அட்டன் மல்லியப்பூ வீட்டிலிருந்தபோது அப்பாவிடம் இரண்டு புத்தக அலுமாரிகள் இருந்தன. இதுவே புத்தகங்களுடனான எனது முதல் நினைவு. இவை அனைத்தும் சீனாவில் அச்சடிக்கப்பட்ட ஒரு வகையான வெள்ளை மற்றும் மஞ்சள் கலந்த நிற அட்டையில் பல விதமான முகங்களுடன் தலைப்புகள் சிகப்பு நிறத்தில் காணப்பட்ட ஆங்கிலப் புத்தகங்கள். எல்லாவற்றிலும் நீண்டதும் நிறைய தாடி வைத்தவர்களும், குறுந் தாடியும் மீசையும், மீசை மட்டும் மற்றும் மீசை தாடி ஒன்றுமில்லாமல் சவரம் செய்யப்பட்ட என பல முகங்கள் இருந்தன. இந்த முகங்கள் மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ என்பதை வளர்ந்த பின்பே அறிந்தேன். இவர்களின் படங்கள் தனித்தனியாகவும் அல்லது இணைந்து வரிசையாகவும் இந்தப் புத்தகங்களின் முன்பக்கத்தில் இருந்தன.

சின்னப் பிள்ளைகளான எங்களுக்கு அந்தப் பெரிய வீட்டில் விளையாடுவதற்கு நிறைய சமான்கள் இருக்கவில்லை. வயறால் பின்னப்பட்ட சிறு கதிரைகள் நான்கு மட்டுமே



இருந்தன. அவற்றைத் தலைகீழாகப் பிரட்டி அதில் ஒருவரை வைத்து தள்ளிக் கொண்டு அதை ஒரு வாகனம் போல நினைத்துக் கொண்டு விளையாடுவோம். அப்பொழுது இந்தப் புத்தகங்களை எடுத்துப் படிப்பது போல் பாவனை செய்வோம். சில நேரத்தில் அதில் எழுதுவோம். விளையாட்டின் ஆர்வம் அதிகரிக்க கடை வைத்து விளையாடுவோம். இந்தப் புத்தகங்களின் தாள்களை பற்றுச் சீட்டுகளாக அல்லது சமான்கள் கொடுப்பதற்காக பக்கங்களைக் கிழித்தும் சுருட்டியும் விளையாடுவோம். ஒரு நாள் நாம் இவ்வாறு விளையாடி விட்டு நித்திரை கொண்டு விட்டோம். அப்பா இரவு வந்தார். இப் புத்தகங்கள் கிறுக்கப்பட்டு கிழிக்கப்பட்டது எப்படியோ அவர் கண்ணில் பட்டுவிட்டது. நித்திரையாக இருந்த என்னை எழுப்பி கால்களைத் தூக்கி நல்ல அடி போட்டார். மூத்தவன் நான் என்பதால் பலிக்கடாவானேன். தங்கைகள் சிறியவர்கள் என்பதால் தப்பித்தார்கள். அந்தப் புத்தகங்களை வீணாக்கியதால் அப்பாவுக்கு அவ்வளவு கோவம் ஏற்பட்டது. ஆனால் அந்தக் கோவத்திற்கு ஏற்ப அந்த நூல்களை அவர் அக்கறையாக வாசித்து ஒரு நாளும் கண்டதில்லை. சிறிது காலத்தில் அப்பாவுக்கு கட்சியில் வேலையில்லாமல் போக வீட்டில் பணக் கஷ்டம் வந்தது. ஆகவே நாளாந்தச் சாப்பாட்டுக்காக இந்தப் புத்தகங்களை பழைய புத்தகங்கள் வாங்கும் கடையில் கொஞ்சம் கொஞ்சமாக விற்றுக் காசாக்கினார். அந்தக் காசில் சில நாள் நாம் பசியாறினோம். இப்படித்தான் அவரது இரண்டாவது நூல் சேகரிப்புகள் வீணாகிப் போனது. முதலாவது நூல் சேகரிப்பு 1970ம் ஆண்டு ஜேவிபி கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்டபோது இல்லாமல் போயிருக்கலாம். மேலும் அவருக்கு என நிரந்தர வீடு இல்லாமையினாலும் நூல்களைத் தொடர்ச்சியாக ஓரிடத்தில் பேணிப் பாதுகாப்பதற்கு இயலாமலிருந்திருக்கலாம். இந்த தகவல்கள் ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆனால் இதற்குப் பின்பு அப்பா புத்தகங்களை வாசித்த(தைக் கண்ட)போதும் ஒருபோதும் மீள சேகரிப்பில் ஈடுபடவில்லை.

ஒரு முறை நாம் கரவெட்டிக்கு சென்றிருந்தோம். அப்பாச்சி அப்பப்பா வீட்டில் பஞ்சாங்கம் முக்கியமான ஒரு புத்தகம். இது மஞ்சள் நிறத்தில் இருக்கும். ஒவ்வொரு மாதமோ அல்லது வருடத்திற்கு ஒரு முறையோ வெளியிடுவார்கள். அப்பப்பா எந்த அலுவல்களை செய்வதாக இருந்தாலும் இதைப் பார்த்து வாசித்துதான் முடிவெடுப்பார். அப்பாச்சியும் எதாவது செய்வதற்கு வெளியே போவதற்கு "பார்த்துச் சொல்லுங்கோ" என அப்பப்பாவிடம் கேட்பார். இந்தப் புத்தகத்தை ஒரு நாள் நான் பார்த்துக் கொண்டிருந்தபோது சிறிது கிழித்து விட்டேன். பின் பயந்து போய் அது இருந்த இடத்தில் வைத்துவிட்டு அதைக் கிழித்ததை மறந்தே போய்விட்டேன். பிறிதொரு நாள் அப்பாச்சி மாமி இருவரும் மாலை நேரம் போல குடிசைகளுக்கு முன்னால் இருக்கின்ற முத்தத்திலிருந்து அரிசி இடித்தும் அரித்தும் கொண்டிருந்தார்கள். நான் அவர்கள் அருகில் உட்காந்து பார்த்துக் கொண்டிருந்தேன். எங்கிருந்தோ வந்த அப்பப்பா என் பின்னால் வந்து பிரப்பந் தடியால் நன்றாக அடி போட்டார். "ஏன் பஞ்சாங்கத்தை கிழிச்சனி" எனக் கேட்டுக் கேட்டு அடித்தார். ஆனால் அப்பப்பா பற்றி வெளியில் கேட்டால் மிகவும் அன்பானவர் என்று சொல்வார்கள். எனக்கு அவர் அடித்ததைப் பார்த்து தடுக்க முடியாமல் மாமியும் அப்பாச்சியும் அழுதார்கள். இந்தப் பஞ்சாங்கத்தில் ஒரு விடயம் உள்ளது. கண்ணை மூடிக் கொண்டு ஒன்றைத் தொட்டுப் பார்த்து அந்த நாள் நமக்கு எப்படி என பார்க்கலாம். இதை நாம் ஒரு விளையாட்டாகச் செய்வோம். அன்று நான் அதைச் செய்து பார்த்திருக்கலாம். தவறவிட்டுவிட்டேன்.

1977ம் ஆண்டு அட்டன் சேர்க்குல ரோட்டிலுள்ள ஒரு வீட்டின் அறையில் வாடகைக்கு குடியிருக்க சென்றோம். இதன் பின்தான் அட்டன் நூலகத்திற்கு ஞாயிற்றுக் கிழமைகளில் செல்லும் பழக்கம் ஏற்பட்டது. அந்த நேரம் எனக்குப் பத்து வயது. எவ்வாறு இந்தப் பழக்கம் ஏற்பட்டது என்று நினைவில்லை. ஆனால் நூலகம் திறப்பதற்கு முன்பே சென்று காவலிருப்பேன். அந்தளவிற்கு ஆர்வம் இருந்தது. அந்த நேரங்களில் சிந்தாமணி பத்திரிகைகளில் வரும் சித்திரக்கதைகளான சிந்துபாத்தின் பயணங்கள் போன்ற கதைகளை ஒவ்வொரு



**மீரா பாரதி**

யாழ்ப்பாணம்
கரவெட்டியைச் சேர்ந்தவர்.
ஈழத்தின் புகழ்பெற்ற
இடதுசாரி அரசியல்
செயற்பட்டாளராகவிருந்து
படுகொலை செய்யப்பட்ட
கரவை கந்தசாமி இவரது
தந்தை. தந்தையின்
அரசியல் செயற்பாடுகள்
காரணமாக அவ்வப்போது
சொந்த மண்ணிலேயே
இடம்பெயர்ந்து வாழ்ந்த
அனுபவம் கொண்டவர்.
கொழும்பு பல்கலைக்கழக
கணிதவியல் பட்டதாரி.
தந்தையினை அடிபொற்றி
அரசியல் செயற்பாட்டிலும்,
சமூக செயற்பாட்டிலும்
தீவிரமாக ஈடுபட்ட இவர்
சரநிகர் காலத்தில் அதன்
ஆசிரியர் குழுவில் சேர்ந்து
இயங்கியவர். சிறந்த
அரங்கவியலாளர்.
பல புகழ்பெற்ற
நாடகங்களில் நடித்தும்
உள்ளார்.
பின்னர் கனடாவுக்கு
புலம்பெயர்ந்த இவர்
"மரணம், இழப்பு, மலர்தல்"
"பிரக்ஞை ஓர் அறிமுகம் -
தனி மனித மாற்றத்திலிருந்து
சமூக மாற்றத்தை நோக்கி"
என்ற இரண்டு மிக
முக்கியமான நூல்களின்
சொந்தக்காரர்.
ஓஷோவின் தத்துவத்தை
அடியாக கொண்ட இவர்
தியானம், தியானப்
பயிற்சி, உள வள
ஆலோசனைகளில்
தீவிரமாக ஈடுபட்டு வருபவர்.
பல நாடுகளுக்கு சுற்றுப்
பயணம் செய்வதை தனது
முக்கிய நோக்காகக்
கொண்ட இவர் அங்குள்ள
பாதிக்கப்பட்ட மக்களுக்கு
உளவள ஆலோசனைகள்
வழங்குவதிலும்
குறிப்பிடத்தக்க பங்காற்றி
வருகிறார்

வாரமும் ஆர்வமாக வாசிப்பேன். இக் கதைகள் அதற்குரிய படங்களுடன் பத்திரிகையின் ஒரு மூலையில் நான்கு சிறிய படங்களுடன் மட்டுமே வரும். இருப்பினும் தொடர்ந்து வாசிப்பதில் ஒரு ஆர்வம் இருந்தது. பின் சிறு கதைகள் உள்ள நூல்கள் சிலவற்றை எடுத்து வாசிப்பேன். மேலும் அம்புலிமாமா, மற்றும் இரத்தினபாலா(?) சிறுவர் சஞ்சிகைகள் என்பவற்றை ஆர்வமாக வாசித்த ஞாபகம் உள்ளது. 1980ம் ஆண்டுவரை இந்தப் பழக்கம் தொடர்ந்தது. இக் காலங்களில் அப்பா அட்டன் நகரில் பேக்கரி ஒன்று வைத்திருந்த சடையன் முதலாளியின் மகனுக்கு ஆங்கிலப்பாடம் சொல்லிக் கொடுத்தார். அவர்களிடமிருந்த ஆங்கிலப் புத்தகம் ஒன்றைக் கொண்டு வந்து என்னை வாசிக்க செய்தது ஞாபகம். அதிகாலையில் எழும்பி அந்தப் புத்தகத்திலுள்ள கதைகளை கத்தி கத்திப் பாடமாக்க வேண்டும். அதில் வாசித்த ஒரு அரசனின் கதை இன்றும் நினைவிலுள்ளது. போரில் தோல்வியுற்ற அரசன் ஒருவன் குகை ஒன்றில் தங்கியிருப்பான். அங்கே சிலந்தி ஒன்று தனது வலையை பின்னுவதற்கு ஆறு தரம் முயற்சிகள் செய்து தோற்றபின் எழாவது தரம் முயற்சி செய்து இறுதியாக வெற்றிகரமாக பின்னி நிறைவு செய்யும். ஏற்கனவே ஆறு முறை முயற்சி செய்து போரில் தோற்ற அரசன் ஒருவன் அதைப் பார்த்த பின் மீண்டும் போர் செய்து வெல்வான். இது கதை. நான் வாழ்க்கையில் எதையும் இத்தனைதரம் முயற்சி செய்ததில்லை.

பிக்கிங் ரிவியுதான் நான் முதன் முதலாகப் பார்த்த பெரியவர்கள் வாசிக்கும் சஞ்சிகை எனலாம். ஒரு வகையான பளபளப்பான வழுவழுப்பான வெள்ளைத் தாளில் பெரும்பாலும் பெரிய நீண்ட கட்டுரைகளைக் கொண்ட சஞ்சிகையாக தபாலில் வரும். இதையும் அப்பா வாசித்துக் கண்டதாக நினைவில்லை. பெரும்பாலான நேரங்களில் நாம் விளையாடத்தான் அதைப் பயன்படுத்தி யிருக்கின்றோம். இதற்காக இப்பொழுது எல்லாம் அப்பா எங்களை அடிப்பதில்லை. வேறு விடயங்களுக்கு நன்றாக அடி வாங்குவேன். வாங்கி அடிகள் பற்றியே ஒரு பதிவு எழுதலாம். அந்த நூல்களின் முக்கியத்துவம் குறைந்த மையும் தனது வறுமையை ஓட்ட அதைப் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டி ஏற்பட்டதும் காரணமாக இருக்கலாம். இக் காலங்களில் அம்மா பக்கத்து வீடுகளில் இரவல் வாங்கி இதயம் பேசுகின்றது என்ற ஒரு சஞ்சிகை வாசிப்பார். அதில் வருகின்ற தொடர் கதையை ஆர்வமாக தொடர் வரிசையிலிருந்த வீட்டுப் பெண்கள் அனைவரும் வாசித்த நினைவுள்ளது.

நூல்களை வாசிக்கும் பழக்கம் 1980ம் ஆண்டு அட்டன் லிபர்ட்டி கட்டிடத்தில் உள்ள அறைக்கு குடியிருக்க சென்ற பின் தொடரவில்லை. அட்டன் ஹைலன்ஸ் கல்லுரியின் வாசலில் நூலகம் எனப் பெரிதாகப் பெயரிட்ட கட்டிடம் ஒன்று இருந்தது. ஆனால் அது எப்பொழுதும் பூட்டியே இருக்கும். நிறைய நூல்களும் அங்கு இருக்கவில்லை. இருந்த நூல்கள் எல்லாம் பெரிய பெரிய புத்தகங்கள். அதை யாரும் வாசித்து ஒரு போதும் நான் கண்டதில்லை. இக் காலங்களில் பின் பெரும்பாலும் வாசித்த புத்தகங்கள் என்றால் அது பாடசாலைப் பாடப் புத்தகங்கள் தான். அவற்றை விருப்பமில்லாமலே வாசித்தேன். நாம் ஆறாம் வகுப்புக்கு வரும் வரை தான் நூல்கள் வாங்க வேண்டிய தேவை இருந்தது. அதன் பின் இலவசப் பாடப் புத்தகங்கள் கிடைத்தன. பத்தாம் வகுப்பு படிக்கும் பொழுது பல நூல்களை இலவசமாக தந்தவர்கள் பாரத சுருக்கம் நூலைத் தரவில்லை. ஒரு வகுப்புக்கு ஒரு நூல் மட்டுமே இருக்கும். ஆசிரியர் வந்து வாசிப்பார். நாம் நித்திரை கொள்வோம். கேள்வி கேட்கும் நேரத்தில் முழிப்போம். இறுதிவரை அந்த நூலை முழுமையாகப் படிக்கவில்லை.

1982ம் ஆண்டு பாடசாலை விடுமுறையை முதன் முறையாக மூன்று மாதங்களுக்குத் தந்தார்கள். அந்தக் காலத்தை வீணாக்க கூடாது என்பதற்காக என்னைக் கரவெட்டிக்கு அனுப்பி அங்குள்ள மாலைநேர வகுப்புகளில் படிப்பித்தார்கள். எனக்கு மதியத்திற்குப் பின் படிப்பதில் ஆர்வமிருக்காது. அந்த வெக்கையில் பேசமால் வெறும் தரையில் அரைக்காட்சட்டையுடன் மேலாடையில்லாமல் நித்திரை கொள்ளவே விருப்பம் வரும். அப்படி ஒரு நாள் படுத்திருந்தபோது வீரகேசரி பிரசுர புத்தகங்கள் சிலவற்றை மாமியின் வீட்டில் கண்டேன். அதை வாசிக்க ஆரம்பித்த பின் மதிய தூக்கம் காணாமல் போய்விட்டது. அப்பொழுதுதான் செங்கையாழியனின் நாவல்கள் ஊடாக வன்னிப் பிரதேசங்கள் பலவற்றையும் அங்குள்ள வாழ்வுமுறைகளையும் தெரிந்து கொண்டேன். பெரும்பாலான நாவல்களை இக் காலங்களில் வாசித்தபோதும் அவற்றின் பெயர்கள் நினைவிலிருக்க வில்லை. இப்பொழுதும் நினைவிலில்லை.

1983ம் ஆண்டு தமிழர்கள் மீதான தாக்குதல்களின் பின் யாழ்ப்பாணத்திற்கு அகதிகளாக சென்றோம். அப்பொழுது சிங்கள இனவாதிகளால் எரிக்கப்பட்ட பின் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருந்த யாழ் பெரிய நூலகத்திற்கு ஓரிரு தடவைகள் சென்றேன். நூல்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டது தான் ஞாபகம் ஆனால் எதையும் வாசித்த ஞாபகம் இல்லை. இதன்பின் கோட்டையைச் சுற்றித் தாக்குதல்கள் ஆரம்பிக்க இந்த நூலகம் மீண்டும் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டது. 1984ம் ஆண்டு அகதிகளுக்கு வழங்கப்பட்ட கோயிற் காணியில் வாழ்வதற்காக நாவற்குழி சென்றோம். அப்பொழுது நாவற்குழி சித்திவினாயகர் வாசிகசாலையின் செயற்குழு உறுப்பினராக நாவற்குழி நண்பர்களின் விருப்பத்தினால் சேர்க்கப்பட்டேன். இந்த வாசிகசாலையில்

பல நூல்கள் இருந்தபோதும் வாசித்த ஞாபகம் இல்லை. பெரும்பாலும் நண்பர்களுடன் அரட்டையடிப்பது, அல்லது படம் பார்ப்பது அல்லது விளையாடுவது எனத் தொடர்ந்து இறுதியாக இயக்க வேலைகள் செய்வது எனக் காலங்கள் சென்றன. நாவற்குழி நண்பர்களில் பிரபா என்ற நண்பர் மட்டுமே வாசிப்பு பழக்கம் உள்ளவன். கவிதை எழுதுவான். எனக்குப் பழக்கமான முதல் கவிஞன் அவன்தான். பாலகுமாரனின் நாவல் களை வாசித்து அது தொடர்பாக ஆர்வ மாகக் கதைப்பான். நாம் அவற்றைக் கேட்பதுடன் சரி. எங்களுக்கு வாசிப்பில் ஆர்வம் ஏற்படவில்லை. கழகத்தில் இணைந்து சில வேலைகள் செய்தபோதும் பெரிதாக வாசித்த ஞாபகம் இல்லை. தமிழமுது விற்போம். அதை வாசித்திருக் கலாம். பல இயக்கங்களின் சஞ்சிகைகளை களவாக ஒழித்து ஒழித்து வாசித்த காலங்கள் இவை. ஆனால் இவை எனக்கு எந்த அறிவை தந்ததாகவும் நினைவிலில்லை.

1985ம் ஆண்டுகளின் பின்பு பெரிய நூலகத்திலிருந்த இருந்த நூல்களைப் பிரித்து யாழின் பல பகுதுகளில் சிறு சிறு நூலகமாக இயக்கினார்கள். நான் நல்லூ ரடியில் இருந்த நூலகத்திற்கு உயர்தரப் பரீட்சைக்காகப் படிக்கச் செல்வேன். 1987ம் ஆண்டு பரீட்சை எடுக்கும்வரை அங்கிருந்து படித்துள்ளேன். அப்பொழுது அங்குள்ள நூலகளைப் பார்ப்பதுடன் சரி. எதையும் வாசித்ததாக ஞாபகம் இல்லை. உயர் தரப் பரீட்சை எடுத்தவுடன், ஈரோசில் (அதன் மாணவர் இயக்கத்தில்) இணைந்தபின்தான் எனது வாசிப்பு பழக்கம் தீவிரமாக ஆரம்பமானது. அவர்களின் ஆவணக் காப்பகத்தை பார்த்து அதிசயித்தேன். வாசிப்பதில் ஏனோ ஆர்வம் ஏற்பட்டது. இக் காலங்களில் எனது வாசிப்பு பழக்கம் செங்குத்தாக உயர்ந்து சென்றது என்றால் பொய்யல்ல. இரவு பகலாக வாசித்தேன்.

பெரும்பாலும் இரசிய நாவல்கள் மற்றும் இந்திய நூல்களை வாசித்தேன். மார்க்சிம் கார்க்கியின் தாய் மற்றும் அவர் எழுதிய வேறு இரு நூல்கள், உண்மை மனிதனின் கதை, ஜமிலா, ...... ராகுல் சங்கிருத்தியாயனின் "வல்காவிலிருந்து கங்கை வரை" மற்றும் ஊர் சுற்றிப்புராணம் காந்தியின் "சத்திய சோதனை" எனப் பல நூல்களை வாசித்தேன். இதே காலங்களில் அரசியல் செயற்பாட்டை சரியான வழியில் முன்னெடுக்க வேண்டும் என்ற அக்கறையில் மார்க்ஸ், லெனின் ஆகியோரின் சில நூல்களையும் வரலாற்றுப் பொருள் முதல் வாதம், இயங்கியல் பொருள்முதல் வாதம் எனப் பல நூல்களை வாசித்து தள்ளினேன். இதிலுள்ள விடயங்களை எந்தளவு உள்வாங்கினேன் என்பது கேள்விக்குறிதான். உள்வாங்கியிருந் தாலும் எந்தளவு அன்று எனக்குப் புரிந் திருக்கும் என்பதும் கேள்விக்குறிதான்.



சிங்கள இனவாதிகளால் எரிக்கப்பட்ட பின் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருந்த யாழ் பெரிய நூலகத்திற்கு ஓரிரு தடவைகள் சென்றேன். நூல்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டது தான் ஞாபகம் ஆனால் எதையும் வாசித்த ஞாபகம் இல்லை. இதன்பின் கோட்டையைச் சுற்றித் தாக்குதல்கள் ஆரம்பிக்க இந்த நூலகம் மீண்டும் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டது.

ஆனால் இக் காலங்களிலையே எனது வாசிப்பு உச்சத்திலிருந்த காலம் எனலாம். எப்பொழுதும் என்னுடன் ஒரு புத்தகம் நண்பராக இருந்த காலங்கள். காந்தியின் சத்திய சோதனை வாசித்து அதனால் அல்லுப்பட்டு மரக்கறி உண்பவராக சில காலம் இருந்தேன்.

1988ம் ஆண்டு பல்கலைக்கழகம் சென்றபின் மாபொல பணம் வந்தது. கையில் காசு கிடைக்க நூல்கள் வாங்கும் ஆர்வம் வந்தது. இப்பொழுது நூல்கள் சேர்க்கின்ற எனது காலம். ஸ்டான்லி வீதியிலுள்ள வசந்தம் புத்தக கடைக்கு ஒவ்வொரு மாதமும் மாகாபொல பணம் கிடைக்கும் பொழுது தவறாமல் சென்றேன். பல நூல்கள் வாங்கி சேர்க்க ஆரம்பிக்கும் பழக்கம் உருவானது. ஒவ்வொன்றாக வாசித்தேன். அப்பொழுதான் இந்தியா விலுள்ள பல மாநிலங்களில் நடைபெறும் பல விடுதலைப் போராட்டங்களையும் அந்த மக்களின் வாழ்கையையும் அறிந்தேன். கவனிக்கப்படாத பல மாநிலங்களில் குறிப்பாக தெலுங்கானா, அசாம் மற்றும் மீசோராம், கிட்டங் போன்ற வட கிழக்கு மாநிலங்களில் வாழ்ந்த மக்களின் கதைகள் பல வெளிவந்தன. ஈழப் போராட்டம் வெற்றியடைந்தபின் இந்த மாநிலங்களில் சென்று போராடுவதாக கனவு கண்ட காலங்கள். கனடாவிலிருந்த நண்பன் மணிவண்ணன் எனது பெயருக்கு தயாகம் சஞ்சிகைக்கு சந்தா கட்டியிருந்தான். ஆகவே இந்த சஞ்சிகையும் மாதம் மாதம் வர அதையும் ஆர்வமாக

வாசிப்பேன். மேலும் இக் காலங்களில் ஒவ்வொரு வியாழனும் காத்திருந்து திசை பத்திரிகையை வாங்கி அன்றிரவு முழுவதும் நித்திரை முழித்து வாசித்துவிட்டு படுப்பது வழமையானது. பத்திரிகை ஏதாவது காரணத்தினால் வராது விட்டால் அன்று எதையோ இழந்ததைப் போன்ற ஒரு உணர்வு மனதில் குடிகொள்ளும். யாழ் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் பரிட்சைக்குப் படிப்பதற்காக போய் இருப்பேன். ஆனால் எனது மனம் பரீட்சைக்குப் படிப்பதற்குப் பதிலாக தமிழ் நாவல்கள் உள்ள பகுதியில் அலையும். அப்படி ஒரு முறை கர்நாடக எழுத்தாளர் ஒருவர் எழுதிய "நான்" என்ற நூலை எடுத்து வாசித்தேன். அந்த நூலினால் கவரப்பட்டு நண்பர்கள் பலருடன் அதைப் பகிர்ந்து வாசிக்க ஊக்குவித்தேன். அந்தளவு உற்சாக மூட்டிய நூல் அது. இதே காலத்தில் தான் உதயன் பத்திரிகையின் வார சஞ்சிகையான சஞ்சீவியில் சிறுகதையொன்றும் திசையில் கட்டுரை ஒன்றும் நான் எழுதி வெளிவந்தது. மேலும் தென்மராட்சி பாடசாலை மாணவர்களின் படைப்புகளை ஒன்றினைத்து புதிய சமுதாயம் என்ற பெயரில் ஒரு ரோனியோ சஞ்சிகையை வெளியிடவும் ஆரம்பித்தேன். இந்த ரோனியோ சஞ்சிகையை அச்சிட்டுத் தந்தவர் இப்பொழுது இலண்டனிலிருக்கின்றவரும் அப்பொழுது யாழ் பல்கலைக்கழத்திற்குப் பின்னால் இருந்தவருமான செல்வராஜா அவர்கள்.

1990ம் ஆண்டு யாழை விட்டு வெளியேற வேண்டிய நிலை. என்னிடமிருந்த உடுப்புகள் இரண்டு மூன்று சோடிகள் தான். ஆனால் அம்மா அப்பாவின் பழம் சொத்தான ரங்குப் பெட்டி ஒன்று அப்பொழுது எனது சொத்தானது. அதில் நான் சேர்த்த பல நூல்கள், பத்திரிகைகள் என நிறைந்து காணப்பட்டது. இதை சுமந்து கொண்டு யாழை விட்டு வெளியேறினேன். ஆனால் வவுனியாவைத் தாண்டமுடியவில்லை. இது ஒரு தனிக் கதை. கண்டி வீதியிலிருந்த ஒரு பாடசாலையில் மூன்று நாட்கள் தங்கி போவதற்கு வழி இல்லை என்றவுடன் பிரதான வீதியைத் தவிர்த்து பூந்தோட்டப் பாதைக்குள்ளால் வவுனியா நகரை அடையலாம் என நடந்து சென்றோம். எனது புத்தக பை பெரும் சுமையாக பாரமாக இருந்தது. மிகவும் கஸ்டப்பட்டு தூக்கிச் சென்றேன். ஆனால் வவுனியா நகருக்குச் செல்ல முடியவில்லை. புத்தகங்களை மீண்டும் தூக்கிக் கொண்டு இருந்த இடத்திற்குப் போக முடியாத நிலையில் அங்கிருந்த ஒரு அரிசி ஆலையில் நூல்களை வைக்க அனுமதி கேட்டேன். பின்பு வந்து எடுப்பதாக கூறினேன். அவர்களும் உடன்பட்டார்கள். மிகக் கவலையுடன் அதை விட்டுவிட்டு மீள நாம் தங்கியிருந்த பாடசாலைக்கு வந்தேன். அந்தப் பிரிவு நீண்ட காலங்கள் என்னை வருத்தியது. புத்தகங்களுடனான முதல் பிரிவு இது. இக் காலங்களில் நான் வாங்கிய புத்தகங்களில் உள்ளே முதல் பக்கத்தில் மேலே கார்ல் மார்க்சின் வசனமான "உனக்கே நீ உண்மையாக இரு" என்ற வசனத்தையும் கீழே ருடோவின் "நான் முதலில் ஒரு மனிதன், இவ்வுலகின் பிரஜை" என்ற வசனத்தையும் எழுதுவேன்.

கொழும்பிற்கு வந்த பின் நாட்கள் சும்மா கழிந்தன. யாரையும் தெரியாது நண்பர்களும் இல்லை. அப்பொழுது பெரிதாக யாழிலிருந்து ஒருவரும் வெளிக்கிட ஆரம்பிக்க வில்லை. வாசிப்பதற்கும் ஒன்றுமில்லை. வவுனியாவில் வைத்துவிட்டு வந்த புத்தகங்களை எடுக்கலாமா என சென்று பார்த்தேன். அந்த இடத்தையே கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் நண்பரும் கவிஞருமான செல்வியை அப் பயணத்தில் கண்டேன். கதைத்தேன். அது தான் அவரைக் கண்ட கடைசி நாள்.


கொழும்பில் இருந்தபோது கிடைக்கும் பணத்தில் நூல்கள் வாங்குவதற்கு அலைந்தேன். உருத்திரா மாவத்தைக்கு அருகில் உள்ள புத்தகக் கடையில் பாடசாலை புத்தகங்களே அதிகம் இருந்தன. விஜித்த யாப்பா மற்றும் குணசேகர புத்தக கடைகளில் சிங்களப் புத்தகங்கள் அதிகமாக இருந்தன. விஜித்த யப்பாவில் ஆங்கிலப் புத்ததகங்கள் இருந்தன. நான் ஆங்கிலப் புத்தகங்கள் வாசிக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கவில்லை. மேலும் அந்த நூல்களை அந்த விலை கொடுத்து வாங்கும் நிலையிலும் நான் இருக்கவில்லை. இந்த நூல்களின் விலைகளை விட அவற்றின் மதிப்பு அதிகமானது என்ற புரிதலும் இருக்கவில்லை. இப்படி அலைந்து திரிந்த ஒரு பொழுதில் பெட்டாவிலுள்ள குறுக்குத் தெரு ஒன்றின் மேல் மாடியில் புத்தகங்களை இறக்குமதி செய்பவர்களைக் கண்டுபிடித்து போய் பார்தேன். அவர்களிடம் பாலகுமாரனின் நாவல்கள் தான் இருந்தன. அவரது தாயுமானவன் மற்றும் வாழ்க்கை சுருக்கம் (அவரது சொந்த வாழ்வைப் பற்றிய பதிவு) வாங்கி வாசித்து அவரின் எழுத்தின் பின்னால் சில காலம் அல்லுப்பட்டேன். இருப்பினும் அவரது நூல்கள் தமிழ் திரைப்படங்களைப் போல் அலுப்புத்தர அதிலிருந்து விடுபட்டேன். குறிப்பாக மனஓசை சஞ்சிகை என நினைக்கின்றேன். அதில் வெளிவந்த பாலகுமாரன் தொடர்பான விரிவான ஆழமான விமர்சனம் அவரைத் தூக்கி எறியச் செய்தது. அந்த விமர்சனத்தை பல நண்பர்களுடன் பகிர்ந்து வாசிக்க தூண்டினேன்.

இப்பொழுது சில புத்தக கடைகளைக் கண்டு பிடித்து மீண்டும் நூல்கள் வாங்க ஆரம்பித்தேன். யூனியன் பிளேசில் இருந்த நியு செஞ்சரி புத்தக நிலையத்தை மூடுவதற்காக தம்மிடமிருந்த நூல்களை மலிவு விலையில் விற்றனர். எதிர்காலத்தில் அரசியல் செய்வதற்கு பங்களிக்குமென பெரும்பாலான மார்க்ஸ் லெனின் நூல் களை வாங்கினேன். இக் காலங்களில் ஆர்வமாக

வாசிப்பதற்கு சரிநிகர் வெளிவந்தது பெரும் உற்சாகமாக இருந்தது. திசை பத்திரிகையின் பின் காத்திருந்து வாங்கி வாசித்த பத்திரிகை இது. மேலும் பெட்டாவிலுள்ள மீன் கடை மாடியில் தேசிய கலை இலக்கிய பேரவையின் சார்பில் சோ. தேவராஜா அவர்களின் வசந்தம் புத்தக நிலையம் மீண்டும் பல நூல்களை வாங்குவதற்கு வழியேற்படுத்தியது. திரைப்படங்கள் தொடர்பாக வெளிவந்த சலனம் போன்ற சஞ்சிகைகளை தொடராக வாங்கினேன். இப்பொழுது எனக்கு என்று ஒரு சிறிய புத்தக அலுமாரி இருந்தது. அதில் வாசிக்காத புத்தகங்களும் நான் வாசிப்பதற்காக காத்திருந்தன. அவற்றை கடைசிவரை வாசிக்கவில்லை. எனது பயணமும் அப்பாவினது பயணத்தைப் போல ஆரம்பமானது.

1994ம் ஆண்டு இறுதியில் அப்பா படு கொலை செய்யப்பட்ட பின் 1996ம் ஆண்டு ஆரம்பத்தில் புலம் பெயர்ந்தோம். அவ்வாறு கனடாவிற்கு வரும் பொழுது எதிர்காலத்தில் இலங்கைக்கு வந்து அரசியல் செய்யும் நோக்கம் இருந்தது. ஆகவே மார்க்ஸ் லெனின் ஆகியோரின நூல்களையும் சரிநிகர் தொகுப்பையும் மட்டும் கொண்டு வந்தேன். இதற்காக நம்மிடமிருந்து இருநூறு டொலர்களையும் அதிக பொதிகள் எனக் கூறியதால் கட்டிவிட்டு வெறுங்கையுடன் கனடா வந்து சேர்ந்தோம். இலக்கிய புத்தகங்கள் அவசியமில்லை எனக் கருதி நண்பர் ஒருவரிடம் கொடுத்துவிட்டேன். அதற்கு என்ன நடந்தது எனத் தெரியாது. 2000ம் ஆண்டு வரை ஓரளவு வாசித்துக் கொண்டு வந்தேன். ஆனால் தற்செயலாக ஓசோவை வாசிக்க ஆரம்பித்த பின் அரசியல் செயற்பாட்டை மட்டும் கைவிடவில்லை. வாசிப்பதையும் முற்றாக கைவிட்டேன். அப்பொழுது ஒரு நண்பரின் தொடர் மாடி வீட்டில் நாம் வாடகைக்கு இருந்தோம். அவரிடமே எனது நூல்கள் அனைத்தையும் விட்டுவிட்டு வந்தேன். புத்தகங்களுடனான எனது இரண்டாவது பிரிவு இது. இம் முறை இந்த நூல்களை விட்டுப் பிரிந்தமைக்காக கவலைப்படவில்லை. ஏனெனில் அதுவரை நான் பெற்ற எல்லாவிதமான அறிவுகளையும் என்னிலிருந்து அகற்றுவதற்கான புதிய வழியில் பயணிக்க ஆரம்பித்தேன். மேலும் வெளிநோக்கி மட்டும் பார்த்து அனுபவப்பட்ட வாழ்க்கையில் என்னைத் திரும்பி அதாவது அகம் நோக்கி பார்க்க வைத்த பார்வை ஓசோவினுடையது. மேலும் அகம் புறம் இரண்டையும் வெளியிலிருந்து மூன்றாவது நபராகவும் பார்க்கவும் தூண்டியது. இது ஒரு புதிய அனுபவம் மட்டுமல்ல பயணமும் கூட. இதற்காக ஓசோவின் நூல்களை மட்டுமே வாங்கி வாசித்தேன். பத்து வருடங் களாக அவையே எனது வழிகாட்டிகளாக இருந்தன. இவற்றின் விளைவாக நான்கு நூல்களை எழுதி வெளியிட்டேன்.

எனது புரிதலில் வாசிப்பு என்பது என்னை வளர்க்கவும் மாற்றவும் பங்களிக்க வேண்டும். இதனுடாக மனிதர்களைப் புரிந்து கொள்ளவும் சமூகத்தை மாற்றவும் வழி காட்ட வேண்டும். இதுவொன்றும் நடைபெறலாமல் இத்தனை நூல்களை வாசித்தேன் என பட்டியல் இடவும் பெருமை பேசவும் அது எனக்குள் ஒரு அதிகாரமாக தொழிற்படுமாயின் வாசிப்பதனால் ஆனா பயன் என்ன என்பது பற்றி தேடிக் கொண்டிருக்கின்றேன். மேலும் படைப்பாளிகளும் அவர்களின் படைப்புகளும் வாழ்வும் தொடர்பான பல கேள்விகள் முன்நிற்கின்றன. இருப்பினும் 2010ம் ஆண்டின் பின்பு மீண்டும் தமிழ் இலக்கிய நூ ல்களை வாங்கி வாசிக்கவும் சேர்க்கவும் ஆரம்பித்துள்ளேன். இப்பொழுது ஒரு வருட பயணம் செய்வதாலும் வாழ்க்கையின் அடுத்த கட்டம் என்னவென்று தெரியாததாலும் ஓசோவின் புத்தகங்களுடன் அனைத்தையும் மீண்டும் மூட்டைகட்டி ஒரு மூலையில் வைக்கின்றேன். என்ன செய்வது என்று தெரியாமல் இந்தப் பரந்த வெளியில் புதிய பார்வைகளையும் அனுபவத்தையும் தேடிப் பயணத்தை தொடர்கின்றேன். •••




## பேராசிரியர் சி. மௌனகுரு சிறப்பிதழ்

எமது மகுடம் பன்னிரண்டாவது இதழ் மட்டக்களப்புக் கூத்துக் கலையின் அடையாளமாக திகழும் பேராசிரியர். சி. மௌனகுரு அவர்களின் பவள விழாவை முன்னிட்டு பேராசிரியர்.சி. மௌனகுரு சிறப்பிதழாக மலரவுள்ளது.

படைப்பாளிகளே உங்கள் படைப்புக்களை பேராசிரியர் தொடர்பான நினைவுப் பதிவுகளாகவும், கட்டுரைகளாகவும், அவரது படைப்புக்கள் தொடர்பான ஆய்வுகளாகவும், கூத்துக் கலையின் மீளுருவாக்கம் தொடர்பான அவரது பங்களிப்பு தொடர்பாகவும் எதிர்வரும் 31.01.2017க்கு முன்னர் எனக்கு அனுப்பி வையுங்கள். கட்டுரைகள் யாவும் எமது மகுடம். E-mail: முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும்

**magudammichael@gmail.com**

இளங்கோ - கனடா.




# வரலாற்றின் தடங்களில் நடத்தல்


காலனியாதிக்கத்தின் காலம் முடிந்துவிட்டதென கூறப்பட்டுக்கொண்டிருந்தாலும், , காலனியாதிக்கத்தின் அடையாளங்கள் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் ஈழம், இந்தியா போன்ற நாடுகளின் கலாசாரங்களில் பிரிக்கமுடியாதவளவுக்கு பின்னிப்பிணைந்துள்ளன. இன்றும், விரிவான அறிவும் தெளிவும் "சுதேச" மொழிகளில் ஒருவருக்கு இருந்தாலும், அவர் ஆங்கிலத்தையும், அதனூடாக ஆங்கில இலக்கியங்களையும்..தத்துவங் களையும் அறிந்துவைத்திருந்தால் மட்டுமே, அவரது கருத்துக்கள் "அறிஞர் குழாத்தில்" கவனத்தில் எடுக்கப்பட்டு விவாதிக்கப்படக்கூடிய சூழல் தமிழ்ச்சமூகத்தில் இருக்கின்றது என்பதை நாமனைவரும் அறிவோம். நமது கல்வித்திட்டம் கூட இன்னும் முறைமையாக மாற்றியமைக்கப்படாமல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் (காலனித்துவ) பாடத்திட்டத்தின்படி அண்மைக்காலம் வரை நீட்டிக்கப்பட்டுக் கொண்டிருப்பது கவனத்தில் கொள்ளக்கூடியது.

"இலங்கையில் வூல்ப்வ்" (*Woolf in Ceylon*) என்ற இந்நூல், வூல்ப்வ் அரச அலுவலராக 1904-1911 காலப்பகுதிகளில் ஈழத்தில் பணியாற்றியபோது எழுதப்பட்ட குறிப்புகளை வைத்து விரிவான சம்பவங்களுடன் மீண்டும் கிறிஸ்டோபர் ஒண்டாச்சியினால் எழுதப்பட்டிருக்கின்றது. வரலாற்றின் ஆவணங்களைத் தேடிக்கண்டுபிடிக்கும் வாய்ப்புக்கள் மிக அரிதாக இருக்கும் இன்றைய நமது

சூழலில் இப்படியான காலனித்துவவாதிகளின் குறிப்புகளினூடாகத்தான் நாம் நமது நாட்டையும் ஊர்களையும் அறிந்துகொள்ள, சார்ந்து நிற்கவேண்டியிருக்கின்றது என்பது அவலமான ஒரு விடயமே. வூல்ப்வ் இலங்கையில் இருந்த காலங்களில் எழுதிய குறிப்புகளையும், இன்னபிற அவரின் படைப்புக்களையும் வாசித்த கிறிஸ்டோபர் ஒண்டாச்சி (எழுத்தாளர் மைக்கல் ஒண்டாச்சியின் சகோதரர்) போர் நடைபெறாத "சமாதான காலம்" எனச்சொல்லப்பட்ட 2003களில் இலங்கைக்குச் சென்று, வூல்ப்வ் பயணித்த இடங்களை வூல்ப்பின் குறிப்புகளை வைத்துக்கொண்டு மீண்டும் பார்ப்பதை/பயணிப்பதை இந்நூலில் எழுதியிருக்கின்றார். வூல்ப்வின் 1900 காலகட்டத்தோடு, இன்றைய ஈழத்தை கிறிஸ்டோபர் ஒண்டாச்சி விரித்து எழுதிச் செல்வது வெகு சுவாரசியமான வாசிப்பை நமக்குத் தருகின்றது. மேலும், கிறிஸ்ரோபர் ஒண்டாச்சி இலங்கையில் பிறந்து வளர்ந்தவர் என்பதால் அவரது அனுபவம் சார்ந்த சொந்தக் குறிப்புகளும் இந்நூலிற்கு இன்னும் வளத்தைச் சேர்க்கின்றது.

வூல்ப்வ் பணியாற்றிய யாழ்ப்பாணம், மன்னார், கண்டி, அம்பாந்தோட்டை போன்ற இடங்களுக்கும் கிறிஸ்டோபர் ஒண்டாச்சி பயணிக்கின்றார். இலங்கைக்கு வரும்போது ஒரு ஏகாதிபத்தியவாதியாக இருக்கின்ற வூல்ப்வ் பின்னாட்களில் எப்படி தன்னைச் சுயவிமர்சனம் செய்துகொண்டு ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக மாறுகின்றார் என்பதை இந்நூல் நமக்குக் காட்டுகின்றது. கொழும்பில் இரண்டு வாரம் கச்சேரியில் வேலை செய்து விட்டு முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்கு வூல்ப்வ் 1904 ஆண்டளவில் போகின்றார். கிட்டத்தட்ட இரண்டரை வருடங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கும் வூல்ப் -அப்போதிருந்த தொடர்ச்சியில்லாத புகையிரதப்பாதையால்- அனுராதபுரத்திலிருந்து ஆனையிறவு வரை மாட்டு வண்டியில் பயணிக்கின்றார் (ஏறத்தாள முப்பத்தாறு மணித்தியாலங்கள் எடுத்த பயணம் அது). யாழ்ப்பாணக் கச்சேரியில் பணியாற்றிய இரண்டரை ஆண்டுகளில் வூல்ப்வ் மிகத்துல்லியமாய் இறுக்கமான யாழ்ப்பாணச் சமூகத்தை கணித்துமிருக்கின்றார். யாழ்ப்பாணத்தவர்களின் சாதித்திமிர், வேலிச்சண்டை உட்பட கல்வித்திமிர் வரை அனைத்தையும் தனது குறிப்புகளில் வூல்ப்வ் பதிவு செய்திருக்கின்றார். அதேபோன்று யாழ்ப்பாணம், இலங்கையில் ஏனைய பகுதிகள் விரைவில் சுவீகரித்துக்கொண்ட ஐரோப்பிய கலாசாரத்தை போன்று இருக்காது, தனித்து நின்ற ஒரு பிரதேசமெனவும் குறிப்பிடுகின்றார். முக்கியமாய் ஐரோப்பியப் பெருநகரங்களுக்கு பொதுவாய் இருக்கும், ஒரு பெருநகரும் அதைச் சுற்றியிருக்கும் புறநகர்ப்பகுதிகள் போன்ற அமைப்பை அமையவிடாது, யாழ்ப்பாணத்தின் எண்ணற்ற பின்னலான தெருக்களும், ஒழுங்கைகளும் தடுத்துவிடுகின்றன என்று தனது அவதானங்களை வூல்ப்வ் முன்வைக்கின்றார்.அதேபோன்று கிடுகுவேலிகளுக்குள் அடங்கிவிடுகின்ற ஒரு கொண்டாட்டமற்ற சமூகம் யாழ்ச்சமூகம் எனவும் எழுதிச் செல்கின்றார். மேலும் பக்கத்து வீட்டுக்காரன் எப்போது வெளியே போவான் என்று காத்துக் கொண்டிருந்து விட்டு, தங்களது கிடுகு வேலியை மற்றவனுக்குச் சொந்தமான நிலத்தில் சில அங்குலங்களாவது நகர்த்திப் பார்க்கின்ற சமூகம் என்றும் உண்மையை உள்ளபடியும் எழுதவும் செய்கின்றார்.


வூல்ப்பிற்கு யாழ்ப்பாணம் ஒரு உவப்பான சூழ்நிலையைத் தரவில்லை. இறுக்கமான சூழலால் மட்டுமின்றி, யாழ்ப்பாணத்து உயர்தர மக்களுடன் வரும் எதிர்ப்புணர்வும், வூல்ப்பால் யாழை, இலங்கையில் தனக்குப் பிடித்தமான ஒரு இடமாக ஏற்றுக்கொள்ள முடியாது செய்கின்றது. இதை கிறிஸ்டோபர் ஒண்டாச்சி இன்னும் தெளிவாக தனது வார்த்தைகளில் முன்வைக்கின்றார். யாழ்ச்சூழலில் இருந்த சாதியை மையமாக வைத்து வூல்ப்வ், "இரண்டு பிரமாக்கள்" (*The Two Brahmans*) என்றொரு கதையை எழுதியிருக்கின்றார். சாதியில் உயர்நிலையில் இருக்கும் செல்லையாவும், சிற்றம்பலமும் எப்படி தமது சாதிகளிலிருந்து ஒதுக்கப்படுகின்றார்கள் என்பதை இக்கதை சொல்கின்றது. செல்லையாவுக்கு மீன்பிடித் தொழிலில் ஆசை வந்து அதை இரகசியமாக ஒரு மீனவரிடம் இருந்து பழகுவது அவர் சார்ந்த சாதிக்குத் தெரியவர அவர் அச்சாதியிலிருந்து ஒதுக்கப்படுவதாகவும், சிற்றம்பலம் தனது வீட்டுக்கிணற்றை வெட்டித்தந்த ஒரு தாழ்த்தபட்டவருக்கு கருணையுடன் கூடக் காசு கொடுத்து அன்பு பாராட்டியதற்காக ஒதுக்கப்படுவதாகவும் இக்கதை விரித்துச்சொல்லுகின்றது. ஆனால் இப்படி தங்கள் சாதியிலிருந்து ஒதுக்கப்பட்ட இரு குடும்பத்தினரின்



**இளங்கோ**

இளங்கோ, யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். ஈழத்திலிருந்து தன் பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது ரொறொண்டோவில் வசித்து வருகிறார். கவிதைகள், சிறுகதைகள் தவிர, டிசே தமிழன் என்னும் பெயரில் கட்டுரைகளும் விமர்சனங்களும் பத்திகளும் எழுதி வருகின்றார். இவரது கவிதைத் தொகுப்பு "நாடற்றவனின் குறிப்புகள்" 2007லிலும், சிறுகதைத் தொகுப்பு "சாம்பல் வானத்தில் மறையும் வைரவர்" 2012லிலும் வெளிவந்திருக்கின்றன. தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் "ஏலாதி" இலக்கிய விருது 2008ல் "நாடற்றவனின் குறிப்புகளுக்கு" வழங்கப்பட்டது. அண்மையில் "சாம்பல் பறவைகள்" எனும் நாடகத்தை எழுதி இயக்கியிருக்கிறார்.

தான் பார்த்த
சிங்கள, தமிழ் மக்களிடையே
அவ்வளவு வித்தியாசமோ,
வெறுப்போ
தெரியவில்லையெனவும்.
ஆனால் இலங்கை
அரசாங்கமும், சிறிலங்காப்
படைகளும்,
விடுதலைப்புலிகளுந்தான்
இவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு
இடையூறாக
இருக்கின்றார்கள் என்று
தான் விளங்கிக்கொண்டதை
நூலின் இறுதியில்
ஒண்டாச்சி குறிப்பிடுகின்றார்.



அடுத்த சந்ததியினர் (செல்லையாவின்) மகன் ஒருத்தரும், (சிற்றம்பலத்தின்) மகள் ஒருத்தியும் காதலிக்கும்போது கூட எப்படி அவர்களுக்கிடையில் சாதித்திமிர் மீண்டும் முளைத்தெழுகின்றது என்பதை வூல்ப்வ் அக்கதையில் குறிப்பிடுகின்றார். இறுதியில் இச்சாதிய இறுக்கங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற செல்லையாவின் மகன் ஊரைவிட்டே ஓடிப்போவதாகச் சொல்வதுடன் கதை முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் பணிபுரிகின்ற காலங்களில் தற்காலிகமாய் சில மாதங்கள் மன்னாருக்கும் சென்று வூல்ப்வ் வேலைபார்க்கின்றார். சனநெருக்கடியற்ற மன்னார் வூல்ப்பிற்கு யாழ்ப்பாணத்தைவிட அதிகம் பிடிக்கின்றது. அங்கே முத்துக்குளிக்கின்ற மீனவர் சமூகங்களும், அரேபியர்களும் அவ்வளவு இறுக்கமான சாதிய ஒடுக்குநிலையில் இயங்கிக்கொண்டிருக்காததையும் வூல்ப்வ் குறிப்பிடுகின்றார். பிறகு வேலை இடமாற்றங் காரணமாய் கண்டியிலும், இறுதியாய் அம்பாந்தோட்டை யிலும் வூல்ப்வ் பணிபுரிகின்றார். அம்பாந்தோட்டையில் உதவி அரசாங்க அதிபராக *(Assistant Government Agent)* பணிபுரிவதால் அவர் விரும்பிய சில விடயங்களை -முக்கியமாய் புதிய பாடசாலைகள் ஆரம்பிப்பது- அவ்வூர் மக்களுக்காய்ச் செய்யமுடிகின்றது. ஒரு தமிழ்ப்பாடசாலை யும் அம்பாந்தோட்டையில் வூல்ப்வ் ஆரம்பித்துவைத்தார் என்ற குறிப்பும் வருகின்றது. கண்டியில் பணிபுரிகின்ற காலத்தில் -தூக்குத்தண்டனைக்கு எதிரான கருத்துடை யவராக வூல்ப்வ் பின்னாட்களில் மாறினாலும்- வூல்ப்பின் அனுமதியுடன் கண்டி போகம்பர சிறைச்சாலையில் ஏழெட்டுப்பேர் தூக்கிலிடப்படுகின்றார்கள். அதேபோன்று பிரிட்டிஷ்காரர்கள் ஒபியம் (போதை) பயிர்களை அம்பாந்தோட்டையில் பயிரிடும்போது எவ்வித எதிர்ப்பும் காட்டாது அதன் மூலம் வரும் வரியைச் சேகரித்து அரசாங்க வேலைகளுக்காய் வூல்ப்வ் செலவிடுகின்றார். இறுதியில் ஒரு சிங்கள விவசாயியின் வீட்டை -ஒரு பிரச்சினையின் நிமித்தம்- தீ மூட்டச்சொல்லும் மேலிடத்தின் பணிப்புக்கு அடிபணியாததால் அவர் -ஒருவருட கட்டாய விடுமுறையில்- திருப்பி இங்கிலாந்துக்கு அனுப்பப் படுகின்றார். அதற்கடுத்த வருடத்தில் (1912) வேர்ஜினி யாவை வூல்ப்வ் இங்கிலாந்தில் திருமணம் செய்கின்றார். முதலிரண்டு முறைகள் வூல்ப்வ் *propose* செய்தும் மறுக்கின்ற வேர்ஜினியா, மூன்றாவது முறையாக இந்தச் "சதமில்லாத யூதரை" *(penniless Jew)* திருமணம் செய்ய சம்மதம் தெரிவிக்கின்றார். ஒரு வித மனப்பிறழ்வு நோயிற்கு அடிக்கடி ஆளாகும் வேர்ஜினியாவுக்கு -அவர் ஆற்றில் தற்கொலை செய்யும்வரை- தான் உண்மையாக இருந்தேன் என வூல்ப்வ் கூறிக்கொண்டாலும், வேர்ஜினியா உயிரோடு இருந்த காலங்களிலேயே வூல்ப்விற்கு, ரெக்கி *(Trekkie)* என்ற திருமணமான பெண்ணோடு உறவு இருந்திருக்கின்றது. அதேசமயம், சிறுபிராயத்தில் தனது உடன்பிறவாச்சகோதரர்களால் *(half brothers)* பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளான வேர்ஜினியாவுக்கும் ஆணுடான உறவு அவ்வளவு உவப்பானதாய் இருக்காத தால், இடைப்பட்ட சில காலங்களில் அவரொரு தற்பாலின ராகவும் இருந்திருக்கின்றார் எனவும் கூறப்படுகின்றது.

1960களில், வூல்ப்வ் மீண்டும் இலங்கைக்கு, தனது "தோழி" ரெக்கியோடு பயணிக்கின்றார். முன்பு தான் பணிபுரிந்த யாழ்ப்பாணம் உட்பட அனைத்து இடங்களையும் மீண்டும் பார்க்கின்றார். 1900களில் தான் பார்த்த யாழ்ப்பாணம் இப்போதும் அப்படியே மாறாதுதான் இருக்கின்றது என்று வூல்ப்வ் குறிப்பிடுகின்றார். அதேபோன்று 1900 களிலேயே சிங்கள/தமிழ்/முஸ்லிம்/ பேர்கர் மக்களுக்கு சுவிஸிலிருக்கும் ஒரு அரசாங்க அதிகார அமைப்பே சரிவரும் என்று தெளிவான பார்வையோடு வூல்ப்வ், தான் எழுதிய நூலில் குறிப்பிட்டிருக்கின்றார் (அந்தக்காலகட்டத்தில் -1900-களில் எவ்வித தமிழ்- சிங்கள இனக்கலவரமும் தோன்றாததையும் நினைவில் கொள்ளவேண்டும் ஆனால் கண்டியில் சிங்கள-முஸ்லிம் இனக்கலவரங்கள நடந்ததை வூல்பவ் குறிப்பிடுகின்றார்). அதேயேதான் 1960ல் பயணித்தபோது, சிங்கள அரசியல்வாதியொருவரின் மேடைப்பேச்சை

கேட்டபோது தனக்கு இப்படித் தோன்றியதாக வூல்ப்வ் குறிப்பிடுகின்றார்: *Woolf mentioned listening to one Sinhalese politician "screaming in a monotonous frenzy which carried me straight back to the days before the war when turned on the wireless and heard Hitler screaming through the microphone at the frenzied Nazis".* இந்நூலில், வூல்ப்வ் இருந்த இடங்கள் பயணித்த பாதைகள் ஊடாக கிறிஸ்டோபர் ஒண்டாச்சி பயணிப்பதுடன், இன்றைய ஈழச்சூழ்நிலை குறித்து தனது குறிப்புக்களை எழுதிச்செல்வதன் மூலம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பான பழைய இலங்கையை இன்றைய ஈழத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும் வாய்ப்பை வாசகருக்கு ஒண்டாச்சி வழங்குகின்றார். யாழ்ப்பாணத்தில் வூல்ப்வ் பணி புரிந்த, தங்கியிருந்த அனேக இடங்கள் போரின் நிமித்தம் இன்று சிதைவுற்ற இடங்களாய், அடையாளங் காணமுடியாத பகுதிகளாய், கண்ணிவெடி புதைக்கப்பட்டிருக்கும் அபாயகரமான பிரதேசங்களாய் இருப்பதை கிறிஸ்ரோபர் படங்களாலும் குறிப்புகளாலும் இந்நூலில் நமக்கு ஆவணப்படுத்துகின்றார். யாழ், மன்னார் உட்பட நயினாதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளுக்கும் தான் போனது பற்றி ஒண்டாச்சி விரிவாக எழுதியதோடு ஏ9 (A9) பாதையினூடாக பயணித்தபோது கண்ட போரின் வடுக்களையும் பதிவு செய்திருக்கின்றார் (ஆனையிறவில் சிதைவுற்றிருக்கும் டாங்கி பற்றிய குறிப்புக்கூட வருகின்றது). ஓரளவு அரசாங்கச்சார்புச் செய்திகளைத்தான் அதிக இடங்களில் ஒண்டாச்சி குறிப்பிடுகின்றார் என்றபோதும், தான் பார்த்த சிங்கள, தமிழ் மக்களிடையே அவ்வளவு வித்தியாசமோ, வெறுப்போ தெரியவில்லை யெனவும். ஆனால் இலங்கை அரசாங்கமும், சிறிலங்காப் படைகளும், விடுதலைப்புலிகளுந்தான் இவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு இடையூறாக இருக்கின்றார்கள் என்று தான் விளங்கிக்கொண்டதை நூலின் இறுதியில் ஒண்டாச்சி குறிப்பிடுகின்றார்.

ஆரம்பத்தில் ஒரு ஏகாதிபத்தியவாதியாக -தன்னை யறியாமல் இருந்திருந்தாலும்- பின்னாட்களில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இருந்ததாக வூல்ப்வ் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இங்கிலாந்தில் உருவாக்கிய *Bloomsbury group* ஊடாக பிரிட்டிஷ் அரசின் காலனியாதிக்கத்துக்கு எதிராக வூல்ப்வைப் போன்றவர்கள் குரல் கொடுத்திருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ளலாம். வூல்ப்வ் எழுதிய குறிப்புகளை அவரெழுதிய காலத்தில் வைத்தே பார்க்கவேண்டும் என்றாலும், பல இடங்களில் வூல்ப்வ் ஒரு ஆணாதிக்கவாதியாகவும், ஏகாதிபத்தியவாதியாகவும் இருப்பதை நாம் மறைத்துக்கொண்டு உரையாடியவேண்டிய அவசியமும் இல்லை. ஒரு அழிக்கப்பட்ட சிங்களக் கிராமத்தைப் பின்னணியாக வைத்து எழுதிய வூல்ப்பின் நாவலான, *The Village in the Jungle* காலனியாதிக்கெதிரான ஒரு புதினமாய் இன்று பல விமர்சகர்களால் பார்க்கப் படுகின்றது. அநேக காலனியாதிக்கவாதிகள் போல சாதி

> “காலனியாதிக்கவாதிகளால் பரப்பப்பட்ட கிறிஸ்தவ மதம், மிஸனரிகள் மூலம் அது ஓரளவேனும் தாழ்த்தப்பட்ட மக்களையும் போய்ச்சேர்ந்து பரவலான கல்வியறிவை அவர்கள் பெற உதவிசெய்திருக்கின்றது.”

மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் அவலம் போன்ற விடயங்களை, தங்களுக்கு அவசியமான விடயங்களல்ல எனப்புறந்தள்ளாது இவ்வாறான விடயங்களை கவனத்துடன் எடுத்துக்கொண்ட வூல்ப்வ் ஒதுக்கப்படவேண்டிய ஒரு காலனியாதிக்கவாதியும் அல்ல. முக்கியமாய், அம்பாந்தோட்டையில் இருக்கும்போது தாழ்த்தப்பட்ட பெண்ணொருவர் ஒரு வழக்கை வூல்ப்வ் முன்னிலையில் கொண்டுவருகின்றார். தாழ்த்தப்பட்ட பெண்கள், மார்பைத் தொடும் ஒரு சின்னத்துணி மட்டுமே அணிந்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில், இரவிக்கை போட தனக்கு அனுமதி தருமாறு அப்பெண் கேட்கின்றார். எனென்றால் அரிசி போன்றவை இடிக்கும்போது இரவிக்கை போடாதிருப்பதன் அசௌகரியங்களை அப்பெண் முன்வைக்கின்றார். வூல்ப்வ் அவ்வூர்களின் “கலாசாரம்/மரபுகள்” மீது தான் இடையீடு செய்வதை விரும்பவில்லை என்று கூறுகின்றபோதும், இப்பெண் விரும்பினால் அவர் அவ்வாறு இரவிக்கை போட அனுமதிக்கவேண்டும் என அவ்வூரின் தலைவரொருவருக்கு கட்டளையிடுகின்றார்.

இப்போது மீண்டும் நாம் காலனியாதிக்கம் என்ற புள்ளிக்கு வருவோம். காலனியாதிக்கம் நமக்கு நல்லதல்லாதவற்றை மட்டுமின்றி சில சந்தர்ப்பங்களில் நல்லதையும் நமக்குத் தந்திருக்கின்றது என்பதை விளங்கிக்கொள்ளமுடிகின்றது. ஆங்கிலம் ஆரம்பத்தில் மேல்வர்க்கங்களால் கற்கப்பட்டாலும், பின்னாட்களில் காலனியாதிக்கவாதிகளால் பரப்பப்பட்ட கிறிஸ்தவ மதம், மிஸனரிகள் மூலம் அது ஓரளவேனும் தாழ்த்தப்பட்ட மக்களையும் போய்ச்சேர்ந்து பரவலான கல்வியறிவை அவர்கள் பெற உதவிசெய்திருக்கின்றது. இதன்மூலம் தங்களுக்கு மட்டுமே சொந்தமென உயர்சாதிகள் (கொண்டாடிய அறிவு/கல்வி அனைத்துச் சமூகங்களுக்கும் பகிரப்பட்டிருப்பது நல்லதொரு விடயமே. ஆனால் அதேசமயம் ஆங்கிலத்தைக் கற்பதாலும், ஆங்கில இலக்கிய/தத்துவ உரையாடல்களை அப்படி இறக்குமதி செய்வதாலும் மட்டுமே அறிவிஜீவிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நமது தமிழ்ச்சமூகம் குறித்தும் நாம் யோசித்துப்பார்க்க வேண்டியிருக்கின்றது. காலனியாதிக்கத்தின் அரசியலை எப்படிப் புரிந்துகொள்வது என்ற உரையாடல்களை வளர்த்தெடுக்கும்போது, நாம் காலனியாதிக்கத்தின் தேவையற்ற எச்சங்களை உதிர்த்துவிட்டு தேவையான மிச்சங்களோடு நகரக்கூடிய ஒரு சுமுகமான சூழல் சிலவேளைகளில் அமையவும்கூடும். ●●●

க.நவம் - கனடா.



# பசிக்கு நிறமில்லை

தில்லை எனது பால்ய நண்பன், பள்ளித் தோழன். சின்ன வயதுச் சில்மிசங்களுடனும், வளரிளம் பருவத்து வம்பு தும்புகளுடனும் வாழ்ந்துவந்த எங்களிருவரையும் பிரித்து வைத்த பாவம், போர்ச் சூழலுக்கே போய்ச் சேரும்! துப்பாக்கிகள் எங்களூர்க் குச்சொழுங்கைகளில் எப்போது கால் முளைத்து நடக்கக் கண்டேனோ, அப்போதே நாட்டை விட்டு வெளியேறிய துணிச்சல் கட்டை, நான்! ஆனால் தில்லை, அப்படிச் சொல்லிவிட முடியாத ஒரு தீரன்! எட்டுப் பிள்ளை பெறும்வரை, ஓர்மத்துடன் குடியும் குடித்தனமுமாய் ஊரிலேயே வாழ்ந்துவந்த குட்டிக் குசேலனவன்!


மூன்று ஆண் புத்திரர்களையும் பதினாறு வருடங்களின் பின்னர் பார்த்துப் போவதற்கென்று, விசிற்றேர்ஸ் விசாவில் ஊரிலிருந்து கனடா வந்திருக்கிறான். புத்திரர்கள் மூவரும் ஆளுக்காள் மாறிமாறி ஒன்ராறியோ, குபெக் மாகாணங்களின் மூலை முடுக்கெங்கணும் திருத்தல யாத்திரை போலக் கூட்டிச் சென்று தில்லையைத் திக்குமுக்காடச் செய்துவிட்டனர். பொன்னான மூன்று மாதங்களும் பொசுக்கென்று போய்விட்டன!

அடுத்த மாதம் அவன் ஊர் திரும்ப உத்தேசித்திருக்கிறான். ஊரிலுள்ள பெண் பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் நெஞ்சில் நினைந்து நினைந்து நெக்குருகிக் கொண்டு, எவ்வளவு காலம்தான் அவனால் கனடாவில் நிம்மதியாகக் காலங்கழிக்க முடியும்?

'ஊருக்கு வெளிக்கிட முன்னம், தமிழ்ச் சாப்பாட்டுக் கடை ஒண்டிலை போயிருந்து ஒரு வெட்டு வெட்ட வேணும், மச்சான்' என்று வெட்கத்தை விட்டு, தொலைபேசி வழியாக ஒருமுறை விருப்பம் தெரிவித்திருந்தான்.

அதன் பிரகாரம், கெனடி றோட்டிலுள்ள காரைக்குடி உணவகத்தில் *Buffet Lunch* சாப்பிடவென்று தில்லையைக் கூட்டி வந்தேன். நிற்பன, நடப்பன, நீந்துவன, பறப்பன, ஊர்வன, உறங்குவன உட்பட, சகல வகையறா உணவுகளையும் வயிறார உண்டு திளைத்தோம். முப்பது வருட நிலுவையிலிருந்த சங்கதி சமாச்சாரங்களைப் பேசி மகிழ்ந்தோம்.

தொண்டனுக்கும் தோன்றவல்ல உண்ட களை மேலிடத் துவங்கவே, எனது துணைவிக்கென்றொரு பார்சலைக் கட்டியெடுத்துகொண்டு, காரைக்குடி உணவகத்தை விட்டு இருவரும் வெளியேறுகிறோம்.



**க.நவம்**

கந்தையா நவரத்தினம்
என்னும் இயற்பெயருடைய
இவர்
தெணியகம், பொலிகண்டி,
வல்வெட்டித்துறையை
பிறப்பிடமாக கொண்டவர்
தற்போது
ரொறொன்ரோ, கனடாவில்
வசித்த வருகின்றார்

M. Sc. B. A. பட்டதாரியான
இவர் கனடிய அங்கீகாரம்
பெற்ற மொழிபெயர்ப்பாளர்
16 வருட சேவை கொண்ட
ஆசிரியர். சிறிதுகால
இடைவரவு விரிவுரையாளர்.
உள்ளும் புறமும்,
உண்மைகளின் மௌன
ஊர்வலங்கள், ஆகிய
நூல்களை எழுதியுள்ளார்

2008ஆம் ஆண்டுக்கான
கலை இலக்கிய விருதையும்
தங்கப் பதக்கத்தையும்
'கனடா தமிழர் தகவல்
நிறுவனம்'
வழங்கிக் கௌரவித்தது.

'சொல் புதிது'
அகராதித் தயாரிப்பில்
ஈடுபட்டு வரும் சொல்லாக்கக்
குழுவின் ஆரம்பகால
உறுப்பினர்,
ஒருங்கிணைப்பாளர்.

இவர் எழுதி, தயாரித்து,
நெறிப்படுத்தி மொன்றியாலில்
மேடையேறிய 'இனியொரு
விதிசெய்வோம்' கனடாவின்
முதலாவது
தமிழ் சீரிய நாடகம்
நான்காவது பரிமாணம் என்ற
சஞ்சிகையின் ஆசிரியர்

ஆடிக் கோடை வெயிலின் காங்கையில் கார் வெந்து வெதும்பிக்கொண்டிருக்கிறது. கதவுகளைத் திறந்து வெப்பக் காற்று வெளியேற வழி செய்கிறேன். குளிரூட்டியை அருட்டியெழுப்பி, இருவருமாக ஏறி அமர்ந்து கொள்ள ஐந்து நிமிடமெடுத்தது. நீல்ஸன் – ஷெப்பார்ட் சந்திப்பை அண்டி வசித்துவரும் தில்லையின் இளைய மகனின் வீடு நோக்கி, எழுதுமட்டுவாளிலிருந்து ஊர் திரும்பும் கிடுகு வண்டில் போல, கார் தன்பாட்டில் திரும்பிச் செல்கிறது. கெனடியிலிருந்து 401 நெடுஞ்சாலையில் ஏறி, சுமார் ஐந்து நிமிட ஓட்டத்தின் பின், நீல்ஸன் றோட்டை நோக்கி, நெடுஞ்சாலையை விட்டு வெளியேறுகிறது. வீதிக்கட்டுமானப் பணியின் நிமித்தம், வடக்காகச் செல்லும் நீல்ஸன் றோட்டில் வாகனங்கள் நத்தை வேகத்தில் நகர்கின்றன.

நெடுஞ்சாலைக் கிளை வீதியும் வடக்கு நோக்கிச் செல்லும் நீல்ஸன் றோட்டும் சந்திக்கும் இடப்புற மூலையில் தில்லையின் கண்கள் சடுதியாக நிலைகுத்தி நிற்கின்றன.

அழுக்கேறி உக்கியுலர்ந்து கிழிந்துபோன ஆடைகள், காலடியில் ஒரு கந்தல் பை, பலகாலம் தண்ணீரின்றி வாடும் தலை முடி, தாறுமாறாய் வளர்ந்து தொங்கும் தாடி, அருகருகான இரண்டு கருங்கு வளைகளில் காணாமல் மறைந்துபோயிருந்த கண்கள், மெலிந்து வாடிய மேனி சகிதம், கார்ட்ப்போர்ட் அட்டை ஒன்றைக் கழுத்தில் தொங்க விட்டபடி, மானுடன் ஒருவன், வாகனசாரிகளிடம் கையேந்திக்கொண்டிருக்கிறான்!

ஐம்பது வயது மதிக்கத்தக்க அந்த வெள்ளை நிற மேனியன், மண்டையைப் பிளக்கும் கொதி வெயிலையும் பொருட்படுத்தாதவனாய், ஒவ்வொரு வாகனத்திலுள்ளவர்களையும் நோக்கிக் கெஞ்சியவாறு, பிச்சை கேட்டுக்கொண்டிருக்கும் காட்சி தில்லைக்குப் புதினமாயிருந்திருக்க வேண்டும்! 'கனடாவிலுமா?' எனுமாப்போல, அவனது முகம் ஒடிச் சுருங்கிக் கறுக்கின்றது!

* * *

நவீன உலகின் உன்னதமான நாடுகளின் வரிசையில் கனடாவுக்கு முக்கிய இடம் உண்டு. அரசியல், சமூகவியல், பொருளியல், கல்வியியல், பண்பாட்டியல், வாழ்வியல் அம்சங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஒப்பீட்டாய்வுகளின் முடிவுகள் இதனை உறுதி செய்கின்றன.

மக்கள் வாழ்வுக்கு உகந்த மிகச் சிறந்த நாடுகளுள் ஜேர்மனி முதலிடத்திலும், கனடா இரண்டாம் இடத்திலும் இருப்பதாக *U.S News & World Report* அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது.

இவ்வாறே மக்கள் வாழ்வதற்கேற்ற மிகச் சிறந்த நகரங்கள் எவை எவையென, உலகின் முக்கிய நகரங்களுக்கிடையிலான ஆய்வு ஒன்றை *Economist Intelligence Unit* மேற்கொண்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகர் முதலிடத்தையும், அவுஸ்திரியாவின் வியன்னா இரண்டாவது இடத்தையும், கனடாவின் வன்கூவர், ரொறன்ரோ, கல்கரி ஆகியன முறையே மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களையும் வகித்து வருவதாக அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

2016 மே 26-27 ஆம் திகதிகளில் ஜப்பானின் தலைநகர் ரோக்கியோவில் *G7* உச்சிமாநாடு நடைபெற்றது. இந்த 7 நாடுகளும் உலகப் பொருளாதார வல்லரசு நாடுகள் உலகின் கைத்தொழில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் உலகளாவிய செல்வத்தின் 64 சதவீதத்தினைத் தமதாக்கி வைத்திருக்கும் நாடுகள் உயர்ந்த தேசியச் சொத்தினையும் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணையும் கொண்ட நாடுகள். இந்த *G7* அணியின் முக்கிய உறுப்பு நாடாகிய கனடா, கடந்த இரண்டாண்டுகளுக்கு முன் பொருளாதார வளர்ச்சியில் ஏனைய 6 நாடுகளையும் விஞ்சியிருந்த ஒரு நாடு.

இத்தகைய செல்வந்த நாடான கனடாவில், பிச்சையெடுத்தல் ஒரு பிரச்சினைக்குரிய சமூக நடத்தையாக இருந்து வருவதை வெளியுலகத்தவர், குறிப்பாக அந்நாளைய, 'மூன்றாம் உலகத்தவர்' அறிந்திருக்க வாய்ப்பில்லைத்தான்!

பிச்சைக்காரர்கள், பிச்சையெடுத்தல் என்ற எமக்குப் பரிச்சயமான சொற்பதங்களை, *Pandhandlers* என்றும் *Panhandling* என்றும் இங்கு கூறுகின்றனர். *Pan* என்பது பாத்திரம், *Handle* என்பது கைப்பிடி, *Handling* என்பது கையாள்வது எனும் அர்த்தங்களின் அடிப்படையில், *Panhandling* என்பதைப் 'பிச்சா பாத்திரம் ஏந்துதல்' எனப் பொருள் கொள்ளல் பொருத்தமல்லவா?

“ மக்கள் வாழ்வுக்கு உகந்த மிகச்சிறந்த நாடுகளுள் ஜேர்மனி முதலிடத்திலும், கனடா இரண்டாம் இடத்திலும் இருப்பதாக *U.S News & World Report* அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது. ”

வேலைவாய்ப்பின்மை, வருமானமின்மை, வதிவிட வசதியின்மை, போதைவஸ்து-மதுபானப் பாவனை, மனிதவுரிமை-அடிப்படையுரிமை மறுப்பு, மனநலக் கோளாறு, குடும்பப் பிரச்சினை, போரச்சவுணர்வு, தனிமைப் படுத்தல், தூரப்படுத்தல், பிரிவுத்துயர், புலச் சிதறல், விரக்தி, சோம்பல் போன்ற பல்வேறு காரணிகளின் விளைவாக கனடாவில் பொது இடங்களில் பிச்சையெடுப்போரின் எண்ணிக்கை பெருகி வருவதாகக் கூறப்படுகின்றது.

வதிவிட வசதியின்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனூடாக, பிச்சையெடுத்தலைக் கட்டுப்படுத்தலாம் என்று Canadian Homelessness Research Network கூறுகின்றது. பிச்சையெடுப்போர், கனடாவின் கடுமையான சமூக, பொருளாதார நடைமுறைகளின் பலிக்கடாக்கள் என்று 31 சதவீத கனடியர்கள் கருதுகின் றனர். அதேவேளை, பிச்சையெடுப்பவர்கள் ஆபத்தான வர்கள் என்றும், பிச்சையெடுத்தலைக் கட்டுப் படுத்தக் கடுமையான சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்றும் 48 சதவீத கனடியர்கள் கருதுவது, ஏழைகள் மீதான சகிப்புத் தன்மையைக் கனடியர்கள் இழந்து வருவதன் அறிகுறி எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இவ்வாறாக பிச்சைக்காரர்கள் பற்றிய சர்ச்சைகள், விவாதங்கள், ஆய்வுகள், சட்டவாக்கங்கள் போன்றவை இங்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றபோதிலும் கட்டுக்கடங்க மறுக்கும் புற்று நோயாக, இவர்களது எண்ணிக்கை பெருகி வருகின்றதே அன்றி, அருகி வருவதற்கான அறிகுறிகளேதுமில்லை.

மேலும் கனடாவின் சகல பகுதிகளிலும்- விசேட மாக நகரங்களில் - பெருமளவில் பரவிக் காணப் படும் இவர்கள், புதிய மூலோபாயங்கள் சிலவற்றைக் கையாண்டு காசு சேர்க்கப் பழகியுள்ளனர் எனவும், பிச்சை கேட்கும்போது, எப்படிக் கேட்கவேண்டும் என்ற சூட்சுமத்தைச் சிலர் தெரிந்து வைத்திருக்கிறார்கள் எனவும், கலைநயம் மிக்க புனைவு நுட்பங்களுடன்கூடிய, உத்தி முறைகளைக் கையாண்டு எப்படிப் பணம் சேர்க்கலாம் என்ற நுட்பதைச் சிலர் அறிந்து வைத்திருக்கிறார்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

சனசந்தடி மிக்க ரொறன்ரோ நகரச் சந்தி ஒன்றில், பிச்சைக்காரி ஒருத்தி தன் முன்னால் எழுதி வைத்துப் பெருந்தொகைப் பணம் திரட்டிக்கொள்ளக் காரணமான இந்தச் ‘சுலோகம்’ ஒன்றை உதாரணமாகச் சொல்லலாம்

*“Travelling, Hungry, Sick and too Ugly to Prostitute, Please Help!”*

* * *

என்னை நோக்கி அவன் நடந்து வருகின்றான். அவனது கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த கார்ட்போர்ட் அட்டையில் *I AM HUNGRY* எனக் கோணல் மாணலாக எழுதிய வாசகம் இப்போது துலக்கமாகத் தெரிகிறது. முகத்தில் ஆங்காங்கே வியர்வை துளிர்த்திருக்கிறது. பசிக் களைப்பில் சோர்ந்து, இரந்து, யாசிக்கும் அவனது கண்கள் என் மனதைப் பிழிந்தெடுக்கின்றன.

காரின் எனது பக்கக் கண்ணாடியைச் சற்று கீழிறக்கி, டாஷ்போர்ட்டிலிருந்து ஐந்து டொலர் தாள் காசை எடுத்துக் கொடுத்துவிட்டு, பின்னிருக்கையில் வைத்திருந்த பார்சலையும் எட்டி எடுத்து அவனது கையில் வைக்கிறேன்.

ஏழு செஞ்சூரியர்கள் அவன் முகத்தில் துள்ளி யெழுந்து மறைகின்றனர்! மலர்ந்த முகத்துடன் தலை சாய்த்து நன்றி தெரிவித்தவன், பின்னாலுள்ள கார்களை நோக்கி நகர்ந்து, தன் காரியத்தில் கண்ணாகிறான்.

தற்காலிகமாகத் தடைபட்டு நின்ற பாதை மெது வாகத் திறக்கவே, நீல்ஸன் றோட்டில் வடக்கு நோக்கி எனது கார் விரைகிறது. நிசப்தத்தில் ஒரு நிமிடம் கரைகிறது.

“தான தர்மம் தேவைதான். இருந்தாலும் இது கொஞ்சம் ஓவர்.” தில்லை சொல்கின்றான்.

“இது என்ரை வழமைக்கு மாறானது எண்டதை ஒப்புக்கொள்ளுறன். ஆனால் நீயும் நானும் இண்டைக்குச் சாப்பிட்டதும் ஓவர்தானே. அந்தக் குற்ற உணர்வுதான்..... பாவம் மச்சான்... ”


சில வினாடி சிந்தனையின் பின், “அந்த ‘வெள்ளைக்காரப் பிச்சைக்காரன்’ உன்னை ஏமாத்தியும் இருக்கலாமில்லையா?” என்று கேட்கிறான்.

“பசியெண்டு வந்திட்டால் வெள்ளையென்ன, கறுப்பென்ன, மஞ்சளென்ன, மண்ணிறமென்ன, மச்சான்? சரி ...... அதுதான் போகட்டும் ...... நீ சொல்லுற மாதிரி அவன் என்னை ஏமாத்தியிருந்தால், அது அவன்ரை பிரச்சினை. நான் அவனுக்குச் செய்தது ஒரு சின்ன உதவி. அதாலை எனக்குக் கிடைச்சது ஒரு பெரிய திருப்தி, மனச் சந்தோசம். ஒரு வகையிலை, இது ஒரு சுயநலம்..... நீ நினைக்கிற மாதிரி நான் ஏமாந்து போகயில்லை.”

தில்லை மீண்டும் எதையோ யோசித்தபடி மௌனமாகின்றான். ஒரு சொற்ப வினாடிகளில் அவன் தங்கியிருந்த வீட்டைச் சென்றடைந்து, வந்தவழி நோக்கிக் காரைத் திருப்பி நிறுத்தி, விடைபெற முன்னர், அவனது தோளைப் பற்றி உலுப்பிவிட்டுச் சொன்னேன் – “கனடாவிலை இப்ப சில தமிழரும் பிச்சையெடுக்கினம்”

●●●

கற்சுறா - கனடா



# சோடாமூடி

பசுபதியின் கால்கள் அகன்று கிடந்த காட்சியை ஊரில் எல்லோருமே பார்க்க நேர்ந்திருந்தது. கட்டியிருந்த சாறம் அரையை விட்டு நழுவி கோணலாகி சிதிலமடைந்து போய் கிடந்ததனால் தான் எல்லோருக்கும் அவனது கால்களினிடையை அப்போது கவனிக்க நேர்ந்தது.

ஒற்றை முழங்காலைக் கொஞ்சம் மடித்தபடி காலை விரித்தும் கைகளை முன்னம் பின்னமாக விசிறிக் கொண்டும் கன்னத்தை நிலத்தில் சரித்தபடி ஒரு ஓட்டப் பந்தய வீரனைப் போல் விழுந்து கிடந்தான்.

குடியின் மயக்கத்தில் குப்புறக் கிடந்த பசுபதியின் வாயில் வழிந்திருந்த வாந்தியை நாயொன்று இழுத்து வைத்து நக்கியபோது "அடீக்" என்று சொல்லி நாயை விரட்டிவிடக்கூட அவனுக்கு இயலாமல் இருந்தது.

நாய் ஒன்று தன்னை நக்குவதினை உணர்ந்து கையைத் தூக்கி நாயைக் கலைக்கும் பொழுதும், அந்தக் கையையும் மீறி எவ்வித பயமுமின்றி நாய் அவனது அருகில் நின்று வாந்தியினை நக்கும் தைரியமும் பார்ப்பவர்களுக்கு ஒரு கலை நேர்த்தியான நிகழ்வொன்றை கண்டடைந்த பரவசம் கிடைத்திருக்க வேண்டும். இரண்டு செயல்களும் எவ்வித இடைஞ்சல்களுமின்றி ஒரே அசைவுகளில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பசுபதியின் வாழ்வை ஒரு நாய்வாழ்க்கை என்று சொல்பவர்கள் நிச்சயம் இந்தக் கலை நேர்த்தியான நிகழ்வினை எக்கணமும் விளங்கிக் கொள்ள முடியாதவர்களாகவே இருந்தார்கள்.

கலைநேர்த்தியான கணங்களில் எழும் வாசனைகள் எப்பொழுதும் ஏன் வியர்த்துக் கசிந்த கமக்கட்டின் வாசனையை ஒத்ததாய் இருந்து விடுகிறது? தமது கமக்கட்டின் வாசனையை கையால் தேய்த்தெடுத்து மூக்கில் வைத்து முகர்ந்து பரவசங்கொள்ளும் அத்தனை பேரும் ஏனோ தெரியவில்லை பசுபதியைப் பார்த்து முகஞ்சுழித்தார்கள்.

உடலின் வாசனைகளைத் தவிர்த்து வேறு ஏதாவது இன்புறக் கூடிய வாசனை எங்கே உண்டென்று யாரால் சொல்லமுடியும்? பசுபதியின் உடலை இலையான்கள் பலவந்தமாக மொய்த்துக் கொண்டிருந்தன. அவனில் மொய்ப்பதைக் காட்டிலும் அவனது சறத்திலேதான் அதிகம் மொய்த்தன. மனிதர்களைக் காட்டிலும் இலையான்களுக்கு வாசனையைப் பிரித்தறியும் அறிவு கூடுதலாகத்தானே இருக்கிறது. போட்டியிட்டுப் பறக்கும் இலையான்கள் சறத்தினுள் புகுந்து புகுந்து வெளிவந்து கொண்டிருந்தன.

பசுபதி தெருவின் பக்கமாய் தண்ணி ஓடுவதற்காக வெட்டப்பட்டிருந்த பள்ளத்திற்கு அருகில் தெருப்பக்கம் கால்கள் கிடக்கும் படியே விழுந்திருக்கிறான். தலை பள்ளத்தின் சரிவில் கீழே பார்த்துக் கொண்டு கிடக்கிறது.

பச்சையும் மஞ்சளுமான செடிகளால் கலந்தி ருந்த பள்ளத்தின் பற்றைக்குள் மட்டக்களப்பு வெள்ளைக் கோட்டுச் சறத்துடனும் "ஆம்கட்" பனியனுடன் அவன் விழுந்து கிடப்பது மிக மிக அழகாக இருந்தது.

அந்த அழகை ரசிப்பதற்கு மட்டும் அங்கே யாரும் தயாரில்லாது இருந்தார்கள்.

அழகை ரசிப்பதற்குரிய மன நிலையின் சாத்தியம் அங்கிருந்தவர்களிடம் குறைந்து கொண்டே போனது.

பாதி பழுத்துப்போன பூவரசம் இலைகளையோ அல்லது நீரற்றுக் காய்ந்துபோய் வெடித்துப் பிளந்திருந்த குளத்து நிலங்களையோ அல்லது அதற்குள் காய்ந்து கருவாடாய்ப்போன மீன்குஞ்சு களைக் கிளறிக் கொத்தும் நாரைகளையோ மட்டுமில்லை தமது குழந்தைகள் தவழ்ந்து அளையும் மண்குவியல்களையும் அவர் களால் வீணீர் ஒழுக கிளறிக் கொட்டும் வார்த்தைகளையும் கூட ரசிப்பதற்குரியதாக அவர்கள் இருக்கவில்லை.

அவர்களிடம் ரசனை உட்பட எல்லாம் மாறிக் கொண்டே இருந்தது. சாப்பாட்டுக் கடையின் பின்பக்கம் நின்று சேற்றுக்குள் உழன்று திரியும் புண்விழுந்த பன்றிகளின் அருகில் செல்பவர்கள் கூட தவறியும் பசுபதியின் அருகில் செல்வ தில்லை.

சறத்தைத் தொடைவரையும் தூ க்கிவிட்டுக் கொண்டு தன்னுடைய இரண்டு கைகளையும் விரித்து குஞ்சானை நடுவில் வைத்து மத்தைக் கடைவது போல் கசக்கிக் கொண்டிருக்கும் பசுபதியின் அருகில் அவர்கள் போவதே இல்லை.

சொறிந்து சொறிந்து அவனது தோல் தடித்துப் பெருத்திருந்தது. கவட்டிற் குள் கையை வைத்து ஆசைதீரச் சொறியும் போது அவனை மீறி எழும் கேவல் அவர் களுக்கு அதிகம் ஆத்திரத்தை மூட்டியது. பசுபதியின் மீது தீராக் கொதிநிலை கொண் டிருந்தார்கள் அவர்கள்.

காலையில் தேனீருக்காகக் கொதிக் கவைக்கப்பட்ட நீரைப் போல் மாலையிலும் கொதித்துக் கொண்டே யிருந்தார்கள். அந்தக் கொதிப்பு பசுபதிமீதே தொடர்ந்தும் கொதித்தது.

"ஒரு இடி வந்து அவனது தலையில் விழுந்து விடாதா ?"

"அவன் எங்கயாவது ஆற்றிலோ அல்லது ஒரு குளத்திலோ போய் விழுந்து செத்துத் தொலைக்கமாட்டானா" என்று பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் கூட்டத்திற்கு ஏனோ தெரியவில்லை அவனைக் கருணைக் கொலை செய்துவிட இல்லிப் பேலும் துணிவில்லாமல் இருந்தது.

மரணத்தின் காவுதடியை கைகளில் பொத்திக் கொண்டே திரிந்தான் பசுபதி. மறைத்து வைக்கமுடியாத அளவில் வலி அவனது உடலைத் தின்று கொண்டிருந்தது. அவனுக்குத் தன்னுடைய தீய்ந்து போன உடலை மறைத்துக் கொள்ள வேண்டும் என்ற அக்கறையும் அப்போது இல்லாது போயிருந்தது என்றே தோன்றுகிறது.

காலையின் இளவெயில் மறைந்து வெக்கை கனக்கத் தொடங்கியது. வெயி லின் தகதகப்பில் கொஞ்சம் உடலை அசைத்தான் பசுபதி. தன்னருகில் அதிகம் பேர் சுற்றி நிற்கிறார்கள் என்ற தோரணை யில் தூசண வார்த்தைகளைக் கொட்டிச் சத்தமிட்டான். அவனைச்சுற்றி இப்போது இரண்டு மூன்று நாய்களும் கொள்ளை இலையான்களும் கூடிநின்றன.

பசுபதியின் குஞ்சாமணியால் சிதழ் வடிந்து கொண்டிருந்தது. சிதழை ஒற்றி யெடுக்க அவன் தனது குஞ்சானை பழைய துணிகாளால் சுற்றியிருந்தான். அது காய்ந்து கறுத்த ஒரு வாழைப் பொத்தியைப் போல் தொங்கிச் சரிந்து கிடந்தது.

தெருவைக்கடந்து போகின்ற ஒவ்வொருவரும் பசுபதியின் கவட்டுக்குள் ஒருமுறை தமது கண்களை எறிந்துஅளந்து விட்டுத்தான் "ஊத்த நாய்" என்று திட்டிய படி முகத்தைத் திருப்பினார்கள்.

பேத்தியாச்சி மட்டும் அவனருகில் சென்று அவனது சறத்தை இழுத்துச் சரி செய்து விட்டு "பார் ... பசுபதின்ர வாய்க் கொழுப்பு சீலையால வடியுது" என்று பேசிக் காறித் துப்பினாள். அவள் துப்பிய துப்பல் சத்தத்திற்கு பசுபதியை நக்கிக் கொண்டிருந்த நாய் கொஞ்சம் பயந்து போய் தனது இரண்டு காலையும் பின்வைத்து விட்டு மீண்டும் அதே இடத்தில் நின்று நக்கியது.

எல்லோரது முகஞ்சுழிப்பையும் விலத்தி அருகில் சென்று பசுபதியை அருட்டி எழுப்ப ஒரு வேசைமனம்



**கற்சுறா**

கற்சுறா, ஈழத்தில் மல்லாவியில் பிறந்து வளர்ந்தவர். பின்பு பிரான்ஸிற்குப் புலம்பெயர்ந்தார். அங்கே "எக்ஸில்" இதழில் ஞானம், விஜி, அதீதா ஆகியோருடன் இணைந்து இயங்கினார். பிறகு பிரான்ஸிலிருந்து பெயர்ந்து தற்போது கனடாவில் வசிக்கிறார். அங்கே அதீதாவுடன் இணைந்து "மற்றது" என்ற இதழை வெளியிட்டார். இரண்டு இதழ்களும் மிகத்தீவிரமான நிலைப்பாடுகளை முன்வைத்தவை. மறுத்தோடி அல்லது எதிர்க்குரல் என்பதே கற்சுறாவின் அடையாளம். தன்னுடைய கருத்துகளில் மிக உறுதியாக நிற்கும் செயற்பாட்டாளர். "நான் எக்ஸில் இதழிலிருந்தே தீவிரமாக எழுத ஆரம்பித்தேன். எக்ஸில் இதழின் செயற்பாடுகள் பலரை எம்மிலிருந்து தனியே பிரித்தது. அவர்களிலிருந்து எம்மைத் தனித்தே ஒதுக்கியது. இலக்கியம் சார்ந்து இயங்கவேண்டிய தேவை என்று கருதி எழுதத் தொடங்கவில்லை. சமூகத்தின் ஓடுதிசையில் பயணிக்கமுடியாது அவதிப்பட்ட பல இடங்கள் அதன் சாத்தியத்தை எனக்குத் தந்தது. எனது எழுத்து எனக்குத் தனித்திருக்க, அல்லது தனித்து யோசிக்கத் தைரியம் தந்திருக்கிறது" என்று சொல்லும் கற்சுறாவின் கவிதைத் தொகுப்பு "அல்லது யேசுவில் அறையப்பட்ட சிலுவை.

வேண்டும். உயிர் அறுந்து போய் விடக்கூடிய தருணத்தை உடல்களால் நீவிவிட முடியாத நிலங்களாகவே உலகெங்கும் நிலங்கள் பரவிக் கிடக்கிறது. அப்படி நீவிவிட முடியாத ஒரு துண்டுக் காணிதான் இந்தப் பற்றைக் காட்டுக் கடையடியும்.

இந்தத் துண்டுக் கடையடியில் ஒரு வேசையாய் கொஞ்சக் காலத்தில் உருமாறிக் கொண்டவள்தான் பேத்தியாச்சி.

எட்டி நின்றுகூட யாரும் என்னவென்று பார்க்காத இடத்தில் கிட்டநின்று பசுபதியைப் புரட்டிப் பார்த்தவள் அவள்தான்.

இன்று அவனுக்கு மடாவெறி. ஒரு சொல்லைக் கூட உச்சரிக்க முடியாது மயங்கிப் போய்க் கிடந்தான். பசுபதி விழுந்து கிடக்கும் கோலம் அளவுகணக்கில்லாமல் கசிப்புக் குடித்திருக்கிறான் என்று உணர்ந்து கொள்ளப் போதுமானதாக இருந்தது அவளுக்கு. இந்த முறையும் சொக்கரின் வீட்டிற்குள் புகுந்து வாளியோடு கொண்டுவந்து பச்சைத் தண்ணியைக் குடிப்பது போல் குடித்திருக்க வேண்டும்.

"பசுபதிக்கு வெறி முறிய எப்படியும் ரெண்டுநாளாகும். இக்கணம் இப்படியே கிடந்தானெண்டா அவண்ட குஞ்சாமணியில புழுத்தான் மொய்க்கும்" என்று புறுபுறுத்த பேத்தியாச்சி மலத்தியோன் பவுடரைத் தண்ணில கரைத்துக் கொண்டுவந்து அவனைச் சுற்றித் தெளித்தாள்.

"விறுமசத்தி ..."

"என்னடா ராத்திரி சொக்கற்ற செத்தையைப் பிரிச்சிட்டியோடா நாயே..."என்று கத்திக் கத்தி மலத்தியோன் தண்ணியை அவனைச் சுற்றித் தெளித்தாள். இலையான்களது இரைச்சல் கொஞ்சம் குறைந்தது. சில மலத்தியோனுக்குள் செத்து விழுந்தன.

பொழுது சாய்ந்தால் சொக்கற்ற கசிப்பு இல்லாமல் ஒரு இம்மியும் நகரமுடியாத பேத்தி யாச்சிக்கு பசுபதியின் செயல்மீது இந்தமுறை கோபம் வந்து விட்டிருந்தது.

"வாளியோட குடிச்சா செத்துப் போவா யடா புழுத்தி" என்று சத்தமிட்டபடி எழும்பினாள்.

அவளுக்கு உதடுகளும் கறுத்துக் குரலும் தடித்திருந்தது. பசுபதி பாதி செத்துப் போயிருந்தான். அவளுக்கு தண்ணியடிக்கவேண்டும் போல இருந்தது.

வழமையா பொழுது சாயேக் கிள்ளதான் சொக்கற்ற வளவுக்கிள்ள கால்வைக்கிற பேத்தி இந்த மத்தியான நேரத்தில வாறதைக் கண்டு சொக்கர் ஒருபக்கம் நெளிந்தார். ஒத்தப் பலகையை திறந்து வைத்தபடி வாசலில் சண்டிக்கட்டோடு நின்றவர் மெல்ல சறத்தை அவிட்டு விட்டு அவளை வரவேற்றார்.

சொக்கரும் காய்ச்சியெடுத்த ஒறிஜினல் இல்லாமல், ஆஸ்பத்திரியில் நெருப்புத்தண்ணி கொஞ்சம் வாங்கி வந்து வினாகிரி தேசிக்காய்ப்புளி எல்லாம் விட்டு ஒரு கலவை செய்து வெட்டிரும்பு என்ற திடீர் கசிப்பு ஒன்றைத் தயாரித்து இரவு வியாபாரத் திற்கு தயாராய் வைத்திருந்த பொழுது இவ்வளவு நேரத்தோட வரும் பேத்தியை அவர் எதிர்பார்க்கவில்லை. மத்தியானம் இரண்டுமணிக்கு பேத்தி யாச்சிக்கு இது உகந்த சாமான் இல்லை என்பதால் வந்த நெளிவுதான் அவரது நெளிவு.

உள்ளே வந்து குந்தில் சாய்ந்து காலை நீட்டி விரித்துக் கொண்டு இருந்தவளின் அருகில் ஒரு சிரட்டைச் சில்லில் பெரிய உப்புக்கல்லு இரண்டைப் போட்டுக் கொண்டு வந்து வைத்தார். அருகில் தான் செய்திருந்த வெண்டிரும்பையும் ஒரு கிளாசில் ஊற்றி வைத்தார்.

உப்புக்கல்லை எடுத்து நாக்கில் இரண்டு தேய் தேய்த்துவிட்டு வெட்டி ரும்பை எடுத்து பக்கென்று அடித்தாள். வெயிலின் வீக்கத்தில் பச்சையாக அடித்த வெட்டிரும்பு அவளின் முகத்தை. இன்னும் வெளிறப்பண்ணி யது. சொக்கருக்கு நாக்கு விறைத்தது. தலையை அவிட்டு விரித்து விட்டு விறைத்துப் போன தலையை ஒரு உலுப்பு உலுப்பினாள். மனசுக்குள் இன்னொரு மனசு ஊர்ந்து நகர்ந்து விறைக்கப்பண்ணிக் கொண்டிருந்தது. சொக்கர் அவளின் அருகில் சென்று குந்தியபடி தலையைச் சரித்து தன் மடியில் கிடத்தினார்.

பேத்தியாச்சிக்கும் சொக்க ருக்கும் இடையேயான உறவு இன்று நேற்று வந்த உறவல்ல. பேத்தியாச்சி ஒரு பழைய சங்கீத ரீச்சர். நத்தார் காலத்தில் ஊர்முழுவதும் கரோல் போவது ரீச்சரின் குறுப்தான். கரோல் போற காலமெல்லாம் ரீச்சரின் குறு ப்பில் கிறிஸ்மஸ் தாத்தாவாய் வருவது சொக்கர்தான். நல்ல குரல் வளமுள் ளவர். கம்பருடைய பாட்டுக்களைப் பாடிக் கொண்டு கடைக்குப் போறவருக்கு முதல் காப்போத்தல் கசிப்பை இலவசமாகக் கொடுத்து பிறகு பின் பாதிக் காப்போத்தலையும் இலவசமாகக் கொடுத்துவிடக் கூடிய ஒரு இலக்கிய ரசிகன். அப்படியொரு இலக்கிய ரசனையுடன் உருவான காதல்தான் சங்கீதரீச்சருடன் அவருக்கு வந்த காதல்.

இருட்டினாப்பிறகு காப்போத் தல் கசிப்பும் கையில் எடுத்துக் கொண்டு சறத்தின் தலப்பை இழுத்துக் கமக்கட்டுக்குள் செருகியபடி

"நிலங்களை உழுவது போல்... உள்ளத்தை உழுங்கள் என்று... உலக பிதா சொன்ன போது.... உழவர்கள்... தொழிலாளர்... ஊராரின் எண்ணமதில்... யேசு ஒன்றாகப் பதிந்துவிட்டார்...."

என்று உச்ச ஸ்தாயில் சொக்கர் பாடிக் கொண்டு சங்கீத ரீச்சரிட்டப் போகும் போதே அனைவருக்கும் தெரியும் நத்தாருக்கு நாள் கிட்டுகிறது என்பது. சொக்கரின் மடியில் தலை வைத்திருந் தவள் அவரின் கையை எடுத்து தனது பிடரிக்குள் நுணாவ விட்டபடி "நேற் றைக்கு என்ன கசிப்பக் களவு கொடுத்திட்டியா?" என்று கேட்டாள்.

"எப்பன் கக்கூசுக்குப் போட்டு வாறதுக்க வாளியோட கவிட்டுக் குடிச்சிட்டான் பசுபதி". என்றார்

"அவண்ட சாமான் எல்லாம் அழுகீற்று. வலி தாங்கேலாமத்தான் செய்யுறான்"

அதுக்கு...?

"கடையடிக்குப் பின்னால பள்ளத்தில விழுந்து கிடக்கிறான்"

"ம்"

"என்னத்த "ம்" கொட்டுறாய்.? நீ பாரான்... இக்கணம் அவன்ர சாமானத் தூக்கிச் செருகின அத்தின புனாக்களும் அழுகத்தான் போகுது. அப்ப தெரியு மடா யார் வேசை எண்டு" என்று சொல்லி நறுமினாள்.

அவனைப் போய்ப்பார்க்க வேண்டும் என்று சொக்கருக்குத் தோன்றவில்லை.

சற்று நேரத்தில் சொக்கரின் மடியில் கண்ணயர்ந்து போனாள். பொழுதுபட்டதும் போத்தல் நிறைய வெட்டிரும்பை வாங்கி அரைக்குள் சொருகிக்கொண்டு போய் பசுபதிக்குப் பருக்கினாள். வாயை விரித்து கொடுப்புக்குள்ளால் போத்தலைத் தள்ளி தலையை நிமிர்த்திப் பிடித்தாள். வெட்டிரும்பு மெல்ல மெல்ல உள்ளே இறங்கியது.

மலத்தியோனையும் மேவி இலைகள் வதங்கிய மணமும் இலை யான்களின் மணமும் புழுக்களை இறக்கியிருந்தன. பசுபதியின் உயிர் குறைந்து கொண்டிருந்தது கையில் அவளுக்குத் தெரிந்தது.

பருக்கி முடித்த வெறும் போத்தலை எடுத்து அரைக்குள் திரும்பவும் சொருகிக் கொண்டு இருட்டோடையே சொக்கரின் வீட்டிற் குள் போன பேத்தியாச்சி நாலைந்து நாளாய் வெளியில் வரவேயில்லை.

உப்புக்கல்லைத் தேய்த்துத் தேய்த்து வெட்டிரும்பைக் குடித்துக் கொண்டிருந்தாள்.

அறை முழுவதும் வியர்த்துக் கசிந்த கமக்கட்டின் வாசனை பரவியிருந்தது.

*****

எனது அன்பான வர்சா....
இந்தக் கதைக்குப் பின்னால் சொல்ல வேண்டியிருந்த இன்னொரு கதையை நான் உனக்குத் தனியாகவே எழுதவேண்டியிருக்கிறது. முதலில் மன்னித்துக் கொள்.

> "மனித உடலின் பாலியல் சார்ந்த கதைகளை சொல்ல நேரும் போது ஒவ்வொரு வார்த்தைகளுக்கிடையிலும் ஒழுக்கத்தின் தடைக்கற்களைத் தாண்டித்தாண்டியே எழுதவேண்டி இருக்கிறது. பரிபூரணமாகச் சொல்லப்பட்ட பாலியல் கதைகளை வெறும் காமக் கதைகளாகவும் காமக் கூத்துக்களாகவும் அன்றாடம் வாசித்துக் கொண்டிருப்பவர்களே ஒருபக்கம் அதி பயங்கர ஒழுக்கவாதிகளாக என்னைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒழுக்கம் சொற்களால் கூட நிரப்பந்திக்கப்படுவதில்லை என்பதை அவர்கள் ஒருபோதும் அறியப் போவதில்லை."

மனித உடலின் பாலியல் சார்ந்த கதைகளை சொல்ல நேரும் போது ஒவ்வொரு வார்த்தைகளுக்கிடையிலும் ஒழுக்கத்தின் தடைக்கற்களைத் தாண்டித்தாண்டியே எழுதவேண்டி இருக்கிறது. பரிபூரணமாகச் சொல்லப் பட்ட பாலியல் கதைகளை வெறும் காமக் கதைகளாகவும் காமக் கூத்துக் களாகவும் அன்றாடம் வாசித்துக் கொண்டிருப்பவர்களே ஒருபக்கம் அதி பயங்கர ஒழுக்கவாதிகளாக என்னைப் பயமுறுத்திக் கொண்டிருக் கிறார்கள். ஒழுக்கம் சொற்களால் கூட நிரப்பந்திக்கப்படுவதில்லை என்பதை அவர்கள் ஒருபோதும் அறியப் போவதில்லை. காமத்தின் சொற்தினுசுகளால் உடலின் உறுப்புக் களைச் சாமத்தில் கேலி செய்வதைப் போலவே காலையிலும் அவர்கள் கேலி செய்கிறார்கள். அவர்களால் இனி இதனைச் சீர் செய்யவே முடியாது. அதனால் தான் இதற்குள் என்னால் சொல்லமுடியாது போன ஒரு தகவலை உனக்கு மட்டும் சொல்லுகிறேன் கேள்...

கமத்தில் சிறுபோகம் விதைத் திருந்த காலம் அது. பன்றிக் காவல் காப்பதற்கு சென்றுவந்த காலங்களில் காவற் கொட்டிலுக்கு ஒரு நாள் சங்கீத ரீச்சரை நானும் வரவழைத்திருந்தேன். காவற்கொட்டிலில் கட்டியிருந்த வரிச்சுக் கட்டிலில் நான் சங்கீத ரீச்சரைக் கிடத்தியிருந்தேன். அல்லது அவள் படுத்திருந்தாள். நேரம் அதிகாலை இரண்டு மணி இருக்கும். வயலுக்கு தண்ணீர் கட்ட வந்திருந் தவர்களது சண்டையும் கலகலப்பும் முழுக்கவும் ஓய்ந்திருந்தது. இரண்டு ஊமத்தங்குருவிகளது சத்தம் மட்டும் தூரத்தில் கேட்டுக் கொண்டிருந்தது. கொழுத்தி வைத்திருந்த கை லாம்பை யும் எரிந்து கொண்டிருந்த அடுப்பை யும் ஏற்கனவே அணைத்து விட்டிருந் தேன். வயலை இருள் மூடி யிருந்தது. இருளுக்குள் யாராவது வருகிறார்களா என்று உற்றுப் பார்க்க முடியாமல் கண்ணுக்குள் வலைபோன்றதொரு தினுசு ஒன்று ஓடிக்கொண்டு இருந்தது. நெஞ்சு கனத்தது. எனது வயலின் வழியிலிருந்த பெரிய பாலைமரத்தின் அடியிலிருந்து யாரோ என்னை நோக்கி வருவதாக ஒரு நிழல் தெரிந்தது. இருளுக்குள் இருந்து ஒரு அசைவு களையும் என்னால் சரிவரக் கணக்கிடமுடியவில்லை.

பின்னாலுள்ள வயலுக்கு போபவர்கள் அதிகமாகப் பக்கத்தி லிருக்கிற தெருவைப் பாவிப்பதில்லை. வயலைச் சுற்றியிருக்கிற தெரு அதிகமான நேரங்களில் சகதியாக சேறும் பள்ளமுமாக தொட்டச்சிணுங்கி செடிகளால் நிறைந்து போய் இருக்கும். இருட்டில் நம்பிக் காலை வைக்கமுடியாத ஒழுங்கைகள் அவை. அதனால் என்னுடைய வயலுக்குள்ளா லேதான் எல்லோரும் தங்களது போக்குவரத்தை வைத்திருந்தார்கள். காவற்கொட்டிலில் தனியே படுத்திருக் கின்ற பல நேரங்களில் அடிக்கடி பலர் வருவது எனக்கு ஒருபக்கம் பிராக்காவே இருந்தது. ஆனால்

இன்று அது பாரிய இடைஞ்சலைக் கொடுத்தது. டோச் லைட்டை எடுத்து வயலைச் சுற்றிவர அடித்தேன். யாருடைய அசுமாத்தங்களும் இல்லை. வெளிச்சத்தின் குவியம் பட்ட இடங்க ளெல்லாம் ஆள் நடமாட்டம் இல்லை. தூரத்தில் தண்ணியின் சத்தம் மெல்லச் சலசலத்துக் கேட்டுக் கொண்டிருந்தது. டோச் லைட் வெளிச்சத்தை நிறுத்தி விட்டு வரிச்சுக் கட்டிலில் படுத்திருந்த சங்கீத ரீச்சரின் மேலே சரிந்து கட்டிப் பிடித்தேன். ரீச்சர் என்னை அணைத்து இறுக்கினாள். உனக்குத் தெரியாது அந்த வரிச்சுக் கட்டில்கள் இரண்டு பேரது பாரத்தைத் தாங்காது. வரிச்சுக் கட்டில் அறுகின்ற சத்தம் போட்டது. மெல்ல எழுப்பி வந்து கொட்டிலின் அருகிலிருந்த வயல் வரம்பில் படுத்தோம். நீண்ட நேரத்தின் பின் திரும்பவும் தண்ணிச் சத்தம் முன் னரைப்போல மெல்லச் சலசலத்துக் கேட்டுக் கொண்டிருந்தது. வரம்பில் போட்டிருந்த உரப்பையின் மீது எழும்பிக் குந்திக் கொண்டிருந்த ரீச்சர் திடீரென என்னை இழுத்து மூத்தரம் பெய் என்று வற்புறுத்தினாள். அந்த நேரம் எனக்கோ மூத்திரம் வரக் கஸ்டப்பட்டது. இருந்தும் முக்கி முக்கி வரவழைத்தேன். பெய்த மூத்திரத்தைக் கையால் ஏந்தி எனது குஞ்சானை உரஞ்சிக் கழுவிவிட்டாள். நானோ வெளிச்சம் வயலில் படமுதல் ரீச்சரைக் கொண்டுபோய் சொக்கர் வீட்டு வாசலில் விட்டுவிட்டு வந்தேன். இதோ பார் வர்சா... இந்த அழுகல் நோய் எனக்கு வராமல் பசுபதிக்கு மட்டும் வந்து அவனைப் பாடாய்ப் படுத்தி ஒரு கட்டத்தில் அவன் இறந்தே போகிறான். இந்த இருவருக்குமான ஒழுக்கவிதி ஒருமுறை பெய்த மூத்திரத்தில் தானே இருந்துவிடுகிறது...

அது பேத்தியாச்சிக்குத் தெரிந்தது போல் ஏன் அங்கேயிருந்த மற்றவர் களுக்குத் தெரியாது போனது?என்று நீ கேட்கும் கேள்விக்கு என்னால் பதில் விளக்கவுரை எழுதமுடியாமலே யுள்ளது. மன்னித்துக் கொள் வர்சா...

● ● ●


# உற்றபோதில் கற்றதை மறப்பாய்

— மஹாபாரதம்

**த. அகிலன்**

விம்பம் 01

அந்த விம்பத்தின் மீது எப்போதுமில்லாதளவு
வெறுப்படைந்துள்ளேன்
நாற்பது வருடத்துப் பகை
வேடங்கட்டி வேடங்கட்டி மேடையேறி
ஆடியடங்காக கோரமுகத்து பொய்
புண்புழுத்த புலாலுடல் கொண்ட கயமை
விதியோ - மதிகொள் மயக்கமோ
திராச் சினங்கொண்ட
உழுத்த நினைவுண் விலாங்கை
உமிழ்கிறேன்
பாதகத்தின் கருநிறமே
நான்தான் நீயெனினும்
நீயில்லை நான் என்பதை
நான் மட்டுமே அறிவேன்.




விம்பம் 02

தளவாடி திறக்க
வேறொரு காலம் உட்தாழ் திறப்ப
காலங்களெட்டா அகாலத் தொலைவில்
நெடுமலையுச்சியில் போகுமவனைக் கண்டேன்
கண்டவனைக் கண்டவர்களை
அவர்களைக் கண்டவர்களை கண்டானாயினும்
எட்டமுடியாத் தொலைவில் அவர்களும் கரையக் கண்டான்
கரைந்தவரைக் கேட்டவரை
கேட்டவரைக் பின் கேட்டவரை அழைத்தானாயினும்
அவன் பாவக் கடல் பெருகி அவன் குரல் வாங்கியழித்து
பாழில் மிதந்தது



கிளிநொச்சியில் பிறந்து
அங்கேயே படித்தவர்.
யுத்தத்தின்போது
வெளியேறி தமிழகத்தில்
சிலகாலம் இருந்தார்.
அங்கிருந்த நாட்களில்
சினிமா முயற்சிகளில்
வெயில் வசந்தபாலனுடன்
இணைந்து
செயற்பட்டிருக்கிறார்.
மரணத்தின் வாசனை என்ற
வாழ்க்கைப்பதிவு பெரும்
கவனத்தைப் பெற்ற புத்தகம்.
தற்போது கனடாவில்
வாழும் அகிலன் வடலி
பதிப்பகத்தின் இயக்குநர்.
“தனித்தலையும் பறவையின்
நிழல்” என்ற கவிதை
நூலையும் வெளியிட்டுள்ளார்

மாமூலன் - கனடா.



# மருதமடு மாதாவே!

# மனுக்குலத்தின் தாயாரே!

மடு என்று பொதுவாகக் குறிப்பிட்டால் அது பெரிய மடுதான். மடு மாதா கோயில்தான். புலிகளின் ஆட்சிக் காலத்தில் கடைசிப்போரின்போது மன்னாரில் களம் திறந்த இலங்கையின் அரசுப் படைகள் கிழக்கு நோக்கி வன்னிமைக்குள் நுழைய வரும்போது மாதா சிலையையும் எடுத்துக்கொண்டு ஓடச்சொன்னார்களே! அந்தத் தேவாலயந்தான் மடு. சின்ன மடு என்றும் ஒரு இடம் - தேவாலயம் யாழ் குடாநாட்டில் இருக்கிறது. சாட்டி, சின்ன மடு இரண்டும் மாதா கோவில்கள்தான். அவை குடாநாட்டில் இருந்து தீவுப்பற்றுக்குச் செல்லும் வழியில் இருக்கின்றன.

சின்னதே சின்னதான இலங்கையில் சைவம், வேதத்துக்குமாய்ச் சேர்த்துக் கொஞ்சம்தான் திருப்பதிகள். பக்தர்கள் போய்த் தங்கியிருந்து வழிபட்டுவரும் இடங்கள். இலங்கையில் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் திருப்பதிகளில் ஒன்றானது மருதமடு. வேதம் என்றால் அது கத்தோலிக்கர்களையும் சைவம் என்றால் அது இந்துக்களையும் குறிக்கும் என்பது ஒன்றும் புரியாத புதிர் அல்ல. இங்கே சைவக்காரர்வேதக்காரர் என்றே குறிப்பிடுவார்கள். ஏன் இப்படி என்ற பஞ்சாயத்துத் தீர்க்க ஆறுமுக நாவலர்தான் வரவேண்டும்.


கத்தோலிக்கக் கிறித்தவர்களுக்கு தெற்கிலிருந்து வடக்காகப் பார்த்தால்...மேற்கே கொழும்பில் கொச்சிக்கடை அந்தோனியார் கோயில், கிழக்கில் தேற்றாத் தீவு யூதா ததேயு கோயில், ஹாகம மாதா கோயில்...அதுவும், இது இலங்கா மாதா கோயில் என்றே அழைக்கப்படும்... அந்தக் கோயிலுக்குள்ளால நீருற்று ஓடிப்போவது புதுமையிலும் புதுமை. அப்பிடியே வடக்காக வந்தால்

மடு வரும். வன்னிமைப் பகுதியின் மேற்கில் மன்னாரை ஒட்டி அமைந்துள்ளது மருத மடு - பெரிய மடுக் கோயில். அங்கிருந்து கடலுக்கு நடுவில் மேற்கே பாலை தீவு அந்தோனியார் கோயில் ராமேசுவரத்துக்கும் இலங்கைக்கும் நடுவில் வரும். பிறகு வடக்காகக் கற்கட தீவு அந்தோனியார் கோயில், நெடுந்தீவுக்குத் தெற்காகக் கச்சத்தீவு அந்தோனியார் கோயில். தீவுப் பற்றிலிருந்து மேற்கிலிருந்து கிழக்காக வந்தால் மாதகல் லூர்த்து மாதா கோயில் - கோடைக்காலத்தில் மாலைவேளையில் முரல் மீன் வாங்கிச் சொதி வைக்க இந்தக் கோயில் மணற்பரப்பிற்குத்தான் முழுக் குடாநாடும் திரளும் - பின்னர் வலித்தூ ண்டல் சந்தான மாதா கோயில், அதற்குக் கொஞ்சம் முன்னால் புதிதாகக் கட்டிய சேந்தாங்குளம் அந்தோனியார் கோயில், பிறகு கிழக்காக வந்தால் ஊறணி அந்தோனியார் கோயில், மயிலிட்டி காணிக் கை மாதா கோயில் தாண்டிச் சன்நிதியையும் தாண்டிச் சென்றால் தும்பளையில் ஒரு கோயில் பின்னர் செம்பியன் பற்று புனித பிலிப்பு நேரியார் கோயில் வரும்.

இங்கு குறிப்பிட்ட கோயில்கள் எல்லாம் திருத்தல - திருப்பதித் தன்மை கொண்டவை. கத்தோலிக்க மக்கள் கடவுளை நினைத்து அல்லது திருவிழாவை நினைத்து அந்தக் கோவில்களை அண்டிப்போய் விழா நாட்களில் கோவில் அருகே தங்கியிருந்து வழிபட்டு திரும்பி வரும் இடங்கள். இதைப்போன்ற வேதத் திருத்தலம் அல்லாத சைவத் திருத்தலங்கள் நிறையவும் இலங்கையில் உண்டு என்பது சொல்லத் தேவையில்லை. இப்படிப்பட்ட இடங்களுக்குப் போய் ஓரிரு நாள் தங்கியிருந்து வழிபாட்டுடன் விழாவில் கலந்து திரும்புவது பொதுவானது தான். தமிழகத்தைப்போல் இலங்கையில் மதம் சார் வேறுபாடுகள் தீவிரமாக இல்லை. செல்வச் சன்நிதிக்கும் போய் வருவோம். செம்பியன்பற்று பிலிப் நேரியார் கோயிலுக்கும் போய் வருவோம். எல்லா இடங்களிலும் கடலை விற்பவர்களும் முட்டாசுக் கடைக்காரர்களும் எப்போதும் ஒன்றுதான். கொடுக்கும் காசுக்கு அச்சிட்ட தாள்களில் அவர்கள் சுற்றித்தரும் சீனிப் பூந்தி, கடலை, சீனி மிட்டாய் ஆகிய எந்த ஒரு வகையின் அளவும் எப்போதும் மாறாது. எத்தனை கோயில் மாறினாலும் அவர்கள் தங்கள் அளவுகளில் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள்.

இந்தத் திருத்தலங்களில் கதிர் காமத்துக்கும் பெரிய மடுவுக்கும் மட்டும்தான் தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்து வந்து தங்கியிருந்து வழிபட்டுச் செல்லும் சிறப்பு உண்டு. மடுவிற்குச் சென்றால் அங்கே ஒரு கிழமை தங்கிக் கூடாரம் அடித்துத் தங்குவது என்பது கனவில் வரும் வாழ்க்கை போன்றது என்போன்ற சிறுவருக்கு. மடுவில் சிறுவர்களது சிறப்பு விருப்பமா யிருப்பன, சிங்கள வியாபாரிகள் வந்து வைக்கும் வரிசையான சர்பத் கடைகள். "என்டே...மே என்டே" என்கிற சிங்களச் சொல்லைத், தொடரை அந்த வியாபாரி களிடமிருந்துதான் முதன் முதலாக அறிந்து கொண்டிருந்தேன். அவர்கள் சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளை என வண்ணச் சர்பத்துக்களை ஒன்றுடன் ஒன்று கலக்காமல் ஒரே கிளாசிலேயே ஊற்றி வைத்திருக்கும் சர்பத்துக்கள் எங்களுக்கு விஞ்ஞான விளக்கம் தெரியும் வரை அதிசயம். பூப்பறிப்பவர்கள் செய்து வைத்திருக்கும் கூடையைப்போல தென்னோ லையால் செய்யப்பட்ட கூடைகளில் நிறைத்து வைத்திருக்கும் ரம்புட்டான் பழங்கள் கொள்ளை அழகும் கொள்ளைச் சுவையும். பட்டுப்புளியைக் குவித்து வைத் திருப்பார்கள். பச்சையிலிருந்து மஞ்சளுக்கு மாறி சிவப்பாகிக் காயும் வரை அந்தப் பழத்தின் நிறங்கள் அதனை மூடியிருக்கும் பிசிர்ப் படலங்களோடு காட்சி தரும் மயக்கமான வண்ணக்கலவையே தனிதான். இதை மிஞ்சும் வகையில் கசுக்கொட்டை! கஜு என்று சொல்லப் படும் அந்த முந்திரிக் கொட்டையின் வித்துக்கள் வறுத்தெடுக்கப் பட்டு சட்டிகளில் குவியலாகவும் பைகளில் அடைக்கப்பட்டும் இருக்கும். கூடவே இருக்கும் கித்துள் வெல்லத்தோடு கடை வீதியில் நடந்தாலே நாவில் சுவை ஊறும். இது தவிரக் கடையில் கிடைக்காத வந்திருக் கும் யாத்திரிகர் தாங்களே போய் காடுகளில் பறித்துக் கொள்ளும் பாலைப்பழம் இந்தப் பட்டியல் எதிலும் அடங்காத சுவையும் மணமும் பட்டறிவும் தருவது!

கோவிலின் தெற்கும் வடக்குமாக இணையாக ஓடும் ஏறக்குறைய நான்கு வீதிகளில் கிழக்குப் பக்கம் கடைகளும் மேற்குப் பக்கம் குடியிருப்புக்களும் அதிகம் இருந்தன. மடுத் தேவாலய நிர்வாகம் வீடுகள் தொடர்குடிசை வகை தங்குமிடங்கள் போன்ற கட்டி வாடகைக்கு விட்டாலும்கூட இப்படி ஆங்காங்கே காடுகளுக்குள் கூடாரம் அடித்துத் தங்கி இருப்பது சிறப்பாகத்தான் இருந்தது. சுற்றிலும் வெளியான இடங் களை இடையிடையே மரங்களால் நிரப்பி வைத்திருக்கும் ஒரு



**மாமூலன்**

மாமூலன் - ரஃபேல் என்ற புனைப்பெயர்களில் எழுதும் இவர் தமிழ் நாட்டில் 14 வருடங்களும் பிரான்சில் 04 வருடங்களும் புலம்பெயர்ந்து தற்போது கனடாவில் வசித்து வருகிறார்.

யாழ் இளவாலை புனித ஹென்றிஸ் கல்லூரியின் பழைய மாணவனான இவர் ரஃபேல் என்ற பெயரில் பல மொழிபெயர்ப்புகளை செய்துள்ளார்.

வின்சன்ட்போல் சந்தியாப்பிள்ளை என்ற இயற்பெயரைக் கொண்ட ரஃபேல் சென்னை காமராஜர் பல்கலைக்கழக பட்டதாரி ஆவார்.

நிலப்பகுதியில் கிழக்கு நோக்கியபடி மடுமாதா கோயில் அமைந்திருக்கிறது. கோயில் முன்னால் அரைவட்ட வடிவில் மரங்கள் ஆங்காங்கே உள்ள மைதானம். திருவிழாத் திருப்பலிக்கு அங்குதான் மக்கள் கூடுவார்கள். அதன் தென் மேற்குப் புறங்களாக பணி மனைக் கட்டிடங்கள் இருக்கும். அதன் பின்னால் வீதிகள் வந்து தொடுத்துக்கொள்ளும். ஆனால் பெரிய கோவிலின் கட்டத்தின் வடக்கு புறத்தில் நெடுங்குத்தாக கோயிலின் சள்ளையில் இருப்பது போல இரண்டு சிறிய கோயில்கள் மிகவும் நெருக்கமாக உண்டு. நெருக்கமாக என்றால் சில மீற்றர் இடைவெளிகளில் இருக்கும். அதில் கிழக்காக இருப்பது திரு இருதயக் கோயில் அதில் இருந்து இரண்டு காலடி இடைவெளிகளில் இருப்பது நற்கருணை ஆண்டவர் கோயில். திரு இருதயக் கோயில் கிட்டத்தட்ட ஒரு மடம் மாதிரியேதான் பாயன்பாட்டில் இருந்தது. அவ்வப்போது திருப்பலிகளும் மன்றாட்டுக்களும் நடந்தாலும் மதியத்திலும் இரவிலும் ஆட்கள் வந்து இளைப்பாறுவதும் உறங்குவதும் நடக்கும். அதற்கு மாறானது நற்கருணைக் கோயில். பெரிய கோயிலில் இருந்து வழிபாடுகள் திருப்பலிகள் முடிந்ததும்... அங்கிருந்து நற்கருணையைக் கொண்டுவந்து இங்கே வைத்துவிடுவார்கள். பெரியகோயிலில் மக்கள் அன்னை மரியாள் - மாதாவை முழு முதல் கடவுளாக நினைத்துக் கொண்டாடிக் கொண்டிருப்பார்கள். அதனால் தேவ நற்கருணைக்குரிய பாத்திரமும் மரியாதையும் மக்கள் கவனத்தில் இருந்து வழங்கப்படாது என்ற அக்கறை காரணமாயிருக்கலாம். ஆக நற்கருணைக் கோயில் எப்போதும் பக்தி மான்களால் நிறைந்திருக்கும். அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். உள்ளே நுழைந்தால் அது ஒரு இத்தாலியக் கதீட்ரலின் சிறுவடிவமாகத் திகழும். எப்போதும் மலர்களால் நிறைத்தும் விளக்குளால் அலங்கரிக்கப்பட்டும் நாளுக்கு ஒரு வண்ணத் தேர்வுகளு டனும் இருக்கும். சிறுவர்கள் சேர்ந்து அந்த வழியால் போகும் போது, கொஞ்சம் விவரமான சிறுவர்கள் அதனுள் போய் முழங்காலில் இருந்து ஒரு சிலுவை போட்டுவிட்டே வருவார்கள். அவர்களைப்பார்த்து தேவதூ தர்களாக முற்பிறப்பில் இருந்திருப்பார்களோ என நினைத்துக் கொள்ளவேண்டியிருக்கும். ஒரு சாதாரண, என்போன்ற சிறுவனுக்குத் தெரிந்த வழிபாட்டு நுணுக்கங்களைவிட அப்படியான சிறுவர்கள் நுணுக்கங் களை அதிகம் கையிருப்பில் வைத்து அவ்வப்போது வெளியில் விடுவார்கள். பார்க்கும் எங்களுக்கு அதிசய மாயிருக்கும்.

** ** ** ** ** **

ஒரு பிறவி தன் உலகை அறிந்துகொள்கிறபோது, அது பின்நாளில் தன் நினைவில் இருத்தி வைத்திருக்கக் கூடிய பட்டறிவுகளைப் பெற்றுக்கொள்ளும்போது, வயது என்னவாக இருக்கும்? தாயின் வயிற்றிலிருக்கும் காலத்தில் இருந்தே கரு தன் பட்டறிவுகளைப் பெற்றுக்கொள்கிறது. அவை நனவில் இருக்கலாம் நினைவில் இருப்பதில்லை. எனக்குத் தெரிந்தவரை ஒரு பிறவி தன் அரசல் புரசலான நினைவுகளை ஒரு மூன்று வயதில் இருந்து சுமக்கலாம் என்று கொள்கிறேன். அல்லது நாலு வயது என்று வைத்துக்கொள்வோம்.

ஒரு முதல் விடிகாலையில் கண்விழிக்கும்போது அம்மாவின் அருகே உறங்கி எழும்பாமல் அம்மம்மாவின் அருகே இருந்தது நினைவில் உள்ளது. அதன்போது உள்வாங்கிக்கொண்ட என் உலகின் நினைவில் இருக்கக் கூடிய முதற் காலைக் கதிரவன். அந்த ஒளியை மனதில் வைத்திருக்கிறேன். என்னை ஒட்டியே உடனடியாகத் தம்பியும் பிறந்துவிட்டதனால் - ஓராண்டுக்குள் என்கிறார்கள்- எனக்கு அம்மம்மா வீட்டு வாசம். அம்மம்மா வீட்டிலிருந்து மூன்றாவது காணிக்குள் எங்கள் வீடு இருந்தது. - அதாவது அம்மா வாழும் வீடு. அந்த - எனது வீட்டுக்குப் போவதென்றால் அது ஓர் விடு முறைக்கால உல்லாசப் பயணம் போலத்தான் எனக்குத் தொடக்க காலத்தில் இருந்தது. நான் பிற்காலத்தில் ஒருமுறை பெரிய புரட்சி நிகழ்த்தி அம்மம்மா வாசத்தைவிட்டுப் பிரிந்து வரும்வரை எனது வீடு எனக்கு அந்நியம்தான்.

அப்படியான எனது மிகச் சிறியவயதில் ஒரு நாள் அம்மாவின் வீட்டில் இரவு தங்க நேர்ந்தபோது எங்கள் வீட்டுக்கு விருந்தினர் வருகை இருந்தது. யாரோ ஒருவர் கதிரைமுனையில் இருந்து வந்திருந்தார். எனது தந்தையுடன் சேர்ந்தாயிருக்கலாம். எங்களுக்குத் தூ ரத்துச் சொந்தமாகவும் இருக்கலாம். இப்படியான நாட்களில் பல்வேறு கலகலப்புக்கள் இருக்கும். ஒரு சிறப்பான கறியிருக்கும். சிலவேளை இடியப்பம் அல்லது புட்டு அவிக்கப்பட்டிருக்கும். சிறிதான சுப்பாவுடன் அப்பா வந்திருப்பார். பல கதைகளைக் கதைத்துக்கொண்டிருப் பார்கள். என்ன கதைகள் என்று இல்லாவிட்டாலும் அவை கேட்டுக்கொண்டிருக்கச் சுவையும் சுவாரசியமும் தருபவை. வந்திருப்பவரைப்பார்க்க வேறுயாரும் உறவினர்களும் வந்து செல்வார்கள். அது ஒரு மகிழ்வான தருணம்தான்.

இன்று அம்மம்மாவின் இரவுத் துணையாக நான் இல்லை. எனது வீட்டிலேயே தங்கியாயிற்று. எப்போது உறங்கிப்போனேன் என்று தெரியாது. வந்திருந்த மாமாவோடு - அவரின் பெயர் அதிசயம் என்பதாக என் மனம் பதிவு செய்து வைத்திருக்கிறது - நான் படுத்துக் கொள்ளலாம் என்று வீட்டில் முடிவானதாக நினைப்பு. என்னேரம் என்றில்லை எங்கள் வீட்டின் சின்னறையில் இருக்கும் கட்டில் என்று மட்டும் தெரியும். வீட்டுக்கு வந்திருந்த மாமாவின் அருகில் எனக்கு விழிப்பு வருகிறது. அந்தச் சிறிய வயதில் ஒரு பிறவிக்கு வரக்கூடிய

மரணத்தூக்கம் கலைகிறது. எனது அரைக் காற்சட்டைக்குக் கீழே உள்ள தொடைப் பகுதியில் எதுவோ வழுக்கி வழுக்கிச் செல்வது மாதிரி உணர்வு. குளத்தில் பிடிக்கப் பட்ட மீனைக் கரையில் வைத்துக் கையில் தூக்கினால் இருப்பதுபோல. கலைந்த தூக்கம் எப்போது மீண்டும் வந்தது உறங்கினேன் என்பது தெரியாத வயது.

வீட்டில் ஒரே பரபரப்பு. அந்தச் சத்தத்தில்தான் நான் காலையில் எழுந்து கொள்கிறேன். என்னையாரும் கவனித்த மாதிரித் தெரியவில்லை. வழக்கமாக நடக்கும் “பல்தீட்டி முகங்களுவுங்கோ...” உபசரிப்புக்கள்கூட இல்லை. வீட்டில் ஏதோ களவு போய்விட்டது என்று பார்க்கிறார்கள். பெரியஅறையில் போய்த் தேடிக்கொண்டிருக் கிறார்கள். அம்மம்மாவும் அப்பாவும்கூட வந்து நின்றார்கள். வேறு யாரெல்லாமோ நின்றார்கள். கொஞ்ச நேரத்தில் ரெண்டு பொலிஸ்காரரும் சைக்கியில் வந்து சேர்ந்திருந் தார்கள். அவர்கள் வந்து கண்டுபிடித்த கால்தடம் சின்னறையில் இருந்து பெரியறையைப் பிரிக்கும் சுவரில் கூரைக்குக் கிட்டவாக இருந்தது. அதனால் வந்திருந்த விருந்தினர் நள்ளிரவில் பெரிய அறைக்குள் வீட்டின் நடுச்சுவர் வழியாக எறிக் குதித்துக் களவெடுத்துக்கொண்டு போனதாகப் பொலிஸ் புலனாய்வு முடிவு செய்தது. ஒரு சங்கிலியும் பென்ரனும் ஒரு நெக்கிலசும் கூடவே காப்பு ஒரு சோடியும் போய்விட்டது என்றார்கள். அந்த நெக்லசு பற்றித்தான் அம்மா பல நாள் கவலைப்பட்டிருந்தா. திராட்சைப் பழங்கள் தொங்குவதுபோல சேர்த்துச் செய்ததாம் அது. அதைப் பின்னாளில் அவர் அதைமாதிரிச் செய்து போட்டுக்கொண்டபோது பார்த்து அதன் வடிவம் எதுவென எனக்குப் புரிந்தது. ஆனால் அம்மா நெக்கிலஸ் செய்து போட்டிருந்த நேரம் நான் ஓர் ஆஸ்மா – தொய்வு நோயாளியாகியிருந்தேன்.

இந்தச் சம்பவம் நடந்த மறுகிழமை சேந்தான் குளம் அந்தோனியார் கோவில் திருவிழா நடந்தது. யாழ்க் குடாநாட்டின் தென் பகுதியில் இருப்பவர்கள் - பாசையூர் ஆட்களாய் இருக்கலாம் - சோழகக் காலத்தில் வந்து மீன்பிடிக்குத் தங்கிய இடத்தில் கட்டிய புதிய கோயில் அது. அது உண்மையில் சேந்தான் குளத்தில் அல்ல. வலித்தூண்டலுக்கும் சேந்தான் குளத்துக்கும் நடுவில் உள்ளது. சரியாகச் சொன்னால் கூவில் தவறணைப் பனங்கூடலின் மேற்கு எல்லையாக அந்தக் கோயில் கடற்கரை ஓரமாக இருக்கிறது. அந்த விழாவிற்குக் குடும்பத்தோடு போயிருந்தோம். வலித்தூண்டலில் போய் லீனப்பர் வீட்டில் தங்கியிருந்தோம். அவர் எனது அம்மப்பாவின் நண்பர். அங்கிருந்து நடை தூரத்தில்தான் சேந்தான்குளம்.

விழா முடிவடைந்ததும் இரவு பொப்பிசைக் கச்சேரி இருந்தது. ஸ்ரனிஸ் சிவானந்தனின் “சைவக்கடை சாப்பாடு இப்போ சரியில்லே” பாடலை அன்று நேரடியாகக் கேட்டிருந்தேன். மகிழ்ச்சி மிக்க இரவு. ஓடியோடிப்போய் ஐஸ்பழம் - ஐஸ்கிறீம் வாங்கிக் குடித்துக்கொண்டிருந்தேன். நிறையத்தடவை. எண்ணுக் கணக்கில்லை. எங்கள் வீட்டில் காசுக்குப் பஞ்சப்பட்டதில்லை. அதனால் உணவு வகைகள் எது கேட்டாலும் கிடைக்கும். எத்தனை ஐஸ் பழம் சாப்பிட்டேன் என்பது தெரியாது... எனக்கு மூச்சுக் முட்டிக் கீழ்மூச்சு வாங்கியது. விடியவும் மருத்துவரிடம் கொண்டு போனார்கள். அன்றிலிருந்து நான் தொய்வுக்காரனானேன்.

சின்னவயசு என்பது தாண்டித் தனியாக திரியும் வயசு வரும்வரை தொய்வே எனது துணை. அதனால் அம்மம்மாவும் எனது துணையாக எப்போதும் இருப்பார். என்னைத் தனியே படுக்க விடமாட்டார். பின்னால் யோசித்துப் பார்த்திருக்கிறேன். அன்றிரவு சேந்தான்குளத்தில் எங்கே தங்கப்போகிறோம் யாருடன் படுத்துக்கொள்ளப் போகிறோம் என்கின்ற பயமே எனக்கு உச்சத்தில் இருந்தது. தொய்வு எனக்கு பிற்பாடு உறுதுணையாகவே இருந்தது என நினைத்துக் கொள்கிறேன். தொய்வு வந்தததிலிருந்து அம்மம்மா எனக்கருகில் எப்போதும் இருந்தார். எனக்கு அது ஆறுதலாக இருந்தது. தொய்வை மாத்துவற்குப் பிரயத்தனப்பட்டனர். தமிழ் வைத்தியங்கள் தேடிப்போனோம். தொய்வு என்னை விட்டுப் போவதாக இல்லை. அது போனபோது எனக்கு பத்து வயது தாண்டியிருந்தது. புதிதாக வந்திருந்த ஒரு தமிழ் பரியாரி தந்த எண்ணையில்தான் சுகமானது என்றார்கள்.

ஆனால் அந்தக் காலகட்டத்திலதான் - எனது தொய்வு நோய் சுகமான காலகட்டத்தில்தான் எங்கள் வீட்டில் அதிசயம் களவு எடுத்துக்கொண்டு போன நாளின் இரவில் எனக்கு என்ன நடந்தேறியிருக்கிறது என்பதை நான் கண்டு பிடித்திருந்தேன். கண்டுபிடிப்புக்கு உறுதுணையாக மேலும் பல நிகழ்வுகளும் நடந்திருந்தன. அதுதான் இதுவா என்று உறுதிப்பட வைத்தன.

ஏறக்குறைய ஆறு வயதிருக்கும். ஒரு நாள் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குப் போயிருந்தோம். அது யாரையோ பார்க்கவாயிருக்கும். அம்மாவுடன் போயிருந்தேன். பார்வை, உரையாடல் எல்லாம் முடிந்த நேரம் வீட்டிற்குப் புறப்படுவதற்கு ஆயத்தம். அம்மாவிடம் அந்த ஆள் கேட்டாரோ அம்மா கேட்டுக்கொண்டாரோ நானறியேன். எங்கள் ஊரைச் சேர்ந்த ஒருவருடன் சைக்கிளில் நான் வீடு திரும்பிப் போவதென்பது முடிவானது. இல்லாவிடில் நான் அம்மாவுடன் தெல்லிப்பயைச்சந்தி வரை ஒருமைல் நடந்து அங்கிருந்து பஸ்சில் காங்கேசந்துறையில் போய் இறங்கவேண்டும். அங்கிருந்து ஒருமைல்தூரம் நடந்து ஊருக்குப் போகவேண்டும். அதைத் தவிர்ப்பதற்காக இருக்கலாம் அம்மா அப்படி யோசித்திருக்கலாம். தெல்லிப்பளை மருத்துவமனையில் இருந்து நேராக வடக்கு நோக்கி ஒரு கோட்டைக் கீறினால் அது எங்கள் ஊரில் போய் முட்டும் ஓர் குறுக்கு வழி.

குளத்தடிப் பிள்ளையார் கோயில் அம்மப்பா கள்ளுக் குடிக்கும் சீனியரின் வீடு தாண்டித் தையிட்டி வழியாக அது இருந்தது. மாலையாவதற்குச் சற்று முன்னர் இருக்கலாம் சையிக்கிளில் புறப்பட்டிருந்தோம்.

சைக்கிள் பிள்ளையார் கோயிலடியைத் தண்டிப் போய்க்கொண்டிருந்தது. நான் என்னைச் சயிக்கிளில் கொண்டு செல்பவரிடம் "மாமா... மாமா" என்று கதைத்துக் கொண்டிருந்தேன். எனக்கு எப்போதும் எனது அம்மப்பா வுடன் சயிக்கிளில் இப்படிச் சுத்தி அது ஒரு பழக்கம். வளவளவென்று கதைத்துக்கொண்டும் கேள்விகள் கேட்டுக் கொண்டும் இருப்பேன். சைக்கிள் ஓடி வந்த மாமா அப்போது " பிடியடா இதை" என்றார். எதைப் பிடிக்கச் சொல்கிறார் என்று தெரியவில்லை...தெரியவில்லை. திரும்பவும் "பிடியடா" என்று அதட்ட அதை எடுக்க - பிடிக்கக் கையைக் கொண்டுபோனேன். எனது கையில் அவர் தந்தது என்னவென்று ஊகித்தறிந்தவுடன்அறிந்தவுடன் பயம் பற்றிக்கொண்டது. அடிவயறு குளம்பி வயிறு வலியெடுக்கத் தொடங்கியது. அந்த ஆளின் - மாமாவின் ஆண்குறி எனது கையில் இருந்தது. எனது குறியைத்தவிர எதையும் தொட்டுத் தெரியாத எனக்கு அது தந்த பிம்பம் கொடுமையானது. நான் மிரண்டுபோய் மூக்கால் அழத் தொடங்கினேன். பெரிய ஓர் பனந்தோப்பின் அருகில் உள் பாதையால் சைக்கிள் போய்க் கொண்டிருந்தது. சைக்கிள் திடிரென்று நின்றதும். "இறங்கடா கீழே" என்று என்னை தரையில் படுக்க வைத்தார். "யாரிடமும் சொல்லக்கூடாது. சொன்னியெண்டால்..." என்பது நினைப்பில் இருக்கிறது. அந்தக் குரலில் இருந்த மிரட்டல் நினைப்பில் இருக்கிறது. அல்லது அது அந்த நேரத்தில் என்னிடம் இருந்த உச்சப் பயத்தின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். இந்தக்கணத்தின் பின்னானவை என் நினைவில் இன்றுவரை மீட்டிக்கொண்டுவர முடியாததாகத்தான் இருக்கின்றன. பலதடவைகள் மனதைப்போட்டு உருட்டியும் அது எனக்கு வருவதாக இல்லை. எப்படி எப்போது வீடு வந்தேன் என்பதெல்லாம் நினைவில் இன்னும் இல்லை. அப்படியே இருட்டிவிட்டது. அடுத்தும் தொடர்ந்தும் வந்த நாட்களில் நான் மிகவும் தொய்வு நோயில் உளன்றேன். நோயைத் தவிர அந்த நாட்களில் எதுவும் எனக்குச் சிறப்பாக நினைப்பில் இல்லை. தொய்வு - இழுப்பு- ஆஸ்த்மா என்பது சுவாசிக்கும் பிராண வாயு தட்டுப்பாடாகும் நிலை. ஒவ்வொரு கணமும் சாவிற்கு முன்பு இழுக்கும் மூச்சைப் போல வீரு வீரென்று சுவாசப்பை வேலை செய்யவேண்டும். இல்லாவிட்டால் இறப்பதுபோல இருக்கும். இப்போதிருக்கும் நவீன மருத்துவ வசதிகள் போல பிராணவாசுவை மூக்கில் முகமூடி போட்டுச் செலுத்தும் வசதி அப்போது இல்லை. வலுவுள்ள பிள்ளை பிழைத்துக்கொள்ளும். அவ்வளவுதான்.

அப்படியான நாட்களில் சில ஆண்டுகள் கழிந்து விட்ட மற்றுமொரு பகல்பொழுதில்தான் எனக்கு தொய்வு நின்று போனதாக உணர்ந்து கொண்டேன். வரப்பிரசாதம் பரியாரியின் எண்ணைதான் அதற்குக் காரணம் என்றார்கள். அவரும் திறமையானவர்தான் என நினைக்கிறேன். அதற்கு முதல் எனக்கு எந்த ஆங்கில மருந்தாலும் தொய்வு நிற்கவில்லைதான். இன்றும்கூட ஒரு ஆங்கில மருந்தும் தொய்வு நிற்பாட்டும் திறமையை வைத்திருக்கவில்லை என்றே நினைக்கிறேன். முகத்தில் முகமூடிபோட்டு ஒட்சிசன் கொஞ்சநேரம் சுவாசிக்க வைத்து வீட்டுக்கு அனுப்பும் திறமை மட்டுமதான் ஆங்கில மருத்துவத்துக்கு உண்டு.

ஓடியாடித்திரியும் வயது வந்ததும் சுற்றாடலில் போய் விளையாடத் தொடங்கும் காலம். அந்த நாட்களில் தான் எனது ஆண்குறியை எனக்குக் காட்டித் தந்தவர்கள் இருந்தார்கள். இது சிறுவயதில் அறியும் ஆர்வத்தில் எல்லாக் காலத்திலும் சிறுவர்கள் செய்து கொள்வதுதான். என்றாலும் சில சிறுவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கவும் செய்தார்கள். யாராவது ரெண்டு பேர் தங்கள் தனிப்பட்ட உறுப்புக்கள் சார்ந்து தேடலில் இருப்பது மற்றவர்களால் கண்டுபிடிக்கப்பட்டால் கெட்ட பழக்கம் செய்தார்கள் என்போம். இந்தக் கெட்ட பழக்கம் என்பது சிறுவயதில் சிறியவர்களின் மனதுக்கு ஒப்புதலானதாகவும் - ஆனால் பெரியவர்களுக்கு மறைக்க வேண்டும் என்பதாயும் விதிகள் சிறுவர்களிடம் உள்ளார இருந்தன. கெட்டபழக்கம் செய்து பிடிபட்டால் - அதாவது மற்றச் சிறுவர்களிடம் அகப்பட்டுக்கொண்டால் அந்தச் செய்தி வீட்டிற்குப் போய்விடும் என்ற பயத்தில் கொஞ்சநாட்கள் ஓடும். ஆனால் எனக்குத் தெரிய ஒரு சிறுவரும் மற்றவர்களைக் காட்டிக்கொடுத்ததாக நினைவில் இல்லை. ஆக எல்லாருக்கும் இப்படி அவரவர் அளவில் ஏதோ ஒரு ரகசியம் இருந்திருக்கும் போல. அந்தப் பெருந்தன்மையில் நாம் ஏன் மற்றவனைக் காட்டிக் கொடுப்பான் என்று விட்டுவிட்டார்கள் போல...ஆனால் இந்தக் கெட்ட பழக்க விளையாட்டுக்கள் யாராவது பெரியவர்கள் கண்ணில் பட்டுவிட்டால் பூவரசம் தடி தும்பாகிவிடும். எனது தாயாரும் ஒருதடவை பூவரசம் தடியைத் தும்பாக்கினார். அதுவும் படலைக்கு வெளியில் வைத்து.... இப்படியான நடவடிக்கைகள் பிள்ளைகளுக்கான தண்டனை என்பதைவிடவும் தண்டனை கொடுக்கிறோமாக்கும் என்று ஊருக்குச் சொல்வதுதான்.

வயது மீறியவர்கள்... குறிப்பிட்ட எங்கள் பருவத்தின் வயதை விட்டு அடுத்த அடுத்த வயதுப் பிரிவிற்குள் வளர்ந்து இருப்பவர்கள் அல்லது இளைஞர், பெரிய வயதினர் முதலியோர் சிறுவர்களைப் பால் நடவடிக்கைசார் தொந்தரவிற்குட்படுத்தினால் கம்பி என்போம். அதாவது கம்பி அடித்துவிட்டார்கள் என்போம். இந்தக் கம்பி என்பது சட்டத்திற்குப் புறம்பானதாய்த்தான் இருந்தது என நினைக்கிறேன். தாங்கள் கம்பி அடிக்கப் படுவதை எந்தச் சிறுவர்தான் விரும்பவார். இதைச்

சிறுமிகள் தங்கள் தரப்பில் எப்படி எதிர்கொண்டார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் அண்மைக்கால நவீன ஊடகங்கள் "பாலியல் துஷ்பிரயோகம்" என்று சொல்கின்றன. அல்லது "தவறான கையாளுகை" என்கின்றன. ஆக ஒரு வளர்ந்தவர் ஒரு சிறுமியையோ சிறுவனையோ பாலியல் நற்பிரயோகம் செய்யும் அல்லது சரியான கையாளுகை செய்யும் வழியும் இருக்கிறதா என்ன? அய்யா ஞாயவான்களே!

இந்தக் காலகட்டத்தில்தான், எனது பரஸ்பரச் சிறுவர் வட்டத்தின் உடல் தேடல்தான், அதிசயம் வீட்டில் களவெடுத்துக்கொண்டுபோன நாளில் எனக்கு என்ன நடந்தது என்பதைப் புரியவைத்தது. பால்சார் நடவடிக்கைகளைக் கற்றுத்தரும் பாடத்திட்டம் - காலம் அப்போது இல்லை. எங்கள் காலத்திற்குச் சற்றுப் பின்னராக அது பாடத்திட்டத்தில் வந்திருந்தது. அது எனது எட்டாம் வகுப்பில் என்று நினைக்கிறேன். அல்லது ஜே.ஆர் வந்தபின் வந்த இலவச பாடப் புத்தகத்தில் என்பது சரியாய் இருக்கும். ஆனால் அதனாலும் ஏதும் மாறிவிடவில்லை. பால்சார் அறிவும், பால் நடிவடிக்கைசார் அறிவும் எச்சரிக்கை உணர்வும் தப்பித்துக்கொள்ளும் முறையும் முறையாக எங்கள் சமூகத்தில் இல்லை. உனது *Private parts* உன்னாலும், சிறியவயதில் உதவி என்ற வகையில் உனது அம்மாவினாலும் தான் கையாளப்படலாம் என எனது குழந்தைக்குக் கற்பித்திருந்தேன். சொல்லி வைத்தமாதிரி அவருக்கு ஆண்குறியில் ஓர் சிறு பருப் போட்டிருந்தது. அதைக் காண்பிக்கக் குடும்ப வைத்தியரிடம் சென்றார்கள். அவர் பெண்வைத்தியர்தான். ஆனால் வைத்தியருக்கு தனது ஆண்குறியைக் காட்ட மறுத்து விட்டார். ஏன் என்று அறிந்ததும் மருத்துவர் சிரித்து விட்டாராம். ஆனால் உண்மை நடைமுறை என்பது அவ்வாறுதான் இருந்திருக்கக்கவேண்டும். குழந்தைகள் சரியான வகையில் அறிவூட்டப்படவேண்டும்.

எமது காலத்திலோ நிலையே வேறு. எனக்கு ஏற்பட்ட பாதிப்பையே யாரிடமும் சொல்ல வழியில்லை. குறிப்பாக எனக்கு யாரையும் இந்தக் கம்பி விசயத்தினால் கண்டால் பயமாக இருக்கும். பாடசாலைக் காலத்தில் அங்கேயும் இந்தக் கம்பிக் கதைகள் உலாவருவது அனைவரும் அறிந்திருப்பர். நான் ஓர் பிரபல விளையாட்டு குழு உள்ள பாடசாலையில் படித்தவன். அங்கேயும் இந்தக் கதைகள் உண்டு. அதுவும் அது குறிப்பாக கத்தோலிக்க மதகுருக்களாலும் துறவியராலும் நடாத்தப் படுவது அந்தப் பாடசாலை. அதனால் கதைகளுக்குச் சொல்லவும் வேண்டுமா?

ஒரு தடவை என்னை எனது விளையாட்டுப் பயிற்சியாளர் கூப்பிட்டிருந்தார். அவர் ஓர் துறவி. பகல் பத்து மணியிருக்கலாம். நான் பேபி லெவண் விளையாடிக் கொண்டிருந்த நேரம். பெரிய பையன்கள் வெளியில் நின்று உசுப்பேத்திக்கொண்டிருந்தார்கள். அந்த பிரதர் கம்பி என்று பரவலான கதை. நான் அவரைச் சந்திக்கப் போக வாசிலில் நின்று கொண்டிருந்தேன். "இண்டைக்கு நீ சரி" எண்டு சொல்லி உள்ளே அனுப்பினார்கள் சில *3rd Team* பெடியள். உள்ளே நுழைந்ததுதான் தாமதம் நான் "ஓ!" என்று விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டேன்.

பிறதர் "ஏன் அழுகிறாய் ஏன் அழுகிறாய்" என்றார். 'என்னத்தைச் சொல்ல...?வாசலில் வைத்து பெரிய பையன்கள் கம்பிப் பயம்காட்டி மிரட்டிய கதையைச் சொல்லவா? அல்லது எனது கடந்தகால வரலாற்றைச் சொல்லவா? அழுது கொண்டே இருந்தேன்.

"போடா! போய் முகத்தைக் கழுவு. கொழும்புக்குத் தேசிய அளவில் விளையாடப் போவதற்கு அடையாள அட்டைக்கு போட்டோ எடுக்கச் சொன்னால், இப்படியா பூப்போட்ட சட்டையுடன் எடுப்பது? வேறு படம் எடுத்து வா!" என்று சிரித்தபடி அனுப்பிவிட்டார். உண்மையில் பிறகு அந்த பிறதரை நினைத்துப் பரிதாபந்தான் எனக்கு. அவரைக் குறித்து இருக்கும் கம்பி என்ற பட்டம் பொய்யாகத்தான் இருந்திருக்கும் என்றே இன்று வரை கருதுகிறேன்.

இந்த வயசுப் பராயத்தில் - காலத்தில்தான் முதன் நன்மை என்ற ஒன்று கத்தோலிக்க சமயத்தவரான எங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும். அது இறைவனுடைய உடல் எங்களுக்குத் தரப்படுவதாகச் சொல்லப்படுவது. அதன் வழியாக அவர் எங்களிடம் ...ஒவ்வொரு கத்தோலிக்கரிடம் உயிரோடு வருகின்றார் என்பது நம்பிக்கை. அந்தச் சிறிய அப்பம் - அது கடவுளுடைய சதை என்பதால் அதைப் பெறுவதற்கு நாங்கள் தூய்மையானவர்களாக இருக்க வேண்டும் அது உடல் தூய்மை உள்ளத் தூய்மை உட்பட்டது. முதன் நன்மை பெறும் காலத்தில் சிறுவர்களாகிய எங்களுக்கு எதுவும் தவறாய் தெரிவதில்லை. அந்தக் காலத்தில்தான் மதபோதனைகளில் எது பாவம் என்று கற்பிக்கப்பட்டு தரப்படும். பாவங்கள் எவை எவை என்றும் அவற்றைச் செய்யக்கூடாதும் என்றும் சொல்லப்படும். பாவம் இல்லாதவர் அல்லது செய்த பாவங்களுக்கு பாவ அறிக்கை மூலம் மன்னிப்புப் பெற்றவர்தான் இந்த முதன் நன்மையையும் அதன் பின்னர் தொடர்ந்து அதை நற்கருணை என்ற பெயரிலும் பெறலாம்.

ஆக மதபோதனையின் பிறகு - இப்போது பாவங்களைத் தேட ஆரம்பித்த நேரம். எது பாவம். எவை பாவம். "அம்மா சொன்னதைக் கேட்கவில்லை. ஆசிரியரிடம் பொய்சொன்னேன். அப்பாவுக்கு வேலைக்கு உதவி செய்யாமல் விளையாடப் போனேன், ஓணானுக்குக் கல்லால் எறிந்தேன். நாய் கெட்டபழக்கம் செய்வதைப் பார்த்தேன்" என்றெல்லாம் பாவங்கள் லிஸ்ட் போட்டு வைத்திருந்த நேரம் அது. இதுதான் பாவங்களை உணர்ந்து அவற்றை லிஸ்ட்போடும் காலம் என நினைக்கிறேன்.

முதன் நன்மை - முதல் நற்கருணை முடிந்ததும் ஒவ்வொரு மாதமும் பாவ அறிக்கை செய்வேண்டும் என்று கன்னியாஸ் திரிமார் கற்றுத் தந்திருந்தார்கள். மன்னிப்புக் கேட்காத பாவங்கள் உள்ளத்தில் - மூளையில் நிறைய இருக்கும் என்றால் பலிபூசையில் நற்கருணை பெறக்கூடாது என்றார்கள். அடிக்கடி, ஒவ்வொரு மாதமும் பாவ மன்னிப்புப் பெறப் போகும்போது மேற்சொல்லப்பட்ட அனைத்துப்பாவங்களுமே திரும்பத் திரும்ப வருவதாக இருக்கும். பலரிடமும் பாவ அறிக்கை கேட்கும் பாதிரியாருக்கு இது ஒன்றும் பிரச்சினையாய் இருந்திருக்காது. ஆனாலும் எங்கள் - சிறுவர் தரப்பில் திருப்பியும் திருப்பியும் ஒரே பாவங்களைச் சொல்கிறோமே என்பது ஒரு புதிய பாவமாக உருவெடுத்த காலம் அது. பாவ மன்னிப்புக்குக் கொத்தாகச் சேர்ந்துதான் சிறுவர் செல்வார்கள். சாமியார் அவருக்கு வசதியான நேரம்தானே வெளியே வருவார். பாவ மன்னிப்புக்குப் போக முன்னர் வெளியே நடக்கும் சிறார் கலந்துரையாடலில் சில கில்லாடி பையன்கள் புதிய பாவங்களை அறிக்கையிட ஆலோசனை சொல்வார்கள். அப்படிச் சொல்லப்பட்டதில் ஒன்றுதான் கெட்டபழக்கம்.

"கெட்டபழக்கம் செய்தேன் என்று சொல்லடா" என்றுவிட்டான் ஒரு பையன். பாவ அறிக்கைக்கு உள்ளே போன நான் சொன்ன பாவங்கள் வரிசையில் அவன் சொன்னதையும் சேர்த்து வரிசையில் உளறி விட்டேன். குலசிங்கம் சுவாமி கூண்டுக்குள்ளால் பார்த்தமாதிரி இருந்தது. வழக்கமாக 'ஒரு பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவேயும்' மூன்று 'பிரியத்த' மந்திரங்களையும் பாவ மன்னிப்புக்கான தண்டனையாகச் சொல்லச்சொல்வார். அதுதான் எனது வழக்கமான பாவங்களுக்கு வழக்கமான தண்டனையாக அவர் கொடுப்பவை. அன்றைக்கு பத்து 'பரமண்டலங்களிலேயிருக்கிற எங்கள் பிதாவேயும்' பத்து 'பிரியத்த' மந்திரமும் சொல்லு என்றுவிட்டார். எனக்குச் சீவன் போய்விட்டது. அதைச் சொல்லி முடிக்க அரை மணித்தியாலம் ஆகிவிடும். அதைவிடவும் முக்கியம் இனிச் சாமியார் முகத்தில் எப்பிடி முழிப்பது என்பது. ஆனால் அவர் அதை வெளியில் சொல்லமுடியாத கடைமையில் இருப்பவர் அல்லவா. எத்தனைபேர் பாவங் களை வகை வகையாய்க் கேட்டிருப்பார். அப்படியென்றால் அந்தக் கோவிலுக்கு வரும் அத்தனைபேரும் அவருடைய முகத்தில் முழிக்கமுடியாது போய்விடுமே...என்று நினைத்து ஆறுதல்பட்டடேன். அதைவிடவும் கொடுமை.. என்னைப் போன்ற சிறார்களைக் கம்பி அடித்து அல்லது பிற்காலத்திய சொல்படி குண்டி அடித்து உண்மையான பாவமும் கொடுமையும் செய்தவன் வெளியே திரிய...எதுதான் எனது ஆண்குறி என்பதைத் தேடி அலைந்த ஓர் அடிப்படைப்பிறவியான நான் வாய்தவறி உளறியதால் பத்துப் 'பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவேயைச்' சொல்லிக்கொண்டிருந்தேன். கடவுளுக்கும் கண்ணில்லை என்பது இதுதான் போலும்.

இந்தப் பாவங்களைச் சொல்வதில் பாவ அறிக்கை செய்வதில்.... அதையும் முகத்தை அறிந்த தெரிந்த பாதிரியாரிடம் சொல்வதில் சிக்கல் தொடரத்தான் செய்தது. முதன் நன்மை வாங்கி, அது பின்னர் தொடர் நன்மையாக ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை பூசையிலும் நற்கருணை என்ற பெயரில் எடுக்கவேண்டும் என்ற நிலையில் இருந்தோம். அதுவும் ஒரு ஊரில், பலி பூசையின்போது தேவநற்கருணை எடுக்கப் போகாமல் இருந்தால் ஊரே உங்களைப் பார்ப்பது போல குற்ற உணர்வு வரும். நான் பாவியாகவும் தேவ நற்கருணை எடுத்துவிட்டு வருபவர்கள் என்னை உற்று உற்றுப் பார்க்கிற தேவ தூதர்களாகவும் தெரிவார்கள்.

இப்போ வளர்ந்தும் விட்டபடியால் எங்களது பால்சார் உடல் தேடல்கள், பரஸ்பர காண்பிப்புக்கள் பாவங்கள் வரிசையில் நீண்டு இருக்கின்றன. ஆனால் அவற்றைச் சொல்லி அறிக்கையிட இடம்தான் இல்லை. ஒரு அறியாப் பாதிரிதான் இல்லை. தொடர்ந்து பாவத்தை மடியில் கட்டிக்கொண்டு, இன்னும் அந்தக் கெட்ட பழக்கத்தைச் சாமியாரிடம் சொல்வில்லை - அதற்கு மன்னிப்புக் கேட்கவில்லை என்பது ஒரு மிகப்பெரிய பாவமாக மனதுக்குள் மாறிக்கொண்டிருக்கும். இதற்கான மன உளைச்சல் என்னைப்போல பிற பையன்களுக்கும், இருக்கும்தானே. அப்போதைய தேடலில்தான் கிடைத்தது வெள்ளைக்காரச் சுவாமியின் கருணை.

நான் படித்த பாடசாலைக்கு அருகில் இருந்த தேவாலயத்தில் ஓர் வெள்ளைக்காரச் சுவாமி இருந்தார். அவர் தமிழ் எமக்குப் புரியும். தமிழில் பேசுவார். எல்லாம் செய்வார். ஆனால் வெள்ளைக்காரத் தமிழ் இருக்கட்டுமே! பாவ அறிக்கையை அவரிடம் செய்யத் தொடங்கினோம். அவரோ மிகவும் நல்லவர். நாங்கள் எவ்வளவு பாவத்தைச் சொன்னாலும் ஒரு 'பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவேயும்' மூன்று 'பிரியத்த' மந்திரங்கள் மட்டும்தான் சொல்லச்சொல்வார். மிகக் கருணையுடன் குறைவான தண்டனை தந்த பாதிரியாராக அவரைத்தான் நான் சொல்வேன். அவருடைய வாய் நாற்றம்தான் தாங்க முடியாதிருந்தது. பாவ அறிக்கைத் தொட்டியின் எல்லை தாண்டியும் அவர் வாய் மணம் சத்தி வருவதுபோல இருக்கும். "ஒரு வெள்ளைக்காரர்...அதனால் கண்டதையும் தின்பார், அதான்ரா மணத்திற்கு காரணம்" என்று அதற்குச் சரியான காரணம் சொன்னான் புத்திசாலி நண்பன். அங்கேயும் பீதியைக் கிளப்பிவிட்டார்கள். அவரும் ஒரு கம்பிக்காய் என்று புரளியைக் கிளப்பி விட்டார்கள். அதனால் பயந்துபோய் நாங்கள் கொஞ்சப்பேர் சேர்ந்து சேர்ந்து பாவ மன்னிப்புக் கேட்கப் போய் வருவோம். மதிய உணவு இடைவேளைக்குப் போனால் அவர் சலிக்காமல் வேகமாகத்தரும் பாவ மன்னிப்பினாலும்

குறைவான செபத் தண்டனைகளாலும் பாவசங்கீர்த்தையும் முடித்து இலந்தைகாட்டுக்குள் போய் இலந்தைப் பழங்களும் பைநிறைய நிறைச்சுக்கொண்டு பாடசாலைக்குத் திரும்பக்கூடியதாக இருந்தது. இன்னும் கொஞ்சம் நேரம் கிடைத்தால் கொன்வென்றில் போய் ஜம்புக்காயும் காசு கொடுத்து வாங்கி எடுத்துக் கொண்டு போவோம்.

அந்தக் கோடை விடுமுறைக்குத்தான் மடுவுக்குப் போனோம். மடுவில் ஆடி மாதமும் ஆவணி மாதமும் முதன்மைத் திருநாட்கள் நடக்கும். பல திக்குகளிலிமிருந்தும் நேர்த்திக்கு என்று நடையாய் நடந்து போபவர்களும் லொறிகளைப் பிடித்துப் போபவர்களும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் பிடித்துப் போபவர்களும் தனியாகத் தாங்களே பொதுப் போக்குவரத்தில் போவர்களும் என பல வகையில் செல்வார்கள். நாங்கள் புகைவண்டியில் போய் பின்னர் பஸ்ஸில் சென்றதாக நினைவு. பலமுறை சென்றாலும் இதுதான் எங்கள் குடும்பத்திற்குப் பிடித்தமான வழிமுறை. எனது தந்தையும் ஒரு அட்வெஞ்சரிஸ்ட்டாக இருந்ததும் ஒரு காரணம்.

எனக்குத் தண்ணியென்றால் பயம். சிறிய வயதில் மடுவிற்கு வந்தபோது குளிக்கும் தொட்டியடியில் அம்மாவை மீறி ஓடித்தப்பித் தொலைந்து போன கதையும் உண்டு என்பதால் தொடக்க காலங்களில் மடுவுக்குப் போனால் என்னை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் விடமாட்டார்கள். இந்த முறை கொஞ்சம் கூட்டாளிகளோடு திரியும் பருவம். கடைக்கெல்லாம் தனியாகப் போய் வந்தேன். சங்கக் கடையில் பாண் வாங்க நானே போகக் கூடியதாய் இருந்தது. நான் என்பாட்டுக்கு தலையைக் கவிண்டபடி நடக்கும் பழக்கம். ஒரு தடவை இப்படிச் சங்கக் கடைக்குப் போய்க்கொண்டிருக்க யாரோ எனக்கு முன்னால் மறித்தார்கள் விலகிப் போக திரும்பவும் மறித்தார்கள் ...ஓட்டம் பிடித்தேன்... பின்னால் என் பெயரைச் சொல்லிக்கூப்பிடவும் திரும்பிப் பார்த்தேன். எனது பாடசாலையில் தங்கிப் படிக்கும் மன்னார்ப் பகுதி நண்பன் சேவியர் நின்று கொண்டிருந்தான். பிறகென்ன மற்றொரு கூட்டாளி கிடைத்த மகிழ்ச்சியில் மடுவைச் சுத்திய மிக அருமையான ஒரு திருவிழாக்காலம். அவன் ஒரு தடவை எங்கள் கூடாரத்திற்கும் வந்திருந்தான். எனது பல மடுயாத்திரைகளில் இப்போதுதான் எனக்குத் தெரிந்த வெளியூர் நண்பன் ஒருவனை நான் சந்திக்க நேர்ந்திருந்து. சேவியர் மன்னார் என்றபடியால், அது மடுவிற்கு அருகே இருக்கும் ஊர் என்பதால் அவனுக்கு மடு தலைகீழாகத் தெரிந்திருந்தது. பெரிய கோவிலிருந்து நேரே வடக்கே போனால் கூட்டுறவுச் சங்கம், காவல் நிலையம், அப்படியே போனால் இன்னும் தெற்கே மருதமடுக் குளம் எல்லாம் இருந்தன. கோவிலின் மேற்கு எல்லையில் வடக்கு கிழக்காக மடுறோட்டையும் பூநகரியை நோக்கிப் போகும் பாதையையும் இணைக்கும் கிளை வீதி போனது. அந்தப்பக்கம் மருத்துவமனை இருந்தது. கோவிலின் முன்னால் கிழக்கு நோக்கிப்போனால் அடுக்கடுக்காக இருக்கும் மூன்று வீதிகளும் கடைகளாய் இருந்தன. இப்படி அவன் வழிகாட்டலில் எனக்கு மடுவின் வரைபடம் மனதில் பதிந்து உலாவரத் தொடங்கினேன்.

திருவிழா முடிந்துவிட்டது. இன்னும் இரண்டு நாட்களில் வீடு திரும்பவேண்டும். ஓர் காட்டுவாகை மரத்திற்குக் கீழே அம்மாவின் சேலைகளினாலும் தார்ப்பாயினாலும் கட்டப்பட்ட குடிலுக்குள் உறங்காமல், ஒரு மாற்றமாக எனது நண்பன் அரசனுடன் கோவில் மண்டபத்தில் உறங்கலாம் எனப்போனேன். எங்களுக்கு காபந்தாக எங்கள் குடும்பத்தின் ஒன்றுவிட்ட தாத்தா ஆபிரகாம் இருந்தார். போயாச்சு படுத்து உறங்கியாச்சு.

கோயிலில் படுக்கும்போது வழக்கமாக சொல்லும் சிலுவைச் செபத்தைச் சொல்லிவிட்டே உறங்கினேன். அது ஒரு காப்பு. கந்தசட்டிக் கவசம் சொல்கிறமாதிரி நம்பிக்கையுடன் சிறார்கள் சொல்லும் செபம். என்னைச்சுத்தி தலை, கால் அருகில் எல்லாம் சிலுவை இருக்கிறது. அது என்னைக் காக்கும் என்று சொல்லி காப்புப்போட்டு படுக்கப்போவது. கையாலே சிலுவையைக் காற்றில் வரைந்து வரைந்து சொல்லும் செபம். நான் குறிப்பாக மேற்குப் பக்கம் எனது காலை நீட்டவில்லை. வடக்குப்பக்கம் நீட்டினேன். மேற்குப்பக்கம் தான் நற்கருணை ஆண்டவர் கோவில். அங்கு அவர் இருபத்திநாலு மணிநேரமும் உயிரோடு இருக்கிறார். அந்தப் பக்ம் கால்நீட்டிப் படுக்கக்கூடாது அல்லவா. எப்போது உறங்கினோம் என்று அறியாத வயதும் ஓடி விளையாடியதில் ஏற்பட்ட அசதியும்...ஒரு சாமத்தில் நான் பெரு வெளிச்சத்தில் கண் விழிக்க முயற்சிக்கிறேன்.

இருவர் பெருவெளிச்சத்துடன் என்முன்னால் நிற்பது தெரிந்தது. நான் செத்துவிட்டேன் என்று நினைத்தேன். இறந்துபோகும் கத்தோலிக்கர்களை அவர்கள் அருகில் வலது பக்கத்தில் இருக்கும் காவல் சம்மனசு - கார்டியன் ஏஞ்சல் மோட்சத்தை நோக்கிக் கொண்டு போகும் என்பது கன்னியாஸ்திரிகள் எனக்குச் சொல்லித் தந்த பாடம். நான் நரகத்துக்குப் போக அப்படி ஒரு பெரிய பாவமும், கெட்ட பழகத்தைத் தவிரவும் எதுவும் செய்யாத வயசு. அதனால் இறந்து போன என்னை சம்மனசு மோட்சத்துக்கு கூட்டிக்கொண்டு போக வந்திருக்கிறது என்று நினைத்தேன். திடீரென்று சந்தேகம்... எப்படி ரெண்டுபேர்...? காவல் சம்மனசு ஒன்றுதானே என்பதற் கிடையில் என் காலில் தடியால் அடி அல்லது லேசான தட்டு விழுந்தது....

முழுதாகவும் திறந்த கண்களால் பார்த்தேன். இரண்டு பொலிஸ்காரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சிங்களத்தில் அவர்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். என்னிடம் ஒருவர் "எழுந்து எங்களோடு வா" என்று

சொன்னார். எனக்கு "எனவா" என்பது மட்டும்தான் விளங்கியது. அல்லது ஏதோ எல்லாம் சொல்லி "என்ன" என்றார்கள். நான் அந்தக் காலத்தில்தான் எதற்கும் இருக் கட்டுமே என்று எனது குடும்பக் கருத்தின் அடிப்படையில் ஒரு நல் அரச உத்தியோகத்தனாகவென எங்கள் ஊரில் குடியிருந்த சிங்களவரான யோகித மாத்தயாவிடம் சிங்களம் படிக்கத் தொடங்கியிருந்தேன்.

இந்த நடுச் சாமத்தில் எங்கே வரச்சொல்லிக் கூப்பிடுகிறார்கள் என்று யோசனை. பக்கத்தில் படுத்திருந்த அரசனைத் தட்டினேன். அவன் முகத்திலும் வெளிச்சத்தைப் பாச்சினார்கள். அவர் உறக்க மயக்கத்தில் தலையைச் சொறிந்தான். அப்போது எங்கள் காபந்து ஆபிரகாம் உறக்கம் கலைந்து திரும்பி பார்த்தார். இரண்டு தடவை தெளிவாகப் பார்த்தபின் மறுபக்கம் திரும்பிப் படுத்து விட்டார். ஒன்று அவர் அரை மயக்கத்தில் இருக்கவேண்டும். அல்லது எதையும் கண்டும் காணாததுபோல் இருக்கவேண்டும். அந்தக் காலகட்டத்தில் தேடப்படுகிறார்கள் என்று நாடுமுழுதும் புகைப்படங்களுடன் ஒட்டப்பட்ட எந்த சுவரெட்டிகளுடனும் என் முகம் பொருந்தாது என்பது எனக்குப் பிற்காலத்தில் தெளிவாகப் புரிந்தது.

எனது இந்த யோசனைகளுக்கெல்லாம் அவர்கள் இடம் கொடுப்பதாக இல்லை. தடியால் தட்டி எழுப்பிக் கூப்பிட்டார்கள். நான் அரசனின் கையைப் பிடித்துக் கொண்டேன். அவனை அவர்கள் கூப்பிடுவதாக இல்லை. அவனும் வருவதாக இல்லை. நான் நகரவில்லை. இந்த இழுபறியில் சத்தத்தில் அந்தச் சுற்றாடலில் உறங்கிக் கொண்டிருந்த அல்லது அப்படி நடித்துக்கொண்டிருந்த அனைவரும் விழித்திருக்கக்கூடும். ஆனால் யாரும் எதுவும் சத்தம் காட்டவில்லை. நான் எழும்பி நடக்கத் தொடங்கினேன் விதியே என்று அரசனும் நடந்து வந்துகொண்டிருந்தான்.

திரு இருதயக் கோயிலின் சள்ளையில் இருக்கும் கிழக்குப் பக்க வாசலின் வழியாக பொலிஸகாரரருடன் நான் நடந்தேன். அரைவட்ட அளவான விழாக்கால மைதானத்தால் நடந்தோம். ஒரு பெரிய ஆலமரமும் வேறு ஒரு சிறிய மரமும் தாண்டினால் பெரிய கோயிலின் கிழக்குப் பார்த்த திறந்த மண்டபம் வரும். அதுதான் கோயிலின் முதன்மைப் பகுதி. அதாவது திருவிழாவின் பெரும் பூசைகள் அங்குதான் நடக்கும். அங்கிருந்துதான் மாதாவின் சொருபத்தை கையில் ஏந்தி பொறுப்புச் சாமியார் ஆசிர்வாதம் போடுவார். அந்தக் காலைவேளை மிகவும் உன்னதமானது. மாதாவின் சொருபத்தை ஏந்தி அந்தப் பொறுப்பான சாமியார் - சிலவேளைகளின் மேற்றாணிமார் சிலுவை அடையாளம் போட்டு முடிக்கவும் வானைப்பிளக்கும் கைதட்டல் எழும். தமிழர், சிங்களவர் வேறுபாடில்லாமல் அந்த ஆசிர்வாதத்தில் கிடைத்த மகிழ்ச்சியைக் கைதட்டல்களால் மக்கள் வெளிப்படுத்துவர்.

> "இருவர் பெருவெளிச்சத்துடன் என்முன்னால் நிற்பது தெரிந்தது. நான் செத்துவிட்டேன் என்று நினைத்தேன். இறந்துபோகும் கத்தோலிக்கர்களை அவர்கள் அருகில் வலது பக்கத்தில் இருக்கும் காவல் சம்மனசு - கார்டியன் ஏஞ்சல் மோட்சத்தை நோக்கிக் கொண்டு போகும் என்பது கன்னியாஸ்திரிகள் எனக்குச் சொல்லித் தந்த பாடம்."

நடந்து அந்தப் போட்டிக்கோ மண்டபத்தின் வாயிலை நோக்கி போய்க் கொண்டிருந்தோம். இடையில் இருந்த ஆல மரம் தாண்டியிருப்போம். நான் குளம்பு அடிக்கப்போகும் மாடுமாதிரி நடக்காமல் இழுபறி செய்தேன். எனக்கு என் பட்டறிவுகளில் இருந்து பயம் பிடித்து அடிவயிற்றைப் சுருட்டுகிறது. அரசனோ எதைப்பற்றியும் கவனிக்கவில்லை. அவனுக்கு உறக்கம் கலைந்த சோகத்தில் தலையை அப்பப்போ சொறிந்தபடி தள்ளாடி நடந்துகொண்டிருந்தான்...

எனக்கோ கிலி பிடித்து ஆட்டியது. அழத் தொடங்கினேன். அவர்கள் சிங்களத்தில்..

"என்ன இப்போ. எங்களோட வந்து இருங்கள். காலையில் போய்விடுங்கள்." நான் நினைச்சது சரியேதான் என்பது உறுதியாகியது. காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் இந்தக் கம்பி விசயம் சின்னப் பெடியளுக்குள் ஓர் கிலியூட்டும் கதையாக உலாவி வந்திருக்கிறது. அது இப்போ மடுவில் வந்து விடிஞ்சிருக்கிறது.

"பெரிய பிரச்சினை ஒன்றும் இல்லை. கரச்சல் படவேண்டாம்" என்றெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

இந்தக் கதைகளே எனக்கு இன்னும் மரண பயம் ஊட்டுவனவாக இருந்தன. நான் ஓர் நொண்டி மாடு நிலைக்கு வந்து விட்டேன். அவர்கள் என்னை இழுக்காத குறை. ...இப்போதுதான் நிமிர்ந்து பார்த்தால் நேரே மேற்குப் பார்த்தபடி நான் நிற்கிறேன். கிழக்கே பார்க்கும் மடுமாதா கோவிலின் பெரிய கோவில் போரட்டிக்கோ- மண்டபத்தின் வாசலில்...எங்கிருந்து விழா முடியும்பேது ஆசீர்வாதம் போடுவார்களோ, அந்த மண்டபத்தின் படியில் விளிம்பில் - அப்படியே முழங்காலில் விழுந்து அழுது குளறத் தொடங்கினே. எனக்கு என்ன தெரியும்? அந்தநேரத்தில் செபமா சொல்ல முடியும். வாயில் வந்ததெல்லாம் சொன்னேன்.

"மருதமடுமாதாவே மனுக்குலத்தின் தாயாரே... என்னைக் காப்பாற்றும் காப்பாற்றும்" என்று அழுது அழுது நிலத்தில் விழுந்து தொட்டுக் கும்பிட்டபடி இருந்தேன். திருவிழா முடிந்ததும் பாடும் பாட்டு நல்வேளையாக என் நினைவில் வந்தது.

அந்தப் பொலிஸ்காரர்கள் இந்தளவுக்கான ஒரு பக்திமானை எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்!

“போ..போ போ...” என்றவாறு சிங்களத்தில் சொல்லி விரட்டின வகையில் சொல்லிவிட்டு வேகமாக நடந்தார்கள். ஒருவர் தலையில் அடித்தார். எடுத்தேன் ஓட்டம்... அந்த ஓட்டம் பாடசாலையில் 200 மீற்றர் ஓடும்போதான வேகத்தைவிட அதிகமானதாய்த்தான் இருந்திருக்கும். வந்தவழியேதிரும்ப ஓடி...திரு இருதயக் கோயில் தாண்டி வரும் வீதியில் மேற்காக வளைந்து வடக்கு நோக்கி போனால் இரண்டு குறுக்குத் தெருக்களின் பின் வரும் ஒடைக்குள்ளால் ஓடினால் என் பெற்றோர் இருக்கும் குடில். ஓட்டம்....அரசனுக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. ஓடின ஓட்டத்தில் திரு இருதயக் காயில் மூலை தாண்டியதும் அப்படியே அந்தக் கோயிலுக்கு ஓடிக்கொண்டே ஒரு நன்றியுடன் நெஞ்சில் சிலுவை போட்டேன். அந்தப் பிராக்கில் முடக்கில் இருந்த வாகை மரத்தின் வேர்களில் கால் தடுக்கி ஏறக்குறைய ஒரு மூன்று யார்தூரம் போய் விழுந்திருப்பேன். திரும்பி எழுந்து ஓடியவன் குடிலில் போய் அம்மாவுக்கருகில் படுத்துவிட்டேன்.

யாரும் என்னைக் கேட்கவும் இல்லலை. எனக்கு ஏன் காலில் காயம் என்று பார்க்கவும் இல்லை. அரசனுக்கும் இதன் பாதிப்பு எதுவும் இல்லை. எங்கள் காபந்து ஆபிரகாமும் ஏதும் எங்கள் வீட்டில் கதைத்துக் கொள்ளவில்லை. எல்லாம் சுபமாக தொடர்ந்தது. எனக்கு மட்டும் தொய்வு என்கிற தொந்தரவு முற்றுமுழுதாக நின்ற போனது. எனக்கு இப்போது எனது பிரச்சினையில் இருந்து தப்பியோடும் துணிவு வந்துவிட்டது. வீட்டில் மடுமாதாவின் கருணையும் வரப்பிரசாதம் பரியாரியும் சேர்ந்து எனக்கு தொய்வை நீக்கிவிட்டதாக நன்றியோடு கதைத்துக்கொள்வார்கள்.

*(The victims who mentioned in this auto bio story are ready to witnessing in any of the court in SL! Names mentioned are coined. but the issue and the incidents are true with fictional additions. We hope positively to open a discussion over this topic. Even while writing this text> we got news of child molestation from Jaffna and elsewhere! )*

●●●

## முரளிதரன் கவிதைகள் - கனடா

விரிந்த அறை
பல வர்ணச் சருமங்கள்
போர்த்தி
இருக்கைகளில்
நெரிந்து
உளைந்தனர்

வாயை
மூட மறுத்த
உபதேசகர்கள்
கட்டெறும்பைக்
கழுதையாக்கினர்

குடித்தலையும்
வண்டியில் பறத்தலையும்
பிரித்துணர
விரித்துரைத்தனர்

பெயர்க்க வந்து
பெருநாளொன்றின்
இடையிலே
தொங்கித் துவண்ட
அலைந்துழல்வு
கட்டுகள் இட்டு
கரைந்தேறும்
வழியற்று,
பூட்டினால்
இட்டாரே
இப்பொய்யுடலை.

விடுதலைப்
பறப்பு இன்றி
வேருடல்
ஊன்றி
எத்தனை ஒளியாண்டுகள்
இவ் இடுகாட்டில்.

(2)
சூரியன் சுட்டெரித்தது
சுவாசச் சிறு குழாய்கள்
பெருத்து
நெஞ்சறை அகன்று
மூச்சு முட்டியது
பிராணவாயு
நிறைந்து வழிகையில்
பூரிப்படைந்த உடல்
விம்மித் தணிகிறது

தண்மைக் காற்றை
வலிந்து
உள்ளெடுத்துக்
கடந்த நாட்களாய்
வலித்த நெஞ்சுக்கூடு
திமிரெடுத்து நிமிர்கிறது

பாய்ந்தும் பதுங்கியும்
உனது நாடகத்திற்கான
தருணம்
வாய்த்தாயிற்று.

## எதிர்பார்ப்பு

அமரர். நா.ஜெயபாலன் - பிரிலை

(அண்மையில் காலமான கவிஞர். அமரர் நா. ஜெயபாலன்” எழுதிய கடைசிக்கவிதை)

காற்று கட்சிமாறி
புயலானது போல்
கடல் சத்தியம் மறந்து
சுனாமியானது போல்,
அரசியல்வாதிகளும்
தேசியத் தலைவர்களும்
குரல்மாறி
கொள்கை மாறி,
வனப்புக்கும் வளத்துக்கும்
ஆசைப்பட்டு
வண்ணத்துப் பூச்சிகளாக
நிறம்மாறி போய்விட்டார்கள்
குன்றிலும் - குடிசையிலும்
ஒப்பாரியாக ஒலித்த
உங்கள் புலம்பல்கள்
ஓராண்டுக்குள் ஓடோடிவிடும்
என்று ஒரேகுரலில் சொன்னவர்கள்,
ஊமையாகிப் போனதுதான்
விந்தையிலும் விந்தை!
பள்ளிகளில்
வளர்ச்சியில்லை!
பாதைகளில்
மாற்றமில்லை!
பழைய வீடுகளை
பறிகொடுத்து நின்றவர்கள்,
புதிய வீடுகளுக்கும் மட்டுமல்ல
புதிய வாழ்வுக்கும்
தலைமைகளையும்
தலைவர்களையும்
ஏக்கத்தோடு மட்டுமல்ல
ஏமாற்றத்தோடும்
எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள்!

# இலவு காத்த கிளி

கீதா கணேஷ்



குழந்தையாயிருந்த போது அவன் எப்போதோ ஓரிரு தடவைகள் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டான். அவன் மறந்து விடுவான் அல்லது தருணம் வரும் போது அவனை மறக்கப் பண்ண லாம் என்ற அதீத நம்பிக்கை என்னுள் முளை விட்டிருந்ததால் அவனது கேள்வியை நான் பெரிதாக அலட்டிக் கொள்ள வில்லை. ஆனால் எனக்குள் அது பெரிய வடுவாகவே இருக்கிறது.

பதினொரு வருடங்களுக்கு முன் எப்படி என்னுள்ளத்தைத் தைத்ததோ அவ்வாறே இன்றும் பிடுங்க முடியாத பழுநிலை குத்தி நிற்கிறது. இப்படி ஒன்றா? இரண்டா? ஆயிரம் முட்கள்.

ஒவ்வொரு குழந்தைகள் வந்து இணையும் பொழுதும் ஒவ்வொரு முட்களாய் இதயத்தைக் கிழித்து இரத்தத்தைப் பீச்சி விடும். இப்போது என்னை அவன் அடிக்கடி கேட்கத் தொடங்கி விட்டான்.

நானோ, "உனக்கு மட்டுமில்லை இங்கு எத்தனையோ சிறுவர்கள் உன்னைப் போலத்தான். நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும். அதுதான் எங்கட சொத்து." நான் அவனது கையில் சாப்பாட்டுத் தட்டைக் கொடுத்து கொண்டே கூறினேன். ஆனால் அவனுக்கு அதில் திருப்தியில்லை. என் கண்கள் குளமாய் நிரம்பின.

"எங்கேயாவது மறைவாக இருந்து விடலாமா?" என எண்ணத் தோன்றியது. கடந்த மூன்று வாரங்களாக நிர்மலனில் என்றுமில்லாத ஏக்கம் படர்ந்திருப்பதையும் அதன் வழியாக அவனது தேடல்கள் இன்னும் நீண்டு செல்வதையும் அவதானித்தேன். என்னைப் பொறுத்தவரை அவனிடம் எதுவுமே சொல்ல முடியாது. அவன் என்னை "அம்மா" என்றுதான் அழைத்தான்.

இங்குள்ள எல்லாப் பிள்ளைகளும் என்னை "அம்மா" என்றழைப்பதும் வகுப்பில் பிள்ளைகள் தமது அம்மா, அப்பா பற்றிக் கதைக்கும் போது அம்மாக்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக இருக்க வேண்டும் என அவன் உணரத் தலைபட்டிருக்க வேண்டும்.

"அம்மா, எனக்கென்று ஒரு அம்மா தனியா இருக்கிறாவா?" ஏழு வயதில் என் முகத்தை அண்ணாந்து பார்த்து வாஞ்சையோடு கேட்ட முதல் கேள்வி இதுதான். அப்போது நான், உமையமைக்காட்டி "இவர்தான் அம்மா" என்று சொன்னேன். அவன் மீண்டும்.

"இவ உங்கள மாதிரி எல்லோருக்கும் அம்மா ஆனா எனக்கெண்டு தனியா ஒரு அம்மா இருக்கிறாவா?"

அது தான் நான் என்று கூறி அன்றைய அவனது கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்து இறை ஆராதனைக்குத் தயார்ப்படுத்தும் மணியை அடித்தேன். இருநூறு பிள்ளைகளுக்குத் தாயாய் இருந்து பராமரிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எனினும் அவர்கள் எவ்வாறு எனக்கு பிள்ளைகளாய் வந்து இணைந்தார்கள் என்ற கேள்வி எழும் போதெல்லாம் என் கண்ணீர் போதாதிருக்கும்.

அன்று மாலைப் பொழுது பிள்ளைகள் எல்லோரும் விடுதிக்கருகிலுள்ள மைதான வெளியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நிர்மலன் முழங்கால்களை அணைத்தவாறு தூணோடு சாய்ந்திருந்தான்.

நிர்மலன் விடுதியில் வளரும் பிள்ளை எனக்கூற

முடியாதவாறு செழிப்பாக இருந்தவன். நல்ல சுருட்டைமுடி வயதிற்கேற்ற உயரம்.

எதிர்காலத்தில் நல்ல உடல் வாகுகொண்ட இளைஞனாய் வருவான் எனக் கற்பனை செய்வேன். ஆனால் இப்போதெல்லாம் அவனது முகம் சோகம் படர்ந்ததாயும் எதற்கெடுத்தாலும் "எனக்கு என்ர சொந்த அம்மா வேணும்" என்று அடம்பிடிப்பவனாகவும் இருக்கிறான். நிர்மலன் பற்றி வகுப்பாசிரியை திருமதி. ஜெயன் கூறிய போதும் அவனுக்கு இப்போதெல்லாம் அம்மா பற்றிய கேள்வியே எழுந்திருப்பதாகவும் தன் வயதொத்த பிள்ளைகளுக்கு சொந்தமாய் வீடு, விளையாட்டுப் பொருட்கள், தனி ஒரு அப்பா, அம்மா என இருக்கும் போது தனக்கென்றொரு அம்மா ஏன் இல்லாமல் போனா? என்று தன்னிடம் கேட்டதாகக் கூறினார்.

அவன் பிறப்பின் இரகசியம் அவனைப் பெற்றவளுக்கும் அவள் அம்மாவிற்கும் அடுத்ததாய் எனக்கு மட்டும் தான் தெரிந்திருந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால் நிர்மலனின் கேள்வி மட்டும் என்னை ஆயிரம் அம்புகளாய்க் குத்திக் கொண்டிருந்தன. அநாதைக் குழந்தைகளின் செவிலித் தாயாய் இருப்பதன் உச்சவலியை உணர்ந்தவளாய் நடமாடுகின்றேன்.

கடந்த இருபது வருடங்களுக்கு முன்பு பத்தொன்பது வயதில் விடுதி உதவியாளராய் இணைந்த போது சமூக சேவகியாய் நான் மாறிய மகிழ்ச்சிப் பிரவாகத்தில் விடுதியில் அத்தனை பிள்ளைகளுடனும் சந்தோசமாய்க் காலம் கழிக்கலாம் எனக் கனவு கண்டேன்.

அவர்களின் துளையிடப்பட்ட தருணங்களை சந்தோஷத்தால் பூசி மெழுகினேன். இருந்தபோதிலும் ஒவ்வொரு பிள்ளையும் "நான் யார்?" என்ற சுய கேள்வியைத் தனக்குள் எழுப்பி என்னிடம் விடை காண வருவார்கள்.

"நீங்கள் யுத்தத்தின் எச்சங்கள்" இத்தகைய உண்மையால் அவர்களைச் சுடவிரும்பாது பொய்களை அடுக்கி சந்தோசப் பூச்சைப் பூசிவிட உணவுப் பண்டங்களைக் கொடுத்து விடுவேன்.

பிற்பகல் இரண்டு முப்பது மணிக்கு உயர் தரத்தில் பயிலும் விசு, "அம்மா, நிர்மலனைக் காணேல்ல அவன் விளையாட்டுப் போட்டியில் இருந்து நேரத்துடன் வந்திட்டானா?" என்ற கேள்விக் கணையைத் தொடர நான் விடுதி முழுவதும் சக பணியாளர்களுடன் இணைந்து தேடியும் காணவில்லை. பாடசாலையிலும் அவன் இல்லை. நேற்று மாலை அவனிருந்த நிலை எனக்குச் சந்தேகத்தைக் கிளப்ப தேடுதலைத் துரிதப் படுத்தினேன்.

இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையில் நடைபெற்றதால் எங்கேனும் வேலையில் நிற்கிறானா என இல்லப் பொறுப்பாசிரியையிடம் வினவிய போது அவரும் கையை விரித்தார். நாளை வகுப்பறைக்குச் சென்று அவனது சகமாணவர்களிடம் விசாரிக்கும் வரை எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.

என்னிடம் கேட்டுப் பயனில்லை என்று தானாகப் புறப்பட்டு விட்டானோ?

"அம்மா, கனகாலத்துக்குப் பிறகு ரெயின் ஓடுதாம் என்ன" அன்று எனக்குச் சொன்னது நினைவில் தட்டியது. காவல் நிலையத்திற்குச் சென்று முறையிடுவதற்கு நானும் வேலனும் ஆயத்தமான போது.

நடுத்தர வயதுடைய ஒருவருடன் களை நிறைந்த முகத்துடன் அமைதியாய் வாயிலில் நிர்மலன். நிர்மலனின் கையைப் பிடித்தபடி அவர் எங்களை நெருங்கி,

"அம்மா இவன் என்ர மகனோடதான் படிக்கிறான். என்னுடைய...." தொடர்ந்து கூற முற்பட்டவரை விடுதியின் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றேன். நிர்மலனின் கண்களில் நீர் நிரம்பி வழிந்தது.

நிர்மலனை அணைத்து தலையைத் தடவி முத்தமிட்டேன். அசைவற்று ஜடமாய் நின்றான். சக பணியாளர் வேலனுடன் நிர்மலனைப் பக்கத்து அறைக்கு அனுப்பி விட்டு, அவரது பதிலுக்குக் காத்திருக்க முன்பே, "அம்மா என்னோட மனைவி ஆறு வாரமா காணாமல் போய் முகாமெல்லாம் தேடி அலைந்து போன கிழமை தான் அவவ வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்தனான்.

"துஷியந்தன் ஆறு வயசா இருக்கும் போது தாயின்ர முகத்தை பார்ப்பதற்கு இப்பதான் அம்மாவைக் கண்டான். தன் சந்தோசத்தை நண்பர்களுக்குக் கூறும் போது நிர்மலன் தனக்கென்று ஒரு அம்மா இருப்பதாகவும் தனக்குச் சொந்தமான அம்மாவைத் தேடுவதாகவும் கூறி பிற்பகல் வீட்டிற்கு வந்தவன்.

"அன்ரி, எனக்கு அம்மாட பெயர் தெரியாது அப்பாவும் யாரெண்டு தெரியாது. ஆனா நிர்மலன் என்ற மகனைத் தேடி யாரும் அம்மா இருக்கிறாவா? "உங்கள எப்படி வைத்திருந்தினம்?" "எங்க இருந்தீங்க? அந்த இடத்துக்கு எப்பிடிப் போறது?" என அடுக்கடுக்காய் கேள்விகேட்ட போது தான் தாயைத் தேடி விடுதியிலிருந்து வந்திருக்கும் விடயம் தெரிந்தது.

நிர்மலனின் தேடலில் இவரும் கூட்டுச் சேர்ந்து விட்டாரோ? என்ற கேள்வி என்னுள் எழுந்ததும் நான் அவரைச் சமாளித்து அனுப்பி வைத்தேன்.

நிர்மலன் அம்மாவைப் பற்றிய கனவுகளுடன் அறையில் இருந்ததை நான் ஆத்மார்த்தமாக உணர்ந்தேன். ஆனாலும் உன் அம்மாவிடம் நான் கூட்டிச் செல்கிறேன் என்று அழைத்துச் சென்று..... வேண்டாம் என் ஆழ்மனக் கிடங்கில் பூட்டி வைக்கப்பட்ட இரகசியத்தையும் அவன் அறிந்து விடுவானோ என்ற ஐயத்தில் மௌனமாகினேன்.

திறந்திருக்கும் ஜன்னல் வழியாய் நிர்மலன் எதையோ ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருக்கிறான். பெரியதாய்க் காகம் தன் குஞ்சுக் காகத்தின் அலகில் அலகு வைத்து உணவூட்டிக் கொண்டிருக்கிறது. எனக்கு அவனைக் கட்டியணைத்து ஓவென்று குழற வேண்டும் போலிருந்தது.

உன் அம்மா..... அம்மா.....

என் உள்ளத்தை மீறி வார்த்தைகள் உதடுகளை உடைத்து வெளிவர அங்கிருந்து நகர்ந்தேன். ஆனாலும்

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு புதைக்கப்பட்ட இரகசியம் பொலித்தீன் பையைப் போல் இப்போதும் உக்காமல் கிடந்தது.

நான் சிறுவர் இல்லத்தின் பொறுப்பை ஏற்று சில நாட்கள் தான் அலுவலகத்தில் பிற பணியாளர்களுடன் அன்று சிறுவர் இல்ல அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போது வெளியே ஒரு பெண் என்னுடன் தனியாகக் கதைப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தாள். கூடவே வயதான ஒரு பெண்மணியும் வந்திருந்தாள்.

விடுதியில் வேலை கேட்டு வந்திருக்கிறார்கள் வேண்டாம் என்று சொல்ல வேண்டும் என்ற கற்பிதத்தில் மாமரத்தின் கீழேயே கதைத்து அனுப்பும் நோக்கோடு சென்றேன்.

அகன்ற விழிகள், புன்னகைத்த இதழ், வெண்மை என்று உறுதி கூற முடியாத பொது நிறம். அவளை நெருங்கிய போது வேலை கேட்டு வரவில்லை என்பது திடமாக புருவங்களைச் சுருக்கி நோக்கினேன். வயதான பெண்மணியின் கைகளுக்குள் போர்வை ஒன்று தென்பட்டது.

"அம்மா...... நாங்க உங்களோட தனியாப் பேசணும் பொம்பிளப் பிள்ளையின்ர வாழ்க்கை அம்மா......" வயதான பெண்மணி மன்றாட்டமாய்க் கும்பிட்டாள். நான் எனது தனியான அறைக்கு அழைத்துச் சென்றேன்.

அவளது இமைகள் பனித்திருந்தன. "அக்கா, என்ற பெயர் நிர்மலா இவ என்னுடைய அம்மா புஸ்பம். கிளிநொச்சி வாழைத்தோட்டம் எங்கட ஊர்." கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திலிருக்கும் என்னைத் தேடி வந்திருக்கும் போது ஏதோ முக்கியமான ஒன்று தான். என்னை ஆசுவாசப்படுத்தி உசாராகினேன்.

"எங்கட அப்பா 95ஆம் ஆண்டு யுத்தத்திற்கு இரையாக அம்மா தனிக்கட்டையாய் என்னையும் இரண்டு அண்ணன்மாரையும் படிப்பித்து ஆளாக்க அலைந்து திரிந்து வேலை செய்தாள்." இடம்பெயர்வால் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி வந்து அம்மா கிடுகு பின்னிவித்தும் இடியப்பம் செய்து வித்தும் எங்கட உயிரைப் பேணினா. அண்ணன் மாரில நிஷாந்தன் அம்மாக்கு ஒய்வு கொடுத்து தான் வேலைக்குப் போய் இணைந்ததும் வறுமை கொஞ்சம் ஒளித்துக் கொண்டது. துஷாந்தன் அண்ணா என்னை விட ரெண்டு வயசுதான் கூடியவன். இருவரும் ஒன்றாகவே சாப்பிட்டு படித்து ஏன் செல்லமாய்ச் சண்டைகள் கூடப்பிடித்து...... நிர்மலாவின் கண்கள் குளமாகின. வார்த்தைகள் மௌனமாகின. அதிகாரத்துக்கொரு அண்ணன் அன்பிற்கு ஒரு அண்ணன். பெருமை கொண்ட தங்கையாய் என்னை வளர்த்தவர்களில் இப்போது யாருமே இன்றி.....

வன்னி யுத்தத்தில் நிஷாந்தன் இரையாக துஷாந்தனை பாதுகாப்புப் போர்வைக்குள் தள்ளி நாங்களும் புகுந்தோம். முகாம்களின் தறப்பாள் கூடுகள் அடைக்கலம் தர விசாரணைகள் விரியும்.

காணாமற் போனோர்......
இறந்தோர்......
நிவாரணம் வழங்கல்...... ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவரும் ஏராளமான பதிவுகள் என்மீதும் விசாரணைகள் தூவப்பட்டன.
அண்ணாவிடம் தனியான விசாரணை.

அன்றும் அவ்வாறுதான் என் அண்ணாவை விசாரணைக்கு அழைத்துச் சென்று கொழும்புக்கு அனுப்ப வேண்டும் என்ற பதில் வந்தது.

அம்மாவின் அலறல் தொடர்ந்தது.........
அவர்கள் மனுசராய் இருந்திருந்தால் நிச்சயம் மனச்சாட்சி உறுத்த அண்ணாவை அடித்துப் போட்டாவது விட்டிருப்பாங்கள்

நானும் அம்மாவும் மறுவாரமே கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டோம். யுத்தம் தின்று ஏப்பம் விட்டவர்களில் அப்பா, நிஷாந்தன் அண்ணன் வரிசையில் என்ர சின்னண்ணாவும்.

வீட்டில் தனித்து விடமுடியாது விசாரணைக்குச் செல்லும் போதெல்லாம் என்னையும் அழைத்துச் செல்ல வேண்டிய கட்டாயம். நானும் அம்மாவுக்குத் துணையாகச் சென்றேன். சின்னண்ணா கடைசியாய் எடுத்த போட்டோவுடன் அம்மா....

"ஐயா என்ர மகன். ஒரே மகனாகத் தப்பி இருக்கிறான். மனுசனையும் இன்னொரு மகனையும் பறிகொடுத்திட்டான் ஐயா"
"அம்மா, விசாரிக்க கூப்பிட்டா நாங்க அனுப்புவம்"
"ஐயா இவன்தான் ஐயா என்ர மகன்"
உயரமாய் வளர்ந்தவன்.

சிரித்தால் கன்னத்தில குழிவிழும் "என்ர மகன் எனக்கு வேணும் ஐயா......" அம்மா அலறியவாறே அவன் சப்பாத்துக் கால்களில் விழுந்தாள்.

அலைந்த அம்மாக்களின் கண்ணீர் அவர்களுக்கு உரமாகியிருக்க வேண்டும்.
நாட்கள் கடத்தப்பட்டன.
மனிதத்தைத் தொலைத்தவர்களால் களவாடப்பட்ட உறவுகள் தெருக்களில் அலைந்தன.

பயிர்களை மேய்ந்த வேலிகளை விசாரிக்க ஓணான்கள் வந்து குந்தின.

சலிக்காமல் அதற்கும் சென்று சின்னண்ணாவைப் பதிந்தோம். "ஐயா, அவன எங்கையெண்டாலும் கண்டுபிடிச்சுத்தாங்கோ... என்ர ஆண் குஞ்சு.

கடைசியா தன்ர அடிப்பொக்கற்றில இருந்து நூறு ரூபாய்த் தாளைத் தந்திட்டுத் திரும்பிப் பார்த்து, அம்மா.... நீ வேலைக்குப் போகாத நான் எப்படியும் வருவன். ஒரு தாயாய் கூனிக்குறுகிப் பார்த்துக் கொண்டு நிண்டன்.

அம்மா கீழே மயங்கிவிழ நம்பிக்கையோடு நான் பல விடயங்களைக் கொடுத்தும் எல்லாமே வெறும் உக்கல்களாகின.

அம்மா நோயாளியாக பக்கத்து வீட்டில் இருந்த லக்சுமி அன்ரியுடன் சென்று எங்கள் வேண்டுதலை முன் வைத்தேன். அன்றும் வழமை போலவே அவர்கள்

குறித்துத் தந்த திகதியில் ஆஜராகினேன்.

"காவலாளிகள்" தூக்கிச் சென்ற சின்னண்ணாவைக் கண்டு பிடிக்கும் ஆவல் என்னுள்.

என்னைக் காணும் போதெல்லாம் நமட்டுச் சிரிப்புச் சிரிக்கும் அந்தப் பருத்த "வேலி".

தலைமை வேலி அவன்தானாம். அந்த அறை அவனுக்கான தனிப்பட்ட அறை என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது.

"தங்கச்சி நிர்மலா..... உங்க அண்ணா பெயர் இதில இருக்கா பாருங்க! நீண்டிருந்த பட்டியலில் என் அண்ணாவின் பெயரைத் தேட அவன் கண்கள் என்னை மேய்ந்தன.

மறு நிமிடம் என் வாயை அவன் கைகள் அழுத்தின. இறுகப் பற்றித்தன் கட்டிலில் விழுத்தி ஒரே மிதியாய்.....

"உன்ர அண்ணா உனக்குப் புதுசாப் பிறக்கப் போறார்." கொச்சைத் தமிழில் கூறிப் பெரிதாகச் சிரித்தான். இங்க நடந்தது வெளியில தெரிய வந்தா அம்மாவையும் நீதேட வேண்டி ஏற்படும்.

நானும் அம்மாவும் நிர்க்தியாக்கப்பட்டோம். எனக்கென்றொரு வாழ்க்கைத் துணையைத் தேடி வாழ்வளிக்கக் காத்துக் கொண்டிருக்க என் வாழ்க்கையும் உயிரோடு சிதைந்தது. இரண்டு மாத கர்ப்பிணியான என்னையும் கூட்டிக் கொண்டு அம்மா யாழ்ப்பாணம் வந்தா.......

வாழ வேண்டியவர்களைச் சிறைப்பிடித்தும் கற்பைச் சூறையாடி தம் காமப் பசியைத் தீர்க்கும் காவலாளிகள்.

யாருமே அறியாது எட்டு மாதங்களிலும் வெவ்வேறு கிராமங்களாய்த் தங்கினோம். தானில்லா வாழ்க்கையில் என்னை ஒருவனின் கையில் ஒப்படைக்கும் வரை அவள் ஆத்மாக்கு வீடு பேறு இல்லை.

கையில் பிள்ளை,

என் வாழ்வின் எதிர்காலம் அம்மா நாங்க இனி வேறொரு ஊருக்குப் புதுசாக் குடியேற வாழ விரும்புறம் பிள்ளைய நீங்கதான் பொறுப்பெடுக்கோணும்.

"அம்மா நான் செத்தா இந்தக் குமரப் பிள்ளையினர வாழ்க்கைய யோசியுங்க. எங்கட எதிர்காலம் உங்கட கையில தான்."

நிர்மலாவின் அம்மா கூப்பிய கைகளுடன் வாழ்க்கைக்காக யாசித்துக் கொண்டிருக்கிறாள்,

நான் சிலையாக அமர்ந்திருக்கிறேன்.

"பேருந்து நிலையத்தில் கைவிடப்பட்ட சிசு மீட்பு"

"5 நாட்களான சிசுவைக் கொலை செய்து புதைத்த குற்றத்தில் தாய் கைது"


"அதிகரிக்கும் கருச்சிதைவுச் சம்பவங்கள்"

மலிந்து விட்ட கொடூரங்களின் விளைவுகள் தினசரிச் செய்திகளாகத் தொடர இன்று என் கண் முன்னேயே...... வாழ்வளிக்க வேண்டிய கட்டத்தில் நான்.

நிர்மலாவின் வாழ்வு என்னால் மலர கைகளை நீட்டினேன்.

நீல நிறப் போர்வைக்குள் சுற்றிய 02 நாட்களான சிசு ஆழ்ந்த உறக்கத்தில்,

இல்லை ........... அமைதியாய் எல்லாவற்றையும் அவதானிக்கிறது போலும்



"அம்மா! நான் உனக்காகக் காத்திருப்பது போல் நீயும் எனக்கு உணவூட்டக் காத்திருப்பாய் அழாதே... என்றோ ஒரு நாள் நான் உன்னைச் சரணடைவேன்."

அதுவும் நிர்மலாவைப் போல் குற்றமற்றது நிர்மலமானவன்

நிர்மலன் என் பாசத்தால் வளர்ந்தவன்.

வெண்ணிறத் தாளில் அழகாய் வர்ணம் தீட்டி அற்புதமாய்ப் படைத்திருந்தான்.

தாய்க் காகம் தன் குஞ்சுக்கு உணவூட்டும் காட்சி. அருகில் சிந்தனையிலாழ்ந்த சிறுவன்

"அம்மா....... என் இலட்சியம் சுவர்க்கம் செல்வதல்ல. உன்னைக் கண்டறிவது தான். அது எப்படியாவது இருக்கும்......."

தன் சிந்தனையாய்ப் பொறித்திருந்த வரிகள் என்னை ஓவென்று கதறியழுது முழுவதையும் ஒப்புவிக்க வேண்டும் என அடம் பிடிப்பதை போன்றிருந்தது.

நிர்மலாவின் கூப்பிய கைகள் என் கண்ணில் தோன்றியது. இன்று அவள் எப்படி? எங்கிருப்பாள்?

அவள் குடும்பத்தை மீண்டும் அழித்த அரக்கியாக நான் மாறமாட்டேனா?

"நிர்மலன்......


நிர்மலன் ........... உன்னுடைய அம்மா சண்டையில இறந்திட்டா...... இலகுவாக இதை அவனுக்குச் சொல்லி விடலாம். ஏனோ என் மனம் நிர்மலாவைச் சாகடிக்க விரும்பவில்லை. சில வேளைகளில் இவனைப் பார்க்க வேண்டும் என்ற அவாவில் வருவாளோ? என்ற ஆவல் என் உள்ளத்தில் முளை விட்டது.

"அம்மா! நான் உனக்காகக் காத்திருப்பது போல் நீயும் எனக்கு உணவூட்டக் காத்திருப்பாய் அழாதே... என்றோ ஒரு நாள் நான் உன்னைச் சரணடைவேன்."


நான் நிர்மலாவின் தொலைபேசி இலக்கங்களைத் தேடுவதற்கு அலுவலகம் விரைகிறேன். நிர்மலன் குஞ்சுகளை அழைத்துக் கொண்டு கூட்டுக்குப் பறக்கும் தாய்க் குருவியைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

●●●

with best compliment from



# THASSIM
## JEWELLERS





**73, Dockyard Road Trincomalee Sri Lanka**

Specialist in Gems, Gold Jewellery, Antiques & Manufacturing Jewellery

Tel +94 26 2222007
+94 26 2221007

Fax +94 26 2221188
Email mtmwazeer@sltnet.lk
Fb /thassimjewellers




Wanasinghe Printers, Batticaloa. 065 222 7170